# த்வனி

லா.ச.ராமாமிருதம்

ஐந்திணைப் பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# த்வனி

(சிறு கதைகள்)

லா. ச. ராமாமிருதம்

ஐந்திணைப் பதிப்பகம்
279, பாரதி சாலை,
திருவல்லிக்கேணி, சென்னை-600 005
தொலைபேசி : 84 94 10

இரண்டாம் பதிப்பு : செப்டம்பர் 1990

ஐந்திணை—71

உரிமை பதிவு

விலை ரூ. 18-00

DHVANI
Tamil Short Stories
By. L. S. Ramamirutham,
Second Edition : Sep, 1990
IV + 184 = 188 Pages
10 Pt. Letters
Box Board Binding

Published by :
KUZHA KATHIRESAN

AINTHINAI PATHIPPAGAM
Phone : 84 94 10
279, Pycrofts Road, Triplicane,
Madras - 600 005.

அச்சிட்டோர் : கோகிலா அச்சகம்,
8, துக்காராம் 3வது தெரு, தி. நகர், சென்னை-17.

# உள்ளே


| | | |
|---|---|---|
| 1. | த்வனி | 1 |
| 2. | வரிகள் | 48 |
| 3. | தீபக் | 54 |
| 4 | வியூகம் | 63 |
| 5. | பிரிவு (?) பசாரம் (!) | 89 |
| 6. | தரிசனி | 104 |
| 7. | இவளோ ? | 125 |
| 8. | ஏன் ? | 136 |
| 9. | மன்னிப்பு | 153 |
| 10. | ராஜகுமாரி | 168 |

# த்வனி

கண்ணின் இமையுள், விழிப்பின் முதல் உணர்வாய்க் கவிந்த இருள் முழுவே உனக்கு அஞ்சலி. உதயத்தின் முற்பொருள் நீ உனக்கு அழிவில்லை. நான் இன்பத்தில் வாழ்த்தியும், துன்பத்தில் தூற்றியும் நீ என்றும் பெருகு வாயாக. நீ உமிழ்ந்த மாணிக்கமாய ஒளியைத் திரும்ப விழுங்க நீ திருவுளம் பற்றிய தருணமே. காலம், இடம், பொருள், தவம், தத்துவம் என என் ப்ரக்ஞை கட்டி யாடும் வேடங்கள் அனைத்தும் என் அந்தத்தில் குலைந்து அவிந்து உன்னில் அடங்கிவிடும். ஓம் சாந்தி.

★

உன்னை நான் அறியுமுன்னர் என் உள்ப்ரக்ஞையில் நீ பீடம் கொண்டுவிட்டாய்.

★

இன்று காலை ஆபீஸுக்குத் தாமதமாகிவிட்டது. மின்சாரவண்டி திருட்டு மூட்டைகள் இறங்கும் திருப்பம் தாண்டிக் கோட்டை ஸ்டேஷனின் மதிற்சுவர்கள் தாண்டி, முழு வேகத்தில் போய்க் கொண்டிருக்கையில், 'திடீர் ப்ரேக்' போட்டு நின்ற சடக்கில், நாங்கள் பின் பல்டியடிக்காமல் தப்பித்தது எங்கள் அதிர்ஷ்டம். நான் இருந்த பெட்டி நடுப்பாலத்தில் நின்றது. சுற்றி, மும் முரமாய், ரயில்வே கட்டிடவேலை நடந்து கொண்டி ருக்கிறது. இரவும் பகலுமாய் விளக்குப்போட்டு விடாது நடக்கிறது.

பாலத்தின் அடியில் ஓடும் ஜலத்தையொட்டிக் கரை கட்டினாற்போல் குவித்திருக்கும் பாராங்கற்களின்மீது, பூத்த நக்ஷத்ரம்போல் விரிந்த கைகால்களுடன், தலை கீழாய் அண்ணாந்து ஒருவன் விழுந்து கிடந்தான். குடுமி அவிழ்ந்து, தண்ணீரில் தோய்ந்தது. பின்மண்டை யிலிருந்து பீறிட்டுக் கொண்டேயிருக்கும் குருதி, ஜலத்தில்

பந்து பந்தாய் சடைத்துச், சொம்பளவு இரத்தப் பூக்கள் முகத்தைச் சூழ்ந்து தவழ்ந்தன. காலை வெய்யிலில் தாடி முட்கள் பொன்னாய் மின்னின. சிற்றலைகள் முகத்தைக் கழுவின.

மூலத் துயிலில் தாண்டவ கோலத்தில் மூழ்கி விட்ட செஞ்சடாதரன்.

★

தெருவிளக்கு அணைந்ததுதான் காரணமோ என்னமோ, நள்ளிரவில் திடுக்கென விழித்துக் கொண்டேன். என் உருவக்கோடுகூட எனக்கிலாதபடி என்னையும் தன்னோடு இழைத்துக் கொண்டது போல் எனைச் சூழ்ந்த மையிருளில் விழித்திரையில் சிவப்பு நுரை கக்கிக்கொண்டு பெருக்கெடுத்து அறை புரண்டது.

சிவப்பை விடச் செந்தூரம் எனில் தகும்.

கைக்குப் பட்டாலன்றி இருக்குமிடம் தெரியாமல் தாதுவில் மிதந்து கொண்டிருந்தால் உயிர்.

"அப்பனே தீர்க்காயுசாயிரு" என்று அயிலாண்டப் பாட்டிகள் வாயார வாழ்த்த வழி.

வெள்ளமாய்ப் புரண்டு விட்டாலோ;

"போயும் போயும் இப்படியா போகணும்! நாலு நாள் கிடந்து போனான்னு வயத்தெரிச்சல் தீரக்கூட வழியில்லையே. நாங்கள் கிழங்கள். இன்னும் கிழங்கா வளைய வரோமே, இந்தக் கொடுமையெல்லாம் பார்க்கணும் கேட்கணும்னு இன்னும் எங்கள் தலையில் என்னென்ன எழுதி. வெச்சிருக்கோன்னு தலையிலடித்துக் கொள்ள விஷயமாச்சு.

ஆனால் இன்று செத்துப்போனவன் சின்ன வயது இல்லை. ரயில் தள்ளிவிட்டது. அறியக்கூட அவனுக்கு நேரமிருந்திருக்காது. இல்லாவிடில் முகத்தில் எப்படி அத்தனை சாந்தம்! உதட்டோரம் சிறு முறுவலின் முன் நிழல் கூட. இன்பம் தந்த ஏதோ ஞாபகத்தில் தன்னை யிழந்து வண்டி வந்ததுகூடத் தெரியாமல், பாலம்

தாண்டுகின்றேன் என்று சமுத்திரத்தையே தாண்டி விட்டான்.

ஆமாம், அக்கரையில் காத்திருக்கும் காரிருளே உனக்குக் கையென்றும், காலென்றும், முலையென்றும், தொடையென்றும் தனியில்லை. அவனை நீ என்ன சைகை எப்படிக் காட்டி உன்னுள் வலித்துக் கொண்டாய் எனும் வியப்பில் எண்ணம் திளைக்கத் திளைக்க நெஞ்சு முள்மேல் மீன் நெளிந்து வளைந்து மாட்டிக்கொள்ளாமல் துள்ளி விளையாடி அடிவயிற்றின் ஒளி மருட்சி காட்டுகிறது.

ஆனால் நூல் மாத்திரம் விட்டுக் கொண்டே போகிறது. இந்த நூலுக்கு மாத்திரம் திரௌபதியின் துகில் போல் எப்படி ஓயாத இந்நீளம்? இல்லை நடுவிலேயே அறுந்து போனதைத்தான் எல்லையே இல்லாததாய் நினைத்துக் கொண்டிருக்கிறேனா?

சே, சே, இல்லை இல்லை: இல்லவே இல்லை. இந்த நூல் அறவே அறாது. இது அறுந்து போனால், பிறகு என்னதான் இருக்கிறது. என்ன இருந்துதான் என்ன? பிடிக்க மீனுமில்லை: மீன் பிடிக்க ஆளுமில்லை.

இது இருளின் நரம்பு.
எண்ணத்தின் கறுப்பு மணிக்கயிறு!
வானத்தின் நீலத்தினின்று உரித்த பொற்சரடு
நினைவில் மின்னும் இருளின் யஞ்ஞோப வீதம்.
பிறவியின் ஒளி.
வானத்தின் நீலத்தினின்று உரித்த சரடு.
நினைவில் மின்னும் இருளின் யஞ்ஞோப வீதம்.
இதுதான் என் பிறவியின் தேஜஸ்.

★

ஆனால் நான் நூலைக் களைந்து வருடங்களாகி விட்டன.

அம்மாவின் தகனத்திற்கு மறுநாள் சடங்குகளின் போது மாரைத் தடவினால் பூணூலைக் காணோம்!

சட்டையோடு கழன்று 'கோட் ஸ்டாண்டி'ல் தொங்கிக் கொண்டிருக்கிறதா? இருக்காது. நேற்று நான் சட்டையோடு படுக்கவில்லையே! ஆ! புரிந்தது. நேற்று அம்மாவைப் பொசுக்கிவிட்டுக், காட்டிலிருந்து வந்து குளத்தில் மூழ்கிய போது ஜலத்தில் நழுவியிருக்கும்; வேறு வழியே இல்லை.

பூணூல் போன வழி புரிந்ததுமே கூடவே நெஞ்சில் ஏதேம்தா கதவுகள் திறந்துகொண்டே போயின

வெடுக்கென நான் எழுந்த வேகத்தில் மடியிலிருந்த பணம் தரையில் சிந்திற்று. சில்லறைக்குத்தான் எத்தனை இரைச்சல்!

'சாஸ்திரிகளே, நான் சடங்குகளைச் செய்யப் போவதில்லை.'

வாத்தியாருக்கு வாய் தொங்கிற்று. "ஏன் திடீர்னு இப்போ என்ன?...'

"சாஸதிரிகளே, திடீர் என்று நேர்பவைகள் தாம் திடம், நிஜம். படிப்படியாய் நேர்வது மாறுதல், பல காலம் முடிச்சவிழ்ப்பு நிச்சயமில்லை. திடீரென்று நேர்வதுதான் சிக்கறுப்பு. விடுதலை, மீட்சியற்றது. விடுதலை திடீரென்று தான் நேரமுடியும்."

"இப்போ என்ன விடுதலை, எதிலிருந்து விடுதலை?"

"நூல் கட்டிலிருந்து விடுதலை, இடமிருந்து வலம், வலமிருந்து இடம் என மாறி மாறிக் காட்டும் நம்பிக்கையின் போதையினின்று உதறிக்கொண்ட தெளிவு.''

"எனக்கு ஒன்றுமே புரியவில்லை."

"உங்களுக்கு விளக்குமளவிற்கு என்னுள் இப்போது நேர்ந்ததற்கு இன்னும் வார்த்தைகள் வரவில்லை. ஆனால் வரும், ஒரு நாள் வரும். ஆனால் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? நேர்ந்தது நேர்ந்து விட்டது. விடுதலையின் பாதையே அந்தச் செயல்தான்."

"நீங்கள் பேசற பாஷையே வேறேயா இருக்கு. போனவர்கள் போய்விட்டாலும் இருக்கிறவா சுபிக்ஷமா யிருக்கணும்னு, லோக க்ஷேமார்த்தம் இந்தக் காரியங் களைச் செய்தாகணும் இதுகளைச் செய்யாட்டா பிதுர்க்களின் சாபம் குடும்பத்திற்கு சம்பவிக்கும்."

"சாஸ்திரிகளே, உங்கள் கேள்விக்குப் பதில் உங்க ளிடமிருந்தே வந்து கொண்டிருக்கிறது. போனவர், இருப்பவர், க்ஷேமம், சாபம், லோகம் ஈதெல்லாம் சமுதாய பாஷையின்றி வேறு என்ன? உங்கள்வரை நேற்று இருந்த என் தாய் இன்று போய்விட்டாள் அல்லவா? ஆனால் அதோ சாம்பல் படுக்கையிலிருந்து நம் சர்ச்சையைக் கேட்டு அவள் சிரிக்கும் சிரிப்பின் த்வனி எனக்குக் கேட்கிறது. உங்களுக்குக் கேட்கிறதோ? அது தான் நான் உங்களுக்குச் சொல்லத் தவிக்கும் விஷயம்."

"இதோ பாருங்கள், பூணூலைக் காணோம்னா அதற்குப் பரிகாரம் இருக்கு. பெரியவா எல்லாத்துக்குமே பரிகாரம் பிராயசித்தம் ஏற்படுத்திட்டுப் போயிருக்கா. அதனாலே"—

"ஆண்டவன் சித்தத்துக்கே ப்ராயச்சித்தம் உண்டா என்ன?"

சாஸ்திரிகளின் கீழுதடு கேலி நகையில் வளைந்தது.

"நீங்கள் என்ன அப்போ சாமியாராயிட்டேளா? இப்படியே இந்த இடுப்பு வேட்டியுடனும் தோள் முண்டுடனும் தேசாந்தரம் கிளம்பிட்டேளா? வீட்டுக்குக் கூடத் திரும்பப் போறதில்லையா? இந்த நிலைக்குக்கூடப் பெரியவா ஏற்கனவே பேர் வெச்சிருக்கா, ஸ்சமான வைராக்யம்னு—"

"எனக்கு ஏற்பட்டிருக்கும் விடுதலை வைராக்கியத் திலிருந்துகூடத்தான்."

வாத்தியார் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். வாத்தியாருக்கு சொந்தத்தில் இரண்டு மாடி வீடுகள் இருக்கின்றன. வாடகை வருகிறது. அவர்

பையன் நல்ல உத்யோகத்திலிருக்கிறான். ஆனால் அவர் பையனை நம்பவில்லை.

"இன்னிக்கு ஒரு ஸீமந்த முகூர்த்தத்துக்குப் போயாகணும். இன்னும் எத்தனை நாழி இடக்குப் பண்ணப் போறேள்? உங்களை மாதிரி மனுஷாள் இருக்கிறதால் தான் நம் குலம் இப்படி க்ஷீணப்பட்டிருக்கு. வேலியே பயிரை மேய்ஞ்சால் விமோசனம் இருக்கோ? நீங்களே சொல்லுங்கோ."

நான் ஒன்றும் சொல்லவில்லை. சொல்ல என்ன இருக்கிறது? அவரும், அவரை அண்டி வந்தவரும், என்னோடு வந்தவரும் என்னைச் சுற்றி நின்றுகொண்டு என்னை ஒரு வினோதப் பிராணிபோல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று எட்ட, ஒரு புதை மேட்டின்மேல், புல் மெத்தையில் ஒரு தாய் நாய் சுகமாய்ப் படுத்துக் கொண்டிருந்தது. இரு குட்டிகள்—ஒன்று உடலே பட்டுக் கறுப்பு; இன்னொன்று காது மடிகளில் மாத்திரம் கறுப்புத்திட்டு—இன்ப முனகல்களுடன் பாலுண்டு கொண்டிருந்தன.

ஆடு ஒன்று அருகே புல்லை மேய்ந்துகொண்டிருந்தது. நாய் குரைக்கவில்லை. ஆட்டின்மேல் பாயவில்லை. நாயும் ஆடும் சிநேகம் போலும். எத்தனை நாள் சிநேகமோ?

★

அழுகிறேன்
சிரிக்கிறேன்
பேசுகிறேன்
பேசாமலிருக்கிறேன்

ஆத்திரப்படுகிறேன்
அமைதியாயிருக்கிறேன்
அசைகிறேன்
அடங்குகிறேன்

சகுனம்
சம்பவம்
நம்பிக்கை

கேள்வி
பதில்
சமாதானம்
நன்மை புண்ணியம்
தீமை பாவம்
எல்லாமே த்வனிகள் தான்
மௌனமும்
ஒரு
த்வனிதான்

ஓலியே நீ மோனத்துள் புகுந்து கொண்டதால்
உன்னைக் கேட்கவில்லை என்று
உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாயா ?
கண்ணாடியில் பிம்பம் விழும் த்வனிகூட எனக்குக்
கேட்கிறது. நீ அதை அறிவாயோ ? எல்லாம் நெஞ்சு
நிற்கும் மீட்டலுக்கேற்ப.
ஆனால் அறிவது, கேட்பது இவையெல்லாம் என்ன
வெறும் வார்த்தைகள் தானே! அவைகளின் பொருளும்
உண்டான பொருளல்ல. அவ்வவ்வார்த்தை வரம்புள்
சொல் ஓட்டம் நீடித்தவரை நாம் நமக்கு
ஆக்கிக்கொண்ட பொருள்.

ஆனால், சொல்தாண்டிய உயிர், அவ்வுயிரையும்
குடித்து

உயிருடன் உயிர்தந்த பொருளையும் விழுங்கிய
இருள்பற்றி நாம் என்ன கண்டோம் ! ! ?

★

என் தாயும் நம்பிக்கைகளைக் களைந்தவள்தான்.

"ஆமாம், உனக்கு நினைவு தெரிந்த நாள் முதலாய்
நீயும்தான் உன் தகப்பனுக்கு சிரார்த்தம் பண்ணிப்

பண்ணி உன் ஆயுசிலும் பாதிக்கு மேல் ஆயாச்சு. நீ என்னைவிடக் கிழமாயிட்டே. ஆனால் உன் அப்பா இன்னும் உன் பிண்டத்துக்குக் காத்திருக்கார்னு உனக்குத் தோணறதோ? என்னவோ அப்பா எனக்கு நம்பிக்கையில்லே. மனுஷன் வேறு எங்கே பிறந்து? இன்னும் வேறெந்தக் குடியைக் கெடுத்திண்டிருக்கானோ, நீ முழிச்சுப் பார்த்தால் நான் பயந்துட மாட்டேன். உன் அப்பாவை உனக்குத் தெரியுமா, எனக்குத் தெரியுமா? உன் அப்பா என் கழுத்தில் கட்டியது தாலியா அது. பாம்புன்னா! பின்னே என்ன? என்னவோ என்னை இத்தனை கெடுத்ததற்கு எனக்குத் தெரிஞ்சு உன் அப்பா வால் அமைஞ்ச ஒரே நல்ல காரியம் உன்னைக் கொடுத்தது தான். நீ மாத்திரம் எனக்கென்ன, நான் பெண்ணாய்ப் பிறந்ததுக்கு மலடு இல்லேன்னு நிரூபிக்கத்தானே!”

என் தாய் ஆணாய்ப் பிறக்க வேண்டியவள். ஏதோ சிருஷ்டிப் பிசகில் பெண்ணாய்ப் பிறந்து விட்டாள் என்று நானே எண்ணுவதுண்டு. நெஞ்சில் உரம் பாய்ந்தவள். நம்பிக்கைகளை அவள் துறந்தாள் என்பதைவிட, அவை அவளுடன் ஒட்ட இயலாது விட்டன என்பதே பொருந்தும்.

“அம்பி, இந்த ஊர் நாக்கு பிளந்த நாக்கு. என்னதான் பேசாது? நீ வயத்திலிருக்கும்போதே உன் அப்பாவைக் காவேரி காலை வாரி விட்டதுக்கு, நீ கொஞ்ச நாள் பின் தள்ளிப் பிறந்திருந்தால் என் நாணயமே நாறிப் போயி ருக்கும். முன் தள்ளிக் குறை மாதத்தில் பூமியில் விழுந்தி ருந்தால் உன் உயிருக்கே தீம்பு! அப்பவும் ஏச்சுத்தான். “பாவி, ஒண்ணே ஒண்ணு, “தான் தான் போகப் போறோம்னு நடுவிட்டுப்போன பயிரையும் அழிச்சுட்டு நிக்கறா!” எதை நம்பி இங்கு வாழ? உண்மையில் அம்பி, யாரால் யாருக்கு என்ன பிரயோஜனம்? உன் வழி உனக்கு, என் விதி வழி நான். இந்தப் போலி வாழ்க்கை எனக்கு இத்துடன் போதும். தான் செத்த பின்னும் எனக்காகச் சடங்குகள் மூலம் இது என்னைத் தொடர வேண்டாம்.

என் பிறப்புத் தான் என் வசத்திலில்லை. வாழ்க்கையோ பிறருடையதாப் போயிடுத்து. என் சாவாவது என்னுடையதாயிருக்கட்டும். நீயிறைக்கும் எள்ளுக்கும், தண்ணீருக்கும் நான் கரையோரம் வந்து, வாயைத் திறந்துண்டு காத்திருப்பேன் என்று எண்ணாதே. எனக்கு சுயக் கௌரவம் உண்டு.''

ஏன் இப்படித் தன்னை முறுக்கேற்றிக் கொள்கிறாள் என்று நான் திகைப்பதுண்டு. ஆனால் அவள் சொல்வதில் எங்கோ உண்மை புதைந்திருக்கிறது. 'எங்கே என்னைக் கண்டு பிடி' என்று எள்ளி நகையாடுகிறது.

ஆனால் என்றேனும் ஒரு நாள் உண்மையை முகமுழித்துத்தான் ஆகவேண்டும், தப்ப முடியாது.

என் தாய் உண்மையைக் கண்டு ஓடி ஒளிபவள் அல்ல. எத்தனையோ முறை வயிற்றுவலி அவளுக்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போது வந்ததும் சொல்லி விட்டாள்; ''அம்பி, இந்தத் தடவை நான் பிழைக்க மாட்டேன்'' என்று, நள்ளிரவில், முன்பின் அறிகுறியிலாது வலி நேரே வயிற்றில் விழுந்து வெட்டியதும், உடல் இன்னும் விட்டுக் கொள்ளாத இரு துண்டுகளாக அது அது அதனதன் தனிப் போக்கில் படுக்கையில் நெளிகையில், அம்மா வலி பொறுக்காது 'என்னடா பாவி பார்த்துக் கொண்டிருக்கையேடா, கத்தியிருந்தால் என்னைக் குத்திடேண்டா, உனக்கு மனமில்லாட்டா என்னிடமாவது கொடேண்டா!' என்று கெஞ்சிக் கதறி, கத்திக்கத்தி, விடியற்காலை புலம்பல் அடங்கி ஓய்ந்து, ஒரு தரம் புரண்டு அசைவற்றுக் கட்டையானதும் சடலத்தினின்று பிரிந்த கடைசி மூச்சுடன் என்னின்று ஒரு பெருமூச்சு கலந்தது.

அப்பாடா! கத்தியைக் கொடுக்காமல் தப்பித்தேன்.

''ஆனால் எனக்கு என் தாய்மேல் அன்பு உண்மையாயிருந்தால், இந்தச் சமயத்தில், நான் கொலையாளியாக அஞ்சியிருக்கக் கூடாது. ஆகையால்

அன்பும் ஒரு பூச்சுத்தான். அதன் உண்மையான தன்மை பொய். அம்மா சொன்னது சரி. யாரால்தான் யாருக்கு என்ன பிரயோசனம்? "ஐயோ, தாயும் பிள்ளையும் அது என்ன ஈஷலோ; அப்பளாத்து மாவு மாதிரி! உலகத்தில் இல்லாத அம்மா, உலகத்திலில்லாத பிள்ளை!" என்று என் மனைவியின் கேலியும் சரி.

ஆசை, அன்பு, பாசம், நம்பிக்கை, சடங்கு, ஆசாரம் என்று மேலுக்கு மினுக்குக் காட்டி, உண்மையில் பயத்தை வளர்த்துத் தனக்கு வேலிகள் நட்டுக்கொண்டே சமூகத்தின் இனித்த பொய்களை உண்டு ஏமாறுவதைவிடக் கசந்த உண்மையை விழுங்கி விடமுண்ட கண்டனானால் என்ன? நஞ்சுக்குப் பழக்கிக்கொண்டால் நான் சிரஞ்சீவி.

★

சிற்சில சமயம் எனக்குச் செவி நரம்பு குறுகுறுக்கும் செவியென்று நான் சொல்கையில் என் மனத்தில் என் எண்ணம், வெளிச்செவிக்கும் உட்செவி தாண்டிய கட் செவிக்கும் உட்செவி, அங்குச் சிலந்தி நூலினும் இழையெடுத்த ஸன்னத்தில் எஃகுச் சுருள் ஒன்று திடீர் திடீர் என, எனக்குக் காரணம் தெரியாத சமயங்களில் சுழல்கையில், அந் நரம்பொலியில் சிரிப்பு கேட்கிறது எனக்கு மாத்திரம் கேட்டு என்னில் குடிகொண்ட ரகஸ்யச் சிரிப்பு? என்ன சிரிப்பு? என்னையறியாமல் இது என்னுள் எப்போது வந்தது? இல்லை, எனக்கு முன்னாலேயே இருந்து என் தோலும் சதையும்- தான் அதன் மேல் புற்று மண்ணாய்ப் பூத்துக் கொண்டிருக்கிறதே? இச்சிரிப்புக்குச் செலவு உண்டோ இல்லையோ, வற்றல் இல்லை.

உயிர் அருவியின் 'கிளுகிளுப்பே', இதுதானோ?

ஆனைக்கா ஸன்னதிபோல், நெஞ்சப்பாளங்களிலிருந்து கசியும் கண்ணீரும் இதுதான் என்றும் தோன்றுகிறது. ஏனெனில் நெருப்பு குளிர்ந்து ஜலம் ஆயிற்று என்றால் குளிர்ந்த கோபம்தான் கண்ணீர். உறைந்த கண்ணீர்தான் சிரிப்பு.

ஆகையால் எப்பவும் அழுவதற்குப் பதில்தான் சிரிப்பு. சிரிப்பைப்பற்றி நான் வேணது அறிவேன்.

★

ஒருநாள் மாலை நான் ஆபீஸிலிருந்து திரும்பி வரும் வழியில் தெருக் குழாய்ச் சண்டை.

வசை மொழியில் ஆண் ஒருநாளும் பெண்ணை மிஞ்ச முடியாது, திண்ணமாய்ச் சொல்வேன். வசவின் வகையிலோ, வேகத்திலோ, மூச்சுக்கூட விட்டு வாங்காத ஓயாத கூச்சலிலோ, வசவின் கதியில் அஞ்சாது இறங்கும் அடிமட்டத் துணிச்சலிலோ அவர்களுக்கு நிகர் அவர்கள் தான்.

இருந்தாற் போலிருந்து, திடீரெனக் கை கலந்து விட்டது. பானையும் தவலையும் உருண்டன. ஒருவர் கூந்தலை ஒருவர் பிடித்து உலுக்கி, முகத்தைப் பிராண்டி, தரையில் உருண்டனர். இந்த ஆரண்ய தர்மத்துக்கெதிர், மார்த்துணி, மானம், மர்மம் எனும் மனித முலாமெலாம் எங்கு நிற்க முடியும்? இருவருக்கும் மூச்சு இறைக்கின்றது. இருவர் முகமும் ரத்த விளாறு. ஆனால் கூந்தல் மேல்பிடி இருவரும் விடவில்லை.

'ஏன்'யா!'

புளித்த கள் நெடி பின்னாலிருந்து மோதியதும் வயிற்றைக் குமட்டிற்று. குத்து மீசைமேல் மங்கிய தணல் மேட்டு விழிகள் கனன்றன.

"பார்த்தா வெள்ளைச் சொக்கா உடுத்து பெரிய மனுசனாட்டம் இருக்கே, வயசானவனா இருக்கே. புருவங்கூட நரைச்சுப் போச்சு, சண்டையை விலக்காட்டியும் வேடிக்கையா பார்க்கறே?"

இவன் ஏதோ வலுச்சண்டைக்கு அலைகிறான். அது தான் இவன் பிழைப்பு. பிழைப்பில் தான் எவ்வளவு விதம்! எங்களைச் சுற்றி 'கொல்'லென்று கூட்டம் கூடி

விட்டது வேடிக்கை பார்ப்பவர் பாதி. அவனைச் சேர்ந்தவர் பாதி. ஓநாய்க் கூட்டத்தின் ஒரே முகமான பசி ஏக்கம் போல், அவர்கள் முகத்தில் ஒரு வார்ப்பாய்க் காணும் சண்டைக்கு ஏக்கத்திலிருந்தே தெரிகிறது.

''வயசானவனாம் வயசானவன்! இந்த வயசானவங்க, வயசுமேலே பாரத்தைப் போட்டுட்டு பண்ணற கோஷ்டத்தைப் பத்தி என்கிட்டே கேளு அண்ணே! கோயில் திருக்குளத்திலே பொம்மனாட்டிங்க படித்துறையிலேதான் கால் களவுவாங்க 'நீ பாட்டுக்குக் குளிம்மா, நான் வயசானவன்!" பஸ்ஸிலே தள்ளித் தள்ளி இடிச்சுகிட்டு ஒக்காருவாங்க. சங்கோசப் படாதே, நீ என் பொண் மாதிரி!" பாத்ரூம்லே ராங்ஸைடுலே நுழைவாங்க. 'ஏண்டா கிளவா! கொட்டையா பொம்மனாட்டி பொம்மை போட்டிருக்குதே'ன்னு கேட்டால், ''வயசாச் சோன்னோம்மா, கண்ணு தெரியல்லே"ம்பாங்க. ஐயோ, அதையேன் கேக்கறேபோ, இவங்க பண்ற அக்ரும்புக்கெல்லாம், இவங்க வயசுதான் இவங்களுக்கு ''அவுட் பாஸ்.''

அவனுக்கு இவன் சுருதி.

இடமே ஏதோ ஒரு தினுசில் பரபரத்தது. இவர்கள் தவிக்கும் சண்டைத்தினவின் முறுக்கேற்றம்.

என்மேல் கைவிழுவதற்கு லக்கினம் இன்னும் ஒரு விநாடி அரை வினாடியில் தொங்கிற்று. பகையின் புகைச்சல் சட்டென அப்படிக் கவிந்துவிட்டது.

அப்போது என் சிரிப்புத்தான் என்னைக் காப்பாற்றிற்று என்று இப்போது தெரிகிறது. என் செவியோரம் எஃகுச் சுருள் திடீரெனக் கழலும் குறுகுறுப்புத் தாங்க முடியவில்லை. உடல் ரோமக்கால்கள் அனைத்தும் முள்ளாய் என்னின்று சிரிப்புப் புறப்பட்டதும் எல்லோரும் திகைத்து என்னின்று பின் வாங்கினர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. முதலில் எனக்கே புரிந்தால்தானே! இது என் சிரிப்பாய் எனக்கேயில்லை. இது எனக்கு

முன்னாலேயே இருந்து கொண்டிருக்கும் சிரிப்பு. தனக்கே சிரித்துக்கொண்ட சிரிப்பு. அதன் காரணம் அதற்குத்தான் தெரியும். ஆனால் அதில் ஏதோ ஒரு வெறி, குரூரம். சிரிப்பின் உருட்டு ஒவ்வொன்றும் ஒரு முள் சக்கரமாய்த் தெரிந்தது.

நான் அடியெடுத்து வைக்க ஆரம்பித்ததுமே, கும்பலில் தானே ஒரு சந்து பிரிந்தது. நான் சாவதானமாய் அதன் வழி நடந்து வெளியேறி, தெருவைத் தாண்டினேன்.

என்னை யாரும் பின் தொடரவில்லை.

★

என் சிரிப்புப் பற்றி ஒரோரு சமயமும் எனக்குப் புதிது புதிதாய்ப் புரிகின்றது. என் சிரிப்பின் விரிப்புகள் தான் எத்தனை !"

ஒரு சமயம் அம்பாளின் அர்ச்சனைக்குக் குங்குமச் சிதர்களைத் தாங்கிய ரோஜா இதழ்கள் அதினின்று உதிர்கின்றன.

இன்னொரு சமயம் நட்டுவாக்காளிகளும் குளவிகளுமாய்க் குதிக்கின்றன.

ஒரு சமயம் பொன் வண்டின் ரக்கையடிப்பு.

ஒரு சமயம் நர்த்தகியின் காற்சலங்கையொலி.

ஒரு சமயம் கண்ணீர்த் துளிகளாலேயே கட்டிய சரம் அறுந்து மூலைக்கொன்றாய் உருளும் மணிகளின் கிணி கிணி.

கறந்த பால் நிரம்பிய குடம் கவிழ்ந்து சரிந்த ரத்தம்.

அந்த ரத்தமே உறைந்து திடமாகி வழியின் குறுக்கே தலை தூக்கி இரை தேடி நெளியும் பவழ விரியன்.

அடித்த பஞ்சாகிப் பிறகு அதனுள் ஒளித்த வஞ்சகக் கோடரியின் கூர்முனையுமாகி, நெஞ்சின் மீட்டலுக்கேற்ப உவமைகள், உருவகங்கள், உருபுகள், கருக்கள் கருவின் இருளில் மறைந்து தோன்றி மீண்டும் மறையும் த்வனிகள்.

அன்று—

ஒன்று சொல்கிறேன். அன்று-என் கையில் எனக்கு நாளும் கிழமையும் அற்று என்றோ ஆகிவிட்டது. அதைப் பற்றி எனக்கு அக்கறையுமில்லை. அன்று, இன்று, இனி என நாம் நியமித்த ஏற்பாட்டில் நாம் உழம்பிக்கொண்டிருப்பது என்றும் உள்ள இன்றுதான் சென்று போனதை நொந்து, இனிக் காய்த்துத் தொங்கப் போவதை நம்பி, கைப்பிடியில் விரலிடுக்கில் வழியும் இன்றை ஏமாந்து போவதை என்றேனும் எண்ணுகையில் சிரிப்பு ஏன் வராது? அழுவதற்குப்பதில் சிரிப்பு. அன்றிலிருந்து பாய்ந்துகொண்டிருக்கும் ஜீவ நதியின் ஓசையே இதுதான்.

அன்று—

நான் குளித்துவிட்டு இடுப்பில் ஈரமுண்டுடன் திடுதிடுமென மாடியேறுகையில், பால்கனியிலிருந்து போதிய நெடியில் மூக்குத் தண்டு எனையறியாமலே சுணுங்கிற்று. "மோப்ப மாஸ்டர்" என்று ஏற்கனவே பட்டம் வாங்கியிருக்கிறேன். வேட்டை நாய் என்று அழைக்கவில்லை. மரியாதைக் குறைவு ஆயிற்றே!

ராஜு பால்கனியிலிருந்து வெளிப்பட்டான். அவன் முகம் லேசாய் வெளிறிட்டிருந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றோம்.

மனிதனோ, மிருகமோ, எவ்வளவு நெருங்கிய உறவானாலும் சரி எப்பவும் நம்மில் ஒரு நம்பிக்கையற்றதன்மை, ஒரு சதா விழிப்பு இயங்கிக்கொண்டேயிருக்கிறது. இந்த உஷார், ஜீவனின் இயல்புக்கே உரிய தற்காப்போ!

ராஜுவுக்குப் படிக்க உடல் வணங்கவில்லை. "நான் வேண்டாம்னா சொல்றேன்?" அவன் தாய் என்னிடம் கை விரிக்கிறாள். "அவன் தான் வேலைக்குப் போகணும்னு ஆசைப்படறான். 'நீதானே அப்பாவிடம் சொல்லேன்'னு எம்மைப் பிடுங்கியெடுக்கிறான். அவன் இஷ்டப்படி ஒரு வேளையைத்தான் பண்ணி வெச்சுடுங்களேன்! வயசுப்

பிள்ளை அப்பா மாதிரிதான் ரெண்டு காசு ஆத்துக்குக் கொண்டு வரணும்னு ஆசையிருக்காதா? ஏதோ அவனும் சொக்காய்த்துணி வண்ணான் வரைக்குமாவது ஆகு மோன்னோ!"

ராஜு என்றுமே 'டீக்' காக உடுப்பான். வண்ணான் மடியில் கத்திமுனை கலையவே கலையாது. தூசி பட்டாலும் துடித்து விழுவான். ஆகையால், இப்போது சட்டைப்பையில் கறுப்புத் திட்டு தீய்ந்து கொண்டே பெரிதாகி, சொக்காய் பொசுங்குவது அவனுக்கு ஏன் தெரியவில்லை? நான் சட்டென்று அவன் பைக்குள் கைவிட்டு எடுத்து அவன் வாயில் நட்டேன்.

ஏண்டா, அப்பாவுக்கு இப்படி மரியாதை பார்த்தால் உன் உயிருக்கே ஆபத்தாச்சேடா! சட்டை பற்றிக்கொண்டால் உன் கதி என்ன?

அவன் கன்னத்தில் விழுந்த அறையில் என் கைவிரல் நுனிகளில் 'சுறீல்' பாய்ந்தது.

ராஜு திணறிப் போனான் அவனுக்கு வலியை விடஆச்சரியம்தான் இருந்திருக்கும். எனக்கே என் செயல் வியப்பாயிருந்தது. எனக்கு நினைவு தெரிந்து என் குழந்தைகளை நான் தண்டித்தது இல்லை அதெல்லாம் அவள்பாடு. அடிப்பாள், உடனே கட்டிக்கொண்டு அழுவாள். அடித்த கன்னத்தைக் கையில் தாங்கிக் கொண்டு என்னைப் பார்த்துக் குழம்பி நின்றாள்.

"என்ன இது வயசுப் பிள்ளையை நீங்கள் போட்டு அடிக்கற அக்ரமம்?" குரல் கேட்டுத் திரும்பினேன். என் பின்னால் ராதை நின்று கொண்டிருந்தாள்; அவள் முகம் கொதித்தது. இந்தச் சமயம் அவள் தன் முந்திய அழகின் முழுமையில் பொலிந்தாள். எனக்குச் சொந்தமாயிருந்த அந்த நாளின் அழகு.

இப்போது ராதை எனக்குச் சொந்தமில்லை. அவள் தன் குழந்தைகளின் தாய். அவர்களுக்குச் சொந்தம்.

நான் ஒன்றும் பதில் பேசவில்லை. நேரே என் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேன். இடுப்பின் ஈரத்தைக் களையாமலே நாற்காலியில் சாய்ந் தேன். உடலில் ஒரு தினுசான ஓய்ச்சல். என்னை மங்கிய இருள் சூழ்ந்தது. என்றுமே என் அறையில் வெளிச்சம் மட்டுத்தான். இந்தச் சமயம் எனக்கு இந்த இருள் வேண்டியிருந்தது. என்னையே எனக்குப் பார்க்க விருப்பம் இல்லாத சமயம் இது. இருளின் இதவு உடல் மேலேயே உணரும் சமயம் இது. இருளுக்கும் எனக்கும் என்றுமே இணைப்பு உண்டு. எத்தனை பேர் என்னைச் சூழ இருந்தும் நான் வரவர அதிகம் உணரும் தனிமை யில் இநதச் சின்னத்தின் துணையும் இல்லாவிடில் நான் என்ன ஆவனோ? வரவர எனக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது? வயது காரணமாய் உடல் நைவின்மேல் போடும் பழியைத் தவிர, மனத்திலேயே ஏதோ ரஸாய னம் நேர்ந்து கொண்டிருக்கிறது. இல்லை உடல் வேறு, என்று பிரித்துப் பேசுவதுதான் தவறோ? உடல் இல்லாது மனம் ஏது?

★

கீழே கூடத்தில் ரேடியோ ஏதோ சினிமாப் பாட்டைக் கதறுகிறது. பாட்டா அது? ஆபாச ஊளை! ஒரு கல்லைத் தூக்கிப் போட்டால் அடங்கிவிடும். ரிப்பேர் ஆகித் திரும்பி வரும்வரை ஒரு பத்து நாளேனும் நிம்மதி. ஆனால் அப்படியும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. கம்பெனிக்காரன் பதில் ரேடியோ தருவானாமே! ஓயாத இரைச்சலில்தான் இந்த வீட்டு வாழ்க்கை. ஒன்று இரைச்சல். இல்லை மொண மொணப்பு.

மகப்பேறு ஒவ்வொன்றுக்கும் எங்கள் உறவு விரிசல் கண்டு, ஒன்று, இரண்டு, மூன்று—நான்கும் ஆனது ராதையும் நானும் நேர்ந்தது அறியாமலே, இரு கக்ஷிகளா கவே பிரிந்து விட்டோம். அவள் இரைச்சலில் தன் ஆத்தி ரங்களுக்கு வாய் மொழி கண்டால், நான் ஊமையானேன்.

பிளவைச் செப்பனிட நான் முற்படவில்லை. பயன்? நாம் தான் நாளுக்கு நாள் சுட்டமண் ஆகிக் கொண்டிருக்கிறோமே!

"உங்கப்பா என்னடா காலத்தோடு ஒட்டின மனுஷ-னேயில்லை உத்தியோகம் பண்றார்னுபேர், இன்னும் கைக் கடிகாரம்கூட இல்லை. காய்கறிக் கடைக்காரன் கூட கடிகாரம் கட்டிண்டுதான் சொத்தைக் கத்தரிக்காயை நிறுத்துப் போடறான். அதையும் உங்கப்பா வாய் பேசாமல் வாங்கிண்டு வந்துதான் இங்கு கொட்டறார். மாமனார் வீட்டில் வாங்கிப் போட்டால்தான் உண்டா? தானா வாங்கிப் போட்டுக்கொள்ள வக்கில்லையா? நாளாகவில்லையா? உங்கப்பாவின் மாப்பிள்ளையழைப்பின்போதே, இவர் வேட்டியைத் தட்டிச் சுத்திக் கட்டிண்டு காரிலிருந்து இறங்கினதை நான் மாடியிலிருந்து பார்த்தது. நான் நாலு பெத்தாச்சு. நாளுக்கும் மறக்காது. இன்னும் அந்தக்கோலம் நெஞ்சை அறுத்துண்டு தானிருக்கு. ஒரு சினிமா டிராமா ஆம்படையாளைத் தனியா அழைச்சுண்டு போனதுண்டா? கேட்டால், "நீ வேணும்னா போயேன்!" நான் வேணது போறேன். இல்லை இவர் போகலியேன்னு நான் போகாமலிருக்க முடியுமா? நான் போறேன், என் பிள்ளைகளை அழைச்சுண்டு போறேன்; நீங்கள் தடுக்கலே என்பதா கணக்கு? உங்களோடு என்று எனக்கு என் பங்கு எங்கே?"

ராதையின் குரல்களே இப்படித்தான்.

"ஆள் கால், ஆடை முக்கால்னு உங்க அப்பா இன்னும் காலத்தோடு ஒட்டினால் நம் குடும்பம் இன்னும் முன்னேறலாம். என் தங்கை போல், நம் வீட்டிலும் ஒரு சமையற்காரனும் வாசலில் ஒரு காரும் நிற்கக்கூடாதா? இல்லை இரண்டுக்கும்தான் எனக்குத் தகுதியில்லையா?"

எனக்குத் தெரிந்து ராதைக்கு மூன்று ஆசைகள்.

அவளைக் காலையில் எழுப்பக் கூடாது.

அவள் செலவுக்குப் பணம் அவ்வப்போது முளைத்துக் கொண்டே இருக்கவேண்டும் அவளைக் கணக்குக் கேட்கக் கூடாது.

அவள் தங்கை செய்வதெல்லாம் அவள் செய்தாக வேண்டும்.

"ஒரு அசலாத்துப் பெண்ணைக் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துண்டு வந்துட்டா ஆயிடுத்தா? அவளைச் சந்தோஷமா வெச்சுக்க வேண்டாமா?"

"உங்க அம்மாவுக்குக் காரும், சினிமாவும்தான் முக்கியம். நான் கூட இல்லே" என்று நான் கேலி செய்தால் அதற்கும் பதில் வைத்திருப்பாள்.

"அப்படித்தான் இருந்துட்டுப் போகட்டுமே! ஊர் உலகத்தில் எல்லோரும் போகல்லியா, வரல்லியா? ஆம்படையான் செத்துப்போனவாள் எல்லாம் உடனே உடன்கட்டை ஏறிவிட்டாளா? நீங்கள் ஒரு பிள்ளை. உங்களை நம்பி உங்கம்மா வாழ்ந்தாப்போலே, நான் மூணு பேரை நம்பி வாழ்ந்திட்டுப் போறேன். மூணு பேரில் மூணுபேருமா பொல்லாதவனாயிருப்பான்கள்? உங்களை நம்பி என்ன கண்டேன்."

"நான் தான் வெகுளி. லோலோன்னு கத்தி நானே ஓயணும். எல்லாத்துக்கும் மௌனம்தான் மருந்துன்னு உங்கப்பா அழுத்தமாயிருக்கார். எனக்குத் தெரியாதா? ஆனால் இனி நான் ஓயமாட்டேன்."

எனக்கும்தான் தெரிகிறது.

ப்ரேமையின் சின்னமாய் ராதையின் பெயரை இவள் ஏன் கொண்டாள்?

இதெல்லாம் இன்றைக்கு எனக்குத் தோன்றுவானேன்?

அன்று மாலை, ஏன் அன்றிலிருந்தே நான் வீடு திரும்ப வில்லை.

★

ராதையின் புழுக்கமும், அவள் பழியும், என் மௌனமும் சேர்ந்து நிச்சயமாய் என்னை ஏதோ ஒரு முனைமுகம் இழுத்துச் செல்கின்றன. அவள் கிளை தாவிட்டாள். எனக்குத் தாவக்கிளையில்லை. அதற்குப் பதில் என்னைக் கழுவிலேற்றியது போல் என்னை ஊடுருவிவிட்ட வேர் மீது, என்மீது ஒரு விருக்ஷம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

மனம் ஒரு தோலானால் மனமும் உடல்தான்.

உலகமே உயிரின் கல்லறை.

என்மேல் கற்கள் அடுக்கியாகின்றன.

நான் தனியனாகிவிட்டேன்.

நாளும் கிழமையும் என்னைத் துறந்தன.

★

மறுநாள் மாலை: ராஜு ஆபீசுக்கு வந்தான், விஜியைத் தூக்கிக்கொண்டு.

''அப்பா!'' குழந்தை என்னைக் கண்டதும் ஒரு தாவு தாவிவிட்டாள். அப்பம் போன்ற கைகளால் என் முகத்தைத் தொட்டுப்பார்க்கிறாள். அது அவள் சுபாவம்.

நான் மணியடித்து, பாபுவை ஒரு 'ஸெட் டிபனும்' இரண்டு காப்பியும் வாங்கிவரச் சொன்னேன். விஜிக்கு ஒரு லாலி பாப்!

அப்படியென்றால் என்னவோ ?

ராஜுக்கு முகம் சுண்டியிருந்தது.

''அப்பா என்னை மன்னிச்சிடுங்கோ!'' இந்த மூன்று வார்த்தைகளை வெளியிட எவ்வளவு ஒத்திகை பார்த்திருப்பான்.

''ஓ ராஜு I am also sorry. உன் அம்மா சொன்னாப் போல, உன்மேல் நான் ஏன் கை வைத்திருக்க வேணும்? நான் பெற்றதால் என் வளர்ப்பிலேயே உன்னை நான் உருவாக்கப் பார்ப்பது நியாயமா? ராஜு நீ பெரியவனாயிட்டே. உன்னிடம் விட்டுப் பேசலாம் என்றே நினைக்கிறேன். இந்த மனித விதைக்குத்தான் இந்த மகத்துவம் உண்டு. ஒரேமரத்தில் மாங்காய் காய்க்கும், தேங்காய் பாளைவிடும், அவரை பூக்கும், பாகல் படரும். இந்த உண்மை சமயத்தில் மறந்து விடுவதால்தான் வருகிறது துயரம், சண்டை, மனஸ்தாபம் எல்லாம்!''

''வீட்டுக்கு வாங்கோ அப்பா!'' ராஜு முனகினான். ''சேகர் இந்த ஒருநாள் ராத்திரியில் உங்களைக்காணாமல்

'பக்'னு பாதி வாங்கிட்டான். வாய்விட்டால், அழுதால் கூட தேவலை. ஊமையடிப்பட்டுத் தவிக்கிறான்.''

சேகருக்கு என்மேல் பட்சம் கூடத்தான். என்மேல் காலைப் போட்டுக் கொண்டால்தான் அவனுக்குத் தூக்கம் வரும்.

''கண்ணன் என்ன பண்ணுகிறான்?''

''கண்ணன் ரெண்டு தடவை 'அப்பா இன்னும் வல்லியா'ன்னு கேட்டான். அப்புறம் பந்தை எடுத்துக் கொண்டு ஓடிப்போயிட்டான்."

எனக்குத் தெரியும். கண்ணன் சமாளித்துக்கொண்டு விடுவான்.

எல்லோருமே சமாளித்துக்கொண்டு விடுவார்கள்.

நாள் ஆகஆக, உடலில் உப்பும் தண்ணும் ஊற ஊற, சதை தடிக்கத் தடிக்க, எல்லோருமே எல்லாவற்றையுமே சமாளித்துக் கொண்டு விடுவார்கள்.

அம்மா என்ன பண்ணுகிறாள்?—என்று நான் கேட்கவில்லை.

கேட்க மாட்டேன்.

கண்ணனுக்குப் பந்து.

ராஜுவுக்கு சிகரெட்.

விஜிக்கு 'லாலி பப்பு'

ராதைக்குச் சினிமா.

சேகர்தான் பாவம்! கொஞ்சம் திண்டாடுவான்.

பிறகு அவனும் சரியாகி விடுவான்.

வாழ்க்கையே மறதியின் வெற்றிதானே.

நான் ராஜுவின் தோள்மேல் கை வைத்தேன்.

''ராஜு, Don't bother. நான் எங்கே காட்டுக்கா போய்விட்டேன்? எனக்குத் தோன்றும்போது வருகிறேன். நீங்களும் என் ரூமுக்கு வாருங்கள்! இன்று நேரமாகி விட்டது. நாளை காலை வா, உன் பேரில் பேங்கில் கணக்கு வைக்கணும். குடும்பத்தை இனி நீதான் பார்த்துக்

கொள்ள வேண்டும். நீ வேலைக்குப் போக ஆசைப் படுவதாக உன் அம்மா சொன்னாள். நாளைக்கு உனக்கு ஒரு சிபாரிசு கடிதாசு தருகிறேன். உனக்கு வேலை கிடைக்கும்."

ராஜுவுக்கு முகம் மலர்ந்தது. உடனே அடக்கிக் கொண்டான்.

"என்னப்பா இதைவிடப் பெரிய சண்டையெல்லாம் வீட்டில் நடந்திருக்கு. அதைவிட நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறும்படியாக என்ன நேர்ந்துவிட்டது?

"நீ சொல்வது சரிதான். ஆனால் பெரிய வெடிக்கு தீவட்டியை வெச்சுத்தான் கொளுத்தணுமா? சின்னத் திரி போதாதா? எனக்கும் வயதாயிற்று. குடும்பத்தை விட்டு ஒதுங்க எனக்கு வேளை வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளேன்! இளவெட்டுக்கள் உங்களுக்கெல்லாம் எப்போ சான்ஸ் கிடைக்கிறது? அடடா பிடிடா இவளை! மசியைக் கொட்டிட்டாளே, முக்கியமான பேப்பரில்!"

"அப்பா, சாயந்தரமா வரப்போ 'லாலிபப்' வாங்கிண்டு வரீயா?"

★

என் அறையில் படுத்திருக்கிறேன்.

அறை மிகச் சிறிது. கைகளை நீட்டினால் இரு பக்கத்துச் சுவர்களும் இடிக்கின்றன. ஆயினும் இது என் வளை.

ஜன்னலில் ஒரு மண் கூஜாவில் குடி ஜலம், கண்ணாடி டம்ளர். இன்றுதான் வாங்கினேன். காலை வீசி நடக்கும் தூரத்தில் Hotel de Mathur. பண்டங்கள் அப்படி ஒன்றும் மதுரமாயில்லை. ஆயினும் கிட்ட இருக்கிறது. சாப்பிடப் போனாலும் போச்சு. சோம்பலாய் இருந்தால் திரும்பிப் படுத்துக் கொண்டாலும் போச்சு. என்னைக் கேட்பார் யாருமில்லை. நானே ராஜா, நானே மந்திரி, நானே சேவகன்.

ராதையின் பழகிய குரல் நினைவில் எழுகின்றது.

"எத்தனை நாள் நடக்கும் பார்த்துடறேன். நாக்குச் செத்துப்போனால் தானா வந்து சேர்றார். அவர்

வீட்டுக்கு அவரை நான் அழைக்கணுமா என்ன? நாலு பேர் சிரிக்கணும்னுதானே நாலு பெக்கற வரைக்கும் காத்திருந்து உங்கப்பா லீலை நடத்தறார்!"

அதுவும் எனக்குத் தெரியாது. இப்போதைக்கு என் சிரிப்புத்தான் எனக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறது.

ஆனால் இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது.

குழந்தைகள் வருமுன், என் ராதை ஒரு சமயம் எங்கள் ஆலிங்கனத்தின் நெருக்கத்தைத் தடுத்ததென என் பூணூலைக் கோபித்து "சூள்" கொட்டி முதுகுப்புறம் தள்ளிவிட்டதும் ஞாபகம் வருகிறது.

இன்று மாலை 'லாட்ஜ்' வாசலில் வந்து தெருப்பக்கம் காற்று வாங்க நின்றேன். எதிர் வீட்டுக் குறட்டில் ஒரு பையன் பம்பரம் ஆடுகிறான். இல்லை ஆடப் பார்க்கிறான். சின்னப் பையன் நாலு, ஐந்து வயதுக்குமேல் இராது. கயிற்றை இழுத்துப் பம்பரத்தில் சுற்றக்கூட அவனுக்குச் சக்தியில்லை. அவனிடம் போய் கையை நீட்டினேன். பையன் முறுக்கிக் கொள்ளவில்லை. உடனே கொடுத்துவிட்டான். ஜாட்டியைச் சுற்றிக் கொண்டே "அம்பி உன்பேர் என்ன?" என்று கேட்டேன்.

"சேகர்."

"ஓ! நீயும் சேகரா?"

பம்பரம் கயிற்றிலிருந்து விடுபட்டு ரோஷத்துடன் தரைமீது குதித்தது. குளவிபோல் கூவிற்று கற்பூரக் கொழுந்து போல் தூங்கிற்று. பையன் முகமே கண்களாயின. ஏற்கெனவே கார்ட்டூன் பொம்மை மாதிரிதான் இருக்கிறான். பம்பரத்தை எடுத்து அவன் கையை விரித்து உள்ளங்கையில் விட்டேன். குறுகுறு-சேகர் வாயிலிருந்து உடைந்த குழாய் போல் சிரிப்பு பீறிட்டது. பம்பரம் படிப்படியாக வேகம் குறைந்து, கிழவன் தலைபோல் ஆடிக் கையிலிருந்து கவிழ்ந்தது.

'தாத்தா தாத்தா நுன்னொண்ணா தட்வை பண்ணுங்கோளேன்! தாத்தா தாத்தா! Please!"

ஓ, கான்வென்டா?

அந்த நிமிஷத்திலிருந்தே நாங்கள் சிநேகிதர்களாகி விட்டோம்.

"நுண்ணொண்ணு தரம்!"

"நுண்ணொண்ணு தரம்!"

"சேகர்! சேகர்!" என்று குரல் கொடுத்துக் கொண்டே உள்ளிருந்து ஒரு பெண் வந்தாள். பையன் அவனிடம் ஓடிப் போய் அவள் இடுப்பைக் கட்டிக் கொண்டான்.

"அம்மா! அம்மா! தாத்தா ரொம்ம நன்னா குத்து விடறார். நீபாரேன்!"

இவள் இவனுக்குத் தாயாரா? அக்கா என்றாலே பொருந்தும். பையன் முகத்துப்பால் இவள் முகத்தில் இன்னும் காயவில்லை. இவளை எங்கேயாவது பார்த் திருக்கிறேனோ?"

அவள் புன்னகை புரிந்தாள்.

"சேகருக்குக் கொஞ்சம் இடம் கிடைச்சுட்டால் போதும் நேம்ர தலைமேல் தான் சவாரி."

நான் நெற்றிப் பொட்டைத் தேய்த்துக்கொண்டு நின்றேன். இவளை நான் எங்கு பார்த்திருக்க முடியும்?

"தாத்தா குத்துவிடுங்கோ தாத்தா! அம்மா பார்க் கனும்!"

அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

"உஷ்! மாமான்னு சொல்லணும் சேகர்!"

அன்றிரவு நான் குளித்துவிட்டு, ஹோட்டலுக்குக் கிளம்ப சட்டையை மாட்டிக் கொண்டிருக்கையில்,

"தாத்—மாமா!"

திரும்பினேன். அறை வாசற்படியில் சேகர் நின்று கொண்டிருந்தான், கையில் ஒரு தட்டுடன். அதில் ஒன்றன் மேல் ஒன்றாய்க் குவித்த இரண்டு மூன்று பொரித்த அப்பளங்கள்.

"அம்மா கொடுத்துட்டு வரச் சொன்னாள். ஈர அப்பலாம். இன்னிக்கு இட்டாளாம்."

அவனைத் தூக்கிக்கொண்டேன். பையன் இறக்கை மாதிரியிருந்தான்.

"Thank you Sekar ! Tell your Mummy I thank here !"

★

அவள் கணவனும் இரண்டு நாள் கழித்து என்னைப் பார்க்க வந்தான், பையனை அழைத்துக் கொண்டு. "சுமாச்சுமா சேகர் பிடுங்கி எடுக்கிறான்." அவனுக்கு ராணுவத்தில் வேலை. "நினைத்த சமயம் எங்கே வேணு மானாலும் மாற்றலாம். பையன் படிப்பு பாழாய்ப் போவுது. பையன் உங்க கிட்ட ரொம்ப ஒட்டிக்கிட்டான் சார், எங்களுக்கே ஆச்சரியமா இருக்குது."

யாரும் என்னோடு ஒட்டினால் இப்போது கூச்சமா யிருக்கிறது. எந்தவித ஈடுபாட்டிலும் மாட்டிக்கொள்ள மனம் மருள்கின்றது. இப்போது ஒரு பெரும் ஈடுபாடிலி ருந்து என்னைக் கழற்றிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் இதை இவனிடம் சொல்ல முடியுமா ? சொல்வதே ஒரு ஈடுபாடுதான்.

"அவளுக்கு ரொம்ப சந்தோஷம் சார், so to me" எங்க வீட்டில் பெரியவங்க யாரும் இல்லை. என் parents சின்ன போதிலேயே காலமாயிட்டாங்க. அவளுக்குத் தாயார் இல்லை. அவள் தகப்பனார் மறுபடியும் கலியாணம் பண்ணிக்கிட்டார். அவங்க எல்லாம் தூர தேசம்—"

கண்டவிடம் மாற்றலாகி, கண்டபேருடன் பழகி அவர்கள் பேச்சு இவனுக்குப் படிந்து, இவன் பாஷை இன்னதெனப் புரியாதபடி பாழ்பண்ணிக் கொண்டாச்சு.

இதையெல்லாம் இவன் ஏன் என்னிடம் சொல்கிறான்? இவர்களைப் பற்றி எதையும் அறிய நான் விரும்பவில்லை. யாரைப் பற்றியும் எதையும் அறிய நான் விரும்பவில்லை.

"உங்க மாதிரி ஒரு பெரியவங்க எதிர் வீட்டிலேயே எங்களுக்குக் கிடைச்சுது எங்க அதிர்ஷ்டம் ஸார், அப் பப்போ உங்கள் advice, guidence-"

Oh my god ! இந்தத் தும்பைத் தலையும் நரை புருவமும் படுத்தும்பாடு !

"அதே மாதிரி உங்களுக்கும் என்னால்-எங்களால் ஏதாவது ஆகணும்னா don't hesitate—"

"உன்னால்—உங்களால் எனக்கு ஆகவேண்டியது நீங்கள் என்னைச் சும்மா விட்டு விடுவதுதான். நான் வேண்டுவது தனிமை" என்று இவனிடம் சொல்ல முடியுமோ ?

"ஓ அதற்கென்ன ?" என்று சொல்லி எழுகின்றேன், அசட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு என்னுள் வீற்றிருக்கும் சிரிப்பு என்னைப் பார்த்துச் சிரிக்கின்றது.

★

நான் தனிமை, தனிமை என்கிறேன்.

ஆனால் உண்மையில், உண்மையான தனிமையைச் சாதிக்க முடியுமோ ?

தனியாயிருந்தால் மட்டும் தனிமை கிட்டி விடுமோ ? அதுவே முதலில் இருக்கிறதோ ?

ஏனெனில், நான் எங்கு போனாலும், யாரை விட்டுத் தப்பி வந்தாலும் எப்பவும் என்னோடு இருக்கிறேனே !

எனக்கும் நான் நாஸ்திதான் தனிமை.

துறந்துவிட்டதால் மட்டும் தனிமை வருமோ ? ஒன்றைத் துறந்தால் மற்றொன்று அதனினும் பெரிது இட்டு நிரப்ப வந்து விடுகின்றது.

சகலமும் துறந்தவனுக்கு உலகமே உடைமை.

ஆகையால் சின்ன உடைமை, பெரிய உடைமை எனும் தாரதம்மியங்கள் தவிர உண்மையான தனிமையுமில்லை.

உண்மையான துறவுமில்லை.

இன்றிரவு எனக்கு ஒரு வேடிக்கையான எண்ணம் தோன்றிற்று. முற்றிலும் வேடிக்கையுமல்ல. விஷமமானதுதான். நான் தனியாக வந்து எம்மட்டும் தனிமையைச் சாதித்திருக்கிறேன் என அறிய ஆவல் கொண்டேன். இன்று என் இரவுச் சாப்பாட்டை இரந்துண்டால் என்ன?

பிச்சையெடுக்க மனம் எம்மட்டில் துணிந்திருக்கிறது? ஹோட்டல் டிக்கெட் புஸ்தகத்தையும், பாங்கு புஸ்தகத்தையும், மணி பர்சையும், எதிர் வீட்டு உறவையும், உத்யோக பத்திரத்தையும் இத்தனை தைரியங்களின் கலவையான என் மமதையையும் எம்மட்டில் என்னால் மறக்க முடியும்?

தெருக்களைத் தாண்டி வெகுதூரம் நடந்தேன். வாசல்கள் சில திறந்திருந்தன. பல மூடியிருந்தன. எந்தப் படியை ஏறவும் மனம் துணிந்திருந்தால்தானே! நடந்து நடந்து நாக்குக்கூட வரண்டுவிட்டது. இன்று சோறு இல்லாவிட்டாலும் போகிறது. தாகத்துக்குச் சோதனையாக ஒரு சோடாக்கடை கூடத் தென்படவில்லை. நான் இப்போது அலையும் இடத்தில் தெருவிளக்குக் கூடச் சரியாக எரியவில்லை. விட்டு விட்டு அணைந்து ஏற்றிக் கொள்கிறது. வழி தப்பிவிட்டதோ? சந்தேகம் வந்து விட்டது முன்னிலாவில் வெள்ளைத் துணி போர்த்த ஒரு உருவம் தெரிந்தது. சற்றுத் தயங்கி நின்றேன்.

திண்ணையில் சாய்ந்திருந்தவர் சட்டென எழுந்து உட்கார்ந்தார்.

"யாரைத் தேடறீங்க? வாங்க, வாங்க—உட்காருங்க—உட்கார்ந்து பேசுங்க—"

"நான்—நான்—எனக்கு"

விழிகளில் எரிநீர் உறுத்திற்று. இது கோபமா? அவமானமா?? பயமா??? உலகில் பிச்சை புகுந்த அத்தனை ஆண்டுகளின் அடையாளத் துயரமா????

இச்சமயம் ராதை என்னைப் பார்த்தால் என்ன சொல்வாள்? என்னை இடிக்க மாட்டாள்??

இதெல்லாம் எத்தனை அனாவசியம்! தன் மனசில்தான் பெரிய புத்தன், பட்டினத்தார்னு எண்ணம்! தன் வீட்டுச் சோற்றைத் தான் சாப்பிடுவதை விட்டுவிட்டு, இதென்ன கௌரவப் பிச்சையா? வேண்டுதல் பிச்சையா?"

என்மேல் ஊர்ந்த ஆயிரம் தேள்களில் ஒன்று அவரைக் கொட்டி விட்டாற்போல் அவர் துள்ளி எழுந்தார்.

சிவகாமி! ஆள் வந்தாச்சு, இலையைப் போடு!" அவர் குரல் கணீரென்றது. "வாங்க, கைகால் கழுவுங்க!"

வாழை இலையில் வட்டித்த சாதத்தின்மேல் நெய் ஊற்றிய இடம் லாந்தர் வெளிச்சத்தில் பளபளத்து என்னைப் பார்த்துச் சிரித்தது.

அந்த வற்றல் குழம்புக்கும், பருப்புத் துவையலுக்கும்-கெட்டி மோருக்கும் இணை ருசி நான் இன்னும் காணப்போகிறேன்.

சாப்பாடு முடியும்வரை யாரும் பேசவில்லை.

கையலம்பிக் கொண்டதும் அவர் வெற்றிலைத் தட்டை யெடுத்து வந்தார்.

"நான் போடும் வழக்கமில்லை" என்றேன்.

"பரவாயில்லை, தாம்பூலம் எடுத்துக்கோங்க."

நான் வாங்கிக் கொண்டதும் தடாலென்று இருவரும் என் காலில் விழுந்து நமஸ்கரித்தனர்.

எனக்கு வாயடைத்தது.

அந்த அம்மா பேசினாள்.

"எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுங்களா? இன்னி மாலையிலிருந்தே இவர் சொல்லிட்டிருக்காரு. "சிவகாமி, இலை போட அவசரமில்லை விருந்தாளி வர இருக்கு"ன்னு, என்ன இவரு இப்படிச் சொல்றாரே, நேரமாவுதே. நான் யோசனை பண்ணிட்டிருந்தேன் நீங்களும் வந்தீங்க, ஆனால் இவர்கிட்டே எனக்கு இது ஒண்ணும் அதிசயமில்லீங்க. இவரு இப்படி ஏதாவது சூசனையா சொல்வாரு சொல்றபடியே நடக்கும்."

இவர்களிடம் எனக்கு அச்சமாயிருந்தது. பேச்சை மாற்ற, "குழந்தைகள் எல்லாரும் தூங்கி விட்டார்களா?" என்று கேட்டேன்.

"கொளந்தைகளா ?" அவள் கணீரென்று சிரித்தாள் "கடவுள் எண்ணம் வெக்கலீங்க. ஆனால் நாங்கள் அதைப் பத்திக் கவலைப்படல்லீங்க. இவர்தான் எனக்குக் கொளந்தை. நான்தான் அவருக்குக் கொளந்தை, எழுந்தூட்டீங்களா? நேரமும் ஆவுது சரி, போய் வாங்க...?"

கையும் பிடியுமாய் அகப்பட்டும், மன்னிக்கப்பட்ட திருடன் போல் நான் அவ்விடம் விட்டு அகலறேன்.

சோதிப்பவன்தான் உண்மையில் சோதிக்கப் படுபவனும்.

★

இவளை எங்கோ பார்த்த மாதிரி நினைவில் ஏதோ இடறுகிறது. ஆனால் நிச்சயமாய் இவளை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. பார்த்திருக்கவே முடியாது.

இவர்கள் மூவர் மேலும் புரியாத சோகச்சாயை படர்ந்திருக்கிறது. இவர்களைப் பார்க்கும்போதெல்லாம் ஏதோ நல்ல கவிதையைப் படித்தபின் நெஞ்சில் அதன் வண்டலாய்த் தங்கும் கிலேசம் இறங்குகிறது. குளிர் தாங்காது ஒன்றுடன் ஒன்று ஒடுங்கிக்கொள்ளும் சிட்டுக் குருவி ஜோடியை நினைவூட்டுகின்றனர்.

இவள் எவ்வளவு சிறுகூடாய் இருக்கின்றாள்! இவ்வளவு குறுகிய வயிறு எப்படிச் சேகரின் கருவைத் தன்னில் அடக்கிச் சுமந்தது?

—இது எவ்வளவு முட்டாள்தனமான கேள்வி ! சுமந்து தானே சேகர் உருவாகி வெளிவந்து பம்பரம் விளையாடுகிறான். தவிர இது என் கவலையா ? இது எண்ணத்தின் அக்கப்போரன்றி வேறு என்ன ?

அவர்கள் வீட்டில் செய்யும் பலகாரங்கள்—ஏன் சில சமயங்கள் அவள் கணவன் வாங்கி வரும் பொட்டலங்களில் கூடப் பங்கு பையன் மூலம் வரும்.

மறுக்கவும் முடியவில்லை. ஒரு தடவை திருப்பியனுப்பியதற்கு அவளே நேரே வந்து விட்டாள்.

"ஏன் நான் கொடுத்து நீங்கள் வாங்கிக்கக்கூடாதா ?" இதற்கென்ன பதில் சொல்ல முடியும் ? தட்டை ஜன்னலில் வைத்துவிட்டுச் சென்றாள்.

இன்னொரு சமயம் 'தலைவலி' உடல் சுகமில்லை, என்று தட்டிக் கழிக்க முயன்றேன். அவ்வளவுதான். ஏன் சொன்னேன் என்று ஆகி விட்டது. உடனே மாத்திரை, வெந்நீர், கஷாயம், மிளகுரசம் என்று எதை எதையோ தூக்கிக் கொண்டு இருவருமே வந்து விட்டனர். அந்தப் பொய்யிலிருந்து கௌரவமாய்த் தப்புவதே பெரும் பாடாய்ப்போய்விட்டது.

சிறுமீன் போட்டுப் பெருமீன் பிடிக்கிறார்களோ என்று நான் கவலையுறும்படி அவர்கள் என்னிடம் கடன் கேட்கவில்லை. ஒரு தயவையும் எதிர்பார்க்கவில்லை.

மனிதன் எப்பவும் சந்தேகப்ராணி.

ஒன்று இல்லாவிட்டால் ஒன்று ஏதோ ஒரு தாக்ஷண்யச் சுழியில் மாட்டிக்கொண்டு தவிக்கிறோம்.

ஒன்று ஆத்திரத்தில் அழிகிறோம் அல்லது அன்பால் கொலை செய்யப்படுகிறோம்.

இந்தத் தாக்ஷண்யங்களைத் திருப்புவது எப்படி என்று மண்டையைக் குடைந்து கொள்வேன்.

பையனுக்குப் பிஸ்கட் ரோல் வாங்கித் தருவேன்.

ஒரு வெள்ளிக்கிழமை மாலை கதம்பம் வாங்கிக் கொண்டு அவர்கள் வீட்டுள் நுழைந்தேன்.

அவள் மட்டும்தான் இருந்தாள். அவள் கணவன் இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை. பையன் விளையாடப்போய் விட்டான் போலும்.

"வாங்கோ ! வாங்கோ ! !"

பூப்பந்தை அவளிடம் நீட்டினேன். அவள் கண்கள் விரிந்தன. "எனக்கா ?"

"பின்னே என்ன நான் சூட்டிக்கொள்ளவா ?"

என்னிடமிருந்து வாங்கிக் கொள்கையில் அவள் கைச் சுண்டுவிரல் என் உள்ளங்கையில் பட்டது. உடல் பூரா

ஊடுருவிய ஒரு பரவசத்தில் என் விழிகள் பிதுங்கி என் கையில் விழுந்து விடும்போல் மண்டையில் ஒரு மின்னல்.

இரு கைகளையும் தூக்கிப் பூச்சரத்தைக் கொண்டையில் சரிப்படுத்திக் கொண்டு அவள் நிற்கையில், ஜீராவில் செய்து வைத்த சின்னிப் பொம்மைபோல் எந்த நிமிஷம் கரைந்து விடுவாளோ, கடலில் கரையோரம் நடுங்கும் அலை நுரை போல் சிதறிக் காணாமல் போய்விடுவாளோ என்றுகூட ஒருதினுசான வேதனை முதுகுத் தண்டில் ஏறி இறங்கி நெளிகின்றது. இவள் எப்படிப் போனால் எனக்கென்ன என்று ஏன் இருக்கமாட்டேன் என்கிறது ?

★

இன்று ராதை வந்தாள்.

மூன்று மாதங்களுக்குப்பின், முற்றிலும் எதிர்பாராத சமயத்தில், "நான் வரலாமா?" என்று கேட்டுக் கொண்டே. திடீரென்று அவள் அப்படித் தோன்றியதும் அவளைப் பார்க்க, சிநேக பாவனையில் அவளை வரவேற்க சந்தோஷமாய்க்கூட இருக்கிறது.

"என்ன அப்படிக் கேட்கிறாய்? வா, வா."

"ஆமாம், நம் வீட்டில், நம் வீடாகையால் நம் வீடு என் வீடுகூட. ஆனால் இது உங்கள் இடமாச்சே! இங்கு அனுமதியில்லாமல் நுழையலாமா?"

அவசரமாய்த் தலையணைகளை உதறிவிட்டு ஜமக்காளத்தை விரித்தேன். உட்காருமுன் அவள் கண்கள் அறையின் நாற்புறத்தையும் துழாவின. அவள் மூக்கு நுனி சுருங்கிற்று. என்னையும் ஒருமுறை கண்ணோட்டம் விட்டாள்.

"ஐயாவுக்கு வெளிவாசம் ஒன்றும் வனவாசமாயில்லை, உடம்பு சிவப்பிட்டிருக்கே!"

"நான் அப்போ கறுப்பா என்ன?"

"ஓ! என் கறுப்பை நீங்கள் இப்படி ஞாபகப் படுத்தித் தானாகணுமோ?"

''இல்லை நானா தேடிக் கொண்டதுதானே! இல்லை உனக்குக்கூட கறுப்பு உதிர்ந்துதானிருக்கிறது. இடுப்பில் ஒரு 'டன்லப்' உருவாகிக் கொண்டிருக்கிறதே?''

''ஒண்ணுமில்லே.'' அவசரமாய் அந்த இடத்தைப் புடவையால் மூடிக்கொண்டாள். ''எங்களுக்கே நாற்பது வயதுக்குமேல் அப்படித்தான்.''

''நீ கொழுப்பைக் குறைத்துக் கொள்ள வேணும். வீட்டில் தினம் சப்பாத்திக் கிழங்கு நடந்துண்டிருக் கோன்னோ?''

''ஏன் நீங்கள் போய்விட்டால், தினம் வீட்டில் சுட்ட அப்பளமும் கொட்டு ரஸமும் இருந்தால் உங்களுக்குத் தேவலையா?''

பேச்சை மாற்றினேன், ''ராதை ஒரு பத்து நிமிஷத்தில் வந்து விடுகிறேன். இங்கேயே இரு. உனக்குப் பிடித்தமான பேப்பர் ரோஸ்ட் மசாலா வாங்கி வருகிறேன்.''

அவள் புன்னகை புரிந்தாள். ''விருந்தாளியைக் கவனிக்க வேண்டியது நியாயம்தானே!''

ஆனால் நான் திரும்பி வருவதற்குள் அரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. நான் வாசலில் நுழைகையிலேயே இரு குரல்கள் கேட்டன.

''என்ன மாமா, மாமி உள்ளூரிலே இருக்காள்னு எனக்கு நீங்கள் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே. நீங்கள் ஓட்டலுக்குப் போய்த்தான் வாங்கி வரணுமா? நீங்கள் வாசலில் இருந்தே குரல் கொடுத்திருந்தால், சேகர் என்னிடம் சொல்லியிருப்பானே!''

''ஏண்டி கல்யாணி! மாமாவைப் பத்தி நானே இன்னும் தெரிஞ்சுக்க வேண்டியதிருக்கு. எனக்குமேல் நீ ஆசைப் படறையே!''

அந்தப் பெண் சட்டென்று ராதை பக்கம் திரும்பி னாள். ஆனால் ராதையின் கவனம் முழுவதும் அவள் கைக் காப்பி டம்ளரின் மேல் ஆழ்ந்திருந்தது. (எதிர் வீட்டுக் காப்பிதான் அது. நான்தான் வாங்கி வர

வில்லையே! இன்று காலை கைதட்டி கண்ணாடி டம்ளர் உடைந்துவிட்டது.)

"மாமா நாங்கள் கோவிலுக்குப் போகிறோம். நீங்களும் வரேளா? கேட்க வந்தேன். வந்த இடத்தில் மாமியைக் கண்டேன்."

"ஓ! மாமா இப்போ கோவிலுக்குக்கூடப் போறாரா, தேவலையே!"

"இல்லை, இதுவரை நாங்கள் அழைத்ததில்லை." கலியாணியின் குரலில் ஏதோ நிழல் படர்ந்தது. "ஏன் நீங்களும் வாங்கோளேன் எல்லோரும் போவோமே!

"எனக்கேது அம்மா அவ்வளவு கொடுப்பனை? மாமா அந்த நாளிலிருந்தே என்னை அழைச்சுண்டு போயிருந் தால் நாங்கள் இப்படியாஇருப்போம்! காசியிலிருந்து கதிர்காமம் வரை இதுவரை மூணு ரெளண்டு அடிச் சிருக்க மாட்டேனா? காசிக்கும் எட்டின இடம் ஏதாவது இருக்கா? நீங்கள் சொல்லுங்களேன்!"

"ஏன் இல்லை? கைலாசமேயிருக்கிறதே! ஆனால் அங்கு போனவர் திரும்பி வருவதில்லை" என்றேன். கலியாணி எங்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள். "சரி, இன்னிக்கு உங்களுக்கு ஒழியாது என்று தெரிகிறது, நான் வருகிறேன்" என்று எழுந்தாள்.

எதிர் வீட்டுள் அவள் கட்டுள் அவள் மறையும் வரை ராதை அந்தத் திக்கையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எத்தனை நாளாக இந்த ஸ்வீகாரம்?"

"எனக்குத் தெரியாது. நீ சொல்லித்தான் தெரியணும். அவள் பேரே இப்போத்தான் எனக்குத் தெரியும், அதுவும் உன் மூலமா...?"

"இது இன்னொரு stunt ஆக்கும்!" திடீரென்று தலையிலடித்துக் கொண்டாள். "ஐய, இந்த ஆண் களுடைய சபலமே! -நன்னா நெற்றிக் கண்ணைத் திறவுங்கள். எனக்குப் பழகின கண்தானே! இப்படி யெல்லாம் செளகரியமாய் இருக்கணும்னுதானே இங்கு

ரும் எடுத்துண்டிருக்கேள். எனக்கு நீங்கள் எந்தச் சமாதானமும் சொல்லத் தேவையில்லை. நீங்கள் சொன்னாலும் நான் கேட்டுக்க அவசியமில்லை. நீங்கள் என்ன சொல்வேள் என்பதும் எனக்குத் தெரியும். "பெண் மாதிரி என்பேள். பெற்றால்தான் பெண்ணா என்பேள். ஆனால் ஒண்ணு சொல்றேன், இது எல்லாத்துக்கும் அடிப்படை ஒன்றுதான். அதில் தான் இதெல்லாம் போய் முடியும்."

"எதில்?"

"சபலம்."

"Bore!"

"ஒப்புக்கொள்கிறேன். நான் வந்த காரியத்தைப் பேசலாமா?"

"ஓ! பிஸினெஸ் மேல் தான் வந்திருக்கிறாயா?"

"பின் நம்மிடையில் இனி வேறே என்ன இருக்கு? இந்த மாதம் முன்னூறு ரூபாய் கூட வேணும்."

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"இந்த மாதமா? இந்த மாதத்திலிருந்தா?"

"அதுவும் சம்மதம்தான்."

"என் சம்பளம் ராஜு சம்பளம் இரண்டு வந்தும் போதவில்லையாக்கும்!"

"நீங்கள் என்னவோ தலையைக் கொய்து என் கையில் கொடுத்துவிட்டதாய் எண்ணிண்டிருக்கலாம். ஆனால் குடும்பம் பிரம்ம கபாலமாயிருக்கே! உங்கள் தலையை நீங்கள்தான் நிரப்பியாகணும்"

"என் தலை முன்னூறு ரூபாய் கேட்கிறதா?"

"தலை பெரிய தலையாச்சே! அதுவும் ஆறுமாதங்களுக்கு ஒரு தடவை வெட்டிக்கிற தலை எப்படியிருக்கும்!"

"மட்டை உரிக்காத தேங்காய் மாதிரி, சிங்கத்தலை."

"இவ்வளவு பெரிய தொகைக்குத் திடீர்னு எங்கே போவேன்!"

"என்னைக் கேட்டால்? விஜிக்கு இன்னும் பத்து நாளில் பிறந்த நாள் வரது."

எனக்கு எரிச்சலாய் வந்தது.

"என் இறந்த நாள் வந்தால் இன்ஷூரன்ஸ் பணம் வரும்—"

"வரலாம் அது என்னிக்கோ? அதுவும்? அதுக்குள் நீங்கள் வேறு யாருக்காவது எழுதி வைக்காமல் இருந்தால். நீங்கள் தான் உறவு மனுஷாளை விட்டுட்டு, புதுசு புதுசா உறவு பிடிக்கறேளே? சரி நான் வரேன். விஜி என்னைத் தேட ஆரம்பிச்சுடுவாள். இன்னும் இரண்டு நாள் கழிச்சு ராஜுவை ஆபீசுக்கு அனுப்பறேன்."

அவள் போன பின்னரும் நான் உட்கார்ந்த இடத்தை விட்டு எழாமல் எந்நேரமாயிற்றோ? என்ன யோசனையிலிருந்தேன் என்று கூடத் திட்டமாய்த் தெரியவில்லை. ஆகையால் திடீரென ஒளி வெள்ளம் என்னைச் சூழ்ந்து கண்ணைப் பறித்ததும் கண்களைப் பொத்திக் கொண்டேன்.

"ஓ! I am sorry, உங்களை disturb பண்றேனா?"

நான் விழித்ததும் கலியாணியின் கணவன் வாசற் படியில் நின்று கொண்டிருந்தான்.

"நான் உங்களோடு கொஞ்சம் பேசலாமா?"

"இன்று என் ராசி என்ன ராசியோ?"

இப்பத்தான் ஒருத்தி பேசிவிட்டுப் போனாள்.

"வா அப்பா, உட்காரு என்ன விசேஷம்?"

அவன் முகம் சுண்டியிருந்தது.

"எனக்கு மாற்றலாகியிருக்குது, ஸார். இன்னும் ஒரு வாரத்தில் கிளம்பியாகணும்."

"ஓ!" எனக்கு மார் லேசாக வலித்ததோ? அப்போ, இனிமேல்—

ராதை எச்சரித்தது அப்போ சரிதானா?

"பணம் ஏதாவது முடையா ?'' என்று கேட்டேன்.

"No, no, no !" அவன் சிரிப்பின் அழுகையிலும் துக்கம் தொனித்தது.

I am sorry."

"நான் இப்போ மாறிப்போற இடமும் காயமில்லை. மறுபடியும் நாலு மாதத்துக்கெல்லாம் தூக்கிடுவாங்க. இந்தக் குருவிக்காரன் புளைப்பிலே இவளையும் பையனை யும் கூட எப்படிக் கட்டி இளுத்துக்கிட்டுப் போறது ? இவளைப் பிறந்த வீட்டுலே விட்டுடப்போறேன்" நான் ஒன்றும் பேசவில்லை. நான் பேச என்ன இருக்கிறது ?

"அதுவும் தூரதேசமாப் போச்சு. அவருக்கு second wife. அந்தக் குழந்தை குட்டி வேறே. அதனாலே அவங் களையும் நான் குத்தம் சொல்ல முடியாது. ரொம்ப நாளா touch விட்டுப்போச்சு இல்லையா ? இருந்தாலும் எனக்கு வேறே வழி என்ன இருக்குது ? சொல்லுங்க"

சற்று நேரம் எங்களிடையில் பேச்சு எழவில்லை.

நான் காத்திருந்தேன்.

"ஸார், கலியாணி மூணுமாதமா ஸ்னானம் பண்ணல்லே"

பிறகு வார்த்தைகள் மளமளவெனக் கொட்டின.

"எனக்கு இதுதான் பெரிய worry. முதல் பிரசவமே ரொம்பக் கஷ்டமாப் போச்சு. வவுத்தைக் கிழிச்சுதான் எடுத்தாங்க. அப்பவே வீக்காப் போயிட்டா. Complications வேறே. புளைச்சதே புனர்ஜன்மம். மறு படியும் கருத்தரிச்சு அதுவும் ஸிஸரீயன் ஆச்சுண்ணா ஆளுக்கே டேஞ்சர்னு doctors சொல்லிட்டாங்க. என் wife பாக்கறதுக்கு என்னவோ ஆளாயிருக்கா. ஆனால் ரொம்ப weak. இதோ அவளைக் கொண்டுபோய் அவள் வீட்டில் விட்டப்புறம் எப்போ பாக்கப் போறேனோ ? இது நிச்சயமானதிலிருந்தே மனசு சரியாயில்லே. உங்க கிட்டேயாவது சொல்லிக்கலாம்னு வந்தேன்.''

நான் ஊமையானேன்.

எல்லோரும் தங்கள் கஷ்டங்களைச் சொல்லிக் கொள்ளத்தானே கடவுளைக் கல்லாக்கிக் கோவிலில் வைத்திருக்கிறது. கோயில் அமைதியின் இருப்பிடம் என்று கொள்பவர் கொள்ளட்டும். ஆனால் நான் அறிந்த மட்டில் ஆலயம் ஒரு துயரச்சந்தை.

அவன் போன பின்னரும் நான் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. எனக்கு இப்போது புரிந்தது இந்தக் குடும்பத்தைச் சுற்றிக் கட்டிய சோக ரேகை, மயிரிழையில் கட்டித் தலைக்குமேல் தொங்கும் கத்தியின்கீழ், இரண்டாவது கர்ப்பப் பயங்கரத்தை நெஞ்சில் வைத்துக் கொண்டே வளையவரும் இவர்கள் வாழ்க்கை. ஸ்மரித்த பயம் தரிசனமும் ஆகிவிட்டபின் இவர்களுக்கு விமோசனம் ஏது? சின்னக் குழந்தைகளின் சொப்பு விளையாட்டுப்போல் ஆகிவிட்டது இவர்கள் குடித்தனம்.

ரயிலடிக்கு வழியனுப்ப நான் சென்றேன். இவர்களுக்குக் கடைசியாக நான் காட்டக்கூடிய தாக்ஷண்யம் இதுதானே!

அன்றைக்கென்று, ஆபீஸ் வேலை முடியும் தறுவாயில் எதிர்பாராத அவசர ஜோலி ஆகையால், நான் ப்ளாட்பாரத்தில் நுழையும்போதே முதல் மணி அடித்துவிட்டது. பிறகு அவர்கள் ஏறிய பெட்டியைக் கண்டு பிடிக்கச் சற்று நேரம். இப்படித்தானே சிறுகச் சிறுகச் சில விஷயங்கள் சில நேரங்கள் நம் உயிரை உறிஞ்சி விடுகின்றன.

"உங்களைப் பார்ப்போம் என்ற நம்பிக்கையையே விட்டுட்டோம்"

"—

"ஞாபகம் வெச்சிக்கோங்க, போய்ச் சேர்ந்ததும் எழுதறேன்."

'அவசியமாய்' என்றேன், சேகர் முதுகைத் தட்டிக் கொண்டே. ஏதோ இவன் கடிதத்திற்கு நாள் தவறாமல் பதில் போட்டு விடுகிறாப்போல்.

சேகருக்கு என் நினைப்பு அதிகம் இருப்பதாய்த் தெரியல்லே. அவன் இப்போது ரயில் சந்தோஷத்திலிருந்தான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். எப்போதைக் காட்டிலும் வெளுப்பாய் விளக்கு வெளிச்சத்தில் காட்டிய அவள் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு, பேசத்தவிக்கும் வாய் போன்று தன் உயிர் கொண்டு திகழ்ந்தது.

வண்டி நகர்ந்தது. கூட நான் நடந்தேன்.

திடீரென அவ்விழிகளினின்று கண்ணீர் புரண்டது. அதன் உதிர்களைத் துடைக்கக் கூட முற்படவில்லை. அவளிடம் செயல் இல்லை.

"இவ்வளவு இளகின மனதாயிருந்தால் உலகில் எப்படி வளைய வரது?" அவளைத் தேற்றும் முறையில் கேலி பண்ணினேன். பார்க்கப் போனால் நம் பழக்கம் இந்த மூனு மாஸமாத்தானே! இத்தனைக் கண்ணீரும் எனக்கா"?

"இல்லை. உங்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு என் அம்மா நினைப்பு வரது அவளுக்காகவும் கூட என்று வெச்சிக்கோங்களேன்."

"ஏன், உன் தாயார் என் முகஜாடையாயிருப்பாளா?"

"கொஞ்சம் கூட இல்லை."

"பின்னே?"

"அதுதான் எனக்குப் புரியவில்லை. ஆனால் உங்களைப் பார்த்தால் அம்மா நினைப்பு வரது."

வண்டி வேகம் எடுத்து விட்டது.

"உன் அம்மா யார் மாதிரி இருப்பாள்?"

"என் தாய் என் ஜாடை தான்."

எங்கோ டெலிபோன் மணி அடித்தது. ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் இருக்கலாம்.

"உன் அம்மா பேர் என்ன?"

அவள் திடீரென புன்னகை புரிந்ததால், நனைந்த கன்னங்களின் மேல் அதன் ஒளி படருகையில் அவளிடம் ஏதோ அமானுஷ்யம் மிளிர்ந்தது.

"அம்மாவின் சொந்தப் பேர் ஒண்ணு. ஆனால் அவள் தனக்கு வெச்சுண்ட பேர் வேறு ஏதோ, புது மாதிரி. அவள் பேர்—"

அவள் சொன்னது இஞ்சினின் பெருமூச்சில் கேட்க வில்லை. வண்டியுடன் நான் ஓடினேன்.

"உன் தாயார் பேர் என்ன?' என்று கத்தினேன். அவளும் உரக்கக் கூவினாள்.

"ஸுநாதனீ"

அந்தத் தருணமே இஞ்சினின் ஊதல் காதைக் கிழித்துக் கொண்டு கிளம்பிற்று. செவிகளைப் பொத்திய படி நின்றவிடத்தில் நின்று விட்டேன். ரயில் என்னைத் தாண்டி இருளில் மறைந்தது.

இப்பொழுது புரிந்தது. இவளை முன்பின் பாராமலே இவளை எங்கோ பார்த்தாற்போல் இவள் நினைவு நெஞ்சில் இடறும் மர்மம். தாயின் குரலின் சாயை பெண்ணிற்கும் கொஞ்சம் அடித்தது.

ஸுநாதனி.

ஸ்டேஷன் மாஸ்டரின் அறையில் டெலிபோன் மணி யடித்தது.

ஆனால் அங்கு மட்டுமல்ல.

நினைவின் தேன் கூட்டில் வருடங்களின் மிதி காலடியில் புதைந்துபோன ஏதோ ஒரு பாதாள அறை யிலிருந்து மணி ஒலி கேட்கிறது.

ஸுநாதனி என்னைக் கூப்பிடுகிறாள்.

★

என் பேரிஷ்டம் என் அறையின் தனி விசேஷம் அதன் முழு இருட்டு. ஜன்னலின் பொருத்தம் காற்றுக்குப் பங்க மிலாது தெரு வெளிச்சம் துளிகூட உள் விழாது. என் உடலேனும் எனக்கிலாத நிலையை உயிரோடு இருள் மூலமேனும் பாவனையில் ருசிக்க என் அறை எனக்கு ஒரு வழி.

இம்முறையில் இருளே உன்னை ஒரு வழியில் புரிந்து கொண்டது சரியோ என எனக்கு நீ சொல்.

இல்லை, நீ சொல்லமாட்டாய். நான் எனக்குச் சொல்லிக் கொள்வதே நீ எனக்குச் சொல்வதுதான். நீ சொல்லமாட்டாய். இமையா உன் விழிகொண்ட உன் விலங்கு விழிப்புத்தான் உன் விளக்கம்.

அகன்ற சிறகுகளை விரித்து நீ என் மார்மேல் இறங்குவது உணர்கிறேன். உன் கழுகுக்கால்கள் என்னைக் கவ்வுகின்றன. பிறகு என்னை எங்கு எடுத்துச் செல்கிறாய்?

இச்சமயம் நான் உன் குஞ்சா? உன் இரையா? ஏனெனில் உன் குஞ்சும் உன் இரையும் உனக்கு ஒன்று தான். எதையும் விழுங்குவது உன் தன்மை. ஒன்று என்பதே உன் ஒரே குணம்; ஆகையால் அருங்குணம்.

நீ என்னைத் தின்ற விளைவாய் நான் என்னை இழந்து உன் ஒன்றில் ஒன்றி ஒன்றானேன்.

ஆனால் ஒன்று:

என்னை நீ தின்றதும் உன் வயிற்றில் தங்கியிருந் தேனெனில் நீ என்னை ஜீரணித்திருப்பாய். அப்போது உனக்கு நான் இரையானேன் என்று பொருள் கண்டேன்.

உன் வயிற்றில் தங்காது அங்கிருந்து நேரே உன் விழிக்கு வந்து அங்கு அமர்ந்து அண்டங்களை அகண்ட மாய் உன் வாயில் கவ்வி, ஏந்திய வண்ணம் காக்கும் உன் காவலில் உன்னையும் தின்ற உன் குஞ்சானேன்.

இச்சமயம் உன்னோடு காலத்தையும் விழுங்கினேன்.

சென்று போனதற்கும் வந்து நிற்பதற்கும் வரப் போவதற்கும்.

இலக்கணமான அதனதன் சமயமுமாகும் அம்சம்.

நீயலால் எனக்கு ஏது தரும்? I Love you.

★

அது அந்த நாள்.

ஆபீஸில் எனக்கென்று ஒரு அறை, திரும்பும் நாற்காலி, டென்னிஸ் கோர்ட் போன்ற மேஜை, தனி டெலிபோன்— ஆபீஸர் பதவிக்கு உயர்ந்த புது முறுக்கு, இன்னும் வாழ்க்கையில் நம்பிக்கை ஆட்டம் கொடுக்காத நாள்.

எல்லாம் ராஜு பிறந்த ராசி என்று ராதை வருவோர் போவோரிடம் பெருமையடித்துக்கொள்கிறாள். அப்பவே என் தகுதிக்கு என் உரிமையைக்கூட என்னிடமிருந்து ராஜுவின் பிறந்த ராசி மூலம் பறிக்க ஆரம்பித்தாகி விட்டது! ஆனால் அப்போது அப்படிப்படுகிறதா? நானும் அந்தப் பெருமையில் கலந்து கொள்கிறேன்.

மாலை ஆபீஸிலிருந்து வந்ததும், ராதை ஒரு மூட்டையை ஏந்தி வந்து என் கையில் திணிக்கிறாள். ஸோப்பு நுரைபோல் குழந்தையின் பால் சதை என் மேல் வாய்வரை எழும்பி, என் அணைத்த கைகளை நிறைத்து வழிகின்றது.

"நாம் மூணுபேரும் சேர்ந்து எப்போ போட்டோ எடுத்துக்கறது?" என் முகத்துள் அண்ணாந்து பார்க்கும் ராதை முகமே ஆப்பிள் மாதிரிதான் இருக்கிறது.

சில நாட்களாகவே தொடர்ந்து நேர்ந்து கொண்டிருக்கும் இந்தச்சடங்கு எனக்கு இன்னும் அலுக்கவில்லை. ஆனால் ராதையின் ஆசையை நிறைவேற்ற எனக்கு இன்னும் நேரம் கிடைக்கவில்லை. இன்றேனும் வீடு சேர்ந்ததும் ஒரு டாக்ஸியை அமர்த்திக் கொண்டு—

டெலிபோன் மணி அடித்தது.

"ஹல்லோ?"

"யார், மிஸ்டர் ஸாலிக்ராம்?" பெண் குரல்.

"Speaking."

அந்தப் பக்கத்திலிருந்து நீண்ட பெருமூச்செழுந்தது.

"மிஸ்டர் ஸாலிக்ராம். excuse me, நீங்கள் ரொம்ப வேலையாயிருக்கிறீர்களா? Am I disturbing you?"

"அப்படியொன்றுமில்லை. இன்னும் பத்து நிமிடங்களில் வீட்டுக்குக் கிளம்ப வேண்டியது தான்."

"அப்போ, இந்தப் பத்து நிமிஷங்களும் நமக்கே சொந்தம்தானே!"

"நீங்கள் யார் என்று தெரியவில்லையே!"

"ஆ!" கண்ணடி டம்ளர் அடியில் உருளும் கரையாத ஐஸ்கட்டி போல் அடக்கிய அவுட்டுச் சிரிப்பு.

"என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை எனக்கு நன்றாய்த் தெரியும். உங்களுடன் பேசுவதற்கு ஏறக்குறைய மூணு மாதங்களாய் என் மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்றால் நீங்கள் நம்புவீர்களா? நீங்கள் நம்பினால், நம்பாவிட்டால் எனக்கென்ன? என்னைப் பற்றிச் சொல்லிக்கொள்கையில் எனக்கு நான் தானே சாக்ஷி! ஆனால் தன்னிலும் பெரிய சாக்ஷி ஏது?"

"—"

"ஹல்லோ! ஹல்லோ!"

"Yes ?"

"ஓ இருக்கிறீர்களா? சந்தடியே காணோமே, line கட் ஆகிவிட்டதோ என்று பார்த்தேன்."

"இல்லை யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு ருசியாய்ப் பேசத் தெரிந்தவர்களில் எனக்குத் தெரிந்தவர் யார்?"

"நான் சொல்லப் போவதில்லை.

"ஏன்?"

"நான் யார் என்று யோசித்துக் கொண்டிருக்க, உங்களுக்கு இன்றிரவு பூரா, ஏன், இன்றிரவிலிருந்தே உங்கள் ஆயுசு பூரா நேரம் இருக்கிறது. உங்களை ஒரு தயவு கேட்கிறேன். என்னை யாரென்று அறிய நீங்கள் முற்பட வேண்டாம். மிஸ்டர் ஸாலிக்ராம்—உங்கள் பெயர் எவ்வளவு அழகாயிருக்கிறது! நீங்கள் என்னை வெட்கம் கெட்டவள் என்றுதானே நினைக்கிறீர்கள்?"

"இல்லை! இல்லை!!"

அந்தப் பக்கத்திலிருந்து பெருமூச்செழுந்து என்மேல் சுழன்று விளையாடிற்று.

"நீங்கள்—"

"என்னை 'நீங்கள்' என்காதீர்கள்."

"நீ என்னோடு பேசலாம், என்னைப் பார்க்கலாகாதா?"

"நான் உங்களைப் பார்க்காதிருக்கிறேனே!"

"நான் உன்னைப் பார்க்கலாகாதா?"

"நான் அந்தக் கட்டத்தை விரும்பவில்லை."

"ஏன்?"

"பார்த்த முகமே புளித்த முகம்தான்."

"நான் இன்னும் உன்னைப் பார்த்ததில்லையே!"

"ஒரு தரம் பார்த்தாலும், பார்த்த பின், பார்த்த முகம் தானே! கண்டதைக் கண்டபின், அப்படிக் கண்டதாலேயே அதைக் காணாத முன் கற்பனையில் விளங்கிக் கொண்டிருந்த அதன் கற்பு நிலை சிதைந்து விடுகிறது என்று சொல்வேன். ஆகையால் நீங்கள் என்னைப் பார்க்க நான் விடப்போவதில்லை."

"இது ஒரு அனாவசியமான சீண்டல் இல்லையா?"

"உங்களுக்கு அப்படிப் படலாம். ஆனால் என் அரூபத்தை என்னால் இப்படித்தான் சாதிக்க முடியும்— சரி இன்று இது போதும். நாளை பேசுவோம்.'

நான் படபடவெனத் தட்டினேன். ஆனால் தொடர்பு அறுந்தாகி விட்டது.

யார் இவள்?

நாளை பேசுவாளா?

★

இன்று மாலை நாலரை மணியிலிருந்தே இருப்புக் கொள்ளவில்லை. என் வேலைகளைச் சுருக்கவே முடித்துக் கொண்டு விட்டேன்.

இந்த முள் ஏன் நகர மாட்டேன் என்கிறது? அவள் டெலிபோன் பண்ணுகிறேன் என்று சொன்னால் பண்ணுவாள் என்று நிச்சயமா? அவசியமா? சீ எனக்கு ஏன் இந்த அல்ப ஆசை. இன்னும் பத்து நிமிடங்கள் ஆனதுமே will get out. இன்றைக்கு நிச்சயமாய் குழந்தையைப் போட்டோ எடுத்—

டெலிபோன் மணியில் தனி கணீர். பதறி எடுத்தேன்.

"Hello!"

"ஓ, நீயா?" அவள் குரலைக் கேட்டதுமே எனக்கேன் இவ்வளவு மகிழ்ச்சி?

'ஏன், வேறு யாரையேனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தீர்களா? sorry, போனை கீழே வைத்து விடட்டுமா?''

''இல்லை இல்லை. don't cut the line please-please!!''

''சும்மாச் சொன்னேன். இந்த வேளைக்கு நானும் தானே காத்துக் கொண்டிருக்கிறேன்!"

எனக்குத் தொண்டையை அடைத்தது.

''Hello !"

''இங்கேயேதான் இருக்கிறேன் உன் பேர் என்ன ?

''என் பெயருக்கேன் ஆசைப்படுகிறீர்கள்? 'நீயும் நானும்' எனும் உறவுக்குமேல் பெயர்கள் பெரிதா?"

''இது என்ன வேதாந்தமா, விரக்தியா? இப்படிப் பேசிக் கொண்டே போனால் இதற்கு முடிவேது?"

''ஆம், அலுப்பற்ற விஷயத்தின் முடிவற்ற விளிம்பில் நாம் நின்று கொண்டிருக்கிறோம்.''

Please, உன் பெயர் என்ன?

''என் பெயர் என்னவென்று சொல்லலாம்? ஸீதா, லக்ஷ்மி, ராமசுப்பி, வாலாம்பாள் இந்த மாதிரி ஏதேனும் சொல்லவா?-

''Please உன் பெயர் எனன் ?

''இருங்கள் என் பெயர்—என் பெயர் ஸுநாதனி.''

''ஸுநாதனி?"

''இது எனக்கு இட்ட பேர் இல்லை என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இச்சமயத்திற்கேற்ற பெயர் என்று உங்களுக்குத் தோன்றவில்லை.

''ஸுநாதனி, உன்னிஷ்டம்."

''உங்கள் உச்சரிப்பில் என் பெயருக்கு உருவேறுவது எனக்கு இங்கே தெரிகிறது.''

''ஸுநாதனி, உன்னால் எப்படி இவ்வளவு அற்புதமாய்ப் பேச முடிகிறது?"

''கேட்பவருக்கும் கேட்பதற்கேற்ற படியும் தான் பேச்

சும் வரும். உங்கள் மௌனம் என் பேச்சிற்கு உரைகல், உங்களுடன் பேசுவதே நான் உரமேறத்தானே.''

''என்ன சுயநலம்!''

''சுயநலமில்லாவிடில் உங்களைத் தேடி ஏன் பேசுகிறேன்!''

''என்னிடம் அப்படி என்ன கண்டு விட்டாய்?''

''அப்படிக் காரணங்கள் கேட்டாலும் எனக்கு சொல்லத் தெரியவில்லை. மூன்று மாதங்களுக்கு முன் உங்கள் வீட்டு மொட்டை மாடியில் மாலையில் நீங்கள் உங்களுக்கே பாடிக் கொண்டிருப்பதை நான் பின் தெருவில் என் வீட்டு மொட்டை மாடியிலிருந்து கேட்டேன், கண்டேன். இந்த அடையாளத்தை வைத்துக்கொண்டு என்னைத் தேடினால் நான் அகப்படமாட்டேன். நாங்கள் அந்த இடத்தைக்காலி பண்ணி விட்டோம்.''

''My god! உனக்கு என்னைப்பற்றி என்ன தெரியும்?''

''நீங்கள் கலியாணமானவர். உங்களுக்குச் சமீபத்தில் குழந்தை பிறந்திருக்கிறது.''

''இந்தத் தகவல்கள், நாம் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலே பேசிக்கொண்டிருக்க, நீ எனக்கு வகுத்த யோக்யதைகளா?''

''இல்லை, நம் பேச்சின் உறவு அதன் வரம்பு மீறாமலிருக்க அத்துக்கள்.

''ஸுநாதனி, எத்தனை நாள் இப்படியே ஓடும்?''

''இன்றைக்கு இரண்டாம் நாள்''

''இந்த விக்ரமாதித்தன் சிம்மாஸனத்திற்கு இம்மாதிரி இன்னும் எத்தனை படிகள்?''

''உங்களுக்கு அலுப்பு வரும்படிப் பேசிக்கொண்டிருக்க மாட்டேன்.''

''இது சிறு பிள்ளைத்தனமாய் இருக்கிறது. நாம் இன்னும் சொப்புவைத்தா விளையாடிக் கொண்டிருக்கிறோம்?''

''உங்களுக்குக் கோபம் வருகிறது. ஆண்களே இப்படித்தான். நான்—நான் இவ்வளவு தைரியமாய்,

வெட்கம் கெட்டு, உங்கள் முன்னிலையில் பேசமுடியுமா ? என்னதான் வெளிச்சமாயிருந்தாலும், ஆண் பார்வை என்மேல் படுகையில், கூச்சம் குறுக்கிட்டு விடாதா ? ஆத்ம நிர்வாணத்தைப் புலன்களால் புரிந்துகொள்ள முடியாது அதையும் உடலின் ஆடையுரிப்பாய்த்தான் கண்ணுக்குக் காணத்தெரியும்.''

''வெட்கம் கெட்டதாய்த்தான் மனத்திற்கு நினைக்க முடியும்.''

''எனக்கென்னவோ இந்த நிலையில் பொய்ம்மை தான் தெரிகிறது.''

''உண்மையும் பொய் போலும்மே பொய்போலிம்மே. நானும் ஏதோ ஒரு யோசனைதான் நடத்துகிறேன்.''

''ஒரு வழியாகச் சொல், நீ விரும்புவதுதான் என்ன ?''

''உங்கள் நினைவில் என் குரல் சதா ஒலித்துக் கொண்டிருக்க விரும்புகிறேன். அந்த ஒலியின் தூண்டலாக உங்கள் எண்ணத்தில் எழும் உருவில், உங்கள் நெஞ்சின் ஓமகுண்டத்தில். அழிவற்ற இளமையில், ஜ்வலித்துக் கொண்டிருக்க விரும்புகிறேன்.''

''எனக்குப் பிடரி சிலிர்த்தது.''

''என்ன குரூரமான ஆசை. எதிராளியின் வேதனை பற்றி நீ கொஞ்சமாவது நினைத்தாயோ ?''

''வாழ்க்கையின் எந்த மகத்தான சம்பவத்தில் குரூரம் இல்லை ? உயிர் பிறக்கையில் தாய்க்கு இரக்கம் பார்க்கிறதா, பார்க்க முடியுமா ? அதேபோல் உயிர் பிரிகையிலும் உடலின் வேதனையை அனுசரிக்கிறதா ? இப்போது நம்மில் நேர்ந்து கொண்டிருப்பது என்னென்று நினைக்கிறீர்கள் ? நம் முதுகுகளைப் பிளந்துகொண்டு நாம் புதிதாய்ப் புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம் சாகாவரம் அடைவது பின் எப்படி ?''

Line cut—

அவள் பேச்சின் வேகத்தில், அந்தக் குரலில் கக்கிய ஆவியில் டெலிபோன் புகையாததுதான் ஆச்சரியம்.

என் நெஞ்சில்

குபீர்.

ஜ்வாலையில் குங்கிலியம் கமழ்ந்தது.

தலையை இருகைகளிலும் பிடித்துக்கொண்டு நான் உட்கார்ந்திருந்தது இன்னும் நினைவிருக்கிறது.

மணி 4-50, 4-55, 4-57, 4-58—

இன்றும் டெலிபோன் மௌனமாய்த் தானிருக்கிறது. இவளை இந்த நேரத்திற்கு எதிர்பார்க்கப்பழக்கிவிட்டேன் என்பதை உணருகையில் எனக்குக் கடுங்கோபம் வந்தது. இன்று நான் தீர்த்துச் சொல்லிவிடப் போகிறேன், உன் கைப்பொம்மையாக இருக்க நான் விரும்பவில்லை என்று-

டெலிபோன் அலறிற்று.

எடுக்கலாமா வேண்டாமா? எடுக்கலாமா வேண்டாமா?

இவள் குரல் ஒலி என்னை எங்கே கொண்டு போய் விடும்?

இவளிஷ்டப்படியே நான் ஆடினால் என்னைப் பைத்தியம் பிடிக்க அடித்து விடுவாளோ?

என் நெற்றியில் வேர்வை அரும்பிற்று. இன்று பல்லைக்கடித்துக் கொண்டிருந்தாலும் நாளைக்கு மோஹினிப் பிசாசு போல் தொடருவாள். இந்த வேளைக்குப் பதில், எதிர்பாராத வேளையில் பேசுவாள்.

நான் டெலிபோனை எடுக்கையில் முற்றிலும் என் வசத்தில் இல்லை.

"Hello!"

"மிஸ்டர் சாலிக்ராம், நாளைக்கு எனக்குக் கல்யாணம். விடை பெற்றுக்கொள்கிறேன்."

மீண்டும் அந்த மறக்கமுடியாத வெற்றிச் சிரிப்பு.

டெலிபோனை அந்தப் பக்கம் வைத்தாயிற்று.

மூன்றுநாள் சோறு தொண்டையில் விக்கிற்று. பித்து பிடித்தாற்போல் வளைய வந்தேன்.

ஸௌநாதனி.

★

மணி அடிக்கிறது.

நினைவு மீண்டுவிட்டாலும், ஸௌநாதனியின் அழைப்பு

இல்லை என்று தெளிய நேரம் பிடிக்கிறது.

எங்கோ கடியாரத்தின் அலாரம்.

கண்ணைக் கசக்கிக்கொள்கிறேன். விழிகள் நனைந்திருக்கின்றன.

★

நான் கண் விழித்ததும் இவ்வுலகத்தை சிருஷ்டிக்கிறேன்.

நான் தூக்கத்தில் அயர்கையில், என் சிருஷ்டியாகிய இவ்வுலகம் என் இமைகளின் குவிப்புள் ஒடுங்கி விடுகின்றது.

சாவில் இவ்வுலகத்தை அழித்து, என் சடலத்தையும் கழற்றி விட்டு, பிரக்ஞையில் புகுந்து யோக நித்ரையில் ஆழ்ந்து விடுவேன்.

என் கண்ணின் இமையுள், விழிப்பின் முதல் உணர்வாய்க் கவிந்த இருளின் முழுவே உனக்கு அஞ்சலி. உதயத்தின் முற்பொருள் நீ, உனக்கு அழிவில்லை.

★

# 2 வரிகள்

இன்று ஒருவன் நகையைத் திருப்ப வந்தான்.

ஓ, மறந்தேன். இது இந்தப் பக்கத்துப் பாஷை. நகை மேல் வாங்கிய கடனை அடைத்துவிட்டு நகையைத் திரும்பப் பெற. நான் இங்கு வந்து நாளாகவில்லை. இன்னமும் இங்கு பழகிக்கொண்டிருக்கிறேன்—பாஷை, இடம், சூழ்நிலை, மனிதர்கள் உள்பட.

ஆள் முகத்தின் சோகம் புரியவில்லை. நானும் கேட்க வில்லை. கேட்பதில்லை. சுபாவமே அதுதானோ அல்லது இந்த ஊரின் மிதமான சீதோஷ்ண நிலையின் தூங்கு மூஞ்சித்தனம்தானோ என்று நினைத்துக் கொண்டேன்.

கீழே பேழையறையிலிருந்து அவன் நகைப் பெட்டியைக் கண்டெடுத்து மணிக்கூண்டு ஏறுவது போன்ற மாடிப்படியேறிட, திணறல்கூட அடங்கவில்லை, பெட்டியைத் திறந்த பின்தான் தெரிந்தது; ஆள் பார்க்க, பங்கியடித்தவன் மாதிரி இருந்தாலும், என் எதிரில் உட்கார மறுத்தாலும் புள்ளி புள்ளிதான்.

கல்லு கல்லா நான்குவடப் பட்டைச் சங்கிலி 3, வளையங்கள் (கெட்டி) ஜோடி 5, கல் பதித்த பதக்கத் துடன் அட்டியல் 1, (ஒரு நீல மாம்பழக் கதுப்பு அகலம்) ஓட்டியானம் 1—இடுப்பா அது இந்த அளவில், இந்த அகலத்தில் அது ஒரு கேலிக் கூத்துத்தான் இந்த நாளில் இந்தக் கனத்தில் தங்க நகை காணவும் முடியாது. அணிந் தாலும் உடலுக்குச் சுமைதான்-

அடமானம் வைக்கத்தான் சரி.

ஒரு க்ஷணம் ப்ரமித்துவிட்டு, இந்த திகைப்பு உண்மை யாயிருந்தாலும் எதிராளியைச் சந்தோஷப்படுத்துவதற்கு இதுவும் ஒரு வழிதான். என் உத்தியோகத்தில், எப்படி

யேனும் எதிராளியைச் சந்தோஷப்படுத்துவது முக்கியம். The customer is always right—இது என் வங்கியில், என் உதத்தியோகத்தின் நெற்றிப்பட்டை- மேஜைமேல் நகைப் பெட்டியை அவன் பக்கம் நகர்த்தினேன்.

''இந்தாங்க தேவரே சரிபார்த்து எடுத்துக்கோங்க!''

''கையில் எடுத்துக் கொடுங்க சாமி!''

ஓஹோ! கரடி மயிர் போன்று தழைத்து என் விழிகளை மறைக்கும் புருவங்களின் வெள்ளைக்கு இவன் செலுத்தும் காணிக்கையாக்கும்!

இவ்வெள்ளைப் புருவங்களின் விளைவுகள் வெவ்வேறு.

என் பிள்ளைகளுக்கு அப்பாவோடு தெருவில் நடக்க வெட்கம். (அப்பாவா தாத்தாவா?)

புருவத்துக்கு லேசாய் மை தடவறேனே! என்னைப் பக்கத்தாத்துலே கேக்கறா 'ஏண்டி ஹேமா, நீ மாமாவுக்கு இளையாளா, மூணாம் தாரமா?'

''சாமிக்கு வயசு எழுபது கிட்ட இருக்குமா?''

''ஏன் உமக்கு என்ன ஆகிறது?''

''வர ஆனிக்கு அறுவது முடியலாமா வேணாமான்னு பார்க்குங்க.''

''ஓய், உம்மைவிட நான் இப்பவே ஐந்து வயது சின்னவன்தான்!'' என்று பதில் சொல்லி அவன் மூக்கை உடைத்து என் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ள முடியுமா? மூச்! ஆள் இரண்டு வருடத் தவணையில் ரூ. 25,000 போட்டிருக்கிறான்.

''ஹி! ஹி!! ஹி!!!''

அசட்டுச் சிரிப்புச் சிரித்து சமாளித்துக்கொள்ள வேண்டியதுதான்.

The customer is always right.

இதுதான் பாங்க் மானேஜர் உத்தியோகம்.

அவசரமாய் எழுந்து பெட்டியை எடுத்துக் கையில் கொடுத்தேன்.

நகைப்பெட்டியுடன் என் கரங்களைப் பற்றிக் கொண்ட அவன் கைகள்மேல் அவன் முகம் குனிந்து. உடல் குலுங்கி, தோள்கள் குலுங்கி (நெருப்புக்குச்சி போன்று மெலிந்து ஒடிந்து விடுமோ போன்ற தோள்கள்) என் புறங்கைமேல் இரண்டு அனல் சொட்டுக்கள் உதிர்ந்து பொரிந்தன.

"என்ன தேவரே?" நான் பதறிப் போனேன், எனக்கு முழங்கால்கள் கிடுகிடுத்து விட்டன.

தேவர் நகைப்பெட்டியை மேஜைமேல் வைத்தார். மூக்கை இரு முறை உறிஞ்சிக் கொண்டார்.

"ஒண்ணுமில்லேங்க. இந்த நகையெல்லாம் என் மூத்த மகளுக்கு உள்ளதுங்க. நல்ல இடத்திலே கட்டிக் கொடுத்தேனுங்க. நல்லாத்தான் வாழ்ந்தாள். மருமவப் பிள்ளைக்குப் பெரிய உத்தியோகம். டிபுடி ரெஜிஸ்தராருங்க. ஒரே பிள்ளை. நஞ்சை, புஞ்சை, காடு, கிணறு, வீடு, மனை, தோப்பு எல்லாமே உண்டுங்க. போன வருடம் ஆறு மாதம் வயித்து வலியிலே துடிச்சா பாருங்க. பார்க்க வேணாங்க யானைக்குட்டியாட்டம் இருப்பா அந்த ஆறுமாதத்துலே வெற்றிலைக்கு நடு நரம்பாட்டம் ஆயிட்டா. கடைசி மூணு மாதம் வேலூர் ஆஸ்பத்திரியிலே வெச்சுப் பார்த்தோமுங்க. அந்த மூணு மாதத்திலே இருவது பெரிய நோட்டு அவுட்டு. 'அப்பா எப்படியாச்சேனும் என் மூணு குழந்தேங்களுக்குத் தாயாரா என்னைக் காப்பாத்திக் கொடுத்துடு. தலைமுறைக்குத் தலைமுறை உன் பேரை வெச்சு உன் பேரைச் சொல்லிக்கிட்டிருப்போம்"னு அழுவறா. அசட்டுப் பொண்ணு! எனக்குச் சொல்லணுமா? யாருக்குச் செய்யப் போறேன்? ஆனால் அவள் வேதனை அப்படி அவளைச் சொல்ல

வைக்குது. ஒரு மிளகாய்ச் செடியிலே அறுத்தாலும் போச்சு, ஒரு வேர்க்கடலையிலே தோண்டினாலும் போச்சு, இருவது என்ன, மேலும்தான் போவட்டுமே! மேலும்தான் போச்சு! நல்லாத்தான் போச்சு நிறையத் தான் போச்சு. போய் என்ன? நிலைகுத்திப் போன கண்ணை நானேதான் மூடினேன். ஆனால் கண்கண்டு வழிஞ்சு இந்த உலகம் பூரா வழியும் அவள் துயரத்தை மூட முடியல்லேங்களே! முடியல்லேங்களே! அவள் குழந்தைங்கள் மூணு பேர் பொம்மையும் அவள் கண் பாப்பாவுலே கடைசிக் கரையாத் தேஞ்சு போச்சே. அதை யாராலே அழிக்க முடியும்? அந்த யமனாலே அழிக்க முடியுமா? சுட்டுப் பொசுக்கின சாம்பரா அது மாத்திரம் ஆயிட முடியுமா?"

வருத்தம் தரும் பலஹீனத்தில் கம்பியாய்ப் போய் விட்ட குரல்.

சுவரில் காலண்டர் தாள்கள் காற்றில் படபடவென அடித்துக்கொண்டன. மணியடிக்கும் தறுவாயில் சுவர்க் கடியாரம் 'கர்ர்ர்'ரென்று உறுமிவிட்டு மணியடிக்க மறந்து போயிற்று.

"உப்பே-ய்"—தெருவில் உப்பு வண்டிக்காரன் கத்திக் கொண்டே போனான்.

என் வாயுள் என்னையறியாமல் கடித்துக்கொண்ட நாக்கில் கசிந்த ரத்தம் கரித்தது.

அறைக்கு வெளியே மொட்டை மாடியில் பக்கத்து வளைவுகளிலிருந்து ஓங்கும் தென்னை மரங்கள் பெரு மூச்சாடின.

"என்ன செய்வதுங்க? போனவ திரும்பி வரப் போறாளா? இனி நானே அவளைப் போய்க் கண்டால் தான் உண்டு. அங்கேயும் அவள் கண்ணில் பட்டால் தான் உண்டு. அதுக்குள்ளேயும் எங்கே பிறந்துடறாளோ?"

ஆச்சு இந்த ஆனி 12-க்கு நாள் குறிச்சாச்சு. மாத்துக் காலுக்கு மறுகாலா என் இளைய பொண்ணை, மருமவப்

பிள்ளைக்கு திருமலைக் கோவிலில் வெச்சுக் கட்டிக் கொடுத்துடப் போறேனுங்க. ரொம்ப சொல்பமா பத்திரிகைக்கூட அச்சடிக்கல்லே. உங்களைக்கூட அழைக்கலே. ஆசிர்வாதம் பண்ணுங்க. இந்த நகையெல்லாம் சின்னப் பொண்ணுக்குப் பூட்டி நேரே கோவில்லேருந்தே அவ வீட்டுலே கொண்டு போய் விட்டுடப் போறேன். அந்தக் கலியாணம் பிரமாதமுங்க. கடையநல்லூர் ஷன்முகசுந்தர நாயனம். நாலு நாள் ஊரழைச்சு சாப்பாடு. ஆனால் நம்மதென்ன போச்சுங்க? புல்லெல்லாம் நெல்லா விளையற நாள் சந்தனம் சிந்தின இடம் சேறு குப்பையோடே பொன் கலந்திருக்கும். இல்லாட்டி, இதெல்லாம் இப்போ வாங்க முடியுமா, செய்ய முடியுமா?

பேரப் பையன்களும் என் பொண்ணு வயிறு. இன்னொருத்தி அவள் இடத்துக்கு வந்தால் காரணம் காட்டியோ இல்லாமலோ மாற்றாந்தாய் கொடுமைக் காரப் பழி பொல்லாப்பு நமக்கேனுங்க? தவிர, கலியாண கோலத்துலே ஜரிகைப் புடவையைக் கட்டிகிட்டு, செத்துப் போனவ வானத்துலே நின்னுகிட்டு, கையைப் பிசைஞ்சு கிட்டு யார் கண்ணுலேயும் தென்படாமல் வடிக்கின்ற ஊமைக் கண்ணீருக்கு யார் பதில் சொல்றது? மாப்பிள்ளைக்கும் இன்னும் முதல் தாரம் கட்டி வாழற வயதுதான். நான் பெண் கொடுக்காட்டா அவர் வேறே கட்டாமேயிருக்க முடியுமா? பெரிய வேலைங்க. டிபுடி ரெஜிஸ்தாரருங்க. நல்ல செயலுங்க.

என் சின்னப் பொண்ணும் காலையிலே சாணி தெளிக்கறப்பவோ, மாலையிலே விளக்கேத்தறப்பவோ, உலையிலே அரிசியைக் களைஞ்சு போடறப்பவோ, ராவுலே அடுப்பை மெழுகி, கோலம் போடறப்பவோ, தாலியைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கிட்டே திக்குத் திக்குனு குடித்தனம் நடத்தவேணாம். ரெண்டு பேரும் ஜோடிப் பொருத்தம் இன்னும் நல்லாவேயிருக்குங்க. ரெண்டு பேரும் நல்ல செவப்பு. அவள் முதல் குழந்தையை

பெத்துச் சீராட்டறப்போ உங்களைக் கண்டிப்பாக் கூட்டிப் போய்க் காட்டியே ஆவணுங்க. சரி, உங்களுக்கு நேரமாச்சு. நான் போய் வரேனுங்க."— அவன் போய் விட்டான்.

நான் நாற்காலியில் சாறு பிழிந்த குற்றுயிர்ச் சக்கை யாய்க் கிடக்கிறேன். குற்றாலத்தின் மலயமாருதம் தவழ்ந்து வந்து நெற்றி வேர்வையை ஒற்றியது.

இதயத்தில் எங்கோ ஏதோ பலகணி தானே திறந்து கொள்கிறது. அதன் வழி, இன்னதென்று பிடிபடாத, புலப் படாத தண்ணொளியின் நிழற் கோடுகள் வரிவரியாய், இதயத்துள் விழுகையில் உள்ளம் பூரா, உள்ளம் மூலம் உடல் பூரா ஏதோ வெளிச்சம் ஏற்றிக் கொள்கிறது. கண்ணீரில் குழைத்திட்ட திலகமாய் நெற்றி நடுவில், ஏதோ புரியாத, புலப்படாத, பிடிபடாத வெற்றி குளு குளுவென மிளிர்கின்றது.

வரிகள்:

★

# 3 தீபக்

''யாரது? இன்னிக்கு ஜோலி—ஐயோ சாமியா? ஐயா வாங்க. மன்னிச்சுக்கிடுங்க. ஏட்டுலேருந்து தலை நிமிரல்லே. யாருன்னு கவனிக்கல்லே. பாயிலே குந்தாதீங்க. வேணாம், வேணாம். சோபாவுல அமருங்களே துரை, ஐயாவுக்கு இடம் விடுலே! ஐயாவை தெரியுமா டெய்—தெரியாது? ஏசண்டு ஐயாடா! ஓ நீங்க இங்கே மாத்தலாயி மாசம் நாலாயும் இந்தப் பக்கம் வல்லெல்லா? அதான் காளிக்குக் கவனமா வல்லே. இப்பவாச்சும் ஐயாவுக்கு நெனப்பு வந்துருச்சே, சந்தோசம். காளியும் உங்களுக்கு எப்படித் தெரியும்? முதலாளி மவங்க. நீங்களும் காளியை மன்னிச்சுக்கிடணும். சின்னவங்க பெரியவங்க மருவாதை சொல்லிக் கொடுத்தாத்தானே தெரியும்! எப்படியும் முதலாளி மவனில்லே? முதலாளியைக் காட்டியும் இந்த காலத்துக்கு முதலாளி மவன்தான் துரை. நாளாக ஆக உரைகல்லுலே முதலாளியை மிஞ்சிடுவான். அப்படித்தானே இருக்கணும்! காளி கணக்கப்புள்ளைக்குக் காவல். ஏலே நானும் பேசிக்கிட்டு இருக்கேன் நீயும் பாத்துக்கிட்டு நிக்கே? ஐயாவுக்கு ஒரு 'பாண்டா' வாங்கி வா. கண்ணுல்லே? காளி ரொம்ப நல்ல பையன்.

வந்தவுடனே சாமி வந்த காரியம் என்னான்னு நான் என் வாயாலே கேட்கக் கூடாது. கேக்க மாட்டேன். ஏன் கேக்கணும்? ஐயா வந்தது எங்க பேரேட்டைப் பாக்கத்தானே? நீங்க வர்ரப்போ நான் கண்ணைக் கவிச்சுக்கிட்டிருந்தேனே அதைப் பாக்காதீங்க. அதைக் கண்ணுல கூடக் காட்டக் கூடாது. அது எங்க சத்யம்; அரிச்சந்திரன் கட்டின தாலி. இந்தக் கச்சாக்காட்டுலே கரடி, சிங்கம், புலி எல்லாம் நடமாடும். காடு முதலாளிது. கரடி, புலி கணக்கப்புள்ளைது. கணக்கப்புள்ளையை கரடி கட்டினா என்ன? புலி தின்னா என்ன?

அவங்க இங்கே புளைக்க வந்தவங்க. நாம இங்கேயே பிறந்து வளந்தும் அவங்ககிட்டே புளைக்கற வங்க. ஒவ்வொருத்தன் உலகமே பிறத்தியான் எழும்பு மேலே எழுப்பின கட்டடந்தானே! ஐயா மன்னிச்சுக்கிட ணும். நான் வயசாளி, சாக்கடை, ஏதேதோ எனக்கே பேசிக்கிட்டேன். இதோ இளுத்து மூடிட்டேன். அதெல் லாம் ஐயா கண்டுக்காதீங்க. பாங்குக்குத் தனிப்புள்ளி வச்சிருக்கோம். அதை எடுத்துக் காட்டுடறேன்.

என்ன சிரிக்கிறீஹ? சாமி சிரிச்சுது. என் மனது மலர்ந்தது. இதோ காளி வந்துட்டான். என்ன தம்பி 'பாண்டா' வாங்கி வரச்சொன்னா கோலா கொண்டு வந்துருக்கே? அதுவும் கோலி! என்ன, கடையிலே பாண்டா தீர்ந்து போச்சா? இந்த ஊர்லே உனக்கு சோடாக் கடையே ஒண்ணுதானா, பாண்டா இல்லாத கடையாப் பாத்து...? என்னா சொன்னேன்சாமி. பாத்தீங்களா பையனை! அப்பன் மாகாணியிலே மரமா காய்ச்சா, மகன் முந்திரியிலே முத்துக் குளிக்கிறான். இதெல்லாம் சொல்லியா வருது? பரம்பரையா ரத்தத்துலே ஊறின தில்லே! என்ன முதலாளி உன்பக்கம் பேசுதேன்னு பாக் கயா? போய் கோலியை மாத்திவாடா! சரி சரி. அதையே கொண்டா. ஐயாவுக்கு கூல்டிங்கே ஆவாதாம். ஆவா துக்கு எதுவானா என்ன? கடை காப்பி குடிக்க மாட்டாரு. கடுக்காக்கஷாயம்,பாரு ஐயா கேக்கறாரு பாரு:''கணக்கப் பிள்ளைவாள் உங்ககடையிலேகலர்குடிக்கவா வந்தேன்"னு உனக்கு காது கேக்கல்லே? நேக்கு கேக்கு. நேக்கு சொல் லாததும் நல்லா கேக்கும். சொன்னாத்தான் சொல்லா? ஐயா கண்டிப்பா கலர் குடிக்க வல்லே. நமக்கு தெரியாதா? ஐயா ஈட்டுக்கடை பேரமும் இல்லை. நமக்குத் தெரியாதா? ஆனா எங்க கடை மரியாதை, என்ன ஆவறது ? பச்சைத் தண்ணியைப் பச்சையா குடுக்கறதா ? சாயம் கொஞ்சமாச் சும் தோயணுமிள்ளா ! பரவாயில்லே. கோலியானாலும் நுரை எப்படி கக்குது பாக்கையளா ? சும்மா சாப்பிடுங் கன்னா. உடம்புக்கு ஒண்ணும் பண்ணாது. கியாஸ் ஏகமா அடைச்சு வெச்சுருக்கான். என்ன அதுக்குள்ளேயும்

எழுந்துட்டீஹ? அவசரமென்ன, குந்துங்க. ஓ! நம்ம இடம் சுத்திப் பாக்கணுமோ? அதைவிட சந்தோசம் எங்களுக்கு என்ன? இதோ ஒரு நிமிடம் பொறுங்க. கல்லாவைப் பூட்டிக்கிறேன். எலே காளி நான் வர வரைக்கி வாசல்லே கண்ணாயிரு. சோபாவுல மல்லாந்திடாதே.

ஐயா இந்தப் பக்கமா வாங்க கொஞ்சம் இருட்டுத்தான். இந்த வியாபாரத்துக்கு வெளிச்சம் ஒவ்வாது. அதிலேயே ஒரு தருமம் இருக்கில்லே! எங்க முதலாளி பக்திமானுங்க. பெரிய கோவில் பிரம்மோற்சவத்துல குதிரை வாகன மண்டகப்படி பூரா அவருது. இதைத் தவிர வருஷா வருஷம் பங்குனி உத்தரத்தன்னி கல்யாணத்திலே அம்மன் சுண்டு விரலுக்கு கெட்டி மோதிரம் அஞ்சு தலை பாம்பு படம் எடுத்து சொளையா மூணு பவுனுக்கு குறைவில்லே. எங்க முதலாளிக்கு முழுகிப்போன தங்கத்துக்குப் பஞ்சமா?

இத பாருங்க. சூத்திரத்தின் சூத்திரத்தின் சூச்சுமமே இதான். மாஹாணியும் முந்திரியையும் அவங்க மந்திரமா ஜெபிச்சா பவுனு, தானா கழுத்துலேயும், காதிலேயும் இடுப்புலேயும் (இடுப்பா அது? மாவாட்டற கல்லா?) பூட்டிக்கிது. இதுநான் சொல்லுது. மண்ணுலே புதைச்சு மறந்தது போக, பானையில உண்டை உண்டையா ஒளிச்சு, வந்தவன்கண்டுபிடிச்சுப் போனது போக மிச்சம் இன்னும் மூணு தலைமுறைக்கு கவலையில்லை.

சாமி நான் அனுமாரா வாயைப் பொத்திக்கிட்டுப் பேசறேன். ராமரைச் சொல்லியும் ஆவனும். ராமனைக் காட்டிக் கொடுக்கவும் மாட்டேன். நான் கவுடு இல்லாமே விட்டுப் பேசறேன். அவ்வளவுதான். நான் குத்தம் சொல்லல்லே. பத்து வயசுலே இந்தக் கடைக்குத் தினம் மத்யானச்சயா, மாசம் முப்பது முடிஞ்சதும் முழுசா மூணு ருவா சம்பளத்துக்கு வந்தேன். எனக்கு இப்போ வயது அறுவத்திஏழு. ஏந்தா, நின்னா, முட்டிப்பூட்டு விட்டுப் போவுது. எனக்கும் என் பொண்ணு மூணுக்கும் கல்யாணத்

துக்கு உதவினது அவாதான். கோவில்ல வச்சுத்தான் கல்யாணம். கோவில் வெளிச்சத்துலே. நாலு பக்கமும் வச்சு நாலு பந்தி வடியலுக்கு அரிசி அளந்தது அவாதான். தாலியும் புடவையும் அவங்க உபயம். ஆனா, மூலம் ரெண்டு, இரணியா ஒண்ணு ஆபரேசன் மூணுக்குக் கொடுத்தது கடன்தான்னு தங்கணம் கட்டனாங்க. நான் எங்கே கடனை கொடுக்கப் போறேன்? என் கடன் தீருமா? நான் சொல்லியாச்சு. ஐயா நான் உங்க காலில் தேஞ்ச செருப்புத் தோல், உள்ளங்காலோட ஒட்டிப்போய் குதிகால் சதையோட வளந்தாச்சுன்னு. இந்த ரூவாயை மூக்கை சொரிஞ்சு காதைத் திருவி, கன்னத்தைக் கிள்ளிக் காட்டற பரிபாஷையில் பற்று எழுதினாலும் இதெல்லாம் காட்டாத கணக்குல சேர்த்ததுதான். காலத்துக்கேப்ப ஒரு பச்சை நோட்டும் அதுல பாதியும் பாக்கறேன். பாவம் பொழைச்சுப் போறேன். அம்பது வருடத்துலே மூணு தலைமுறை முதலாளி பார்த்து, இதுகூட இல்லாம இருக்குமா?

ஆனா இத்தெல்லாம் என்னை நம்பித்தானே விட்டுருக்காங்க! அவங்க காரைக்குடியில் அமர்ந்துகிட்டு! அந்த நன்றி மறக்கலாமா? அத்தாலேதான் ஒரு நாளைககு ரெண்டு தாட்டியேனும் இந்த தள்ளாமையிலேயும் திருப்பதி மலையாட்டம் பாங்கு மாடி ஏர்றேன். மாடி ஏர்றபாவமோ புண்ணியமோ. பாங்கு கணக்கு படியேறி வந்த இடத்துல குந்த வச்சி நீங்கதான் பேசறீங்க ஒரொரு நாள் காப்பியும் ஆர்டராவுது. எல்லாம் நீங்க கொடுத்த இடந்தான் இப்படிப் பேச வைக்குது.

பேங்குலே மட்டுமில்லே. நாங்களும் இரும்புப் பெட்டி வச்சிருக்கோம் பாத்தேயளா? முட்ட முட்ட அத்தனையும் தங்க நகைங்க. பேங்க்குல மறு அடகு வச்சுருக்கோம். வெறும் கண் துடைப்பு. பேர் பொறிச்சுது, கல் பதிச்சது நீங்க எடுக்க மாட்டீங்களே. நாங்க எல்லாம் எடுப்போம். பாட்டன் சொத்தா, திருட்டுச் சொத்தா கேக்கமாட்

டோம். திருப்பினா அவனுது முழுகினா நம்மது. நியாயந் தானே. ஏழைபாழை மட்டுமில்லை. பணக்காரன்கூட. பாங்க்துவரை பேர் போகாமே மானம் பாக்கறவன், அப்பாவுக்கு தெரியாமே புள்ளே, புருஷனுக்கு தெரியாமே பெண் சாதி, ஒரு வைப்பாட்டிக்குத் தெரியாமே மைனர்... அவங்க அக்கப்போர் எல்லாம் நமக்கு எதுக்கு? 'அப்பா, கடனை கொடுத்துட்டு பொருளை மீட்டுக்க', இந்த ருத்திராச்ச கண்டியைப் பார்த்தீங்களா? சும்மா கையிலே தூக்கிப் பாருங்க. இந்த நாள்லே இப்படிச் செய்ய முடியுமா? இந்தப் பொன்னுதான் உண்டா? பிணக்கும் களக்கல்லே? வச்சுட்டுப் போனவன் இன்னும் திருப்பப் போறான். மூணு தலைமுறையாச்சு. அவன் பொணத்தை அவன் வயல் கிணத்துலேருந்தே எடுத்தாங்க. கழுத்துலே ரெண்டு கத்திக்குத்து. பொணத்தை நானே பார்த்தேன். அவன் புள்ளையைக் கட்டிக்கிட்டு நானே அழுதேன். ஆனா பண்டத்தைப்பத்தி மூச்சு விட்டிருப்பேனா? இது போல ஏதேதோ, என்னென்னவோ எனக்குத் தெரியாது. ஆனால் இங்கே அடுக்கி வெச்ச பண்டத்துல ஒரு குந்து மணி குறைஞ்சாலும் முதலாளி ஆச்சிக்கு மூக்கிலே வேர்த்துடும்.

ஓ! படி ஏறியும் பார்க்கணுமா? வாங்க!! வெண்கலத் துக்கும் பித்தளைக்கும் கொடுக்க மாட்டீங்களே! பார்த்து ஏறுங்க. இங்கே எல்லாம் படி குறுகல். நம்ப மாதிரி தாட்டிகளுக்கு தகறாறுதான்.

ஆ! என்ன மலைச்சு நிக்கறய.எத்தனை குத்து விளக்கு ஒரு முகம், மூணு முகம், அஞ்சு முகம்-எத்தனை குடம், எத்தனை அண்டா, எத்தனை தவலை தட்டு, டிபன் செட், சின்னது பெரிசு, நடு ஸைசு, இதென்ன பாத்திரக் கடையோன்னு பாக்கறையளா? இது மேடையில ஏழை கடன். கீழே பேழையிலே பணக்காரன் கடன். ஐயா நான் சொல்றேன். உழவன் கணக்கு ஓயாக் கணக்கு. அதைச் சித்திரபுத்ரன்கூட கட்ட முடியாது. அவனுக்கு கஷ்டத்தை மறக்கணுனாச்சும் குடிச்சாவணும். சுகத்தைக் கொண் டாடினாச்சும் குடிச்சாவணும். ஐயா பசுவிலே சாது

இல்லை பிராம்மணன்லே சாது இல்லேன்னு (சாமி மன்னிக்க!) சொல்றோமில்லே! அத்தோட சம்சாரியும் சேர்த்துக்கணும்னு நான் சொல்வேன். அப்புறம் என்ன எல்லோரும் பொல்லாதவரே. கடன் வாங்கறவரைக்கும் காலைப் பிடி. வாங்கினப்புறம் காணாம போயிடு. இத பாத்தீங்களா இந்த சோத்துக் கிண்ணத்தை? இதுக்குள்ளவன் வெச்சு வாங்க வந்தப்போ மாட்டேன்னு அடிச்சுக்கிட்டேன்.

"ஏம்பா இசக்கி இதுக்கு என்னதான் வரும்னு நினைக்கே?"

"கொடுக்கறதைக் கொடுங்க."

"வச்சப்புறம் எதுலே சாப்பிடுவே?"

"உள்ளங்கையை ஆண்டவன் எதுக்கு படைச்சிருக்கான். அள்ளுக்குத்தானே! கிண்ணி வர்ர வரைக்கு அவளே ஊத்தறா. அதுமேலே ஊறுகாயும் வெக்கறா. அதுவே ஒரு ருசி."

ஆமாம். பசிக்கிறவன் ருசியா பாக்கறான்? என்னென்னவோ சொல்லிப் பார்த்தேன். உடனே மேல்துண்டுலே கட்டின மூட்டைலேந்து முள்ளங்கி முடியை எடுத்தான் பாருங்க. இலையும் தழையுமா தவப்பிஞ்சு அஞ்சு முள்ளங்கி. முள்ளங்கின்னா எனக்கு ரொம்ப பிரியமுங்க. பருப்பு வேணாம். தேங்காயும் தேவையில்லை. வெத்தா அவிச்சுக் கொட்டி உப்போடு தாளிதம்...ஆஹா. நாக்கிலே ஜலம் ஊறுது. லஞ்சம்னு நீங்க சொல்லுவீக. அன்புன்னு அவன் சொல்லுதான். ஆமான்னு நான் சொல்லுதேன். சரி எல்லாமே அப்பிடி அப்பிடித்தான் ஐயா, அவனுக்கு மூணு வட்டிக்கொடுத்து வாங்கி மீட்டு மூணு நாள் பொறுத்து, திரும்ப வெச்சாத்தான் அவன் மாடா உழைச்சது அவன் உடம்புலே ஒட்டுது. நீங்களும் நானும் என்ன செய்ய? இன்னொரு பீரோலே அவங்க அவங்க அவசரத்துக்கு வச்சுட்டு போன புடவை, வேட்டி அடுக்கி வச்சிருக்கு. இன்னுங் கேட்டா சோம்பு அள்ளித்

தெளிச்சாப் போல அவன் பையன் படிச்சு பெரிய சர்டிபேட்டு கூட. சரி சரி. அதெல்லாம் நீங்க தாளா மாட்டீங்க. இப்பவே உங்க கண் துளும்புது. நீங்க உங்க வேலைக்கு லாயக்கில்லேன்னு கண்டுகிட்டேன். சாமி மன்னிக்க. சரி இறங்குவோமா?

சாமி தப்பா நினைக்காதீங்க. ஆச்சிக்கு இஷ்டப் பட்டா சொல்லி விடுங்க. விளக்கோ, குடமோ, தவலையோ, எந்தப் பண்டமோ சகாயமா முடிச்சுத் தர்ரேன். வாங்கிப் போட்டா பொண்ணுக்கு சீர் ஆவுது. சுறுசுறுப்பா செவத்த தே;லா இரட்டைப் பின்னல் போட்டுகிட்டு ஒன்பது மணிக்கு கிளம்புதே அதுதானே? அந்த வேளைக்குத்தான் நான் வேலைக்கு வர்ரேன். செல்லப் பொண்ணு. நல்லாயிருக்கணும். சரி. வர்ரீங்களா?''

★

அன்றிரவு நான் ஒரு கனாக்கண்டேன்.

அத்தனை குத்து விளக்குகளும் குப்பென தானே ஏற்றிக் கொள்கின்றன. அவைகளின் வரிசை பாம்பு வளைவில் நெளிகின்றது. அதினின்று ஆடும் நிழலும் ஒளியும் இழைந்து கலந்த தண்ணொளிப் பிழம்பு இதழ் இதழாய் விரிந்து கொண்டே கண்ணைக் கவிகிறது. இப்பெருமலரின் வயிற்றிலிருந்து மங்கலக் குலவையா? உயிரின் ஓலமா? பிரித்துப் புரியவில்லை. பின்னணியில் ஒரு இரைச்சல் அலை பாய்கிறது.

இவ்வொளி மலரின் இதழ்களில்:—ஒன்றில்,

ஒருத்தி படத்துக்கெதிரே குத்துவிளக்கு ஏற்றுகிறாள். அவளுடைய புதுப் புடவை புசுபுசுக்கிறது.

இன்னொரு இதழில்:

கழுத்து வரை இழுத்துப் போர்த்தி, தரையில் வளர்த்தியிருக்கும் உருவத்தின் தலைமாட்டில் தட்டில் அகல் எரிகிறது. தேங்காய் உடைத்து வைத்திருக்கிறது. அவன் அருகே அவனுடைய ஸ்த்ரீ கைகூப்பி அமர்ந்

திருக்கிறாள். நெற்றி மஞ்சள் பூச்சின் நடுவில் குங்குமம் விழியுருட்டுகிறது.

மற்றுமொரு இதழில்:

ஒரு கிழவி வெண்கலக் கின்னியில் அவளுடைய கிழவனுக்கு சோறு வட்டிக்கிறாள். படகு போன்ற உடல், நெற்றியில் தகடு போன்று பொட்டு, அவள் குனியுமுன் அவள் தொந்தி சரிகின்றது. பேறுக்கு இடம் கொடுத்துக் கொடுத்து அகன்று விட்ட புவனம். ரவிக்கையைத் துறந்த திரண்ட தோளோடு தொங்கத் தொங்கக் கட்டிய மஞ்சள் கயிற்றில் இரட்டைத்தாலி வெற்றி வீசுகிறது.

வேறு ஒரு இதழில்:

ஒருத்தி தன் மகனைத் தோள்மேல் சாத்திக்கொண்டு அவன் வாயில் எதையோ புகட்டிக் கொண்டிருக்கிறாள் மருந்தோ பாலோ? மார்த்துணி கலைந்தது அறியாள். பொங்கும் பாற்கடலில் ரவிக்கை நனைந்ததுமறியாள். வாயில் செலுத்தியது கடைவாயில்தான் வழியுமோ? அல்லது அத்தோடு சேர்ந்த கண்ணீர் மகிமையில் நெஞ்சு வரைப் போய் சஞ்சீவியாய் மாறுமோ?

ஒரு பெரு இதழின் மட்டத்தினின்று ஒரு மாட்டின் கழுத்தும் அதைக் கட்டிக் கொண்டு ஒரு முகமும் மட்டுமே தெரிகின்றன. மாட்டின் கொம்புகள் அதன் எசமானனின் முகத்தை ப்ரபை போல் சட்டம் கட்டுகின்றன. அவன் கண்களில் தான் என்னே கடல் விளிம்பில் கரை ஓரம் தனி உருவம் நிற்கும் ஆற்றொணாத் துயரம்! மாடு கண்ணாடி பளபளப்பு ஏறிக் கொண்டே வரும் அதன் கடைசிப் பார்வையை அவன் மேல் நிலைகுத்த முயல்கிறது,

பூவின் வயிற்றிலிருந்து ஒரு அழகி இடுப்பில் குடத்துடன் இதழ்ப் படிகளில் ஏறி வருகிறாள் குத்து விளக்கின் வரிசையை ஒட்டிக் குலுங்கிக் குலுங்கி வருகிறாள். விளக்கின் சுடர்கள் அவளைத் தனித்தனியாய்த் தழுவப் பார்க்கின்றன. குனிந்து பாதத்தில் பணிய வருகின்றன. அவளைத் தொட விழைகின்றன. அவைகளின் வியர்த்தத்தைக்கண்டு அவள் வாய்விட்டுச் சிரிக்கையில் மேல்பல் வரிசையில் ஒரு தெற்றுப் பல் ஒளி வீசுகின்றது.

இதழில் அவள் குதிகால் பட்டுவிட்ட இடத்தில் பொன்னும், மஞ்சளும், சிவப்புப் பொட்டும் பொட்டுப் பொட்டாகச் சிந்தி ரேகை மின்னுகிறது அவள் இடை என் நெஞ்சில் சென்றுபோன என் இளமையின் நாட் களைக் கடைகிறது. கூந்தலின் கோடரி முடிச்சில் நீலக் கனகாம்பரம் தளையவிழ்ந்து சிரிக்கிறது. வரும் வழியில் குத்துவிளக்கின் பாதம்தடுக்கி.

ஐயோ !!!

என் நெஞ்சு தாவுகிறது. நல்ல வேளை விழவில்லை.

ஆனால் குடம் இடையிலிருந்து நழுவி உருண்டு இதழ்களின் படிகளில் தத்தித் தத்தி ஓடுகையில் பாலருவி பூ பூரா பாய்கிறது.

ஆ ! இதென்ன, இதழ்களின் பாறைகளில், பாலோடு ரத்தமா ? என் வயிறு சில்லிடுகிறது. அதைப் பார்த்தும், அவள் சிரிப்பு ஓயவில்லை. மெதுவாக என் பக்கம் திரும்புகிறாள் 'என்னைப் பார்க்கிறாள்.' அவள் முகத்தில் கோபமற்ற தீ கொழுந்து விட்டு எரிகின்றது.

'ஜ்வாலமுகி'
'ஜெகத்தீபா'
'காலகல்பாந்தகி'

கூந்தலிலிருந்து பூச்சரத்தைப் பிய்த்து என்மேல் எறி கிறாள். அது கங்குபோல் காற்றில் மிதந்து என் மேல்—

நான் விழித்துக் கொண்டேன்.

விடியிருட்டு, மார்கழி குளிர் கன்னத்தில் வெடுக் கெனத் தேள் கொட்டிற்று. மசூதியிலிருந்து இமாமின் கூவல் நமாசுக்கு எழுப்புகிறது என் கன்னங்கள் நனைந்திருக்கின்றன.

நான் கண்ட தரிசனத்தின் நெருப்பு ஏழையின் வயிற்றெரிச்சலா அல்லது இன்னும் அவன் நம்பிக்கையின் ஒளியா ?

---

★ தீபக் ராகத்தை தான்சென் பாடியதும் தீபங்கள் தாமே ஏற்றிக் கொண்டனவாம்.

# 4 வியூகம்

வீட்டு முகப்பிலிருந்து பிதுங்கிய பால்கனியில் அவன் நின்று கொண்டிருக்குமிடத்திலிருந்தே அப்பருந்து வட்ட மிட்டுக்கொண்டே வானிலிருந்து கீழ் நோக்கியிறங்கு வதைக் கண்டான். அவனுடைய அப்போதைய மன நிலையில்,அதன் விரிந்த சிறகுகள் ஊரையே போர்த்துவது போலிருந்தன.

சுற்று முற்றும் தெரியும் வீட்டுக் கூரைகளின் நடுவில் ஓங்கிய ஒரு மசூதி ஸ்தூபியின்மேல், அது சிறகுகளை ஒடுக்கிக் கொண்டு வந்து அமர்ந்தது. அவனைப் போலவே அதுவும் ஊரின் நிலையைச் சிந்திப்பது போன்று சுற்று முற்றும் நோக்கிக்கொண்டு மௌனமாய் உட்கார்ந்து கொண்டிருந்தது. அதன் தோற்றமே ஒரு அபசகுனம். அதன் மௌனம் அதனினும் பயங்கரம். யார் தன்னுள் எப்பொழுது விழப் போறார்கள் என்று வாயைத் திறந்து கொண்டு காத்திருக்கும் பாழுங்கிணற்றின் ஆழமான மௌனம்.உயிர் நீங்கியவைகளைத் தின்றுத் தின்று உயிர்த் பிரிந்த சடலத்தின் உயிருள்ள மௌனத்தின் உருத்தானோ பருந்துக்கள் என்றும் அவன் எண்ணியதுண்டு. அபசகுனங்கள்.

ஆயினும் ஊரில் இரண்டு மாதங்களாகவே அக்கா வாசந்தான். நாயும் நரியும் ஓடின என்று வசனம் சொல்லக்கூட நாய்கள் கண்ணில் படவில்லை. ஊர் அவ்வளவு வெறிச்சென்றாய் விட்டது.

'ஜப்பான்காரன் அதோ அங்கு வந்து விட்டான்' இதோ இங்கு வந்து விட்டான்' என்ற 'குபார்' கிளம்பியதும், சமுத்திரக் கரையோரம் இருப்பவர்கள் ஊருக்கு உட்புறம் நகர்ந்தார்கள். ஊருக்கு உட்புறம் இருப்பவர்கள் ஊரை விட்டுவெளியேற ஆரம்பித்தார்கள். அவ்வளவுதான், கொஞ்ச நாளில் பட்டணம் கலகலத்து

விட்டது. பணக்காரன் மோட்டாரில் ஓட்டம் பிடித்தால், ஏழை ரிக்ஷாக்காரன், தன் பெண்டாட்டி பிள்ளையையும், ஓட்டைப்பானையையும் ஓலைப்பாயையும் ரிக்ஷாவில் வைத்துக்கொண்டு ஓடினான். ஜன நடமாட்டமற்று, தெருக்களும், தெருக்களில் கட்டடங்களும் பயங்கரமாய்த் திமிர்த்துக்கொண்டு நின்றன. அசையாப் பொருள்களாகிய தமக்கும் தம்முடைய அசையாத் தன்மையினாலேயே அச்சமுறுத்தும் உயிருண்டு எனக் காண்பித்தன.

நாளை முதல் இந்த வீடும் அம்மாதிரிச் சாபம் பிடித்த வீடுகளுள் ஒன்றாய்விடும். ஏனெனில் மாதுவின் குடும்பத்தாரும் விடியற்காலையில் வண்டியேறப் போகிறார்கள்.

மாது ஆனால் லேசில் கிளம்புவதாயில்லை. மாது பெரிய 'இரும்புத்' தலையன்.

"இப்போத்தான் உத்தியோகத்தில் ஒட்டிக்கொண்டிருப்பவனுக்குச் சம்பளம் உயர்த்திக்கொண்டிருக்கிறான். முதலாளி வேலைக்காரனைக் கெஞ்சும் காலம் இப்போதான் வந்திருக்கிறது. இந்தச் சமயத்தில் அடித்துப் பிடுங்கிச் சம்பாதிக்காமல் எப்போடா சம்பாதிக்கிறது?"

அடேயப்பா, மாது பெரிய 'பேர்வழி'. அவனுக்கு வாழ்க்கையில் ஒரே குறிதான். ஒரு ரூபாயை எப்படி பத்து ரூபாய் ஆக்குவது, பத்தை எப்படி நூறாக்குவது? ஒரு நிமிஷம் சும்மாயிருக்க மாட்டான். பக்க ஜோலி பத்து வைத்துக்கொண்டிருந்தான். எல்லோருக்கும் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாளெனில் அன்றுதான் மற்றைய நாட்களை விட வேலை அவனுக்கு மிகவும் மும்முரம். இத்தனைக்கும் மாதுக்குப் பூர்வீகச்சொத்து ஊரில் இருக்கிறது. பங்குக்கு உடன் பிறந்தவர்களும் கிடையாது. இருந்தும் அவன் பிறந்த வழி அப்படி!

அவசியச் செலவு காலணாக் கூட அளந்துதான் பண்ணுவான்.

அடிக்கடி அவனுக்கும் பாருவுக்கும் தர்க்கம் வந்து விடும்.

"குழந்தைக்கு ஹார்லிக்ஸ் வேணும், அதுவேணும் இதுவேணும்" என்பாள்.

"நான் அப்படி ஹார்லிக்ஸில் வளரவில்லையே!"

"நீங்கள் பிறந்தாப்போல் நம் குழந்தை பிறக்கவில்லையே! நம்ம காலமே வேறே, நம் குழந்தை காலமே வேறு"

"நன்றாய்க் காலத்தின்மேல் பழியைப் போட்டாய்! எத்தனை அகமுடையான் பெண்டாட்டி இம்சை தாங்க முடியாமல் ஓடியோ, செத்தோ போனபிறகு அவன் குழந்தைகள் வளரவில்லை! அதுகள் எல்லாம் ஹார்லிக்ஸ் இல்லை, ஓவல்டின் இல்லை என்று வாயைப் பிளந்து விட்டனவா?"

"உங்களுக்கு இது மாதிரிதான் பேசத் தெரியுமா? இல்லாட்டா........."

"இதோ பார், நம்மிடத்தில் ஒன்று வைத்துக்கொள். எந்தெந்தச் சமயத்தில் எந்தச் சாமான் சுளுவாயும் மலிவாயும் கிடைக்கிறதோ, அதுதான், குழந்தையானாலும் சரி, பெரியவர்களானாலும் சரி- நான் வாங்கிக் கொடுக்கக்கூடிய சாமான். நீ அதை மருந்தென்று வைத்துக் கொண்டாலும் சரி, ஊட்டமென்று கொண்டாலும் சரி. அதுக்குத் தகுந்தாற்போல், அதைச் சாப்பிடுபவர்கள் வளர்ந்தது போதும். உனக்கு ஒரு கதை தெரியுமா?—"

பாருவுக்குக் கதை கேட்கப் பொறுமை இராது. கதவுகள் படாரென மூடும், திறக்கும்.

மாது அடிக்கடி சொல்வான்.

"உன்னைப் பார்த்தால் எனக்கு, அசூயையாயிருக்கிறதப்பா? பெண்டாட்டி பிள்ளையென்று ஒரு பிடுங்கல் உண்டா? பெரியவர்களெல்லாம், பேரனைப் பார்க்க வேண்டும், பேத்தியைப் பார்க்கவேண்டும் என்று

பெண்டாட்டிகளைக் கட்டிவைத்து விடுகிறார்கள். கூடவே கலியும் பிடித்து விடுகிறது. உன் மாதிரியிருந்தால், நான் இத்தனை நாளைக்குப் பட்டணத்திலேயே ஒரு வீடு வாங்கியிருப்பேன். இதோ பார். பாரு மறுபடியும் வருகிறாள். இப்பொழுது என்னத்தைக் கேட்கப் போகிறாளோ, தெரியவில்லை. என்ன சமாசாரம்?"

"இன்னிக்கு ஜப்பான்காரன் நோட்டீசை வாரி இறைச்சானாமே, 'புதன் கிழமை வரப்போறேன். எல்லோரும் முன்னைக்கு முன்னாலே ஊர்போய்ச் சேருங்கோ"ன்னு"

"ஆரம்பித்து விட்டாயா? இந்த ஜப்பான்காரன் எங்களிடம் சொல்லியிருக்கிறானோ இல்லையோ, முதலில் நம் வீட்டுப் பொம்மனாட்டிகளிடம் கண்டிப்பாய்ச் சொல்லிக்கொள்கிறான். 'நான் வருகிறேன், இட்லி தோசைக்கு அரைத்துப் போடுங்கள்.'"

"எதுவுமே உங்களுக்கு வேடிக்கைதானா? கோடியாத்திலே இன்னிக்கிக் கிளம்பிட்டா—"

"சரிதான் போ, வேலையைப் பார். எல்லோரும் பண்ணுகிறதை நான் பண்ண முடியுமா?"

மாது இவ்வளவு வீறாப்புப் பேசினானே யொழிய, திடீரென்று ஒரு நாள் தெருவில் எல்லா வீடுகளும் பொட்டலான பிறகு, தன் வீடு தனியாய் நின்றதைத் தானே உணர்ந்ததும், அவனுக்கே சற்று 'திக்'கென்றது. அத்துடன், ஊரில் இவ்வளவு வெளியேற்றமும் நிசப்தமும் நேர்ந்துவிட்ட பிறகுகூட, கொஞ்ச நாளாய், முன்னை விட உடலும் மனமும் இருப்புக் கொள்ளாத ஒரு பரபரப்பு. ஆபீசில் கூட, ஒருவர் முகத்தையொருவர் பார்க்கையில், அங்கு வாய்விட்டுச் சொல்லவும் மெல்லவும் முடியாது. உள்பயத்தால் ஏற்படும் ஒரு மனத் தவிப்பு. போலீஸ், ராணுவம், ஏ. ஆர். பி. வேலையைச் சேர்ந்த

வர்களெல்லாம் அவரவர் வேலைகளைச் செய்யும் வெளிப் பாவனையிலேயே ஒரு புது 'உஷார்'. மூன்று நாட்களாய்த் தெரு விளக்கு எரியவேயில்லை.

இந்தப் புது ஜரூரையெல்லாம் கண்டவுடன் பாருவுக்கு வயிற்றில் இன்னும் புளியைக் கரைத்தது. மாதுவின் தாயார் கண்டிப்பாய்த்தான் ஊர்ப் போய்ச் சேர வேண்டும் என்று கெடுபிடி பண்ண ஆரம்பித்தாள்.

"நான் சாகணும்னு இருந்தால், நம்மூரிலேயே நான் செத்துப்போறேன். இங்கே இந்த அனாசாரப் பட்டணத்திலே மாட்டிண்டு குண்டு பட்டுத் துர்மரணமானாள் என்று நாலு பேர் பேசிண்டாக்கூட, என் ஆவிக்குக் கேட்கச் சகிக்காது..."

ஆகையால் மாது மறுநாள் காலை அவன் வீட்டு மனுஷாளை ஊர்போய்ச் சேர்த்துவிடப் போகிறான். "இதுகளைத் தொலைத்துவிட்டு வந்தால்தான், நம் வேலையை நிம்மதியாய்க் கவனிக்க முடியும்..."

எப்படியிருந்தாலும் மாது கெட்டிக்காரன். அப்பா இப்பொழுது உயிரோடிருந்தால், மாதுவை மெச்சிக் கொள்வார், 'கெட்டிக்காரன், பிழைக்கிற பிள்ளை' யென்று.

பருந்து பறந்துவிட்டதா, இருக்கிறதா என்று இப்பொழுது பார்க்க முடியவில்லை, யோசனையின் மும்முரத்தில் இரவு நேர்ந்தது கூடத் தெரியவில்லை.

பெருமூச்செறிந்துகொண்டு உள்ளே சென்றான். அறை மூலையில் சுருட்டி வைத்திருக்கும் படுக்கைமேல் இடுப் பொடிந்த மாடாய்ச் சாய்ந்தான்.

நினைவு அப்பாவைத் தொட்டதும், அவரையே தொடரத் தலைப்பட்டது மனக் கண்முன் அவர் உருவம் எழுகிறது. எண்ணுகிற தினுசில் விலா எலும்புகள் தெரிய நலிந்த உடல் சாய்வு நாற்காலியில் சாய்ந்த வண்ணம், தான் நல்லபடியாய் இருந்த நாளையெல்லாம் எண்ணி

எண்ணிப் பேசிப் பேசி உக்கிப் போவார். அவர் பார்த்த பழங்கணக்குகள் தாம் அவர் உடலையும் உள்ளத்தையும் கொஞ்சம் கொஞ்சமாய்த் தின்றன.

அவசர அவசரமாய்க் கூப்பிடுவார்.

''மல்லி, இப்படி உட்கார். என்னைப் பார், வாழ்க்கையில் என் தோல்வியைப் பார்த்துப் புத்தி தெரிந்து பிழைத்துக்கொள். நான் நன்றாயிருந்து சின்ன வயதில் புத்தி சொல்ல யாருமில்லாததால் சறுகி விட்டேன். என் கண் மூடுவதற்குள் நீ வயிற்றிற்குக் கஷ்டப்படாமல், ஏதாவது ஒரு உத்தியோகத்தில் நிலைத்துவிடுவதை நான் பார்த்து விட்டால் எனக்குப் போதும்.

''என்னப்பா எப்போ பார்த்தாலும் வயிற்றுப் பிழைப்பைப் பற்றிய பேச்சுத்தானா? வேறெதுவுமில்லையா?

''பின் எதைப்பற்றிப் பேசவேண்டுமென்கிறாய்! உலகத்தில் அதைவிட முக்கியம் எது? எப்படியாவது இந்த வருஷம் இந்த ஷார்ட்ஹாண்டு, டைப்ரைட்டிங்குப் பரீக்ஷை...''

''எனக்கு இந்த ஷார்ட்ஹாண்டு, டைப்ரைட்டிங்கு பிடிக்கவேயில்லை.''

அப்பாவுக்கு முகம் கறுக்க ஆரம்பித்துவிட்டது.

''லோகத்தில் எல்லாமே அவனவனுக்குப் பிடிக்கிறபடி நேருமா? பிழைக்கிற வழியை முன்னால் பார். எப்படியும் எனக்கப்புறம்தான் நீ. உன்னைவிட நான் உலகத்தில் அடிபட்டிருக்கிறேன். நான் சொல்வதை...''

''எல்லோரும் பண்ணுவதையே நானும் பண்ணுமா? ஏதாவது புதிசாய்...''

அப்பாவுக்குக் கோபம் மண்டைக்கேறிவிட்டது. ஓரேயடியாய்ப் படபடவென்று சத்தம்போட ஆரம்பித்து விட்டார்.

"என்ன பண்ணப் போகிறாய்? நீ என்ன, ஸர். ஸி. வி. ராமனா? புதிசாய் பண்ணப்போகிறானாம், புதிசாய் என்ன பண்ணப் போகிறாய், புதிசாய்?"

ஆம் என்ன பண்ண வேண்டும்? இந்த நியாயமான கேள்விக்கு விட்டுச் சொல்ல என்ன பதில் அவனிடமிருக்கிறது.

ஆயினும் விட்டுச் சொல்ல முடியாத பதில்கள் ஒரே சமயத்தில், எத்தனை மனதில் எழுகின்றன! முழுமை குலைந்து, கொப்பரைத் துருவலைப்போல் செதிள் செதிளாய் ஒன்றுக்கொன்று சம்மந்தமற்ற சிதர்கள்......

எங்கேயோ, எப்பவோ, ஜன்னற் கதவில் பதித்த நீலக் கண்ணாடியின் மேல் சூரிய ஒளிபட்டு எதிர்ச் சுவரில் நீல நிழல் தளும்பியாடுவதைக் கண்ட ஞாபகம் இப்பொழுது அவனுக்கு வந்தது. அச்சமயத்தில் அவன் உணர்ச்சிகளை அந்நீலச் சாலையின் அழகு அசைத்த வேகத்தில், தானும் அந் நிழலுள் ஒளிந்துகொண்டு அதன் ஆட்டத்துடன் இழைந்து ஆட வேண்டும் எனும் அர்த்தமற்ற பித்துப் பிடித்த எண்ணம் ஒன்று தனக்குத் தோன்றியதை நினைக்கையில் இப்பொழுதுகூட அவன் உள்ளத்திலிருந்து உதட்டிற்கு ஒரு புன்னகை எழுந்தது....

'இதுதான் நான் செய்ய விரும்பியது' என்று அப்பாவிடம் அவன் சொல்ல முடியுமா?

இன்னொரு சிதர் சிந்தனையில் மூண்டது.

ஒரு வருஷம் ஊரில் பெருமாள் கோயில் உற்சவத்திற்கு மஹாராஜபுரம் விசுவநாதையர் பாட வந்திருந்தார். அப்பொழுது அவனுக்குச் சங்கீதத்தில் ஆசையேயொழிய ஞானம் அதிகமில்லை. ஆகையால் அவர் என்ன பாடினார் என்று திண்ணமாய் அவனுக்குப் புரியவில்லை. இருந்தும், இரவில் பாதியும் கிடந்தபிறகு, நெருப்பில் உருக்கியது போன்று பாகுபட்டுப் போன அச்சாரீரம். தனக்கென்றே தனி உயிர் பெற்றுக்கொண்டு, சரிகையோடு

ஒட்டிய கரை (அல்லது கரையோடு ஒட்டிய சரிகையா ?) போல் தம்பூரா சுருதியுடன் லயித்துக்கொண்டு தான் எழுப்பும் நாத வெள்ளத்தில் தானே திளைத்துக்கொண்டு பாடுபவன், கேட்பவர் எல்லோரையும் தன்னில் மூழ்கிக் கொண்டு பந்தலில் தானே நிரம்பி, தன்னிச்சையாய், உள்ளம் நெகிழும் குழைவுகளிலும், மதி மயங்கும் பிர்க்காக்களிலும், பாம்பைப்போல் வளைந்தும் விரைந்தும் கற்பனையில் திரிந்து சஞ்சரிக்கையில்› இவரைப்போல் எனக்கும் பாடவராதா? என்று எழுந்த அசூயையோ ஆசையோ ஒரு பக்கமிருக்கட்டும், அதனினும் உருவற்றதாய், 'இவர் எழுப்பும் இந் நாத ஜாலத்துள் நான் கலந்துவிட முடியாதா? என் இதயத்தைத் தொண்டைவரை எழுப்புகிறதே, இந்தக் கமகங்களுடன் ஒன்றாய் நான் தேய்ந்துவிட முடியாதா? வங்கி வளையல் போன்ற இந்தப் பிர்க்காவின் பல இன்னொலிச் சிதர் களுள் ஒன்றாய் நான் பதுங்கிவிட முடியாதா?......"

இன்னொரு சமயம் அவன் வாய்க்காலின் கரையோரமாய்ப் போய்க்கொண்டிருக்கையில் மீன்கொத்திப் பறவை யொன்று மீன் பிடிப்பதைக் கண்டான். அதன் நீல நிறம் வெய்யிலில் பட்டுப்போல் பளபளக்க, ஜல மட்டத்துக்கு நேர்ச் செங்குத்தாய், இறக்கைகள் அடித்துக் கொள்ளும் வேகம் ஓரோர் சமயம் பார்வையையும் ஏமாற்ற, வானில் ஒரே நிலையில் மிதந்து கொண்டு, திடீரென்று ஜலத்தின் மேல் கல்லைப்போல் நேர்க்கணக்கில் விழுந்து அலகில் கொத்திய மீனுடன் ஆகாயத்தில் மறுபடியும் எழும் வேகத்தைப் பார்த்ததும், அது விழுந்து எழும் வேகத்தின் அழகில் நான் ஒடுங்க மாட்டேனோ?......

இம்மாதிரியாய் அநிச்சயமாய், உருக்களற்று, மனத் திரையில் எழும் எண்ணங்களினூடே இன்னொரு நினைவு......

'ஓரிரவு வாசற் குறட்டில் கயிற்றுக் கட்டிலில் படுத்து உறங்குகையில் நடுநிசியில் விழித்துக்கொண்டு... எங்கும் நிசப்தம். முழுநிலா வானில் பதிர்ப்பேணிபோல் பிசுபிசு

வென்று படர்ந்த மேகம். அதன்மேல் தனித் தனியாயும் சேர்ந்தும் மிதந்துகொண்டு சுடர்விட்டு ஒளி வீசும் நட்சத்திரக் கூட்டங்கள். எதிரில் திறந்த வெளியில் பசும் புற்றரை. ஓரத்தில் நிற்கும் மரங்களினடியில் நிலவுப் பால்பிழிந்து புள்ளிகளிட்ட இலை நிழற் கோலம். இவ்வழகின் அனுபவம் என்னைத் தாக்குகிறது. இன்ன தென்று விவரிக்க இல்லாததோர் விசனம் மனதில் கசிகின்றது. இல்லை, விசனம் கலந்த இன்பம்; இன்பம் கலந்த விசனமா? எப்படியும் மறுபடியும் கிட்டாத நிமிஷம் இது. இத்துடன் நான் காலத்திற்கும் விஷயத் துக்கும் வித்தியாசமற்று இழைந்துவிட முடியாதா? இரவையும் பகலையும் அவைகளின் பயனுக்காகமாத்திரம் பகவானை வணங்காது வேளைகளின் அழகுக்காகக் கூடச் சிருஷ்டிக்கு நன்றி செலுத்தும் வேளையிது. ஹே பகவான், இவ்வளவு அற்புதமான சமயத்தை நான் அனுபவிக்க எனக்குக் கொடுத்தாயே, அதற்கு உன்னைத் துதிக்கிறேன். என் நன்றியும் "என் அனுபவத்தின் நிறைவும் இன்பமும் எப்படியிருக்கின்றன வென்பது, எனக்கே கூட நான் சொல்லிக்கொள்ள முடியாதபடி என் தொண்டையை அடைக்கிறது...

காலம் எல்லோருக்கும் பொதுவா யிருப்பினும் அது தனக்கென்றே சில நேரங்களைப் பிரத்தியேகமாய் வைத்துக் கொண்டிருக்கிறது. இந் நேரங்கள் எதிர்பாராத சமயங்களில், நெருப்புத் தூணிலிருந்து பிரிந்த நட்சத்திரப் பொறிகள் போல், எதிர்பாரா இடங்களில் தங்கித் தயங்கி, அவிந்தும் போய் விடுகின்றன. அவைகளின் அழகின் நினைவுகளும், அந்நினைவுகளின் அழகும்தான் மிச்சம்.

இன்னமும் பார்க்கப் போனால், காலமே குறைக் கனிவில் பறித்த பழம் போல்தான். ஒரே பழத்தில் புளிப்பு, கசப்பு, துவர்ப்பு, சப்பு, இன்னமும் இவ்வுருசி களெல்லாம் விதவிதமாய்க் கூடுவதால் ஏற்படும் ருசிகளும்,

எங்கேயோ ஒரு இனிப்பும் ருசிக்குத் தட்டுவதுபோல் தோன்றுகின்றன. ஆனால் அந்த இனிப்புக் கண்ட இடத்திலேயே மறுபடியும் கடித்தால் அந்த இனிப்பைக் காணுவதற்கில்லை. அப்படியே இனிப்பு இருந்தாலும் அதே இனிப்பு இல்லை......

''என்னடா யோசனை பண்ணுகிறாய்?''

அப்பாவின் பொறுமையற்ற குரல் அவன் சிந்தனைகளிலிருந்து அவனை அடித்து எழுப்புகிறது. அவன் நினைப்பதையெல்லாம் அப்பாவிடம் என்னென்று சொல்ல முடியும்? சொன்னால்தான் அவருக்கு என்ன புரியப் போகிறது. அவனுக்கே புரியவில்லையே? இந்தப் பேச்சைத் தொடர்வதில் ஒரு அசதிதான் ஏற்படுகிறது......

''சரிதான் அப்பா, ஷார்ட்ஹாண்டு பரீக்ஷைக்கே போகிறேன்.''

''அதுதான் சரி, உனக்கு இப்பொழுது தெரியாது. உனக்கு நல்லத்தைத் தவிர என்னத்தைச் சொல்லப் போகிறேன். ஓடுகிற பாம்பை மிதிக்கிற நாளில் குருட்டு யோசனை பண்ணிக் கொண்டிருக்காதே.''

அவ்வளவு ஆசையாய் அவன் எதிர் காலத்தைக் கணித்த அப்பா, அவர் கணித்தபடி அது நடப்பதைப் பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை. ஒருநாள் இரவு வேளை எல்லாரும் ஏதோ சந்தோஷமாய்ப் பேசிக் கொண்டிருந்து விட்டுப் படுக்கும் வேளையில், அப்பா பாலைக் குடிக்கையில், புரைக்கேறி விட்டது. அம்மா பதறிக் கொண்டு அவர் வாயில் வார்த்த இரண்டாவது முழுங்கு வாயோரம் வழிந்தது. அப்பாவின் தலை 'டக்' கென்று தலையணையில் ஒரு பக்கமாய்ச் சாய்ந்து விட்டது. அவர் முகம் மனக்கண்முன் வந்து நிற்கிறது. கடைவாயில் ஒழுகிய பால் முள்போல் வளர்ந்த தாடி மயிர்களின் நுனிகளின்மேல், துளித்துளியாய் நிற்கின்றன. இமைகள் விழிகளை அரைக்கண்ணாய் மூடின.

திடீரென்று அப்பா காலை வாரிவிட்ட, இந்தச் சாவு அவன் மனதில் கிளறியது என்ன? அவருடைய பிரிவின் துயரமா, அல்லது அவரைப் பிணமாய்க் காணும் பயமா? இப்பொழுது அவரை-இல்லை-அதைத் தொடக்கூடக் கை கூசுகிறது. ஆனால் அம்மா அதன்மேல் விழுந்து புரண்டு அழுகிறாள். அம்மாவை இம்மாதிரி அவன் கண்டதில்லை. கண்டது சஹிக்கவில்லை.

அம்மா 'அப்பா! அப்பா!!' என்று கதறுகிறாள். அம்மாவும் அப்பாவும் அந்தரங்கமாயிருக்கையில் ஒருவரை யொருவர் எப்படி அழைத்துக் கொள்வார்களோ? ஆயினும் இப்பொழுது, அம்மா, பிள்ளைக்கெதிரில் அழுகையில், அவள் மனம் குறிக்கும் உறவு வேறாயினும். வாய் அதை வெளிவிட்டுச் சொல்ல முடியாமல் 'அப்பா. அப்பா!, என்றே அலறித் தவிக்கிறது.

''அப்பா! அப்பா''

குடும்பத்துக்கு அவன்தான் இனிமேல் தலைவன். கலியாணத்திற்கு இரண்டு தங்கைகள். கழுத்துக்கு மேல் கடன். பொறுப்புகளுக்கு அடிமையாகி விடுதல்தான் தலைமை போலும்!

உண்மைதான், அழகு என்கிறார்களே, அப்படியாயின் இதுதான் அழகா? இது அழகு இன்மையால், இது உண்மையில்லையா? சாவும் உண்மையில்லை; பின் எது தான் ஊன்றுகோல்? அல்லது ஊன்றுகோலே யில்லையா? ஒருவிதமான பிடிப்பும், அர்த்தமுமற்று, கூட்டுள் அடைபட்டாற்போல், சுற்றிச் சுற்றி, சுற்றிய இடத்தையே சுற்றிக்கொண்டு, சுயநினைவுடனேயும் இருப்பது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது. அல்லது மறதிதான் உண்மையா? நடந்ததையெல்லாம் மறந்து விடுவதுதான் சாத்திய மில்லாவிடினும், மரத்துப் போவதாவது சாத்தியமா?

கொள்கை முறையிலும், தொன்று தொட்ட வழக்க முறையில் அவன் பாவிக்கும்படி அவன் உள்ளே ஊறியும்

சுயச் சிந்தனையாலும் அவன் வாழ்க்கைக்குக் கண்டு பிடிக்க முயன்ற அர்த்தத்திற்கும் அவன் அனுபவமாய்க் கண்டதிற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்று இருந்தன. இவையிரண்டிலேயுமே எது உண்மை?

மனம்தான் இவ்வளவு பாடுபடுகிறதேயொழிய, காலம் கழிந்து கொண்டு தானிருக்கிறது. அதன் கதியிலேயே ஒரு இரக்கமற்ற தன்மையிருக்கிறது.

''படுவதையெல்லாம் நீ பட்டுக்கொண்டிரு. போவதை நான் போய்க்கொண்டிருப்பேன். என்னைத் தடுக்க யாராலும் முடியாது. என்னாலேயே முடியாது....''

அப்பா இறந்து போய்விட்டார் என்று, அவனால் அவன் இஷ்டப்படி என்ன செய்யமுடிகிறது? அவர் இஷ்டப்பட்ட பரீக்ஷைகளுக்குத்தான் படிக்க நேர்ந்தது. ஆவிபிரிந்து இவ்வுலகை நீத்த பின்னரும், இறந்த உலகிலிருந்து கொண்டே, இறந்தவர் உயிருள்ள உலகத்தில் நடத்தும் ஆக்கினைகள்தாம் உண்மையா?

எதுதான் புரிகிறது?

கடனோடு கடனாய் அவன் தங்கைகளுக்கு எப்படி கலியாணத்தை முடித்து வைத்தான் என்பதை இப்பொழுது யோசிக்கையில் திகைப்பாய்த்தானிருக்கிறது.

ஒரு தடவை புக்ககம் போய் வந்த தங்கைமார்கள் எப்படி மாறிவிடுகிறார்கள்! ஒட்டாமல் நுனி நாக்கால் பேசும் தினுசும், உடலையும் முகத்தையும் கோணிக் கொள்ளும் மாதிரியும் பார்த்தால் ''ஏதேது, இதுகளெல்லாம் நம் உடன் பிறப்புத்தானா!'' இங்கு இருக்கையில் ஒரு முழம் பூவிற்கும், அடிக் குழம்பு சாதத்திற்கும் சண்டை பிடித்தவர்கள் தானா? என்று அவனுக்கே சந்தேகம் தோன்றுகிறது.

''எங்காத்துலே ஒரு நாளைப் பார்த்தாப்போல் உருளைக்கிழங்கு வறுவல் நெய்யிலே வறுத்துப் போடணும்

அம்மா ; அது எப்படித்தான் நடக்குமோ ? எனக்குத் தெரியாதம்மா ஆனால் நடந்தாகணும்.'' என்கிறாள் ஒருத்தி தோளைக் குலுக்கிக்கொண்டு.

''ஏம்மா, ஒரு முப்பத்தஞ்சு ரூபாய்க்குக்கூட கொறைஞ்சு புடவை எப்படிக் கட்டறது ? என்று இன்னொருத்தி ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டே மூக்கைச் சுருக்குகிறாள். திடீரென்று அவளுக்குப் பிறந்த வீட்டு வாசனையே புதிதாயும் ஆகாததாயும் இருக்கிறது.

பேச்சு மாத்திரம் இவ்வளவு வறட்டு ராங்கியாயிருந்த போதிலும், இன்னமும் இங்கு மிச்சமும் மீதமுமாய் இருப்பதை வாரிச் சுருட்டிக் கொண்டு போவதில் ஒருத்திக் கொருத்தி தோற்றவளாயில்லை.

''அம்மா எனக்கு இந்தத் துருவலகாயைக் கொடேன்''

''ஏனம்மா, இது ஒடிஞ்சிருக்கே, அத்தோடே இது ஒண்ணுதானிருக்கு''

''பரவாயில்லை- நீ புதுசா வாங்கிக்கோ''

அதற்குள் இன்னொருத்தி : 'உனக்கென்ன குறைச்சல்; இனிமேல் அண்ணாவும் நீயும் மாத்திரம்தானே? அண்ணா உனக்கு வாங்கித்தரான். அதைவிட அவனுக்கென்ன வேலை ?''

ஏன் இப்படி மாறுகிறார்கள் ?

மாடிப் படியேறி யாரோ வரும் சப்தம். ஒரு ஆளின் வடிவம் அறை வாயிலை அடைத்தது.

''உள்ளே ஒருத்தருமில்லையா? யாரோ நடமாடினாப் போல இருந்ததே !''

''நான் தான்''

''மல்லியா ? விளக்கைப் போடாமல் இருட்டில் என்ன பண்ணறே ? ஏன், சாப்பிட வரல்லே ? எல்லாரும் சாப்பிட்டாச்சே !'!

''பசிக்கவில்லை''

''ஏதோ இறங்கின மட்டும் சாப்பிடேன்''

''இல்லை, இல்லை, எனக்கு உடம்பு சரியாயில்லை''

பாரு அரை மனதுடன் ஒரு அரைகணம் நின்றுவிட்டு, பிறகு அசதி நடையுடன் கீழே இறங்கிப் போகிறாள்.

கால கதியில் மனிதர்கள் மாறுவதையும், அச்சிந்தனையின் தொடர்பில் இப்பொழுது இப்படியிருக்கும் பாரு, இதற்கு முன்னால் எப்படியிருந்தாள் என்பதை நினைக்கையில் கால புருஷனின் மேல் சகிக்க முடியாத ஒரு கரிப்பு. அவன் மனதில், பாம்பைப்போல் சீறிக்கொண்டு எழுந்து நெளிவதை யுணர்ந்தான், ஒரு ஆணுக்கு ஒரு பெண் என்றும், ஒரு பெண்ணுக்கு ஒரு ஆண் என்றும், உயிர்கள், தமக்குள் தாம் வகுத்துக்கொண்டு விரதம் அனுஷ்டிப்பினும் அவன் அணைப்புக்குத் தப்பித்துத் தங்கள் கற்பைக் காத்துக் கொண்ட உயிர்கள் எதுவுமேயில்லை. அவன் அனுபவித்த பின்னர்தான் அவைகளை அவன் எப்படி முறித்தெறிகிறான்! எத்தனை அனுபவித்தும் அவன் வெறி ஏன் இன்னமும் தணிந்த பாடில்லை?

அன்னாளைய் பாரு கட்டுக் கடங்காத குதிரையாய் வளைய வருவாள்; நடையாய் வரமாட்டாள், குதித்துக் கொண்டுதான் வருவாள். துளசி மாடத்தண்டை ஒருகால் வைத்தால், மறுகால் அம்மி போட்டிருக்கும் தாழ்வாரத்தில்தான் வந்து குதிக்கும் பூமியதிரும்.

''ஐயோ பாரு-நீ பொம்மனாட்டி டீ, இன்னமும் கொஞ்சம் அமரிக்கையாயிருக்கணும்டீ- நான் பெத்த பொண்ணுன்னா எனக்கு மானம் போறதேடீ'' என்று அவள் அம்மை அடிக்கடி தன் கன்னங்களை நிமிண்டிக் கொள்வாள்.

''சரிதாம்மா போம்மா''

''ஐயோ, குரலைக் கொஞ்சம் தாழ்த்திப் பேசேண்டி—''

''சரிதாம்மா போம்மா—''

பாருவுக்கு எல்லாமே அப்பொழுது ''சரிதாம்மா போம்மா''தான். ஒன்றும் சட்டை செய்ய மாட்டாள்.

வெறும் மேனி வளர்ச்சியே ஒரு வசீகரமாய் அவள் மேல் கவிய, அவள் மனத்தில் அவள் தன்னை மறந்து எவ்விதமான சிந்தனையுமற்றுத் திரிந்தாள். சுயமான அழகு அவளுக்கு இல்லாவிடினும் அவளைச் சூழ்ந்த அவ்வுன்மத்தமே அவள் முகத்திற்கும் செயல்களுக்கும் ஒரு கவர்ச்சியைத் தந்தது. அக்கவர்ச்சியைக் காணமுடியாத வர்களுக்கு அக்கவர்ச்சியே அருவருப்பாயும் அமைந்தது. அவள் வளர்வதை அவள் அம்மையும் மற்றவர்களும் கரித்தார்கள் என்றுகூடத் தோன்றியது.

''குதிர் மாதிரி, பெண்ணை வச்சிண்டு இன்னமும் பிள்ளை தேட நாளாகல்லையா?''

அவள் உடலின் மீறின வாளிப்பில், சாதாரணமாய் வெறும் சட்டையும் பாவாடையும் அணியும் பருவத் திலேயே தாவணி போர்த்தும் அவசியம் நேர்ந்துவிட்டது. அதையொட்டினாற் போலேயே புடைவையுடுத்தும் கட்டாயமும் ஏற்பட்டு விட்டது.

''இனிமேல் நீ கொஞ்சம் கட்டு திட்டமாய் இருக் கணும் பாரு; கண்டவாளோடே பேசிண்டு, நீ நினைச்ச படி வந்துண்டும் போயிண்டும் இருக்க முடியாது—''

''சரிதாம்மா போம்மா...''

சில சமயங்களில் நமக்கு வாழ்க்கையில் சில சம்ப வங்கள் நேரிடுகின்றன. சந்தோஷமாயிருக்கலாம், அல்லது துக்ககரமாயுமிருக்கலாம், ஆயினும் அவை நமக்கு மாத்திரம் ஏற்படுத்தும் ஒரு உள்ளக் கிளர்ச்சிக்காக, மற்ற சம்பவங்களைப்போல் மறந்து விடாது. மற்றவர் களுக்கும் காட்டாமல் மனத்தில் நினைவுப் பேழையுள் பத்திரமாய்ச் சேமித்து வைப்பதில் நமக்கு ஒரு அலாதி திருப்தி. பிறகு, சாவகாசமாய் ஏழைக் கருமி தனக்

கிருக்கும் ஒன்றிரண்டு செல்வங்களைத் தனக்கெதிரே பரப்பிக்கொண்டு அவைகளைப் பார்த்து மகிழ்வதைப் போல் மனமும் இடமும் கூடிய சமயங்களில், நாம் அச்சம்பவங்களைச் சிந்திக்கையில், சதா இருண்டிருக்கும் மனக்கும்பளத்தில், அத் தனி நினைவுகள் மாத்திரம் உருண்டு கொண்டு தனிச்சுடர் விடுகையில் நம்முள் ஊறும் இன்பமும் தனிதான். இன்ப நினைவுகளாயிருப்பின் மனத்தைச் சந்தோஷத்தில் ஆழ்த்துகின்றன. துக்க நினைவு களாயிருப்பினும் திரும்பத் திரும்ப எண்ணுவதால், அவைகளும் ஒரு துலக்கம் பெறுகின்றன. அத்தூய்மையும் இன்பமாய்த்தானிருக்கிறது.

அம்மாதிரி முன்மணம் வீசிக்கொண்டு அவன் மனப் பேழை திறந்து பாருவைப்பற்றிய ஒன்றிரண்டு நினைவுகள் வெளிக் கிளம்புவதை உணர்ந்தான்.

அவன் மன வெளியில் இப்போது ஒரு காட்சி அமைகிறது:—

நடு வெய்யில் முதுகைப் பிளக்கிறது. பக்கத்துக் கிராமத்துக்கு ஏதோ ஜோலியாய்ப் போய்விட்டு, வயல் வரப்புக்களின் வழியே வீட்டுக்குத் திரும்பி வந்து கொண்டிருக்கிறான். சுற்று முற்றும் எவருமே தென் படவில்லை. வயல்களில் அங்குமிங்கும் ஏர்கள் சில தனித்து நின்றன. வெய்யிலின் கடுமையாலோ, அல்லது மத்தியானக் கூழுக்கோ, உழவர் வேலையினின்றி இறங்கி யிருந்தனர்.

எதிரே பூமி, சுசத்தின் கரை மேட்டுக்கு வழுக்கிக் கொண்டு ஏறுவது தெரிகிறது. சுசமேட்டில் வேலி நட்டாற்போல், மரங்கள் கிட்டக் கிட்ட வளர்ந்து ஓங்கி நிற்கின்றன. சுசந்தாண்டினால் ஊர். ஆகையால் கரை மேட்டில் ஏறினான்.

முதலில் அவன் கண்களில் பட்டது எதிர்க்கரையில் பந்தாய்ச்சுருட்டி வைத்திருந்த புடவைதான். பூக்கள்

பொறித்த ப்ரிண்ட் புடவை அவன் பார்வை ஏதேச்சையாய் புடவையிலிருந்து ஜலத்தின் மேல் நழுவியது. ஓடும் ஜலத்தில் ஒருத்தி குளித்துக்கொண்டிருந்தாள். அவனை அவள் இன்னமும் காணவில்லை. ஆனந்தமாய் தன்னை மறந்த வெறியில் திளைந்து கொண்டிருந்தாள். மார்புள்ளிருந்து தொண்டை வரையில் ஏதோ கிளம்பி உள்ளேயே வெடித்தது. முட்டை வெடித்து குஞ்சு வெளி வந்தது போல், ஏதோ படபட வென்று மார்புக்கும் தொண்டைக்குமாய் இறக்கையடித்துக் கொண்டது. திடீரென்று அவனுள், இப்படிப் பொறுக்க முடியாத இன்பத்தைக் கொடுத்துக்கொண்டு துடிப்பது என்ன?

ஏதோ ஜீவ ரகசியத்தின் எல்லையில் மனம் தளும்பிக் கொண்டு நிற்பதுபோல் ஒரு உணர்ச்சி. இன்னமும் பலமாய் ஒரு தளும்பு தளும்பினால், அவ்விரகசியத்துக்குள்ளேயே விழுந்து விடுவான், அப்பொழுது அவ்விரகசியம் இன்னதென்று அவன் அறிவான் எனினும், மற்றவர்களுக்குத் தெரிவிக்க இயலுமோ இயலாதோ? ஏனெனில் அவன் அப்படிக் கண்டுபிடிக்க முடிந்தால் அவன் கண்டுபிடித்த ரகசியத்துக்குள்ளேயே மூழ்கிவிடுவான் ஏதோ ஒன்று எட்டியும் எட்டாமல் அவன் மனப் பிடிப்புக்கு நழுவி, அவனை ஏய்த்துஅவனுடன் விளையாடுகிறது.

பாரு என்ன பரையாகிவிட்டாளா? உலகின் ஆதிப் பெண்ணாக மாறிவிட்டாளா? உருவழிந்த பின்னர் நிற்கும் அதன் அர்த்தமா யில்லாமல் உருவுடனேயே பொலியும் அர்த்தமா அவள் இப்பொழுது; அல்லது அர்த்தத்தினுடைய உருவா!

சுற்றும் முற்றும் நோக்குகையில் ஒரு பக்கம் மரங்கள், எதிரே திட்டுத் திட்டாய் மணல் மேடுகள், வயல்களில் நெற் கதிர்கள் ஒன்றுடனொன்று உராய்ந்து பேசும் ரகசியங்கள் காற்றில் மிதந்து வருகின்றன. களத்து மேட்டில் ஒரு வைக்கோல் போர் தெரிகிறது. தோப்புகளினிடையில் கோவில் ஸ்தூபி எட்டிப் பார்க்கிறது.

உச்சிக் கால மணியின் சத்தம் தூரத்திலிருந்து ஏதோ வடிகட்டப் பெற்ற அர்த்தத்துடன் வந்து மோதுகின்றது. தூயதான நீலவான் ஒரு பெரிய வயிறுபோல், அவன் உள்பட எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டிருக்கிறது. அவனெதிரில் அகன்று விரியும் ஜலத்தில் இவையத்தனையுடன் வெகு பொருத்தத்துடன் தன்னையறியாமல் இயங்கிக்கொண்டு, பாரு ஸ்நானம் பண்ணிக் கொண்டிருக்கிறாள். வான் எனும் வயிறு அடக்கியிருக்கும் வித்துத்தானா அவள்?

ஆதியில் எல்லாம் இப்படித்தானே யிருந்திருக்கும்?

அப்படியாயின் இதுதான் விடுதலையா?

அவன் தன்னை மறந்து சிந்தனையில் ஆழ்ந்து விட்டதில், அவள் அவனைப் பார்த்து விட்டது கூடத் தெரியவில்லை. தேளைத் தொட்டதுபோல் கொட்டிய வெட்கத்தில் அவள் முகத்தில் ரத்தம் குழம்பியது. மறுகணம் ஒரு பெரும் ஜலத்திரை எழுந்து அவன் முகத்தில் விசிறி விழுந்து அவன் உடலைத் தெப்பமாக்குகிறது. கண்களை நிரப்பிய ஜலத்தை உதற, கைகள் முகத்தைப் புதைத்தன. அவன் காதில் ஒரு சிறு சிரிப்பு—வெட்கச் சிரிப்பு ஒலித்தது. அவன் சமாளித்துக்கொண்டு முகம் நிமிர்வதற்குள் அவளையும் அவள் புடவையையும் காணோம். சிட்டாய்ப் பறந்து விட்டாள்.

அவள் ஜலத்தில் உட்கார்ந்திருந்த இடத்தில் இதழ்கள் அகல விரிந்ததோர் பூ மிதந்து கொண்டிருந்தது.

''புஸ்—புஸ்—''

பத்தடி தூரத்தில் அவனுக்கெதிரில் ஒரு தாழம்பூப் புதரிலிருந்து விரித்த படத்துடன் ஒரு நல்ல பாம்பு அவனைச் சந்தித்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

அவனுக் கென்னவோ, அச்சமயம் அதைப் பார்த்துப் பயம் ஏற்படவில்லை. அவனே அவன் வசமில்லை. அவனை அழுத்திய மூர்ச்சையிலிருந்து தெளிய அவனுக்குச்

சற்று நேரமே சென்றது. பக்கத்து வீடுதான் எனினும், அன்று மற்றைய பொழுதெல்லாம் அவள் அவன் கண்ணில் படவேயில்லை. அவனைக் கண்டு ஒளிந்தாள் என்றே உணர்ந்தான். ஆயினும் அவன் என்ன செய்ய முடியும் ?

மாலைப் பொழுது இரவுள் நழுவும் வேளை. அம்மா வுக்கு மாலைப்பார்வை மங்கல். வயதாகிவிட்டது. தள்ள வில்லை. மருமகள் வந்து அவளைத் தாங்க வேண்டிய நாள். கொல்லைப் புறம் போய்க் கிணற்றில் ஒரு தவலை மொண்டுவரப் பிள்ளையை அனுப்பினாள்.

கிணற்றுக் கருகாமையிலிருந்து துளசி மாடத்தில் ஏற்றி வைத்திருக்கும் மாக்கல் விளக்கின் மேல் கண்ணை வைத்துக் கொண்டு, மனத்தை எங்கேயோ ஓடவிட்டுக் கொண்டு, கயிற்றில் தவலையைக் கட்டிக் கிணற்றுள் விட்டான். அப்பொழுது இடையில் குடந் தாங்கி ஒரு உருவம் கிணற்றை நோக்கி வருவதைக் கண்டான். பாரு வின் அம்மாவா? அவனைக் கண்டுவிட்டு அது சற்றுத் தயங்கி நின்றது, பாருவேதான்.

அவள் காலும் மனமும் அப்படியும் இப்படியும் இம்மி நேரம் தவித்தது. மறுபடியும் வீட்டுக்குள்ளேயே ஓடிப் போய் விடலாமா? அவள் அவஸ்தை அவனுக்கும் தெரிந்தது. ஆனால் பாரு லேசானவளா? முன் வைத்த காலைப் பின் வைப்பதா? திடம் பண்ணிக் கொண்டு குடத்தைக் கீழே வைத்துவிட்டுக் கைகளைத் தீர்மானமாய் மார்மேல் கட்டிக் கொண்டு நின்றாள்.

திடீரென அவள் நின்ற நிலை தவறியது. கைகள் பிடிப்புக்கு ஆகாயத்தைத் துழாவின. காலடியில் பாசியோ, எதுவோ, தாம்பைவிட்டு, அவள் விழுவதைத் தடுக்க அவள் பக்கம் தாவினான். அவன் ஆலிங்கனத்துள் அவள் 'லட்டுப்'போல் விழுந்தாள். கிணற்றில் 'சகடை' குடுகுடு வென உருண்டது. அவனை வெள்ளம் அடித்துக் கொண்டு

போயிற்று. அவன் மார்பிற்கும் தொண்டைக்குமாய், வாய்வழி வெளிப்பட முயல்வதுபோல் உள்ளக் குருவி பறந்து குதிக்கத் தலைப்பட்டது. இப்படி அவர்கள் சதை யோடு சதை தீண்டுகையில், உள்ளத்துடன் உள்ளம் தீண்டியதா? உள்ளங்கள் ஒருமித்தலில் உண்டாகும் இன்பம் இவ்வளவு பெரிதா? உடம்பு உள்ளத்தில் உருகி உடம்பே உள்ளமாய் விடுகிறதா? அப்பறம், உள்புறம் என்று இல்லையா? எல்லாம் ஒரே வெள்ளந்தானா? துன்பமும் வேதனை இன்பமும் ஒரே வேதனைதானா, இப்பொழுது அவனுள் குதிக்கும் உள்ளக்குருவி, அவனை ஊசலாட்டுவது போல?

"நான் குளிச்சதை அம்மாவிடம் சொல்லுவையா?" அவன் தலையை ஆட்டுகிறான். அவனுக்கு மாரைப் 'பக்; பக்,'கென்று அடைக்கிறது. அவனுள்ளிருந்து கொண்டு, அவனைப் படுத்தும் இன்ப வேதனை பயங்கரமா யிருக்கிறது. இதற்கு இக்கிணற்றடிதான் சாட்சி. துளசி மாடத்திலெரியும் விளக்குத்தான் சாட்சி.

"குடத்தைத் தேடிக்கொண்டே இப்போ சறுக்கி விட்டதையும் சொல்லமாட்டையே?"

அவனுக்கு நாக்குத்தான் மேல் கூரையை முட்டுகிறது. அவன் கைகள் அவளுக்காக அவளுடன் சேர்ந்து தேடு கின்றன குடத்தை அவள் இடுப்பில் வைக்கின்றன. திடீரென்று சகிக்க முடியாத தனிமையுடன் தான் நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான். சகிக்க முடியாத தனிமை, வெளியிருள் அவனுள் இறங்குவதையும் உணர்ந் தான். அவ்விருளில் அவன் மனக்கண்ணெதிரில் இரண்டு பொறிகள் தெரிகின்றன. ஆம்; ஞாபகம் வருகிறது. அன்று மத்தியானம் தாழம்புதரில் அவன் கண்ட அரவின் கண்கள். அவனையுமறியாமல் அவன் கைகளை நீட்டு கிறான்.

"இதோ என்னைக் கடி. என்னை ஏற்றுக்கொள். என்னைக் கோபியாதே. என்னை அன்புடன் கடித்து

என்னை விடுதலை செய்...”

இது என்ன பிதற்றல்? என்ன விடுதலை ? ஒருவேளை பாரு அவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தால் இப்படியாகி இருக்கமாட்டாளோ?

பாருவுக்கும் அவனுக்கும் ஜாதகம் பார்க்காமல் இல்லை. ஆனால் ஜாதகம் ஒத்துக்கொள்ளவில்லை.

மாதுவுக்கும் பாருவுக்கும் ஜாதகப் பொருத்தங்கள் அத்தனையுமிருந்தன. ஆகையால்தான் பாரு இப்படி ஆகிவிட்டாள் போலும்! ஆயினும் எப்படி ஆகிவிட்டாள்? சாறு பிழிந்த சக்கை மாதிரி! போதும் போதாதற்கு, இரண்டு மூன்று குறைப் பிரசவங்களும், குடும்பத் தொல்லைகளும் அவளை உருத்தெரியாமல் குலைத்து விட்டன. நிறைப் பிரசவத்தில் பெற்ற இக் குழந்தையும் சொட்டுச் சொட்டாய்க் குடித்துக் கொண்டிருந்தது. அவள் நாளுக்கு இழையிழையாய்த் தேய்ந்து வருவது அவனுக்குத் தெரிந்தது.

இருந்தும் யார் என்ன செய்யமுடியும் ?

ஒருவேளை பாரு அவனுக்கு வாழ்க்கைப்பட்டிருந்தால்...

இப்படியிருந்தால் அப்படியிருந்திருக்குமோ எனும், ‘ஆல்’களும், ‘உம்’களும் ஆகியதுதான் வாழ்க்கையா?

அம்மா இந்த ‘ஆல்’கள் ஒன்றில் அடங்கிக் காலமானாள். உடம்பு சுகமில்லாத சமயத்தில், அப்பா உயிருடனிருக்கையில் அவருக்கு வாங்கி எஞ்சிப்போயிருந்த மருந்தைக் குடித்துவிட்டாள். ஒருவரையும் கேட்கவுமில்லை. குடிக்கும் வரையில் சொல்லவுமில்லை. அந்த மருந்தைக் குடித்தால், தனக்குச் சரியாய்ப் போய்விடும் எனும் எண்ணம். மூன்றாம் நாள் காலையில் படுக்கையில் சவமாய்க்கிடந்தாள். எப்பொழுது இறந்துபோனாள் என்றுகூடத் தெரியவில்லை.

தன் தனி வயிற்றை அலம்பவும், குடும்பக் கடன்களை அடைக்கவும் இப்பொழுது அவன்தான் எஞ்சி நின்றான். வாழ்க்கையில் எந்த வெற்றியின் சின்னமாய் இப்பொழுது அவன் விளங்கினான் என்று அவனுக்கே புரியவில்லை. எதுதான் புரிகிறது? எதுதான்...

அவன் அப்படியே தூங்கித்தான் போய்விட்டானா, அல்லது விழித்துக் கொண்டிருந்தானா என்றே தெரிய வில்லை. திடீரெனக் குடலைக் குழப்பும் ஒரு ஊளை எங்கிருநதோ கிளம்பியது. பாம்பைப்போல் வளைந்து வளைந்து பக்கத்தறையிலும் கீழேயும் அலறிப் புடைத்துக் கொண்டு எழுந்திருக்கும் சப்தம்.

அபாயச் சங்கு! அவன் முதுகுத் தண்டு சில்லிட்டது. வாசலில் ஆட்கள் ஓடுகிறார்கள். கீழேயிருந்தவர்கள் மாடிக்கு ஓடிவருகிறார்கள்; மாடியிலிருந்தவர்கள் கீழே ஓடுகிறார்கள்; ஒருவரையொருவர் முந்திக்கொண்டு பாரு—மாது—அவன்—பாதிப் படியில் பாரு க்ரீச்சென்று கத்தினாள். மனிதக்குரலாயில்லை. மிருகத்தின் அலறல் தான். "ஐயோ குழந்தை." அப்பொழுது அவன் தன் கையில் குழந்தையிருப்பதை உணர்ந்தான். இந்தச் சந்தடியில் அவனையுமறியாமல், குழந்தையைத் தூளியி லிருந்து எடுத்திருக்கிறான். இத்தனைச் சந்தடியிலும் அது தான் நிம்மதியாய்த் தூங்கிக் கொண்டிருக்கிறது.

எல்லோரும் சமையலறையில் முயற்குட்டிகள்போல் ஒரு மூலையில் குழுமுகிறார்கள். பாருவுக்கு உடலே வெட வெடவென உதறுகிறது.

அவன் தன்னிலிருந்து தான் பிரிவதையுணர்ந்தான். மனம் சுழலும் வேகத்தில் அவன் இருமைப்படுவதை அவன் உணரும் தெளிவில் ஒரு வேளை ஏற்கனவே குண்டு தன்மேல் விழுந்து, அவன் ஆவி உடலிலிருந்து பிரிந்து, ஆவி வேறு, உடல் வேறாய்த் தனிப்பட்டு விட்டானோ என்றுகூடச் சந்தேகம் தோன்றியது. ஆயினும் அவன் உடல், அவனிடம் தானேயிருக்கிறது. அதுவும் உயிருடன்

தானேயிருக்கிறது? ஆயினும் இப்பொழுது வாழ்வைச் சாவினின்று பிரிக்கும் நடுக்கோட்டில் தான் நிற்கையில் தன்னிலிருந்தும் தான் பிரிந்து தன்னையும் தன்னைச் சுற்றியவைவயையும் ஒரு தனி முறையில் சிந்திக்க முடிகிறது. கண்ணிற்குக் கலிக்கமிட்டாற்போல் தனக்கு நேர்ந்திருக்கும் புதுத் திருஷ்டியில், எல்லாமே ஒரு புதுத் தெளிவுடன் பிதுங்குகின்றன.

ஜன்னல் கம்பிகளின் வழி வெளித்தெரியும் வானத்திலும் ஒரு தெளிவு நிற்கிறது. வெள்ளி முளைத்தபின் தோன்றும் தெளிவு.

அவன் மனத்தை எந்தெந்த உணர்ச்சிகள் அலசுகின்றன? பயமா, துக்கமா, பரபரப்பா, சந்தேகமா? உணர்ச்சிகள் எல்லாமே இறந்து விட்டன. ஆனால் நினைவு செத்துவிடவில்லை. முன்னிலும் வேகமாகத்தான் வேலை செய்கிறது. எண்ணங்கள் வேகமாய்க் கடக்கையில் ஒன்றுக்கொன்று சம்பந்தமற்ற பழைய சம்பவங்கள் மனவிளிம்பில் திரிதிரியாய்ப் படருகின்றன.

ஒரு தோற்றம். நள்ளிரவில் இடி மின்னலுடன் மழை கொட்டுகிறது. நடுமுற்றத்தில் ஜலம் நிரம்பிக் கூடத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறது. குழந்தைகளைக் கூடத்தில் போட்டுக்கொண்டு அம்மா நடுவில் உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். எல்லோருக்கும் போர்த்தியிருக்கிறாள். தானும் துப்பட்டி ஒன்றைப் போர்த்திக் கொண்டிருக்கிறாள். அவன் மாத்திரம் விழித்துக்கொண்டிருக்கிறான் என்று அவளுக்குத் தெரியும்போலும். அவன் கண்களில் மின்னல் படாவண்ணம் அவள் கையால் அவன் முகத்தை மூடிக்கொண்டிருக்கிறாள். பயநடுக்கம் கண்ட குரலில் அவள் ஏதோ மொண மொணக்கிறாள்.

"அர்ச்சுனப் பல்குன கிரிடி பாசுபத..."

குண்டு விழுந்தாலும் இடிபோல்தான் இருக்குமோ? காட்சி கரைந்து, இன்னொன்று உருவாகின்றது.

இப்பொழுது அவன் இரவில் வாசல் திண்ணையில், காலை ஆட்டியவண்ணம் உட்கார்ந்திருக்கிறான் அவனுக்கு இச்சமயத்தில் வயது, பத்து, பன்னிரண்டு தானிருக்கும். அவன் கையில் ஒரு சின்ன சீசா நிறைய மின்மினிப் பூச்சிகளைப் பிடித்துப்போட்டு வைத்திருக்கின்றான். அவை மினுமினுக்கையில், ஆனந்தமான அவுட்டுச் சிரிப்பு அவன் வாயினின்று உதிர்கின்றது. மின் மினிகளின் ஒளி அவன் முகத்தை விட்டு விட்டு ஏற்றுகின்றன. பால்வடியும் கன்னங்கள். கட்டை மயிர் முன்னெற்றியில் சரிந்து கண்ணைக் குத்துகிறது. ஆனால் அதையொதுக்கிக் கொள்ளவில்லை. தலையைத்தான் உதறிக் கொள்கிறான். அவன் கவனமெல்லாம் அவன் கையிலிருக்கும் சீசாவில் தான்......

இதற்குள் வெளியில் ஏதோ சப்தம்.

''யாரங்கே, ஒதுங்கு"

''வேலைக்குப் போறேம்பா—''

''ஏ நாட்டான், ஜப்பான் குண்டு மண்டையிலே வெடிக்கப்போவுது. ஒதுங்கு ஒதுங்கு—வேலைக்குப் போறானாம் வேலைக்கு !—'

போய்யா, நாஸ்தாகூடப் பண்ணாமே, காலங் கார்த்தாலே ஜப்பான்காரன் வந்துடறானோ ?—"

ஏ காட்டான், நீ ஒதை வாங்கப்போறே, ஒதுங்குன்னா ஒதுங்கு—"

''சாமந்திப் பூ !—சாமந்திப் பூ!!'' ஒரு பூக்கூடைக்காரி ஒதுங்கிய இடத்திலிருந்தே கத்துகிறாள்.

இப்பெரும் நாடகத்தில் ஹாஸ்ய கட்டங்களும் உண்டு போலும் !

—இப்பொழுது அவன் ஒரு கூடத்தில் முன்னும் பின்னுமாய் உலாவிக்கொண்டிருக்கிறான். பாரு வாசலிலிருந்து கவலையுடன் எட்டிப் பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் வீட்டிற்கு விலக்கு. அவன் கைகளில் ஒரு கம்பளி மூட்டையை ஏந்தினாற்போல் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டிருக்கிறான். அம் மூட்டையிலிருந்து ஒரு சிறு முகம் எட்டிப் பார்க்கிறது. பாருவின் குழந்தை. அதற்கு மாந்தம் கண்டிருக்கிறது. அதன் மேலிருந்து கிளம்பும் வேப்பெண்ணெய் நாற்றம் குடலைக் குமட்டு கிறது. ஆயினும் தன் உஷ்ணத்தை அதற்குக் கொடுத்து அதற்குக் குறைந்து போய்க்கொண்டிருக்கும் உஷ்ணத்தை உயிர்ப்பித்துக் கொண்டிருக்கிறான். இப்படியெல்லாம் காப்பாற்றும் உயிர்கள் பின் எப்படி எப்படியோ—

திடீரென, ஆர்மோனியத்தில் ஒரே பல்லை அமுக்கினாற் போல் சங்கு நேர்ச் சப்தத்துடன் அபாயம் நீங்கியதற்கறிகுறியாய் ஒலிக்கிறது. மறுபடியும் வாழ்வில் நம்பிக்கை, உயிர்ப்பயம், சபலம் எல்லாம் அலைபோல் எழுந்து மோதுகின்றன.

ஊஹூம், இந்த வியூகத்திலிருந்து தப்புவதற்கே வழியில்லை. கடைசி வரையில், இதோ இப்பொழுது தப்பித்தோம், தப்பித்தோம் என்று நம்மை நாம் ஏமாற்றிக் கொண்டே, அங்கு ஓடி இங்கு ஓடி, ஆனால் வியூகத் தினுள்ளேயே ஓடி, ஓடி அதனிலிருந்து தப்பாமலேயே, அதனுள்ளேயே மடியப்போகிறோம், நம்பிக்கையிருக்கும் வரையில் வாழ்வு, வாழ்வு இருக்கும் வரை நம்பிக்கை யென்றிருக்கும் வரையில், நாம் இதிலிருந்து தப்புவதேது?

யானை விலை, குதிரை விலையில் மாது இரண்டு ஜட்கா வண்டிகளைப் பேசிக்கொண்டு வந்தான்.

ரயில்வே ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் ஒரு பசும் புல்தரை தென்படுகிறது. ஒன்றிரண்டு பசுக்கள் சாந்த மாய் மேய்ந்து கொண்டிருக்கின்றன. இந்தவிடத்தில் குண்டு விழுந்திருந்தால்—?

ரயில்வே ஸ்டேஷனில் கூட்டம் விழி பிதுங்குகிறது என்னென்ன பராக்கிரமங்களோ புரிந்து மாது டிக்கட்டு

களை வாங்கிவந்தான். ஜன்னல்களிலும் கதவுகளிலும் ஜனங்கள் கொத்துக் கொத்தாய்த் தொங்குகின்றனர். வண்டி நகருகின்றது. ஒன்றையொன்று அடுத்து அடுத்து அவன் எதிரில் போய்க் கொண்டேயிருக்கின்றனர். வண்டித்தொடர் நடுமேட்டில் ஒரு திருப்பத்தில் பாம்பைப்போல் வளைந்து செல்கிறது.

இது எங்கே செல்கிறது? இதிலிருக்கும் அத்தனை பேர்களும் எங்குச் செல்கின்றனர்? எந்தச் சாவிற்குப் பயந்து செல்கின்றனர்? இப்பொழுது வரவிருந்த சாவுக்கா? இப்பொழுதில்லாவிடில் என்றேனும் இங்கு வரவிருக்கும் சாவுக்கா? அல்லது இவர்கள் எல்லாம் போகுமிடத்தில் சாவே கிடையாதா?

சாவிற்கும் வாழ்விற்கும் இடையிலிருக்கும் நடுக்கோட்டி லிருந்தால்தான் நிம்மதி. சாவினிடமிருந்து ஓடிக் கொண்டு அதை மறுப்பதைவிட அதன் அருகாமையில் இருந்து கொண்டு அதை அங்கீகரிப்பதே தேவலை, சாவைத் தேடிக் கொண்டு போக வேண்டாமேயொழிய அதன் அருகில் இருப்பதில் எவ்வளவோ அர்த்த மிருக்கிறது......

ஸ்டேஷனிலிருந்து சண்டைக்கு ஆள் சேர்க்கும் ஆபீஸை நோக்கி நடந்தான்.

# 5 பிரிவு (?) பசாரம் (!)

ஆஹ்—ஹா ! ஃபுல் ஹவுஸ் போல இருக்கே ! ஒரு ஆளுக்கு 'சீட்டு'ன்னா இத்தனை கூட்டம், இவ்வளவு ஆத்திரமா ! (சிரிப்பு) நம்ம கஸ்டமர் அத்தனை பேரும் திரண்டு வந்துட்டாஹ போலிருக்கே ! எல்லாம் காத்தய்யத் தேவர் ஏற்பாடு போலிருக்கு. கூட்டம் கூட்டிக் ஜாம் மாளம் போடறதுலே அவருக்குத்தான் தனி குஷி. கலகலப்பான ஆசாமி. என்னதான் சீண்டுங்களேன் கோபமே வராது. மணல் பையாட்டம், எல்லோருடைய கோபம், ஆத்திரத்தையும், தாங்கிக்க அவர் மாதிரி ஆபீசிலே ஒரு ஆள் வேண்டியதுதான். ஃபேண்டா கான்ட்ராக்ட் அவருடையதுதானோ ? ஆனால் எதிலேயும் அவர் லாபம் காணமாட்டார். கடைசியாகக் கணக்குப் பார்த்தால் அவர்தான் கோட்டை விட்டிருப்பாரு. காத்தய்யா ஏன் காத்திருக்கே? 'கார்க் அவுட்' ஆவட்டுமே! போணி நான் பண்ணணும்னு பாக்கறியா? எனக்கு வேணாம். மார்லே சளி. வயசாயுடுத்தில்லே ! அதனால்தானே என்னை அனுப்பறாஹ !

அக்கவுண்ட் சார், நீங்கள் என்ன மாதவியா? மாலைக்கென்ன அவசரம். ஆட்டுக்குப் பூட்டி அனுப்பறாப் போல அறுபதிலே'தான்கள பலியாச்சே ! அதன் கொண்டாட்டந்தானே ஈதெல்லாம் ! முன்னாலேதானே மாலை ? பலியானப்பறம் எதுக்கு ? பொறுங்கோ, பொறுங்கோ, நான் பேசி முடிச்ச பிறவு யோசிச்சுப் போடுங்கோ. யோசனை தானாவே வந்துடும். நான் எல்லோரையும் ஒருமுறை, யார் யார் இங்கே, என்ன என்ன, ஏன் ஏன்னு கண்டுக்கறேன். எல்லாத்துக்கும் ஏன் உண்டு, தெரியுமில்லே !—

அட மாடச்சிகூட ஆஜரா ? இன்னிக்கு நிச்சயமாக பாங்க் வாசலுக்குச் சாணி தெளிச்சிருப்பே. பெருக்கறது

மொத்தம் இருபதுநாள் தேறாட்டாலும் சம்பளம் முப்பது நாளைக்கு. கட்டை விரல் மை வைக்க சம்பளப் பட்டியல் தேதி மட்டும் உனக்கு முன்கூட்டி எப்படித் தெரியுது ? என் கையெழுத்து வேளைவரைக்கும் என் கண்ணிலேயே பட்டியலைக் காட்டறதில்லை. ஏன் நிக்கறே குந்து. குந்தமாட்டையா? சரி நில்லு.

இதென்ன வெள்ளிப் பெருச்சாளியா ? வாகனத்து மேலே உறை போட்டிருக்கு ! ஐய்யய்யோ ரேடியோவா ? ஆளுக்கொத்தரா என் பெருமை அவங்க பெருமை பேசி முடிச்சப்புறம் கைத்தட்டல் நடுவே காமரா 'க்ளிக்' அடிக்க என் கையில் கொடுக்கத்தானே ! இது யார் சதி ? என்ன வேணும்னு என்னை முன்னால் கலக்கக் கூடாதா ?

எனக்கு உடனே தேவை கபக்கட்டுக்கு நாட்டு மருந்து. எங்களுக்கே சொந்தமா அம்மி, ஆட்டுக்கல், ஒரு கயிற்றுக் கட்டில், கீழே உட்கார்ந்து உறவு மனுஷாளுக்கும், எனக்கும்பணம் பாக்கிப்பட்டவங்களுக்கும் விழுந்து விழுந்து கடுதாசு எழுத ஒரு கணக்குப்பிள்ளை மேசை.

உங்களை இனிமேல் வாய்விட்டுக் கேட்க பண்டந் தானா இல்லை ?

ஐயா, வேண்டாததைத் தொண்டையிலே திணிக்காதீங்க. எனக்கு ரேடியோ வேணாம். என் வீட்டிலேயே நாலு இருக்கு கையிலே தூக்கிண்டு போற மாதிரி என் ஹிப்பி மவன்கள் போட்டா போட்டியிலே ஆளுக் கொண்ணு என் பணத்துலே தவணையிலே வாங்கி—இன்னும் தவணை தீரல்லே. ஆனால் எப்பவும் 'ஆன்'லேயே வெச்சிருக்காங்க. என் சம்சாரத்துக்குத் தனியா சமையல் மேடையிலே பாக்கட் சைசுல பாடிக்கிட்டேயிருக்கு. 'சிலோன்'னுக்குத்தான் குழம்பு கொதிக்குதாம். சிலோன் குழம்பு, அட என் எசமானியம்மா இங்கே எப்போ வந்தா?

ஆரம்பத்திலேயே, கூட்டம் வேண்டாம்னு சிப்பந்திகளை கெஞ்சிக் கேட்டுண்டேன். ஆனால் அவங்க கேக்

கல்லே. "ஏசண்டுக்கு ஏசண்டு நாங்கள் இப்படித்தான் செஞ்சுகிட்டு புது யூனி பாரம் போட்டுக்கிட்டு போட்டோ எடுத்து வீட்டிலே மாட்டிக்கிட்டு இருக்கோம்."

"அப்பா, நான் சூட்டுக் கோட்டுப் போட்ட ஏஜண்ட் இல்லையே ?"

"நீங்கள் சொக்காயும் வேட்டியும்னா-அங்கவஸ்திரம் கூட இல்லே—நாங்கள் பாண்ட் போட்டுக்கல்லியா?"

அதற்கு மேல் அப்பீல் ஏது?

ஆகவே கூட்டத்தைக் கூட்டி இப்போ கோர்ட்டிலே நிக்கறோம்.

இந்த அம்மன் சன்னதி தெரு லாலாக் கடை அல்வாத் துண்டையும், நெய்க்கடலையும் தண்டனையாத் தின்னு அதன்மேல், இன்னும் பாலின் பச்சை வாசனைகூடப் போகாமல் பூபாலன் கடை அவசரக் காய்ச்சல் 'பெசல்' காப்பியையும் விட்டுண்டே ஆகணுமா? ஆனால் எல்லாம் பேச்சு முடிஞ்சப்புறம்தான், நான் சொல்லிட்டேன்.

இன்று நான் ஒரு தீர்மானத்தோடு வந்திருக்கிறேன். இன்று முழுக்க முழுக்க என் பேச்சுதான். மத்தவங்களுக்கு இடம் கொடுக்கப் போவதில்லை. ஒத்திகை வைத்துக் கொண்டு வந்திருக்கும் கனவான்கள், பேச்சாளர் அனைவரும் உங்கள் தயாரிப்புகளை, பாவம், நடிப்பு உள்பட மறந்து விடுங்கள். இதுவரை நான் விட்டுக் கொடுத்ததெல்லாம் போதும் இது என் நேரம் இதில் யாருக்கும் பங்கு விடப்போவதில்லை. நான் எல்லோ ரோடும் பேசப் போறேன். எல்லோருடேயும் ஒரே சமயத் தில், இருக்கற நேரத்தில் பேசறது முடியற காரியமில்லை ஒப்புக்கறேன். ஆனால் பானை சோத்துக்கு ஒரு சோறு பதம். தோளைத் தொட்டுப் பாக்கரவன் தொட்டுப் பார்த்துக்கட்டும். இந்த நாளுலே தொட்டாலே பெரிசு. நெஞ்சு சுட்டால் இந்த நாளில் அதுக்கென்ன பேர்?

தனித்தனியா பேரைச் சொல்லி பேரைக் கெடுத்துப் பானேன்னு நெனெச்சேன். ஆனால் இப்போ எல்லோ ரையும் பார்கறப்போ, மறுபடியும் எல்லோரையும் எப்போ பார்க்கப் போறேன்? மனம் மாறிப்போச்சு.

எப்படியும் நீங்க இங்கேதான். நான் எங்கேயோ? என் பேர் கெட்டால்தான் என்ன?

இதைச் சொல்றப்போ எனக்கு லேசாகக் கண்ணை மறைக்குது. கண்ணீரா? அந்தியா? அந்திலா? (அந்தில் பூச்சி). கண்ணுலே திடீர்னு சதை வளர்ந்து போச்சா? தெரியவில்லையே! யாரேனும் விளக்கை—அட, ஸ்விட் சண்டை வாச்மேன் அய்யாவே போலீஸ்காரர் உசரத்தில் நிக்காரே! ஐயா எப்போ வந்தீய? ஐயா, நீங்க நேரத்துக்கு வந்து இன்னிக்குத் தான்யா கண்டேன். இதுக்குநான் ஒரே வழியா வீட்டுக்குப் போறநாள் வரை காத்திருக் கலாச்சா? எல்லாரும் சிரிக்கிறீய. ஐயாவும் சிரிக்காரு, கறுப்பு திராட்சையிலே ரஸம் ஓடற மாதிரி, அவர் கன்னத்தில் சிவப்பு ஏறுவதும் ஒரு காக்ஷிதான். ஆள் வாட்டசாட்டம். என்னிக்குமே கம்பீரம்தான். என்னிக்குமே எனக்கு அவரைக்கண்டா அடிவயித்திலே கொஞ்சம் 'ஐஸ்' தான். 'ஏன்' னு கேளுங்க. 'கேக்கமாட்டீய; பேருக்குக் கேளுங்க.' கேட்டால்தானே முழுப்பேச்சுக்குக் குஷி! வால் வளந் துட்டே போகும்! நீங்கள் இத்தனைபேரு கூட்டத்துக்கு வந்திருப்பது ஒரு குரலாச்சும் சாட்சியா காதுக்கு கேட்க வேண்டாமா? ஆ! அப்படித்தான் 'ஏன்னு' கேட்டது யார்? வாட்சுமேன் அய்யாவே! அதுதான் முறை. சொல்லுதேன்; கேளுங்க.

எனக்கும் மாதத்தில் பாதி, ஆபீசில்தான் படுக்கை. உங்களுக்குத் தெரிஞ்ச விசயம். ஏன்? சிப்பந்திகள் குடியா ரத்தின் முள்ளைப் பார்த்துச் செய்து, குறையாவிட்ட வேலையை முடிக்கறது யாரு? 'ஏன்' னு கேட்டா, "டைம் ஓவர் ஸார். இன்னும் அழுத்திக் கேட்டால்

"ஓவர் டைம்!" தோசையைத் திருப்பிப் போடு. மண் வளமோ, எண்ணெய் வளமோ. இந்த ஊரே தோசைக்குப் பேர்போனதாச்சே! அதுவும் செங்கோட்டைக் கல்லில் ஒரு சுத்து சுத்தினாலே, பிசுறில்லாமல் வட்டம் கல்லையடச்சுப் பட்டாபட்டமா அம்மையார் பாட்டி கதையிலே வருமே. எண்ணையே வேணாம். தண்ணிலேயே வார்க்கலாம், மெத்து மெத்துனு. எங்கேயோ ஆரம்பிச்சு, சுத்தி வளைச்சு எங்கேயோ வந்தூட்டேனா? ஏன்? என்னென்னவோ பேசறோம்.தோசைக்கு இடமில்லாமல் போச்சா? வேளைக்கு நாலு அஞ்சு; ஒண்ணு சட்னி ஒண்ணு சாம்பார், ஒண்ணு ஊறுகாய் வண்டல், ஒண்ணு சுண்டக்கீரை, கடைசியில் மிளகாய்த்தூள் மேலே ஆடைத் தயிர் அப்பவும் இலையை மடிக்க மனசில்லை.

அப்போ, அப்படியே நான் ஓட்டி, கொடுத்ததாலும் எச்-ஓ-விலிருந்து எனக்கு ஓலை விடறான்களே! 'என் அனுமதியில்லாமல் கொடுத்ததால் இந்தத் தடவை உம் சம்பளத்தில் பிடிப்பு அடுத்ததடவை நடவடிக்கை.' அதையும் நான் நடு ஹாலில் தான் தேங்காய் உடைக்கிறேன், எல்லாரும் கேட்க, எனக்குத்தான் வெட்கம், மானம், பொத்தி வைக்கிறது ஒண்ணும் கிடையாதே! ஆனால் அதுபற்றியும் நம் நண்பர்களுக்கு அக்கறை கிடையாது. "பார்லிமெண்ட்டுவரை நீங்கள் தானே சார் (நீங்கள்னா நீங்களா, உங்கள் அதிகார வர்க்கம்) பதில் சொல்லணும்! எங்களுக்கு வேலைதான் கணக்கு. வேளை எங்கள் பொறுப்பு."

ஆகையால், கவலையாலேயே தூக்கங்கெட்டு, தந்தி தபாலும், தொலைபேசியும் சமாளிக்க முடியாமல், நடுராத்திரியில் டைப்ரைட்டருடனோ லக்கங்களுடனோ போராடிக் கொண்டிருக்கையில், எதுக்கேனும் வாச்மேனை கூப்பிடாமல் இருக்க முடியுமா? அநேகமாய் அவர் கூப்பிட்ட குரலுக்கு இருக்கமாட்டார்,சொல்லிக்கொண்டு போகும் கெட்ட பழக்கம் இருந்தால்தானே? கீழே கதவு

படீர் சத்தம் கேட்டு, நான் கேட்டால், இப்பதான் சுக்கு வெள்ளம் குடிக்கப் போனேன்னு சிரிப்பார். நான் சொல்றதுதான் பதில்.

பதிலைச் சோதித்தால் உங்களுக்குத்தான் தொந்தரவு என்று அந்தச் சிரிப்புக்கு அர்த்தம். அவர் சிரிப்பில் எனக்கு எப்படியோ ஒரு மயக்கம் கண்டுபோச்சு. பல் என்ன வரிசை! தேங்காய் உடைச்சாப்போல என்ன வெண்மை! இத்தனைக்கும் துலக்குவதுக்கு சாம்பல்தான். எனக்கே தெரியும் அப்படியே கூப்பிட்ட குரலுக்குச் சமயத்துக்குக் கட்டடத்துல இருந்தா குறட்டையைக் கேட்டபின் கலைக்க மனசு வருவதில்லை. இத்தனையும் தாண்டிப் பதில் கொடுத்துப் படியேறி அவர் வரப்போதான் எனக்குப் பயம். பார்டர் வாடை, புரட்சிகளே எத்தனை நடந்திருக்கின்றன அதே சாக்கில்.

ஐயாமார்களே, நான் ஊருக்கு வந்த புதுசில் ஐயா வைப்பத்தி கதையெல்லாம் கேட்டிருக்கேன். ஆயுசு காலத்திலேயே கதாநாயகன் ஆவது 'சாதா' அல்ல என் கண்ணாலேயே பார்த்தேன். இந்த ஊரில் மதவெறிக் கலகத்தில் இந்த வட்டாரத்துக்குப் பலத்த கட்சி, கடைத்தெருவுக்குத் தீ வைத்து சூறையாடினப்போ, ஐயாவின் தீரமும், தைரியமும், அமைதியும், வாசல்லே அவர் நின்னிருந்த உயரமும் சொல்லப்போமா ?

நான்தான் பிராம்மணன் தொடை நடுங்கி, வயத்தில் நெருப்பைக் கட்டிண்டிருந்தேன்.

"ஐயா, கவலையே படாதீங்க. என்னைத் தாண்டித்தான் நீங்க. என்னைத் தாண்டிடுவாங்களா? நடந்ததென்னவோ அப்படித்தான் ஊரே பத்தி எரிஞ்சது. (இதென்ன நான் சொல்லறது. உங்கள் ஊரைப்பத்தி உங்களுக்கே— பத்தவெச்சதும் நீங்கதான், அணைச்சதும் நீங்கதானே!) இது அஞ்சு வருஷத்துக்கு ஒரு தடவை அடிக்கிற காத்தாமே. அப்படித்தானா!—வாச்மேன் ஐயாவைத் தாண்டறத்துக்கு ஆள் ஏது? இது தவிர அவருக்கு 'ஆடை

கொடுத்த ஐயா'ன்னு ஒரு பேர் உண்டாமே! யாரோ பிறவி மூளைக் கோளாறு ஒருத்தி ஆடையைக் காவாலிக் கூட்டம் ஒண்ணு உரிச்சு சிரிச்சப்போ, ஐயா உள்ளே புகுந்து தன் வேட்டியை அவிழ்த்து அவள் மேலே சுத்தி, அத்தனை பேரையும் வெறுங்கையாலேயே நச்சுநச்சென நச்சி ஓடவெச்சாராமே! ஈதெல்லாம் என்ன சாமானியமா' ஆனால் அது என்னவோ தெரியல்லே என்னை மட்டும் ஏன் செத்த பாம்பாப் பார்த்துட்டார்?

செத்த பாம்புன்னு சொல்றோம். ஆனால் அது லேசாப்படலே எனக்கு. ஏன்னு கேளுங்க. என் அப்பா ஒரு தரம் பாம்பு அடிச்சுப் பார்த்தேன். பாம்புக்கோ கண் இமைக்கறதுமில்லே. மூடறதுமில்லேன்னு உங்களுக்குத் தெரியாததில்லே. அடிமேல் அடி விழ, அந்தக் கண்ணுலே வலி, திகைப்பு, அப்புறம் துயரம். இது எல்லாத்தோட, எல்லாத்தையும் தாண்டி ஒரு கேலி. 'பாரு நான் செத்தாலும் முழிச்சிண்டிருக்கேன். இதெல்லாம் என் நெனப்புத்தான்னாலும் என் வரைக்கும் அது உண்டு தானே!

நான் வந்த புதுசில் ஊர் வளமாய் இருந்தப்போ, மலிவா கிடைக்கிறப்போ—நெல் பிடிச்சு (அது என்ன மலிவோ இன்றைக்கு நேற்று மலிவு என்கிற கணக்கில்) என் வீட்டில் எலி வேட்டை ஆட முடியாமல் இவரிடம் ஒப்படைச்சிருந்தேன். நான் வந்த ராசி, வானமும் வேளை கெட்டது. வயலும் காய்ச்சல் கண்டது. ஏழை, வயிறு கழுவ தாலியை அடகு வைக்கிறான். எங்கள் அரிசி டின்னும் காலி ஆயிட்டுது.

"ஐயா வாச்மேன், நெல்லை அரைச்சுக் கொண்டாங்க" கொண்டு வந்தார். நெல்லுக்கும் திரிச்சு வந்த அரிசிக்கும் அளவு, அளவுமீறிக் குறையுது. எனக்குத் திகைப்பு. என் சம்சாரத்துக்கு அங்கலாய்ப்பு, வாச்மேன் ஐயாவுக்கு லேசான புன்சிரிப்பு. நான்தான் ஏற்கெனவே அதில் மயங்கிக் கிடக்கேனே. "நான்தான் இப்போ

ஒப்புக்கிடறேனே. விதை நெல்லை வீட்டிலே சாப்பிட்டாச்சு. விளைஞ்சப்புறம் கொடுத்துக்கலாம்னு உங்கள் நெல்லில் எடுத்து வயலில் தூவிவிட்டேன். ஆனால் அது என் எண்ணமோ உங்கள் அதிர்ஷ்டமோ, மழையின் சூது, அத்தனையும் சாவியாய்ப் போச்சு. நான் எடுத்த தென்னவோ அஞ்சு மரக்கால்தான். நான் நெனச்சது ஒண்ணு; நடந்தது ஒண்ணு. ஒழுங்கா விளைஞ்சிருந்தா எடுத்த சோடை தெரியாமல் ஒண்ணுக்கு ஒன்பதா திருப்பியிருப்பேன். ஆனால் அடுத்தவன் சொத்துக்கு மரக்காலுக்கும் மூட்டைக்கும் ஒரே நியாயந்தான். நான் தான் ஒப்புகிடறேனே!''

ஆனால் நான் இதை நெல்லாப் பாக்கல்லே. மரக்காலுக்கும், மூட்டைக்கும் வித்தியாசம் பார்க்கல்லே. எலிக்குப் பயந்து பெருச்சாளியிடம் கோட்டை விட்டதைப் பாக்கலே. தனியா வாச்மேன் ஐயா மேலும் நான் கோவம் கண்டு கொள்ள முடியாது. ஆனால் சமுதாயத்தில் நம்பி எப்படி எல்லாம் மோசம் போகிறோம். இந்த வயதில் துரோகத்தைச் செரிக்க முடியல்லே. இப்போத்தான், மனம் எல்லாரிடமும் ஆதரவு தேடுது. இதுலே ஒண்ணு கவனிக்கனும். 'ஐயா, யார் வீட்டுலேதான் எலி இல்லே'ன்னு ஐயா எதிர்வாதம் பண்ணியிருந்தால் நான் என்ன செய்ய முடியும்? நம்பித் தானே ஆவணும்! அதுலேதான் அவரையும் மீறி ஒரு நாணயம் பேசுதுன்னு கொள்றதா? அல்ல நியாயத்துக்கும் இப்போ நெஞ்சில அச்சமில்லேன்னு கொள்ளவா? அது தான் இன்னும் என் நெஞ்சைப் பிடுங்குது. ஆடை கொடுத்த ஐயாதான். எவ்வளவோ விஷயங்களில் பெரிய மனுஷன்தான். அவர் வெட்டி எத்தனையோ இளநீர் நான் சாப்பிட்டிருக்கேன். ஆனால் இதுமட்டும் ஏன் நெஞ்சில் முள் இடர்றது?

இத பாருங்க. எல்லோரும் கேட்டுக்கங்க இங்கே எல்லோருக்கும் தங்க மனசுதான். இல்லாட்டி இங்கே

நான் இத்தனை நாள் ஓட்டியிருக்க முடியுமா? எனக்கு இங்கே ஒரு பெயர் நடமாடுது. எனக்குத் தெரியும். 'சாமி சுபாவத்திலே நல்லவர்தான். ஆனால் முன் கோபி. எல்லோரும் தன் பிள்ளையாட்டம் நம் நன்மைக்குத்தான் சொல்றாரு. திருப்பிக் கொடுக்க முடியாட்டியும் திருப்பிக் கொடுக்கணும்னு கெட்டி எண்ணத்தில் பாங்கிலே கடன் வாங்குங்க. நீங்க தவணை தப்பினால் நான் கத்தாமல் என்ன செய்யன்னு? ஆனால் எந்தப் பிள்ளை இந்த நாளில் தகப்பன் பேச்சைக் கேட்குது சொந்தப் பிள்ளை கேட்குதா என்கிற வாழ்க்கையைப் பொது நியாயமாகவே கொணந்துட்டாங்க, அவ்வளவுதான், இதை நான் மாத்த எண்ணினால் இதோ நின்ன இடத்துலேயே உங்க எதிரேயே மார் வெடிச்சு முடிஞ்சு போயிடணும். ஏற்கனவே கொஞ்சநாளா மார் படபடக்குது. நீங்க வேண்டிக்கிற வரை பொறுத்திருக்கமாட்டேன். இத பாருங்க, அடுத்தாப்போல நம்ப காத்தனாரை எடுத்துக்குவோம். நாலு சொல்லுக்கு இடையிடையே 'ஐயா, நான் உங்க பிள்ளை மாதிரி'ன்னு சொருகிக்குவாரு. அவர் பேச்சில் கோட்டை விட்ட நேரத்தில் நான் கண்டவரை, அவர் எப்படி என் மகன் ஆவார் ? எனக்கு அஞ்சு வயசுதான் சின்னவர்' ஆனா ரிகார்டில் அவருக்கு எப்பவோ வயசு நாற்பதிலேயே நின்னுபோய் முள் நகரமாட்டேங்குது. ஏன்னு அவரும் பதில் சொல்ல முடியாது. அவரும் ஆயுசில் பாதிக்குமேல் தள்ளியாச்சு, எழுத்து வாசனையே இல்லாமே. இப்பத்தான் ஒரு வருடமா இடையன் கொம்பாட்டம் கையெழுத்து மட்டும் சம்பளப் பட்டியிலே போடறாரு. இதுக்கு 'பெசலா' இங்கீசு கத்துக்கிட்டாராம்.

''அப்பா காத்தய்யா அந்த மே மாசத்து ரிஜிஸ்டரை கொண்டு வாயேன் !'' 'இதோ'ன்னு சொல்லிட்டு மறைஞ்சுடுவான். மே, அஞ்சாம் மாதமா ? ஆறாம் மாதமா ? பச்சை அட்டையா ? சிவப்பு அட்டையா ? என்று கண்டு

பிடித்துக் கொடுக்க எனக்குத் தலைமறைவாய் அவர் ஒரு கிளை ஆபீஸ் நடத்தறார். என் கையில் ரிஜிஸ்டரை அவரேதான் கொண்டு வந்து கொடுப்பார். இதுபோல் காத்தனாருக்குத் தனி சர்வீஸ் செய்து அவர் தலையில் எத்தனை காப்பி, எத்தனை நெய்க் கடலை, அல்வாத் துண்டுகூட அரைத்திருக்குமென்று எனக்கு தெரியாதென்று அவர் நினைத்திருக்கிறார். சிரிக்கிறீங்க. அவர் தலையை அரைச்சவங்களும் சேந்து சிரிக்கிறீங்க, சிரியுங்க, சிரிக்காமல் என்ன செய்வது ?

''காத்தய்யா எங்கே ! இப்பக் குரல் கொடுத்தாரே ?'' 'ஸ்டேட் பாங்க் போயிருக்காரு'ன்னு பதில் கிடைக்கும்.

நான் அப்படி நினைத்துக்கொள்ள வேண்டியதுதான். ஒரு நாள் எங்கேயோ நான் ஆபீஸ் வேளையில், ஆபீஸ் ஜோலியாய் வெளியே போய் வருகையில், காத்தனார் அவரது தென்னங்கொல்லையில் கமலை ஏத்தம் இறைத்துக் கொண்டிருக்கிறார். காக்கி யூனிபாரம் ஒரு தென்னை மட்டையில் தொங்குது. எனக்குக் கோபம் மூக்கைப் பொத்துக் கொண்டு வந்தது. வரலாமா ? அது என் தப்புதான், கோபம் என்னுடையதுதானே ! ஆபீசுக்கு வரலாம் ; மணியை எட்டுத்தரம் அடிக்கலாம். 'அவன் எங்கே எங்கே' என்று எரிந்து விழலாம். வந்தவுடன் ஒரு 'மெமோ' கொடுக்கலாம். அவ்வளவு தானே ! 'மகன்' கிணுங்கினால்தானே ! வாங்கிக்கொண்டு, ஐயா நான் உங்க மகன்மாதிரி ; 'மெமோ' வில் என்ன கேட்டுருக்கிய, படிச்சு காட்டுஹ. பதிலையும் நீங்களே எழுதிக் கொடுங்க.'

காத்தனார் அப்பளக் குடுமியிலிருந்து இங்கே உத்யோகத்துக்கு வந்துவிட்டார். அன்னியிலேந்து அவர் நடத்தும் அமுலை நேத்து வந்த நான் மாத்த முடியுமா ? மாத்த ஆசைப்படலாமாங்கறதே இப்பத்தானே தெரியுது: மத்தபடி அவரைப்போல் பண்பும் இங்கிதமும் தெரிந்தவர் இங்கேயாரும் இல்லை என்றே நான் சொல்லுவேன்.

அவர் ஏதோ கணக்கு வெச்சிருக்கார். தீபாவளிக்கு ஒரு பெரிய ஆப்பிள். பொங்கலுக்கு எம் பொண்ணுக்கு, ஆச்சிக்கு தனித்தனி மண்டையாகத் தேங்காய், வெல்லம். மஞ்சள் கொத்து, வெற்றிலை.

"காத்தையா ஈதெல்லாம் ஏதுக்கு?"

"ஐயா, நான் உங்க மகன் மாதிரி. இதைக் காரணம் காட்டி யாரேனும் பெட்டிசன் போட்டா நான் பாத்துக்கிறேன். நான் உங்களுக்கு லஞ்சம் கொடுக்க நீங்கள் நல்லதோ, கெட்டதோ எனக்கு என்ன செய்ய முடியும்?"கட்டப் பாறைக் கேள்வி.

—அடஅடே பிள்ளைவாள் வாங்க. எப்போ வந்தீய? எப்படி இதுவரை உங்களை நான் பாக்கல்லே. சீவல் வைச்சிருக்கேயளா? கொடுங்க. உங்ககிட்ட இல்லாமே போமா? மொத மொதல்லே கிணறு வெட்ட லோன் கேக்க வந்தியளே,அப்போ உங்ககிட்ட தாம்பூலம் வாங்கிப் போட்டுண்டேன். அது மறக்குமா? நீங்க ஜரிகையாட்டம் சீவியிருந்த, அதுவும் எப்படி வெறும் பேனாக் கத்தியிலே, இவ்வளவு ஜோரா?- சீவலைப் பார்த்து மோஹப்பட்டுத் தான் கேட்டேன். நீங்க எச்சரிக்கை செய்தீய. 'சாமி' வெறும் பாக்கும் வெச்சிருக்கேன். பச்சைப் பாக்கு ஒரு சமயம்போல எல்லோருக்கும் ஒத்துக்காதுன்னு. ஆனால் நான் துவர்ப்புக்கு ஆசைப்பட்டேன். ஆனால் முதல் வெத்திலையே எப்படி மாருக்குக் கீழ் இறங்காமல் திக்கு முக்காடிப் போச்சு! எதிரே கருப்பண்ண ஆச்சாரி கடை திறந்திருந்ததோ பிழைச்சேன். அது பாஷாணம் கலந்ததோ, கணப்புச்சட்டிக் கையை கலுவினதோ, இரண்டு முழுங்கு குடிச்சப்புறம்தான் மூச்சு திரும்பித்து.

ஆபத்துக்குத் தோஷமில்லை. சுட்ட பொன்னும் கலந் திருக்குன்னு ஆச்சாரி தைரியம் சொன்னார். நினைப் பிருக்கா?

பிள்ளைவாள், துவர்ப்பும், கசப்பும், எவ்வளவு கிட்டக் கிட்ட பாத்தையளா? அப்போ எங்கே தெரியுது. எல்லாம் முறையாகத்தான் செஞ்சோம். அப்பப்போ 'வெச்சர்' நீங்கள் செலவுக்கு காட்டினீய, நானும் ரூல்படி கட்டம் கட்டமாத்தான் பட்டுவாடா பண்ணினேன். ஆனால் கிணத்து வேலையை நான் அப்பப்போ வந்து கவனிக்கல்லே. என்னோட பல ஜோலி திருகு வலியிலே எட்டு மைல் வந்து வந்து எப்படிப் பாக்க? நம்பிக்கை யிலும், 'குன்சு'லேயும் தானே பாதி காரியம் பாத்துக்கிட்டு போகவேண்டியிருக்கு. ஆனால் ஆறு மாதம் பொறுத்து எனக்கு என்னமோ இடது கன்னம் பளிச் பளிச்சுன்னு துடிக்குது. கெட்டியாப் பிடிச்சுக்கறேன். பிடிக்கு அடியிலே 'வெடுக்'குன்னு உதறுது. அது அது தன் நுட்பத்தைக் காண்பிக்குது. என்ன செய்ய? காரைப் போட்டுக்கிட்டு வந்தேன். செவ்விள நீர் வரவழைக் கிறீங்க. சீவறீங்க. பொக்கறீங்க. இரண்டு கையாலும் ஏந்திக் கொடுக்கறீங்க. ஆனால் கிணத்தைப்பத்தி பேச மாட்டேங்கறீங்க. அதுக்காக என் கன்னம் என்னை விடுதா? காரிலேயே வயல்காட்டுக்குப் போனோம்

ஆனா நீங்க மொதமொதல்லே தோண்டப் போறதா சொன்ன இடத்துலே கிணத்தைக் காணோம். கண்ணைக் கசக்கறேன். கிணத்தைக் காணோம். எனக்கு வயத்துலே புளியைக் கரைச்சுது. அலாவுதீன் அற்புததீபம் தூக்கிப் போயிடுச்சா? அதுதான் சம்சாரி, என் பாவம் பாத்துத் திரும்பக் கொண்டு வந்து வைக்கணும். காவிப்பல்லை நீங்க அப்போ செக்கச்செவேல்னு என்னவா காண்பிச் சீங்க?

"சாமி, கடன் வாங்கின பணத்தை நான் கையாடி டல்லே. ஏற்கெனவே இன்னொரு கிணத்தை ஆழப்படுத் தவும், அகலப்படுத்தவும் அதுலே போட்டிருக்கேன். எதுலே போட்டா என்ன? அந்தக் கிணறு இந்த அஞ்சு வருடத்திலே ஒரு லட்ச ரூவாயை முழுங்கியிருக்கு.

"பத்து வருடத்துக்கு முன்னாடி ஒரு பைராகி சொல் விட்டுப் போன வார்த்தையை இன்னும் நம்பிக்கிட்டு இருக்கேன். 'டே சுந்தப்பா, உன் கிணத்துலே புதையல் இருக்கு. ஆனால் அதை நான் உனக்குக் காட்டப் போவ தில்லை. உறையைச் சுத்தி ஏதோ ஒரு ஊசி முனையில் உன் கடப்பாறை படக் காத்திருக்குடா ஒரு ஊத்து. அதைத் தட்டினதும் உன் குடும்பத்துக்கு இன்னும் எட்டு தலைமுறைக்கு பாலாய்த்தான் பொங்கப் போவுது. அதைக் கண்டுபிடி! கண்டுபிடி!! கண்டுபிடி!!! கடவுளா யிருந்தால் அவரே உனக்குக் காட்டிக் கொடுப்பார். ஆனால் நாங்கள் கடவுளின் தூதுவர்கள். நாங்கள் கை காட்டியாய்த்தான் நிக்க முடியும். உங்களுக்கு முன்னால் எங்க கண்ணுக்குத் தெரிஞ்சாலும், எங்களுக்கு இஷ்டமா யிருந்தாலும் தண்ணியும் உபயோகமில்லை; புதையலும் பிரயோஜனமில்லை. அதனால் நீயே கண்டுபிடி! கண்டு பிடி!! கண்டுபிடி!!!

"அவர் ஆவேசத்தை என்னில் பொறி வெச்சுட்டுப் போயிட்டாரு. அன்னிலிருந்து கிணத்துக்கும் பசி திரல்லே. எனக்கும் வேளை வரல்லே. ஆனால் சாமி, இந்தத் தடவை மிளகாய் ஒழுங்கா காச்சால்—குவிண்டால் ஆயிரத்துஐநூறு தெரியுமில்லே? பாங்க் கடனைப் பத்து தடவை திருப்பலாம்."

நெறி தவறி நடக்கறவங்களுக்குத்தான் மனசையும் சுருக்க சமாதான பண்ணிக்கவும் முடியுது. நான்தான் கொட்டு கொட்டுன்னு, ராவு இல்லே பகல் இல்லே தப்புப் பண்ணினவன் மாதிரி, மேட்டைப் பாத்து முழிச்சுக்கிட்டு கிடக்கேன்.

"சாமி ஊருக்கு வந்த புதுசிலே முருகன் கோயிலுக்கு விடற துள்ளுக்குட்டியாட்டம்— என்ன சதைப்பிடிப்பா, துடிப்பா, மேனி தக்காளியாட்டம் தகதகன்னு இருப்பார். இங்கு வந்து உடம்பு உடைஞ்சே போயிட்டாரே!" ஏன்யா உடையாது, இந்த மாதிரி கரடியை நாலு

மூலையிலும் பிடுங்கினால்? தலையை ஒழுங்கா தலையணை யில் சாச்சு எங்கு படுத்தேன்?

சரி இன்னிக்கு செங்கோலைக் கீழே வெச்சாச்சு. இதே நேரம் நாளைக்கு நான் பஜாரிலே நடந்து போறேன் எதிரே எவர்சில்வர் பாத்திரக் கடையிலே நுழையறேன்: "ஐயா நாடாரே, மூணு நாளா அதோ அந்த எண்ணெய்க் கிண்ணத்தைப் பார்த்து ஆசைப்பட்டிட்டு இருக்கேன். ஏதோ என்னால் ஒரு சமயமில்லாட்டி ஒரு சமயம் உங்க வியாபாரத்திலே சகாயம் செஞ்சிருப்பேன். சும்மாத்தான் கொடுங்களேன், நேத்திக்கு கேட்டா லஞ்சம். இன்னிக்கு கேக்கறேன் ஆசைமேலே!" நாடார் என்ன பதில் சொல்வார் தெரியுமா? "சாமி, நேத்திக்கு கேட்டிருந்தா கண்டிப்பாக கொடுத்திருப்பேன். எண்ணெய்க் கிண்ணி என்ன? பாய்லரே கொடுக்கலாம்? நாங்களும் அதுக்கு ஒரு கணக்கு வெச்சிருக்கோமில்லே. ஆனால் நீங்க வளைஞ்சே கொடுக்கல்லே. எங்களுக்கு லஞ்சமாக் கொடுக்கத்தான் கட்டுப்படியாகும். ஆனால் ஒரு எண்ணை முட்டை கூட விலையில்லாமல் கொடுக்கக் கட்டுப்படி ஆவாதுங்களே?"

சாமி ஒண்ணு சொல்றேன், நீங்க நாலு இடம் போனவங்க. நான் இன்னும் ஊர் எல்லையைத் தாண்டின வனில்லை. உங்களுக்கு இன்னும் தெரியல்லே, எங்களுக்குத் தெரியும். இமயத்திலிருந்து குமரிவரை மனிதனின் அடிப் படை சுபாவம் ஒண்ணேதான். நீங்கதான் தெனாலி ராமன் கதை மாதிரி மாத்தணும்னு பாக்கறீய. அது ஒரு நாளும் நடக்காது. உங்களையே பாத்துக்குங்க. களங்கம் இல்லாதவங்க யாரு? நீங்க வந்ததுக்கு இப்போ ரத்தக் கொதிப்பில் உங்க முகத்தில், உடம்பில் எத்தனைக் கருப் புப்புள்ளி கூடி இருக்கு. நிறத்துக்கே இப்படி ஆச்சுன்னா நெஞ்சில கறுப்பை அறிய நீங்களும் நானும் யாரு?

சரி. எங்கேயோ ஆரம்பிச்சு எங்கெங்கேயோ போய் இங்கே வந்து நின்னுட்டேன். இல்லை நானா நிறுத்தி

கிட்டேன். நின்னுடணுமில்லே! ஐயா நான் போன போக்கில் பசும்புல்லை மேஞ்சிருப்பேன். பயிர்லே வாய் வெச்சிருப்பேன். பழையதுப் பானையை முட்டி உடைச்சிருப்பேன். என்னிடம் கறந்து நீங்க காய்ச்சி வெச்ச பாலை நானே குடிச்சிருப்பேன். நான் கோவில் மாடு.

இனிமே நீங்க எனக்கு மாலை போடறது யோசனை தானே. சில முகங்கள் சுணங்கிப் போச்சு. அதெல்லாம் என் சொல்சுட்ட முகங்களா? உங்க மேலே எனக்கு கோபம்னு நீங்க கோவப்படாதீங்க. நான் இப்போ பேசினதெல்லாம் இந்த மூணு வருடமா நெஞ்சில், புழுதி ஏறி மக்கிப்போன ஏடுகளை, ஓலைச் சுவடுகளை தட்டி கொட்டித் திரும்ப அடுக்கிக்கிட்ட மாதிரி. அவ்வளவுதான். மறுபடியும் புழுதி, மறுபடியும் மக்கல் மறுபடியும் அடுக்கல். என்னால் மாலை இல்லாம இருக்க முடியும். சுவடி இல்லாம இருக்க முடியாது. சுவடி தான் சுவடு காட்டி. இந்த வயசில் சுவடு காட்டும் சுவடிதான் எனக்குத் துணை.

மாலையில் வண்டு மொய்க்குது. வதங்கிப் போறதுக்கு முன்னாடி லக்ஷ்மி படத்துக்காவது போடுங்க. பிறகு உங்க இஷ்டம். ஆண்டவன் அயனைத் தேடுவதானால் யாருக்குக் கட்டும். இப்படித்தான் வாடின பூ, வதங்கின பழம், காய்ஞ்ச சருகு. அவனுக்கு, இனி என் மாதிரிக்குப் பிழைப்பு, சரி. எல்லோருக்கும் போய் வாரேன்.

பிள்ளைவாள் அந்தச் சீவலை தள்ளுங்களேன் இந்தப் பக்கம்!

# 6. தரிசனி

மூளை முடிச்சிலிருந்து கால் கட்டை விரல்வரை பின்னிய நரம்புக் கோலத்தில் வால் நக்ஷத்ரம் சீறி யெழுந்து, பிரிக்குப் பிரி எரித்தபடி மண்டைக்கேறி புருவ மத்தியில் வெடித்தது.

இது என்ன என் பூகம்பமா ?

மண்டையின் உள் கவானில் பல்லாயிரம் பொறிகள், பல்லாயிரம் வர்ணங்களில் அவன் மேல் குடையிறங்கின. தகதகப்பில் கண் இருண்டது. நினைவு தன் ஊன்றல் அற்றுப் போய், அந்தரத்தின் இன்ப பயங்கரத்தில் தத்தளிப்பு தாங்காது, 'இதோ போனேன். இதோ இதோ இதோ, எனத்தானும் தப்பிக் கொண்டிருக்கையில் மேல் கவிந்த நக்ஷத்ரக்குடையின் நெருப்புச் சரங்களிலிருந்து அமுத தாரைகள் சொரிந்து வெள்ளம் வீங்கி, நினைவைத் தன்னோடு அடித்துச் சென்றுவிட்டது.

இது என்ன காலம் அவிந்ததா ?<br>
என் கண் அவிந்ததா ?<br>
இந்த இருள் என் பிரமையா ?<br>
அல்ல இதுதான் உண்மையா ?<br>
இப்போது உலக உற்பவமா ?<br>
அல்ல அதற்கும் முன் அதையும் தன்னுள் அடக்கிய கர்ப்பமா ?<br>
பூமி என்னைத்தாங்கிய தருணமே தகர்ந்து இது என் ப்ரளயமா ?

பாம்புப் படம் போல் அலைகள் மீண்டும் மீண்டும் தலை தூக்கிச் சீறியெழுந்து விசிறி ஆடிக் குலைந்து அவன் மேல் சரிந்தன.

இதென்ன அனலுக்கு

ஆஹூதி ஆனதற்குப் பின்
புனலில் மூழ்கிப் போனேனா ?

ஆயினும் நினைவு இன்னும் தன் குமிழி குலையவில்லை சாறு பிழிந்து எறிந்த சக்கையாய், அலைகள் அலைத்த வழி நினைவு மிதக்கும்.

இன்ப அசதியில்
அச்சமய மயக்கத்தில்
மயக்கம் தந்த இருள் காட்டும் மருளில்
மண்டையுள் கண்ட வான விளிம்போரம்
ஒரு தோற்றம் அலை நடுவே படர்ந்தது,
முகம் தெரியவில்லை.
முதுகுதான் காட்டிற்று.
அதையும் அலையில் அவிழ்ந்து நனைந்து
அடையாய்க் கனத்த கூந்தல் அடைத்தது; கிண்ணம்
வழிய நிறைந்த திரவத்தின் சாயம்
கிண்ணத்தின் கண்ணாடியை மறைத்தாற் போல்
முகம் லேசாய்ப் பக்க
வாட்டில் திரும்பிற்று.
நெற்றியின் கோடு இறங்கி
மூக்கின் கூர்ப்பில் முனைத்து
வாயில் வழிந்து
புன்னகையின் வில்லில் வளைந்து
வலது தோள் குமிழில் ஏறிக்
கொண்டிருக்கையிலேயே
உருவக் கோடு, வரைவு கலைந்து,
இருளோடு இருளாய்
அலையோடு அலையாய்க் கரைந்து விட்டது.

என்ன ஆச்சர்யம் ! இது நான் நேற்று மாலை ஆபீஸி லிருந்து திரும்பி வருகையில் - அவள் உடல் ஒரு தரம் குலுங்கி நெஞ்சு விம்மிற்று.

யார் இப்படித் தன் தோளைக் குலுக்குவது ?
"முழிச்சுக் கோங் கோன்னா !"

இமைச் சிமிழ்கள் மணமிலாது திறந்தன.
அவனுக்கு இன்னும் போதை கலையவில்லை.
பொன்னா என்ன பவுடர் உபயோகிக்கிறாள் ?

இந்த நெருக்கத்தில் பொன்னாவின் கன்னங்களில் மல்லி கமழ்கிறது. இல்லை, பொன்னாவின் கொண்டைச் சரம் மலர்ந்ததா ? இல்லை பொன்னா, உன் வேர்வை இப்படி என் நெஞ்சுவரை மணக்க வெறும் உன் பூச்சும் பூவால் மட்டும் ஆகாது. இது உன் இளமை அல்லது என் ஆசை.

திடீரென பொன்னா அவன் கன்னத்தில் தன் கன்னம் அழுத்தி மீண்டாள்.

'அப்பா ! இது கன்னமா ? சப்பாத்தியா ?' தன் இடது கன்னத்தைச் செல்லமாய்த் தடவிக் கொண்டாள். "ரத்தம் வந்துடுத்தா பாருங்களேன் !"

எதிரே பீரோ கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். கண்ணாடி நல்ல கண்ணாடி. பார்க்கப் பார்க்க அலுக்காத கண்ணாடி. கலியாணத்தில் அவளுடைய ஆபீஸ் சிநேகிதிகளின் கூட்டுப்பரிசு.

"பொன்னா உன்மோவாய்க் குழி இப்படி இவ்வளவு அச்சாய்ப் பிளந்து இருக்கிறது ! முகத்தைச் சரிபாதியாய் தனித் தனியாய்ச் செய்து இணைத்தாற் போல் !

"Factory Assembly யா?"

அவள் கவனம் இன்னும் கண்ணாடியிலிருந்து மாறவில்லை.

'இருக்கலாம். எவ்வளவென்றுதான் அவன் தனித்தனியாய்ப் பண்ணுவான்!"

பொன்னா தன் மோவாய்க் குழியைச் சிந்தனையாய்த் தடவிக் கொண்டாள்.

இருந்தாலும் முகத்துக்கு முகம் வேறாய்த்தானிருக்கு! அது எப்படி? ஒண்ணுக்கொண்ணு எவ்வளவு அச்சாய் இருந்தாலும் ஏதோஒரு இம்மி பிசகில் முகத்துக்கு முகம் தனியாத்தான் இருக்கு!"

“அதுதான் சிருஷ்டியின் பெருமை!”

“இதுவும் பிறவி மருத்தான்!” பொன்னா தன் மோவாய்ப் பிளவைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள்.

“அதனால்தான் அவ்வளவு நன்றாயிருக்கு!”

“ஏதேது, இன்னிக்குப் பேச்சு என்னென்னவோ புதுசு புதுசா வரதே! பேத்தலா! அல்லது நமக்கு மணமாகி இன்னும் மூணு மாதம் ஆகலேன்னா?”

“மூணு மாதம் என்ன கண்ணு?”

“மோகம் முப்பது நாள் ஆசை அறுபது நாள்!”

புன்னகை புரிந்தான். “இல்லை பொன்னா, உன் அவலக்ஷணம் கூட எனக்கு அழகாய்த் தானிருக்கும்.”

“இது என்ன விடுகதை?”

“இல்லை, பிறவி குரூபத்திற்கும் கவர்ச்சி உண்டு.”

அவள் முகம் சற்று விழுந்தது.

“ஆசை மீறிப் போனதால் என்னைப் புகழறேளா? அவமானப்படுத்தறேளா?”

நான் என்ன சொல்ல வந்தேன்? எனக்கே தெரியவில்லை.

இருவரும் மௌனமாயினர். வேளையின் நளினத்தில் மேகம் படர்ந்துவிட்டது. இருவருமே உணர்ந்தனர், அது நெஞ்சை அரித்தது. புரியவில்லை. ஆனால் அரித்தது.

எவர் வீட்டிலோ கடியாரம் ஒரு தரம் அடிக்கிறது. ஒரு மணியா, அரை மணியா? பழுக்கக் காய்ச்சி வார்த்த உருக்குப்போல் நாதம் செவியுள் இறங்குகையில் செவி சுட்டது போலவே ஒரு ப்ரமை.

தெரு முனையிலிருந்து ஒரு ஆட்டு மந்தையின் கனைப்புகளும், குளம்போசையும், கழுத்து மணியின் அலறல்களும் நெருங்குகின்றன. இந்தத் தெருவில் இது ஒரு கண்ணராவி. ஒரு நாள் விட்டு ஒரு நாள், நள்ளிரவில்

பலிகளின் ஊர்வலம். நாளைக் காலை தனக்கு நேரப் போகும் கதியைப் பற்றி இதுகளில் ஒன்றுக்கேனும் ஒரு இம்மி சந்தேகமேனும் இப்போது தட்டியிருக்குமோ?

ஆனால் த்ரோகம் தெரியாமல் இருப்பதே தேவலை?

அவ்வழி எண்ணத்தின் ஓட்டத்தினின்று மனம் மருண்டு அவனிடம் செல்லமாய் நெருங்கிக் கொண்டாள்.

''ஆமாம், அது யார் தரிசனி?''

''—?''

''என்ன, பூலோகமா, கைலாசமான்னு முழிக்கிறேள் கண்ணில் மண்ணைத் தூவப் பாக்கறேள்? உங்கள் வாயிலிருந்துதானே அந்தப் பேர் வந்தது?''

''நானா?''

''ஆமாம். நீங்களேதான்! அது யார் தரிசனி? எனக்கு அப்பவே தோணித்து, என்ன அழகான பேர்!''

தரிசனி

தரிசனி

தரிசனி

மண்டையில் பாய்ந்த ரத்தக் குபீரில், உடல் பூரா அந்த ஊடுருவல் தாங்க முடியவில்லை. தேன் கூடு உடைந்து போனாற்போல், உடற் கண்கள் அத்தனையும் திறந்து கொண்டு ரத்தம் பொங்கி விட்டதா?

திகில்.

தொண்டையின் அடிவாரத்தினின்று நுனிவரை நாறு கிழித்தாற்போல், நாக்கு நடுவே ஒரு தித்திப்புக் கோடு. குமட்டல்.

''என்ன வாயடைச்சுப் போச்சு?''

மெய்யாகவே எனக்கு நாக்கு எழவில்லையே! என்னுள் என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது! திகைப்பில் இரு கைகளும் விரிந்தன.

''என்ன, என்னிடம் சொல்லக் கூடாத ரகஸ்யமா ?''

தொண்டையினின்று ஒரு தேம்பல் கிளம்பிற்று. அவன் விழிகள் கலங்கின.

''நான் ஒன்றும் அறியேன்.''

நாக்கு மீண்டதும் கண்டது திரும்பத் திரும்ப:

''நான் ஒன்றும் அறியேன் !''

''நான் ஒன்றும் அறியேன் ;''

''நான் ஒன்றும் அறியேன் !''

''எனக்கு தெரிஞ்சு போச்சு. என்னவோ மறைக்கப் பார்க்கறேள்.''

''நான் ஒன்றும் அறியேனே! ''

''நீங்கள் சொன்னால் நான் நம்புவேனா? நீங்கள் மறைச்சாலும் உங்களைத்தான் தூக்கம் காட்டிக் கொடுத்து விட்டதே! நான் காத்திராமல் போனேன். இருந்தால் இன்னும் கொஞ்சம் விவரம் கிட்டியிருக்கும். ஆனால் நானே எழுப்பிவிட்டேன். தூக்கத்தில் பேத்தறவாளைக் கண்டாலே எனக்குப் பயம்.''

''நீ என்னை எழுப்புமுன் நான் ஒரு கனவு கண்டேன். கனவு என்று கூட எப்படிச் சொல்வேன் !''

''எண்ணம் என்று சொல்லிக் கொடுக்கட்டுமா? பழைய ஏடு என்று அடி எடுத்துக் கொடுக்கட்டுமா ?''

''அவள் குரலில் சிந்திய கேலியை அவன் வாங்கிக் கொள்ளவில்லை.

''சற்று முன் நம் வெறி தணிந்த சோர்வு மயக்கத்தில் ஒரு தோற்றம் தெரிந்தது. முகம் தெரியவில்லை. முதுகு தான் காட்டிற்று. அதையும் அவிழ்ந்த கூந்தல் அடைத்துக் கொண்டது. உடனே மறைந்துவிட்டது.''

''யார் அது ?''

''அதுதான் தரிசனி என்று என் வாய் மூலம் நீ கேட்ட தாக நீ சொல்லி நான் தெரிந்து கொண்டேன்.''

''இதை நான் நம்பணுமா ?''

அவள் கேள்வி அவன் செவிக்கெட்டியதாகத் தெரிய வில்லை. அவனிடமிருந்து பதில் வரவில்லை.

தலையணை மீது அவன் முகம். ஏதோ ஒரு தினுசில். தலையணை உறை மீது தைத்த சித்திரம்போல், தலையணையோடு இழைந்திருந்தது. இன்னும் கலையாத கனவில் கண்கள் மூடியிருந்தன. கனவில் கண்டு, வெளியில் விண்டுதர இயலாத ரகஸ்யம் உதட்டில் புன்னகையாய்ப் பூத்து, முகமே மெதுவிட்டிருந்தது. என்றுமே அந்த நெற்றியில் ஒரு வரி—கன்னத்தில் ஒரு அம்மை வடுக்கூட கிடையாது ஒரு ஆண் முகம் அப்படி ஒரு பொளிசல் கூட இல்லாது இருப்பது அவளுக்கு வியப்பாய் இருந்தது. அந்த வகையில் அந்த முகம் நம்பும்படியில்லை. வங்காள பாணியில் தீட்டிய ஓவியத்தில் தவத்தில் அமர்ந்த சிவத்தின் முகம். முடியில் ஒரு கங்கைதான் பாக்கி. கங்கையின் வாயிலிருந்து அருவியின் பீச்சல்தான் பாக்கி.

அந்த உருவகம் மனதில் எழுந்ததும் அவளுக்குச் சிரிப்பு பீறிட்டது. அவள் வாயின்று அதன் கண்ணாடிச் சுக்கல்கள் உதிர்ந்ததும் அவளுக்குத் 'திக்' கென்றாகி விட்டது. ஏதோ பீதி. அவனை உற்று நோக்கினாள். அவன் முகம் மாறவில்லை. ஆழ்ந்த தூக்கமா ?

தரிசனியில் அவசமா ?

★

மேஜை மீது குவிந்து விட்ட வேலை மீது மனம் குவிய மறுத்தது. தஸ்தாவேஜுக் கட்டுகளில் எழுத்துக்களும் எண்களும் வெறும் அர்த்தமற்ற கோடுகளும் கீறல்களு மாய்த் தத்திக் குதித்துப் பச்சைக் குதிரை விளையாடின.

நானா?

என்னிலிருந்தேயா ?

'இல்லையென்றால் இல்லை.

உண்டு என்றால் உண்டு.

எனும் சூத்திரத்தின் இயக்கமாய், நினைக்க மனம் ஒன்று வேண்டும். இல்லாவிடில் நீ எங்கிருந்து வந்தாய்?

கனவுகள், நம் ரகஸ்ய ஆசைகள் தம் நிறைவு காணத் தேடும் ஒரு வழியென்று கொண்டால், நீ என் எந்தப் பிறவியின் எந்த ஆசை ?

ஒவ்வொரு ஆசையும் ஒரு பிறவி.

ஒவ்வொரு பிறவியும் ஒரு ஆசை; பிராணனின் பிம்பம்.

ஆதி மண்ணின் துல்லியத்தில் ஒற்றியெடுத்த முதற் பிம்பம்.

வாழ்வே கேள்வியாய், உயிரின் மூச்சே அர்ச்சனையாய், பிம்பம் பிம்பமாய்க் கடைசல் ஏறி, இன்னமும் தன் ஸ்தூலம் காணத் துடிக்கும் தவிதவிப்பின் குவிப்பாய், தரிசனி ஆனாயா ? எத்தனை நாட்கள் எத்தனை ஜன்மங்களாய் என் பூர்வ சந்ததியின் உள் பிரக்ஞையின் அடிவாரத்தில் மூழ்கிக் கிடந்து, என்னில் உன் முகத்வாரம் கண்டு புறப்பட்டாய் ?

அத்தர் பிறந்ததுபோல்.

அபிஷேக தீர்த்தத்துடன் ஆண்டவன் முடியிலிருந்து அடித்துக்கொண்டு வரும் மலர் போல்.

பொருளின் உருவெடுப்பின் முன் சொல்லின் பராக்கு.

நெஞ்சப் புதைவில் உன்னைப் புரிந்துகொண்டேன்.

ஆனால் தெரிந்துகொள்ள முடியவில்லை.

உன்னைத் தெரிந்து கொள்ளும்வரை, எனக்கு வாயிருந்தும், நீ எனக்கு ஊமை கண்ட கனாத்தான்.

கண்டது நான். ஆனால் உன் பெயர் சொன்னது பொன்னா. அதுபோல், ஒரு வேளை உன் முகம் பார்த்தி

ருந்தால், உனக்கே நீ யார் என்று சொல்வேனோ என்னவோ ?

ஆனால் நீ முகம் காட்டவில்லை. முதுகுதான் காட்டினாய்.

எனக்குத் தோன்றுகிறது. உன் முதுகும், அதன் மேல் உன் கூந்தலின் இருளும், நான் உன் முகம் காண, நீ எனக்குக் காட்டிய விளிப்பா ?

உன் பெயரைத் தந்தாய், சைகையும் காட்டினாய், அப்படியும் உன்னைத் தெரிந்துகொள்ள இயலாது நான் தவிக்கும் வேதனைதான் உன் ரகசியமோ ? என் அந்தரங்க ஆசையோ ?

விழிகள் துளும்பின.

தரிசனி.

கண்ணீரின் ஸ்படிகம். நாம ஜெபமணிகளாய்க் கன்னங்களில் உருண்டு உதிர்ந்து, எழுந்து கரைந்து, உலகம் அழிந்தது.

இப்படியும் நேர்வது உண்டோ ?

அடுப்பை ஊதி ஊதிப் பொன்னாவுக்கு முகமே ஊதி விட்டது.

பொன்னா.

புகை கண்ணை அடைத்துக்கொண்டு மூச்சுத் திணறிற்று. நெஞ்சு எரிநதது.

—பொன்னி.

இன்றைக்கு விறகும் வேடிக்கை காட்ட வேளை பார்த்துக் கொண்டதாக்கும்.

அதற்குக்கூட என்னைப் பார்த்தால் இளப்பமாயிருக்கு.

—பொன்னு.

இதுவரை அடுப்பில் ஊதியிருக்கும் மூச்சில் ஊரையே எரித்திருக்கலாம்.

ஆனால் ஜ்வாலை எழும்பவில்லை.

தானே உள் வெந்தாள்.

—பொன்னாயி.

பொன்னம்மா.

இதென்ன மூச்சுக்கு மூச்சு எனக்கே என் பேர் உருவேற்றம்? என் தவிப்பில் என் பேர் புழுவாய் நெளியறதே! ஐயோ, தாங்க முடியல்லியே!

—பொன்னுத் தங்கம்.

வீட்டுக்கு ஒரே பெண். செல்லப் பெண். அஞ்சு அண்ணன்மாருக்கப்புறம் அருமைப் 'பொன்னுத் தங்கை'.

—பொன்னக்கா.

அவளுக்கு முன் பிறந்தவன் வேணுமென்றே அவளை அக்கா'வென அழைப்பதற்கு அவள் கோபிக்கும் போதெல்லாம்:

"அம்மாவுக்கப்புறம் அப்பா உள்பட எங்கள் அத்தனை பேருக்கும் எல்லாமே நீதானே,—குழந்தை, அம்மா அக்கா, அங்கச்சி!"

அப்படி அவன் கெஞ்சுகையில் அவனுக்கு மூச்சு லேசாய்த் திணறும்.

கோபுவுக்கே குழந்தைபோல் தாளாத மனசுதான். அம்மா செல்லம்.

கொழு கொழுவென்றிருந்தவன், அம்மா செத்துப் போனதும், பக்கென்று ஒட்டை விழுந்தமாதிரி எப்படி வாங்கிப் போயிட்டான்! ஒரு சமயம் அரை சமயம் எச்சில் நுரையில் சிவப்பு நரம்பு தெரிந்தது.

"ஆபத்து ஒன்றுமில்லை. Rest, Rest, Rest தான் Cure!" என்று டாக்டர் தைரியம் சொன்னாலும், கோபண்ண வுக்குப் பழைய உடம்பு வரவேயில்லை. வரவும் வராது.

அவள் கணவன் வீட்டிற்குக் கிளம்பியதும், ரயிலடியில், ஜன்னலுக்கு வெளியே நின்றபடி, "நீயும் போனபின் இங்கே என்ன இருக்கிறது!" என்று மூச்சு தேம்புகையில், அவள் தொண்டையில் எழுந்த அடைப்பு என்றும் மறக்காது. அந்த முகத்தை அப்படியே இழுத்துத் தோளில் அழுத்திக் கொண்டால். அவன் குழந்தை; அவள் தாய்.

ஆனால் அம்மா, ஏதோ பெயரும் தெரியாத மூணு நாள் ஜுரத்தில் திடீரென்று போனதும், எல்லோருக்குமே காலை வாரித்தான் விட்டது. அதுவும் தக்க பெண் துணை வேறு இல்லாத இடத்தில்—அவளுக்கு இன்னும் பாவாடை சட்டைப் பருவம் மாறவில்லை. அவரவர் தம் தம் நிலை மீள்வது சுளுவாயிருக்கிறதா?

ஆனால் மீளாமல் இல்லை. துக்கத்திலிருந்து மீளத் தான் மீள்கிறோம். இல்லையென்கவில்லை. அம்மா போனவிடத்தில் சமையற்காரப்பாட்டி சம்பளத்துக்கு வருகிறாள். பாட்டிக்கு இருந்தாற் போலிருந்து கொஞ்ச நாட்களுக்குப் பிறகு காசி நினைப்பெடுத்துக்கொண்டு நின்றுவிட்டால், ஒரு மாமி வருகிறாள்.

"தள்ளி வெச்ச ஆம்படையான் என்னைத் திரும்ப அழைக்கிறான். எனக்கு செலவு கொடுங்கள்" என்று கேட் டால், அவள் வாழ்க்கைக்குக் குறுக்கே நிற்க முடியுமா?

மாமி போன பிறகு ஒரு பையன் வருகிறான்.

அவன் வெந்ததும் வேகாததும், உண்டையும் உருளையு மாய்ப் பண்ணிப் போட்டதையும், 'கண்டேன்.' 'கண் டேன்' என்று உண்கிறோம்.

"எல்லோரும் போட்டதைச் சாப்பிடுங்கள், சொல்லி விட்டேன். நீங்கள் ஏதேனும் மூச்சு விட்டேளோ, கேசவன்

இன்னி சாயங்காலமே பெட்டியும் படுக்கையுடன் கிளம்பி விடுவான். எனக்கு Hotel De Dwarakaவில் இடம் கிடைச்சுப் போச்சு சார் 8 Hours duty. Weekly One Day off Salary + 2 meals + 2 டிபன் + வாரம் ஒரு எண்ணெய், தவிர Over time என்ன, அதுதானே பாடம், கேசவா? அரிசியாய் வாங்கிப் போட்டதை மண்ணாய் ஆக்கிப் போடுகிறான். நானே தின்கிறேன்; உங்களுக்கென்ன, வாய் கல்லை ஜரிக்கிற வயதில்?"

அப்பா அப்படி வேடிக்கை பண்ணுகையில், ரஸக் கரண்டியுடன் பந்தி நடுவில் நின்றபடி கேசவனும் எல்லோருடனும் சேர்ந்து சிரிக்கிறான்.

எப்படியேனும் துக்கம் மறக்க, எப்படியேனும் சிரிப்பு, ஏதேனும் வழி, வெளியூர் போகிறோம்; வேடிக்கை பார்க்கிறோம். திரும்ப வருகிறோம்.

துக்கம் மறக்கிறது; ஊசியாய்த் தேய்ந்த உடம்பில் சதை பிடிக்கிறது.

"என்ன கேதா, பொன்னு கொஞ்ச நாளாய் மேனி ஒரு தினுசாய் மினு மினு என்கிறாள், இல்லை?"

"அது தங்க ஊசிடா, தினமும் கண்ணில் குத்திக்கறோமே, உனக்கு இன்னமும் தெரியவில்லையா? இதோ பார், என்னை அடிக்க வரான்! இல்லேடி பத்ரகாளி, இல்லேடி!"

ஒரு கையில் ஒரு செருப்பு ஏந்தி, ஒரு கால் வெறுங் கால், மறுகால் செருப்புடன் விந்திக்கொண்டே, நாற்காலிக்கும் சோபாவுக்குமாய் வளைய வளைய அவனைத் துரத்துகையில் கன்னத்தில் கோபக் கண்ணீர். வாயில் சிரிப்பு. இப்போ நினைத்தாலும் தன்னை அறியாமலே வாயில் புன்னகை காண்கிறது.

இடக்குப் பேச்சில் அப்பாவுக்குக் கேது இடது கண், வலது கண்தான். ஆனால் அவன் சொன்னதில் பிசகு இல்லை.

மாவடுவைக் கடித்தாற்போன்று, வெடுக்கு வெடுக்கெனப் பேச்சில் ஒரு துடுக்கு. தொட்டதற்கெல்லாம் செவி மடல் செவந்து, மூக்கு நுனி துடிக்கும் கோபம். அண்ணன்மார் அத்தனைபேரையும் "வாடா", "போடா". கேதாரியைக் "கேது", ராகவனை "ராகு" அப்பாவைக்கூட நீ தான். யாரையும் தூக்கியெறியும் பேச்சு. Don 't Care.

அப்பாவுக்கு அவள் "பொன்னுத்துரை"

பெயரின் அன்பு இன்பமாயிருந்தாலும், அதில் ஏதோ சிலாம்பு குத்திற்று.

"என்னப்பா, வர்க்கத்தையே மாத்திட்டே ?"

அப்பா பத்திரிகைமேல் ஓடிய கண்கள் மாறாமலே :

"இந்த நாளில் எது நடக்கவில்லை ? அதுவும்தான் நடக்கிறது !"

"பொன்னு பெண்ணாவா வளர்கிறாள் ?" என்று மற்றவர் பேசிக் கொள்வதும், காதுக் கெட்டாமல் இல்லை.

'Don't care.

ஆனால் அதற்கென்ன செய்வது ? தாயில்லாக் குழந்தை. அதிலும் கடைக் குட்டி. விதை விழுந்த இடத்தில், விட்ட வேரின் கெட்டிக்கேற்றபடி முளைத்த செடி போல், தாயின் பயிரும், பதியமும், வேலியும், இல்லாது வளர்ந்தால் அப்படித்தான். ஆண்களுக்கு நடுவே, "நீ குடுமியைத் தட்டி முடிந்தால், நான் கொண்டையை எடுத்துக் கட்டிக்கறேன் : உனக்கு நான் தோற்றேனா ?" என்கிற ரீதியில் வளர்ந்தால், அப்படித்தான். அதுவும் அவளுக்கே தெரிந்தது.

முதலில் இந்த நாளில் குடுமி ஏது ?

ஆனால் கொண்டையும் ஏது ? சவுரியும், கொண்டை போன்ற குலவடையும் தான்.

எதிலும் மெய்யென்று ஒன்று உண்டு என்பதே மறந்து போனவரை போலி பெருகிப் போன வாழ்நாள். அதன் சூத்திரம் :

Don' t care.

முதல் சூடு சரியானபடி விழுந்துவிட்ட தோஷம், நெருப்பையே மறுத்து, சூழ இருந்தவர் அவர் சொல்லுக்கு எதிர்ச் சொல் இல்லாது, செல்லம் காட்டிக் காட்டி, மேலும் மேலும் அவள் மேல் நெய்த இன் மொழிக் கூட்டில் இயங்கி இயங்கி, எதையும் விரும்பிக் கேட்கும் தேவையே அற்றுப்போய், உலகமே தனக்குரிய கப்பமாய் மடியில் விழுந்துவிட்ட பட்சியாய்த் தோன்றிய சூழ்நிலையில் அவள் மொழியறிந்த நாளிலிருந்து, 'Don't care'க்கு அடுத்தபடி 'bore' என்ற வார்த்தையை அர்த்தத்தின் முழுச்சுமையோடு உணர்ந்தாள்.

"மணி அய்யர்,(கேசவன் போய் வருடக் கணக்காச்சு) இன்னிக்கென்ன டிபன்? கேசரி, பஜ்ஜியா ? bore !"

"இன்னிக்கு என்னத்தை உடுத்திக்கலாம்? ஜவுளிக் கடையையே பிரிச்சுப்போட்டாலும் bore ஆய்த்தானிருக்கு!"

"கேது, இன்னிக்கு Paradise இல் என்னடா ப்ரோக்ராம்? அதுவேதான் தொடர்ந்து ஓடறதா ? bore !"

"ராகு, இன்னிக்கு சபாவில் கச்சேரியா ? டான்ஸா? உன் favourite பித்துதான் பாடறதா ? ஹாலையே வாங்கிட்டையா ? உனக்குத்தான் பிடிக்கும், படு bore !"

"அப்பா இன்னிக்கென்ன கிழமை? இப்பத்தான் புதனா? ஐயோ, இந்த வாரம் போக இன்னும் மூணு நாள் இருக்கே!"

"ஏன் மூணு நாளைக்கப்புறம் ஏதாவது ப்ளான் போட்டிருக்கையா ?"

"இல்லேப்பா, அது தெரிஞ்சால்தான் தேவலையா! ஒரே bore அடிக்கிறதேப்பா. எங்கேதான் போவது?"

சதுப்பில் கட்டிய கட்டடம்.

காலை, பல் துலக்கும் வேலைக்கு, சமையலறை நிலை வாசற்படியில் சுண்டு விரலால் நகத்தகலத்திற்கு மண் தெரிந்தது. பால் காய்ந்து காப்பி கலக்கக் காத்திருக்கும் நேரத்திற்குள், கால் பந்தளவுக்குப் பெரிதாய், அசிங்கமாய், பயங்கரமாய் வீங்கிப்போன கரையான் புற்று.

தெவிட்டலின் குமட்டல்.

காது அறத் தொங்கும் செட்டி நாட்டுத் தோடு போல் கழுத்தில் கட்டிக் கல்லாய்ச் சுமக்கும் நாட்கள்.

படிப்பு முடிந்ததும் வேலையில் அமர்ந்தாள். நாளொரு அணியாய், ஏதேனும் சாக்கில் அண்ணன் மாரும், அப்பாவும் மேலே தங்கக் கவசமாய்ப் பூட்டிக் கொண்டிருக்கையில் அவள் வேலை செய்து கூலி கொண்டு வரத்தேவையே இல்லை. ஆனால் யாரேனும் பொழுதுக்கு ஒரு வழி சொல்லுங்கள்!

ஆனால் எதுவுமே அதன் புதுமை பூக்காத வரை தான். உடனே, நாருடன் மயிரில் சிக்குண்ட நேற்றைய மலர்ச்சரம் போல், அதன்மேல் சீற்றம்தான் எழுகின்றது. மயிர்க்கால் போனாலும் பிய்த்தெறியத்தான் தோன்று கிறது. லகுவாய்க் கழற்றப் பொறுமையில்லை. நேற்று மணம் தந்ததற்கு நன்றியில்லை, வாடலைக் கண்டாலே நிகில். ஆண்டே பழகிப்போய், வளைந்து கொடுத்து அனுபவிக்கத் தன்மையில் இணக்கமில்லை. வேரில் ஆழமில்லை.

வேளை மூலையில் அலுப்பு, தன் கபடச்சிரிப்புடன், அவள் கையும் ாலுமாய் கட்டப் பட்டுக் கயிறுடன் காத்திருந்தது. அதன் அணைப்புக்குப் பயந்து, அடுத்து அடுத்து மாறுதலைத் தேடி, அதில் தஞ்சம் புகுந்தாள். உண்மையில், அவள் தன்னிடமிருந்து ஓடிக்கொண்டே யிருந்தாள்.

ஆகவே ஒரு நாள் பிற்பகல், அவள் டொமாட்டோ கலர் நைலான் புடவை ஒன்று புதிதாய் உடுத்திக் கொண்டு இடுப்பில் சரிப்படுத்திக் கொண்டே மாடிப் படி 'திடு திடு'வென இறங்குகையில், "மணி அய்யர்! இன்னிக்கென்ன டிபன்?" என்று கூவியதும், சமையலறையிலிருந்து அவர் மணிக் குரல், "கேஸரி! பஜ்ஜி!" என்று எதிர் கூவியதும், உள் பொங்கிய உவகை சிரிப்பாய்ப் பீறிட்டது.

அடுப்பங்கரையிலிருந்து மணி அய்யர் வெளி வந்தார். ஆள் சரியான உருட்டுக் கட்டை. மார்பிலும் முதுகிலும் மயிர் அடர்ந்து சுருண்டது. 'மொசமொச'வென ரோம ரிஷி!

"இன்னிக்கு டிபன் உனக்கு bore அடிககாதுன்னு எனக்குத் தெரியுமே! உனக்குப் பிடிக்காவிட்டாலும், பெண் பார்க்க வரவாளுக்கு இந்த டிபன்தான் ஸம்பிர தாயம்!"

விஷயக்கார மனுஷன்.

ஏழைக் குறும்பன்.

விழியிலிருந்து சதையை உரித்தாற்போல் கண்ணுக் கொரு பச்சை. உலகம் ஒரு பளிச்சு. அதுவே உடலுக்கும் மனதுக்கும் ஒரு தென்பு. கூடவே, "இது இன்னும் எத்தனை நாளைக்கு?" என்ற பயம் தலைக்காட்டி னாலும், இப்போதைக்கு change இருக்கோன்னோ!

இந்த நாளில் பெண்ணானாலும் சரி, பிள்ளையா னாலும் சரி, யாருக்குத்தான் சுருக்க கலியாணம் நேர்கிறது. காலத்தையும், ஆபீஸில் சில சினேகிதிகளின் கதியையும் உத்தேசித்தால், அதிர்ஷ்டம் அவள் பங்கில் தான் இருந்தது.

அவருக்கும் பெற்றோர் இல்லை. நெருங்கிய உறவினர் யாருமில்லை. அந்த முகத்தில் தெரிந்த சாந்தம், நெஞ்சின் அலைகளின்மேல் எண்ணெயை ஊற்றினாற்போல் ஒரு

இதவு தந்தது. முழுக்க முழுக்க இவர் எனக்கேதான். இவரை ஏற்பதில் எனக்கு மகிழ்ச்சிதான்.

இந்தக் கலியாணம் கூடாமல் இருந்தால், இன்னும் வேளை எட்டப் போயிருந்தால், என் அலுப்பு முற்றி என்ன ஆகியிருக்குமோ ?

"என்னப்பா, இன்னும் எத்தனை நாள் என்னை இப்படியே வைத்திருப்பதாய் உத்தேசம் ? யாருக்கேனும் சட்டு புட்டுன்னு முடித்து வைத்து, என்னை அனுப்புங்களேன்!" என்று கேட்டு, என் பெண்மை பிசகும் தருணக் கோட்டில் தவித்திருப்பேனோ?

ஆனால் அதெல்லாம் பற்றி இப்போ என்ன? ஆசை தப்பிச்சாச்சு. "அத்தைக்கு மீசை முளைச்சால்-" என்கிற ரீதியில், பயங் கழன்று, இப்போதைய நெஞ்சு நிறைவில், நினைப்புக்கு ஒரு பொழுது போக்காச்சு. என்றேனும் ஒரு நாள் அவரிடமே சொல்லி, இருவரும் சிரிக்க, சேமித்து வைக்கும் சரக்காச்சு.

Don't Care

Bore

Change

அலட்சியத்தின் வழி அலுப்புக்கு வந்து, அது முற்றி, மாறுதல் நாடித் திருமணத்திற்கு வந்திருக்கும் இந்த யாத்திரையில், தனக்கொரு கணவன், அவன் மேல் ஆசை, எந்த சபையிலும் தாலிக்குரிய தனி மதிப்பு, முதற் தாம்பூலம், இயற்கையின் வேட்கை, குடும்பம், குழந்தை, வீடு, வாசல் தனக்கொரு நிழல், என மணக்கோலம் காட்டிய பல கோணங்களின் ஒளி நடுவே, கலசமாய் வீசியது ஒரு எண்ணம் ஒரே எண்ணம்.

Change

கைப்பொம்மை சலித்த குழந்தைக்குக் கடையிலிருந்து ஒரு பொம்மை.

தரிசனி—

அடுப்பு வாய் கவிந்த முகத்தில், திடீரென ஜ்வாலை குபீரிட்டதும், பொன்னி 'திக்'கிட்டுப் போனாள். புருவம் தீய்ந்து விட்டதோ? தடவிப் பார்த்துக் கொண்டாள்.

அந்தப் பெயரிலேயே ஒரு magic இருக்கா? அல்லாமல் இத்தனை நாழி இடக்குப் பண்ணின விறதுக்குத் தன் நினைவில் அந்தப் பெயர் தோன்றியதுமே திடுக்கென ஏன் பயம் வந்தது?

அவளுக்குத் திடீரெனத் தன் பெயர்மேல் இதுவரை அவள் கண்டுராத ஒரு அலுப்பு-வெறுப்பு உண்டாயிற்று. பொன்னி என்ன பொன்னி? சொன்னவர் வாயில், அவரின் அந்தச் சமயத்தின் குணத்திற்கும், எண்ணத்துக்கும், நாக்குழலுக்கும் ஏற்ப, இழுபட்டு, பேரில், பேருக்குப் பேர் தன்மானம் கெட்ட பேர்!

ஆனால், தரிசனி.

ஒரு பொருளுக்கு ஒரே சொல் நாக்கில் திருப்பத் திருப்ப, எல்லாப் பொருளையும் தன்னுள் அடக்கிய ஒரு உருவேற்றம். அது என்ன தரிசனம்? நினைப்பில் ஒரு அச்சம். நாக்கு நுனியில் ஒரு விறுவிறுப்பு. என்ன அழகான பேர்! எனக்குப் பெண் பிறந்தால் இதைத்தான் வைக்கணும்.........

பொன்னி கன்னத்தடியில் ரத்தத்தின் குறுகுறுப்பு பரவுவது உணர்ந்தாள். சென்ற ஒரு வாரமாய்ச் சந்தேகம், தனக்கே நேற்றுத்தான் நிச்சயமாயிற்று. நேற்றிரவுதான், சிப்பியின் முத்து ரகஸ்யத்தை, அவர் செவி மடுத்த காற்றில் மூச்சோடு மூச்சாய் வெளியிடச் சமயத்திற்குக் காத்திருந்தாள். ஆனால் தரிசனி வந்து கெடுத்துவிட்டாள். அந்தக் கவிதா நேரம் இனி வராது. தரிசனி வந்த பிறகு, தன்வாயால் இனி தெரிவிக்கப் போவ தில்லை. ரகஸ்யம், தன் ஒளி மறைவு தானே கெட்டு,

எல்லோருக்கும் அம்பலமாகும் போது ஆகட்டும். Don't Care.

யார் இவள் தரிசனி? பெயர் வாயில் வந்ததிலிருந்தே மனுஷன் சரியாயில்லை. காலையிலேயே கிளம்பி ஆபீஸுக்குப் போயாச்சு. சாப்பாட்டை எடுத்துப் போக டவாலி வந்தால் உண்டு இல்லாட்டா இல்லை. உண்மையில் வேலையா? இல்லை, என்னிடமிருந்து ஓடி ஒளிகிறானா?

யார் அவள்? வீட்டு வேலைக்காரியா? ஆபீஸில் ஸகியா? கலியாணம் ஆனவளா? ஆகாதவளா? ஸினிமா எக்ஸ்ட்ராவா? அவாளுக்குத்தான் இந்த மாதிரி உலகத்தில் ஒட்டாத பேர். வெச்ச பேர் காத்தாயி, கருவேப்லை என்றிருக்கும். நானே பொன்னிதானே!

எந்தைய நாள் தொடர்போ? நான் வந்தபின் அறுந்ததோ, அல்ல, ஒளி மறைவில் இன்னும் கெட்டிப் பட்டிருக்கோ?

இம்மாதிரி இரட்டைக் குடித்தனம் நடத்துபவர் கலியாணத்துக்கு முன் அவளுடைய ஆபீஸ் நாளிலேயே அவளுக்குத் தெரியும். சம்பள தினத்தன்று 'சொஸைடி'யில் கடன் பிடிப்பு, ஈட்டிக்காரன் பிடுங்கிக் கொண்டது. அக்கம் பக்கத்தில் கைமாற்றாய் வாங்கினது எல்லாம் பட்டுவாடா ஆகிப்பாக்கி ஒரு ரூபாய் மிஞ்சும். அதைக் கவலையில்லாமல் 'ஹாய்'யாக 'காண்டீ'னில் மாணிக்கம் நாஸ்தா பண்ணிக் கொண்டிருப்பான்.

"என்னடா மாணிக்கம்?"

"என்னம்மா பண்றது? நீங்களா சொல்லுங்க. இதைப் பெண்சாதிக்குக் கொடுப்பேனா? தொட்டுத் தாலி கட்டினவ இப்ப மூணாவது உண்டாயிருக்கு. இன்னொண்ணுக்கு என்னண்டை வரபோதே ரெண்டு இளஞ் ஜீவனோடு வந்துட்டுது—என்னா அப்படி முளிக்கிறீங்க? முளி தக்காளியாட்டம் கீளே விளுந்துடப் போவுது!

என்னத்தப் பண்றது சொல்லுங்க. நம்மை நம்பி வந்துட்டுது. கைவிட்டுட முடியுங்களா? அத்தாலேதான் அல்லாடறேன். நாளைக்கு வரப்போ கியாபகமா ஒரு பத்து ரூவா நோட்டு கொண்டு வாங்க. அஞ்சு தேதிக்குக்கொடுத்துடறேன். தேதி குறிச்சுட்டால் தவற மாட்டேன். மறுபடியும் கேட்டால் நீங்க கொடுக்க வேணாம்?"

அவளுக்குப் பக்கத்து 'ஸீட்' ஸீதாவின் 'கேஸ்' மாத்திரம் என்ன, அதுவும் 'தோசையைத் திருப்பிப் போடு தான்.'

"இதோ பார் பொன்னி. நீ கலியாணமாகி, குடும்பமா வாழறப்போ, உன் குழந்தை குட்டி ஏதுக்கேனும் 'ஸீதா'ன்னுமாத்திரம் பேர் வெச்சுடாதே, அது அத்தனை அபாக்கியம். அதுக்கு நான் சாக்ஷி. இத்தனைக்கும் எங்கப்பா ஜோஸ்யத்தில் புலின்னு பேர். எல்லாப் பொருத்தமும் பார்த்துத்தான் கொடுத்தா பேர் கூடப் பொருத்தம் போயேன். அவர் ராமச்சந்த்ரன். நான் ஸீதை. ஆனால் அப்புறம் தான் தெரிஞ்சுது நான் ஸீதை. அவர் பேரளவில்தான் ராமச்சந்த்ரன், லீலையில் சுப்பிரமணிய ஸ்வாமி. நானே உங்கிட்டே சொல்றேனேன்னு சங்கோசப் படவேண்டாம். மறைச்சு வெக்கற நாளெல்லாம் மலையேறிப்போச்சு உலகம் தெரிஞ்ச விஷயமாப் போச்சு. இப்போ நானே ஒரு தினுசா சமாதானமாயிட்டேன். 'உங்கள் மேரிக்குப் பிடிக்குமே'ன்னு குடலை இட்டிலியோ, அரிசி அப்பளாமோ, வடுமாங்காயோ, நானே கொடுத்தனுப்பறேன், ஏனம்தான் லேசில் திரும்பி வராது. பத்து நாள் கழிச்சு வரப்போ, அதற்குள் அதில் மீனைத்தான் அலம்பித்தோ, நண்டைத்தான் நறுக்கித்தோ. மட்டனைத்தான் வறுத்ததோ, முட்டையைத்தான் வேக வெச்சுதோ, ஈசுவரனுக்குத்தான் வெளிச்சம், அவனுக்குத்தான் அர்ப்பணம்."

ஸீதா சிரிக்கிறாள். ஆனால் விழி தளும்புகிறது.

"இத்தனைக்கும் என் தாய் வழி வைதீக பரம்பரை. தாத்தா யாகமே பண்ணினவராம். இருந்தாப் போலிருந்து ஒரு நாள் பழசு எல்லாம் நினைப்பெடுத்து விடும். உட்கார்ந்தால் அப்படியே உட்கார்ந்து போயிடுவேனோ என்கிற திகிலில் வேலைக்கு ஓடி வந்துடறேன், இல்லாட்டா, எல்லாம் நேரும் கூறுமாயிருந்தால். கலியாணம் ஆனபிறகும் நமக்கு உத்யோகம் ஏதுக்கடி ?"

★

# 7. இவளோ ?

மதில்கள் போன்ற பாறைகளின் மேல் மேகங்கள் பொங்கித் தளைத்து நுரை கக்கின.

சென்னையில் கானல் கொடுமையை வருடக் கணக்கில் அனுபவித்தவனுக்கு இங்கு கோடை தெரியவில்லை. வேர்வையும் மறந்தது.

ஆனால் வெய்யிலை மறக்க நான் இங்கு வரவில்லை.

உத்யோகம் புருஷ லட்சணம்.

''ராமாமிருதம், உமக்கு மேற்பதவி வேணுமானால் இனி சென்னையில் இல்லை. நீர் வெளியூரு போகவேண்டியது தான். நான் சொல்லவில்லை. இது உங்கள் சங்கத்தின் தீர்ப்பு. இருபத்துமூன்று வருடங்களாய் உயர உயர இதே ஆபீசில் இருந்து விட்டீர்களாம். உங்கள் சங்கத்திற்குக் கண்ணைக் கரிக்கிறது. இப்போதெல்லாம் நிர்வாகம், நிர்வாகஸ்தர் கையிலா இருக்கிறது? இருந்தாலும் களபலிக்கு உம்மைத் தேர்ந்தெடுத்திருப்பதே உமக்கு தனிப் பெருமையல்லோ ? என்ன சொல்கிறீர்கள் ?''

நான் ஒன்றும் சொல்லவில்லை.

தனிப் பெருமைக்கும் நான் ஆசைப்படவில்லை.

பதவிக்கும் ஆசைப்படவில்லை. இது வரை நான் உழைத்தது போதாதா ?

ஆனால் சேர்த்து வைத்து அவளுக்கு இருக்கிறதே !

''நன்னாயிருக்கு, வலிய வர ஸ்ரீதேவியை நீங்கள் காலால் உதைச்சுத் தள்ளறது ! தெருவில் போறவா கல்லால் அடிக்காட்டா, ரெண்டு முழம் முண்டில் நீங்கள் ஆபீசுக்குப் போயிடுவேள். ராத்திரி உங்களுக்கு மோருஞ் சோறு போறும், நாங்கள் அப்படியா ? உங்கள்

வயதென்ன ? என் வயதென்ன ? 'பாங்க் ஏஜெண்ட் மாமி'ன்னு என்னை நாலு பேர் சுட்டிக் காட்டினால் எனக்கு வேண்டியிருக்காதா ? தீபாவளிக்குத் தீபாவளி பட்டுப் புடவை எல்லாம் நீங்கள் செயலில் இருக்கும் வரை தானே ? வைரத்தோடு ஆசையைத்தான் நான் அறவே துறந்தாச்சு.

"அடியே ஹேமா, செப்பு மாதிரி உன் காதுக்கு வைரத்தோடு எவ்வளவு அழகாயிருக்கும் தெரியுமா ? நீங்கள் எங்கள் வீட்டிற்கு குடித்தனம் வந்திருக்கும் யோகம், எங்கள் தட்டான்கிட்டேயே சொல்லி வெச்சு நல்லதா, மலிவா வாங்கித் தரேன்னு சியாமா மாமி படிச்சுப் படிச்சு அடிச்சுண்டதெல்லாம் செவிடன் காதில் சங்காப் போச்சு. ஆமா, என் குறையெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும் - குமாருக்கு நல்ல இடத்தில் சம்பந்தம் ஆக வேண்டாமா ? சேகர் காலேஜ் படிக்க வேண்டாமா ? கண்ணனுக்கு ஒரு வழி புலப்படவேண்டாமா ? காயத்ரீ கல்யாணம் என்ன ஆறது ?

"அப்புறம் நமக்கு ஒரு கையொட்டி இருக்கே ஸ்ரீகாந்த், ஐயாவுக்குப் பல்லக்கின்போது பையாவுக்கு தொட்டில்னு அவனை ஏலம் போடறதா ? எல்லாம் கிடக்க எனக்கு இருக்கிறது போறும்னு பொறுப்பில்லாமல் பேசினால் என்ன அர்த்தம் ? என்ன அர்த்தம்னு கேக்கறேன் ?"

கேட்கிறாள்...அடுக்குகிறாள். நான் எங்கிருந்தாலும் கேட்டுக் கொண்டேயிருப்பாள்.

ஆகையால் நான் இங்கிருக்கிறேன்.

ஆனால் குடும்பம் இன்னும் சென்னையில் தான் இருக்கிறது.

பாதிப் பள்ளிக்கூடத்தில் சட்டிப் பானையைத் தூக்க முடியுமா ? என் உத்தியோகம் என்னைப் பந்தாடினாலும் என் ஒண்டி சௌகரியத்துக்காகத் திடீரென்று இஷ்டத்துக்குக் குடும்பத்தைக் கலைக்க முடியுமா, குழந்தைகளை ஓட்

டல் சாப்பாட்டில் தவிக்க விட்டுட்டு? வளரும் பயிர்களாச்சே!

இதுவரை குழந்தைகளை விட்டு நெடுநாள் பிரிந்ததில்லை. இப்போது மாலை வேளையில் ஆபீஸ் மொட்டை மாடியில் நிற்கையில், நினைவு என்னையும் மீறிக் குடும்பத்தின் மீது சாய்கிறது; முக்கியமாக ஸ்ரீ காந்த் பெட்ரூம் லைட் சிம்னி போன்று அழகிய சிறு உருண்டைத் தலை. சிறு கூடாய் உடலும் அதே அளவில் வார்ப்படம். "லாத்திரி ஆச்சே, அப்பா எப்போ வருவார்? அம்மா. லாத்ரி ஏன் வரது?"

"நான் பெரியவனானா என்ஜின் டைவர் ஆகப் போறேன்."

"அப்பா, டைவர் பெரீவனா? கண்டக்டர் பெரீவனா? கண்டக்டர் பிகில் கொடுத்தாத்தானே டைவர் போகலாம்?

"ஏண்டி காயத்திலி, பார்த்துயாடி என் பாடி பில்டர் தோளிலே தவளை வரது!

"நீதான் குண்டோ? என்னை வினை வினைங் கறேளே, நானும் குண்டாயிடுவேன்—"

காயத்ரீ ஒரு துரும்பைக்கூட எடுத்து நகர்த்த மாட்டாள். சதா பள்ளிக்கூடம், ஸ்பெஷல் கிளாஸ், டான்ஸ் தையல், படிப்பில் படுதுடி. வகுப்பில் அவள்தான் லீடர். (அப்படி என்றால் என்ன?) பொண்ணுக்கு வயது பதினொன்றிலேயே அவள் அம்மாவுக்குக் கல்யாணக் கவலை. காயத்ரிக்குக் கல்யாண வயதும் வேளையும் வரும்போது என்னைத் தகரக் கொட்டகையில் வைத்தாகி விடுகிறதோ என்னவோ?

இப்போது மாலை மங்கிவரும் வேளையில், ஆபீசில் மொட்டை மாடியில் தென்னங் கீற்றுக்களின் சலசலப்பினிடையில், தன்னந் தனியனாய் நான் நின்று கொண்டிருக்கையில், அவர்கள் இவ் வேளைக்கு என்ன செய்து கொண்டிருப்பார்கள்"?

ஜாபர்கான்பேட்டை டெண்டில் உட்கார்ந்து கொண்டிருப்பார்கள். வீட்டுக்கு அதுதான் கிட்ட, மலிவு. வாரத்துக்கு இரண்டு படங்கள் நிச்சயம். அப்பா, நானூறு மைல்தாண்டி, தூர தேசத்தில் வீட்டுப் பராமரிப்பு இல்லாமல் தனியனாய்க் கஷ்டப்படும் கவலையை மறக்க அதுதான் எல்லா விதங்களிலும் சௌகரியம்.

"அட, அப்பாவிற்கு எப்படித் தெரிஞ்சுது? ஞான திருஷ்டியா ? அங்கிருந்தே ரிமோட் கண்ட்ரோலா?"

பையன்கள் மலர மலர விழித்துக் கொண்டு கேட்கையில், நிஜமாவே ஆச்சரியமா ? அல்லது கேலி பண்ணுகிறார்களா? திகைப்பு எனக்குத்தான். இந்தத் தலைமுறையை அவ்வளவு லேசாய்ப் புரிந்து கொள்ள முடிகிறதா ?

அவர்கள் அம்மை, புவனத்தையே வயிற்றில் அடக்கிய ரஹஸ்யப் புன்னகை புரிந்து கொண்டு (உண்மைதானே! தாயார் இல்லையா?) அரிவாமணையில் வீற்றிருந்துகொண்டு, கத்தரிக்காயை அதன் முழுமை இற்றுப் போகாமல் நாலாய்ப் பிளந்து கொண்டிருக்கிறாள். புதிதாய் இடித்த காரத்தை உள் அடைத்து இன்று கத்தரிக்காய் எண்ணெய் வதக்கல்; மைசூர் ரஸம். அப்பா, நேற்று வந்து நாளை வண்டி. வந்த சமயத்தில் பாவம், வாயக்கு வேணுங்கறதை... "அங்கே மலை நாட்டுக் கத்தரிக்காய், பார்க்க வெண்ணெய் மாதிரி இருந்தாலும் அடி நாக்கில் கடுப்பாமே! லாலாக்கடை அல்வாகூட பழைய மாதிரியில்லையாமே! நீங்கள் தான் எங்களுக்கு நினைப்பில்லைன்னு நினைச்சுண்டிருக்கேள். எல்லாம் அப்பப்போ விஜாரிச்சிண்டுதான் இருக்கேன். என்னதான் சொல்லுங்கோ, மெட்ராஸ், மெட்ராஸ்தான். தண்ணைக் காசு கொடுத்து வாங்கினாலும், ஏதோ கிடைக்கற தோன்னோ? புலிப் பால்னா புலிப்பாலைத் தருவிச்சுடலாமே! அதுதானே இங்கு விட்டுப் போகவே பயமாயிருக்கு! ஆமாம், போய்த்தான் மூணு மாசமாச்சே

பதவி நஷ்டப்படாமல் திரும்பவும் இங்கேயே மாத்திக்க வழி இல்லையோ ?”

“ஓய், உம்மைக் குற்றாலத்து சீசனுக்கு அனுப்பவில்லை, தெரியுமா ? ‘சிவா, ராமா, கிருஷ்ணா’ வேளா வேளைக்கு அருவி ஸ்நானம், உடனே ‘கபகப’ பசிக்கு சுடச்சுட, ஆவி பறக்க போத்தி ஹோட்டல் இட்டிலி. உடனே ஐந்தருவி, புலியருவி, தேனருவி, பாலருவி, சிற்றருவி, பழைய குற்றாலம், திரும்பவும் மெயின் ஃபால்ஸன்னு ரொடேஷன்லே பாங்க் செலவிலே சுகத்தோடு புண்ணியம்னு நினைச்சுக்காதேயும்; வேலையும் செய்யணும் தெரியுமோன்னோ ? அஞ்சு வருஷமா அங்கே வண்டி நஷ்டத்திலே ஓடறதை லாபப்படுத்தணும், அதுக்குத்தான் உம்மை அனுப்பறது, தெரியுமா ? குட்பை, குட்லக், மிஸ்டர் அரவான் !”

குட் பை புரிகிறது.

குட் லக் - அரவானுக்கு குட் லக் ஏது ?

மோதிக்கொண்டோ முனகிக்கொண்டோ, கண்ணெதிரில் முகங்கள் வளையவந்துபுழங்கி வந்து அதுவே பழக்கமாய்ப்போன சூழ்நிலையின் திடீர் மாற்றத்தில் நம்மை நாம் காணும் புதுச் சூழ்நிலையில் மனம் மறுக்குகையில், அதையே பாசம், பிரிவு, ஏக்கம் வருத்தம், துக்கம் என ஏதேதோ பெயர் அழைத்து, அதன் விளைவில் அவதியுறுகிறோம்

ஆனால் இருப்பதென்னவோ ஒரு அளவுதான். பார்க்கப் போனால் உலகமே ஒரு கைப்பிடி மண்தானே ! அதுவும் எல்லோரிலும் எல்லாரும் எல்லோருக்கும் பங்காகி, வரண்டு கடைசியில், எங்கோ எட்டாம் வகுப்புப் பாடத்தில் நினைப்பு யானை விழுங்கிய விளாங்கனியாமே ! — உள்சதை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய் எஞ்சிய முழு லொட லொட்டையை வெறும் பழக்க

வாசனையில் உயிரின் சாதனையாய்க் கட்டிக்கொண்டு அழுகிறோம், சிரிக்கிறோம், தவிக்கிறோம், உவக்கிறோம், ஒற்றையடி வரப்பில் ஒன்வே டிராஃபிக்.

இருந்தாலும்—

ஆனாலும்—

உண்மையே இதுதான். உண்மையை ஏற்றுக் கொண்டே, அதே மூச்சில் உண்மையின் மறுப்பு; பொய் யோடு நிரந்தர உடன்பாடு; அசுவத்தாமா என்கிற யானை; தேர்ச் சக்கரங்களுக்கு 'மக்கர்' எண்ணெய். உயிருக்கு இழைக்கும் துரோகம்—அதுவே உயிரின் உந்துத லாய் அமைகிறது. 'ஆனாலே' என்பது 'அதனாலே' ஆகிவிடுகிறது.

மிஸ்டர் வாட்ச்மேன் இன்னும் வரவில்லை. அவருக்கு நினைப்பு வரும்போதுதான் அவருக்கு ஆபீஸ் வேளை. வரும் போதே மார்வரை கைகளைத் தூக்கிக்கொண்டு (இந்த தினசரிச் சடங்கில் முழுக் கூம்பலுக்கு கைகளுக்கு வணக்கம் ஏது?) கள்ளச் சிரிப்பு சிரித்துக்கொண்டே வரு வார். ஆமா இதுபோல எத்தனை சாமியைப் பார்த்திருப் பேன்! இனி மேலும் பார்க்கப்போறேன்! இன்னைக்கு இந்த ஐயாவுக்கு மசிஞ்சு கொடுத்தோம்னா பின்னால் வர ஏசண்டுகளுக்கெல்லாம் வழி சொல்லிக் கொடுத்தா மாதிரி யில்லே ஆயிடும்! அப்புறம் நம்ம சைட் பிஸினெஸ் எல்லாம் என்ன ஆவறது? மாந்தோப்புக் குத்தகை, வாரத்துக்குப் பயிர், யூரியா வியாபாரம், சொஸைட்டிக்கு பால் சப்ளை, சம்பாதிக்கிற வேளை போக மிச்ச நேரம் வீண் போகாமே இங்கே சம்பளம். எனக்கு இருபது வயசிலேருந்து நடந்து வர இந்த ஏற்பாட்டை இன்னிக்கு வந்து அவரு மாத்தியெழுத முடியுமா எழுதத்தான் விடலாமா?

நினைவின் ஏக்கம் எப்படி நெஞ்சின் நோக்காடாவே மாறி விடுகிறது. நரம்புகள் ஒன்றை ஒன்று வலிக்கும் பிகுவில் தந்திகளின் மீது மோன கீதம் விளையாடுகிறது.

அங்கங்கே அதன் குங்கிலியம் குபீரிடுகிறது. எந்தச் சமயத்தில் எந்தத் தந்தி அறுந்து விடுமோ? அறும் வேகத்தில் வாத்தியத்தையே சாய்த்து விடுமோ? பயமாயிருக்கிறது. மாரைப் பிடித்துக் கொள்கிறேன்.

மலைச் சாரலில் இருந்து உருட்டி விட்டாற்போல் இருள்படுதா எப்போது இறங்கிற்று? கரும்பட்டில் ஜிகினாப் பொட்டுகள் போன்று மின்மினிகள் ஆங்காங்கே சுடர் சொட்டுகின்றன. மலைக் குன்றுகள் இருள் பொதிகளாய் எப்போது மாறின? அவைகளின் பின்னணியில் பிதுங்கும் வானத்தில் அழுத விழியில் நரம்பு போல் லேசான செவ்வரியின்படர், அரசனின் மேலங்கி போல், இரவின் மடிகள் கம்பீரமான வீச்சில் என்னைச் சுற்றிப் புரள்கின்றன.

'இன்று இதுவரை நீ விளையாடியதுபோதும், நேரமாயிற்று' என்று உணர்த்துவது போன்று இரவு தன் அகண்ட ஆலிங்கனத்துள் பகலை இழுக்கையில், மாலை இரவுள் கடக்கையில் இடையில் எல்லைக்கோடு அழிகையில் பிரும்மசோகம் என்னைக் கவ்வுகிறது. நெஞ்சில் திடீரென அமிர்த கலசம் உடைத்தாற்போல் நெஞ்சு முகட்டை ஏதோ முட்டுகிறது. தென்னங்கீற்றுகளின் வழி அலைந்து வந்து என் மேல் படுவது.

—தேவர்களின் மூச்சா?

—அசுரர்களின் மூச்சா?

பெருமூச்சையடுத்து என் பின்னால் ஆள் கனைப்பு சத்தம் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினேன். ஆபீஸ் அறை வாயிலில் ஒரு உருவக்கோடு நின்றது.

"யாரது?"

ஸ்விட்சைப்போட்டேன், ஆனால் மின்சாரம் இல்லை, இந்தப் பக்கம் இது சகஜம்.

"நகையைத் திருப்பணுங்க."

"உனக்கு நேரம் பொழுதே கிடையாதா?"—என்னையறியாமல் என் குரல் தடித்தது. "இதென்ன பாங்க்கா, உன் வீட்டு மாட்டுக்கொட்டாயா? உன் வீட்டுலே உன் மாடு நீ நினைக்கிற வேளையெல்லாம் கறக்குதா? உன்னை யார் உள்ளே விட்டது?"

"கதவு திறந்திருந்தது. கொஞ்சம் பொறுமையாய்க் கேளுங்க. நீங்க கேட்டுத்தான் ஆவணும்."—அவன் குரலில் மரியாதை குறையவில்லை. ஆயினும் கட்டாயம் இருந்தது. பட்டிக்காட்டானுடைய பிடிவாதம். இவன் மறுப்பை ஏற்கமாட்டான், இவன் செவியில் ஏறாது. என்னைத் திகில் பிடித்துக்கொண்டது. நானோ ஊருக்குப் புதுசு. இவன் கத்தியெடுத்துக் காண்பித்தால் என் கதி என்ன? யார் கீழே கதவைத்திறந்து வைத்துவிட்டுப் போனது? வாட்ச்மேன் ஏன் இன்னும் வரவில்லை?

"இந்தப் பெண் பிள்ளையினுடைய தாலியைத் திருப்பணும்!"

ஓ! இவனோடு இல்லையா? அப்பொழுதுதான் அவன் பின்னால் இன்னொரு உருவம் நிற்பது அறிந்தேன்.

உடம்பு பூரா தலை உள்பட இழுத்துப் போர்த்திய ஒரு மௌனமான மொத்தாகாரம் அல்லது மொத்தாகார மௌனமா?

"இது ஒரு விசேடமான சமயம், நீங்கள் கைகொடுத்தே ஆவணும்."

"நான் உதவறதுன்னா என்ன? என்கிட்டே பணம் கேக்கறையா? முன்னையும் தெரியாது, பின்னையும் தெரியாது. திடீர்னு நடு இருட்டிலே முளைச்சு என் மேலே மரமா ஆடிக்கிட்டு கைகொடுன்னுஎன்னப்பா சொல்றே?"

இருளில் என்னை எட்டிய அவன் சிரிப்பில் கேலி புகைந்தது.

"பணம் கொண்டு வந்திருக்கோம் சாமி! இவ கையெழுத்துப் போடுவா அடையாளத்துக்குக் கவலை

வேணாம். தேவையானா தெரிஞ்சவங்களையும் கூட்டி வந்தாலும் போச்சு."

"எல்லாம் நாளை வா..."

"அப்படிச் சொல்லக்கூடாது. இன்னும் அரை மணி நேரத்திலே இவ புருஷனை ஆஸ்பத்திரியிலேருந்து மீட்கணும்."

எனக்கு திடீரென கைகால்கள் ஓய்ந்தன. நாற்காலியில் சாய்ந்தேன். தலையில் ஒன்றுமே புரியவில்லை. இந்த ஊர் புரியவில்லை. இந்த ஊர் பாஷை, லேவாதேவி, மனிதர்கள் எல்லாமே இப்படித்தானோ!

"சித்தே நான் சொல்றதே செவி வாங்கிக்கங்க: நமக்கு நேரமில்லே."

சரி, இனி தப்ப வழியில்லை. 'நமக்கு' எனும் பிரயோகத்தில் என்னையும் தங்கள் காரியத்துக்கு உடந்தையாக்கிக் கொண்டு விட்டார்கள்.

"இந்தப் பெண் பிள்ளை நமக்கு எதிர்வீடு. ஆறு மாதத்துக்கு முன்னர் இவ புருஷனை ஆஸ்பத்திரியில் சேர்த்தது. அதென்ன ஜுரமோ தெரியல்லேங்க-மாயக் காய்ச்சல் விடாமல் மழுவாய்க் காயுதுங்க. வீட்டிலிருக்கிற பண்டம் பொருளெல்லாம் வட்டிக் கடைக்குப் போயாச்சு. காய்ச்சல் டிகிரி இன்னும் இறங்கிட்டில்லே. கடைசிலே வைக்க வீட்டில் ஏதாச்சுமில்லே. நாங்கள் எல்லாம் என்னங்க பயிர்த் தொழில்; அன்னாடக் கூலிக்காரங்க.

ஓஹோ! வாட்ச்மென் வந்து விட்டாரா?

"சரி! போய் காஷியரைச் சாவியோடு வரச்சொல்—"

காஷியர் 'கடு கடு' முகத்தோடு வந்தார்.

"சார், உங்களுக்கு இந்த ஊரைத் தெரியாது. கொஞ்ச இடத்தைக் கொடுத்தால் குளம்பு, நகம், கொம்பு கூடப் பிரிக்காமல் முழுங்கிடுவா. நீங்கள் இப்படித்தான் 'இவாளி

டம் நல்ல பேர் எடுப்பதாக எண்ணம். ஆனால் நான் எங்கள் யூனியனுக்கு எழுத வேண்டியதுதான்—"

"அதெல்லாம் பின்னால்னா? இப்போ நகையை எடுப்போம்."

திடீரென்று சொல்லி வைத்தார்போல் விளக்குகள் தாமே ஏற்றிக்கொண்டன. திடீரென இரவின் இருள் 'திகு திகு' வென எரிந்தது. இதுதான் சகுனமா ?

"பணத்தை எப்படியோ பிரட்டி வந்துட்டோமுங்க. குறையா இருந்தால் வட்டியைப் பார்த்துப்போடுங்க. நீங்க மனசு வெச்சா உங்களால் ஆகாத காரியமா ? ஏழை மக்கள் வயத்துல பாலை வாருங்க"

அவள் கையெழுத்துப் போடும்போது மூக்கு நுனி கூடத் தெரியவில்லை. அவள் இழுத்துப் போர்த்திக் கொண்டிருந்த அடைப்புக்குள் அவ்வளவு பத்திரமாய் இருந்தாள்.

தாலியை உள்ளங் கையில் அமுக்கிக் கொண்டு 'விடு விடு' வென மாடி இறங்கிவிட்டாள். அவளுக்கு வாயாக வந்த ஆளும் அவளோடு மறைந்தான். காஷியர் மொண மொணத்துக்கொண்டே போனார். பின்னாலேயே வாட்ச் மென் பக்கத்தாத்துப் பாட்டியுடன் பேசப் போய்விட்டான். இடம் திரும்ப வெறிச்சாயிற்று.

நான் விளக்கை யணைத்தேன், எனக்கு வெளிச்சம் வேண்டியதில்லை. மொட்டை மாடியில் வானம் நக்ஷத்திரக்குடை பிடித்தது.

பிறகு அவள் என்னவானாள் ? அவள் புருஷன் உயிர் அவள் தாலி பாக்கியத்திற்குக் கட்டுப்பட்டதா ? நான் தெருவில் போகையில் அவள் உடல்வாக்கில் எந்த ஸ்திரீ உருவம் என்னைக் கடந்தாலும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு—

இவளேதான் அவளோ ?

என அதிசயிப்பேன். அதுவே ஒரு கெட்டப் பழக்கமாய்...

அவள் விலாசம் பாங்க் புத்தகத்தில் பதிவாகி இருக்கிறது. என்றாலும் அங்குப் போய் அவளைப் பற்றித் தெரிந்து கொள்ள பயம். நான் அஞ்சும் உண்மை என் முகத்தில் வெடித்து விட்டால்—?

தேடற் பொருளின் பொருளே முகம் காட்டாது மூட்டும் இந்த இன்பத் திகைப்புத்தானோ ?

இவளோ ?

—அவளோ ?

—இவளோ ?

★

# 8. ஏன்?

அன்றும் என்றும்போல் தான் விடிந்தது.

—இல்லை. நான் தூங்கிவிட்டேன். விழித்தபோது சாளரத்து நிழல் எதிர்ச்சுவர்மேல் கிரணத்தூலங்களில் அணுத்தூள்கள் புகைந்து பிசைந்து கொண்டிருந்தன. ஏனோ விடியிருளில் கண்ணயர்ந்துவிட்டேன்.

ஒரு வயது தாண்டியபின், தூக்கம் விழிப்பு தனியென்று வேளை உண்டோ? நேரத்தில் தூக்கம் கிட்டினவரை லாபம். இரவு மிச்சப்பொழுதெல்லாம் படுக்கையில் புரண்டவண்ணம் குருட்டு யோசனைக்குப் பலிதான்.

—அம்மா என்னை உண்டாயிருக்கையில் அவள் உச்சி மண்டையில் பல்லி விழுந்திருந்தால். நான் ஒரு மில் முதலாளியாயிருப்பனேல்லோ?

—இன்று தமிழ்நாடு குலுக்கல் சீட்டு முதல் பரிசு எனக்கு விழுந்தால் (இன்னும் சீட்டுக்கூட வாங்கவில்லை), விழுந்ததும் முதல் காரியம் உத்தியோகத்துக்கு முழுக்குப் போடணும். காலையில் Boss அறைக்குள் நானே போய் (தபாலிலேயே அனுப்பிவிட்டால் அந்தச் சிரமம் கூட ஏன் என்று தோன்றவில்லை; அப்பவும் அவன் மூஞ்சியில் முழித்துத்தான் ஆகணுமோ? அதுதான் பேனாவம்சத்தின் சாபம்) Mr So and So—உங்கள் பேர் மறந்துபோச்சு. இந்தாங்கோ கால் கடிதாசு—" என்று மேஜை மீது வீசி விட்டு, எதிரே கால்மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு...

இதுபோல் பகற்கனவில் நான் பிறவி நிபுணன். எழுத்தாளனில்லையா? ஏழெட்டுத் தொகுதிகள் என் எழுத்து அச்சாகியும் பார்த்துவிட்டேன், சொல்ல வந்தது என்னவெனில் தூக்கம் போனாலும் யோசனைகளுக்குக்

குறைவில்லை. அண்டாவைத் தூக்கிச் செம்பில் போட்டால் என்ன?

கிழக்கு மேற்கு ஆகாதா? பார்க்கப் போனால், எல்லாம் பேர்கள்தானே! ஊசிக் காதில் ஒட்டகம் நுழையாது என்று கணக்கு? ஒன்று ஊசிக்காது பெரிதாயிருக்கணும். அல்லது ஒட்டகம் சின்னதாயிருக்கணும் அவ்வளவுதானே!

கதைக்குதவாது. ஆனால் இதுபோன்று கவலைகள் யாரையும் ஒருசமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் உறுத்தும் உறுத்தியிருக்கும் என்பது உறுதி.

மாடியிலிருந்து இறங்க ஆரம்பித்தேன்.

எனக்கே சற்று வியப்புத்தான். இவ்வளவு நேரம் தாண்டிய விழிப்பு எனக்குப் பழக்கமில்லை. ஞாயிற்றுக் கிழமை கொண்டாடுகிற ஆசாமி நான் இல்லை. அன்று வீட்டில், யாரும் எழுவதிலிருந்து, காப்பி, குளியல், சமையல், சாப்பாடு எல்லாமே நேரம் தள்ளிப்போகும். அன்று எந்தக் காரியத்திலும் சோம்பல் வழியும். அன்று பையன்களுடன் அவளும் சேர்ந்துகொண்டு விடுவாள். "ஆமாம் எங்களுக்கு வயசாச்சு. தூக்கம் கெட்டால் நான் பொறுப்பா! ஓடாய் உழைச்சு இத்தனை நாளைக்கு என்னத்தைக்கண்டேன்? மனுஷான்னா ஒருநாள் கண் அசராதா என்ன! ஆபீஸ் இல்லை. அதற்காக வீட்டில் ஆபீஸ் நடத்தணுமா என்ன!"

நான் வாய்திறவாமலே முன்கூட்டியே சவால்.

பல்விளக்கி, முகம் கழுவி சமையலறையில் 'நுழைகை யில் காப்பி கலந்தாகிவிட்டது. பையன்கள் அம்மாவைச் சுற்றி உட்கார்ந்திருந்தார்கள். ஒரு அடுக்கில் ஒரு மட்டாய் கலந்து அவரவர்க்குக் கரண்டியில் அளந்து விட்டுக் கொண்டிருந்தாள்.

மோஹினி.

என்னைப்பார்த்ததும் எல்லோர் முகத்திலும் ஒரு வியப்பு. ராகுவா, கேதுவா, இந்த தேவ பந்தியில் இவன் எங்கு முளைத்தான் என்கிற மாதிரி.

''இந்தாங்கோ உங்களுக்கும்—''

மாட்டுக்குக் கழுநீர் வைப்பது போன்ற இந்தக்கலவை எனக்கு அறவே ஆகாது. தினமும் கலைந்த தூக்கமாத லால், தினமும் பால் வாங்குவது நான்தான்.

நானே காப்பி போட்டு இறக்கி, என் காப்பியை நானே கலந்துகொள்வேன்.

சர்க்கரை மட்டு.

பொன்னிறம்.

ஆவி பறக்க—

மேல் துண்டால் தம்ளரை இருகைகளாலும் பிடித்துக் கொண்டு...''நெருப்புக்கோழியா? ஏற்கெனவே அல்ஸர் கொண்டாடறேள் இப்படிக் குடித்தால் வயிறு என்னத் துக்கு ஆறது?

பரிவு தானமா? கேலியா? ஆத்திரமா?

பேசாமல், என் காப்பியை எடுத்துக் கொண்டு ஒதுக்க மாகச் சுவரோரம் குந்திட்டு உட்கார்ந்து கொண்டேன்.

ஜன்னலுக்கு வெளியே வாழைக்குலை, காலை வெயிலில் பளிச்—

குலை நுனியில் பூண்போல் பூ இன்னும் மடல் அவிழ வில்லை.

அட, இதுவரை எப்படி என் கண்ணில் படவில்லை.

ஆமா—பட்டதால் என்ன லாபம்? நட்டது நான் தான். வளர்த்தது நாங்கள்தான். ஆனால்.

(ஏன் ஸார், வீடு யாருது? இடம் யாருது? கன்னை நான் வைக்கச் சொன்னேனா, பூச்சிப் பொட்டுக்கு இடம்

கொடுத்துண்டு? எங்கள் நரேஷ் உங்கள் வீட்டில்தான் குடியிருக்கான். பச்சைக்கும் தண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் பச்சைப்பாம்பு புடுங்கித்துன்னா யாருக்கு யார் 'ஜவாப்' சொல்றது வோய்?)

வீட்டுக்காரரான் நியாயமே தனி. அதுதான் இந்நாளில் எடுபடும் நியாயமும்கூட. நாங்கள் வாடகைக்குக் குடியிருப்பவர்கள்தானே? எதிர்பாராமல் விருந்தாளி வந்துவிட்டால் ஒரு இலை நறுக்கப்போமா?

"ஓய், நீர் இப்படி இலையை நறுக்கினால் குலை போடுவது எப்பவோய்? உங்கள் சுவரோரம் முளைச்ச துன்னு நீர் என்ன எதிர்பார்க்கிறீர்?"

சொல்லெறிகளைத்தான் என்னால் எதிர்பார்க்க முடியும்.

இரவோடு இரவாய் எவனாவது குலையை அறுத்துப் போனாலும் போகலாம். ஆனால் நாங்கள் ஆசைக்கும் ஒரு இலையை அடைய முடியாது.

ஆசை, ஹூம்-படவேண்டாம் என்று யார் சொன்னது? படேன், நிறையப்படேன், அதில் கூடவா தரித்திரம்?

நாங்கள் வெச்சது எங்களுக்கு உபயோகமில்லை என்கிற ஆத்திரத்தில் அடிமரத்தில் கத்தியைப் போடத் தான் தோன்றினாலும் மனம் வருகிறதா? அல்ல, கருகிப் போகட்டுமேன்னு காயப்போட மனம்தான் கல்லாகிறதா?

ஆனால் தான், பிழைக்க, அது இனி எங்களை நம்பி யில்லை. அது தலையெடுத்தாச்சு குலை தள்ளியாச்சு. அது இனி வாழையடி வாழையாகப் பெருகிக் கொண்டே போகும்.

போதும் போதாத்துக்குக் கிராமத்திலிருந்து சின்னான் வந்து சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

'இது தனி ஜாதி, சாமி. நீங்களே பார்க்கப் போறீங்க. ஏறக்குறைய தென்னைமரம் ஓசரம், தடுமனுக்கு வளரும். குலையில் காய் ஒன்னு கைமுழம் அடங்காது.

தாவர விஷயங்களில், சின்னான் பேச்சுக்கு எதிர் பேச்சு கிடையாது. அவன் சொல்லுக்கே அவை பயப்படும் என்று ஒரு வழக்கு. அவ்வளவு அனுபவம்; அவ்வளவு பலிதம்.

உதவாத பிள்ளைமேல் ஆசையும் ஜாஸ்தி.

சென்னையின் நெருக்கடி வாசத்தில், ஒரு நடுத்தரக் குடும்ப வசதியில் (அது என்ன வசதியோ? ஒவ்வொன்றாய் இழந்து கொண்டே, எல்லாவற்றையும் இழுத்துப் பிடித்துக் கொண்டிருப்பதாய் நினைப்பு) வீட்டுள், கண்ணுக்குக் குளிர்ச்சியாய், இலைப்பச்சையின் தரிசனம் கிடைப்பதே பேறு இல்லையா? இதுவே சிரமத்துக்குப் பரிசு என்று ஏன் சமாதானம் ஆகக் கூடாதா? ஆறுதலுக்குத்தான் வழியில், நாட்டில், உற்ற பழமொழி களுக்குத்தான் குறைவா?

சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்.
கிட்டாதாயின் வெட்டன மற.
மனம் உண்டானால் இடம் உண்டு.
உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா?
திருடன் ராஜ முழி முழிக்கற மாதிரி.
போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து.
யானைக்கு ஒரு காலம், பூனைக்கொரு காலம்.

—மூக்கு விளிம்பில் பட்டுப் 'பொத்தென்று' ஏதோ கீழேவிழுந்தது.

ஹிந்து ஞாயிறு அனுபந்தம்.

ஓ; ஸாரி!'
ஓ! ஞாயிறு அன்று மரியாதைக்கும் 'அம்பேல்' தானா?

மூக்கைத் தடவிய வண்ணம் சுற்றும் முற்றும் பார்க்கிறேன்.

மூத்த பையன் முகத்தில் அசடு வழிந்தது.

ஆனால் எனக்கு ஏன் இம்மிகூட கோபம் இல்லை? எனக்கே ஆச்சர்யம். எனக்கு பேர் என்னவோ 'ஸாச்ர்ர்ர்!—வாணம் கட்டி விட்டு, குடும்பம் அப்பப்போ என்னை நசுக்கி, குடும்பம் தன்னிஷ்டத்துக்கு என்னைப்பதப் படுத்தி விட்டதா ?

பேப்பரைப் பிரிக்கிறேன். அப்போத்தான் சில தினங்களுக்கு முன் மறைந்த கான் அப்துல்லாகானைப்பற்றி அவருடைய சிஷ்யை எழுதிய கட்டுரை எடுத்தவுடன் கண்ணில் படுகிறது. முதல் வரிகளிலேயே கட்டுரையில் ஆழ்ந்து போனேன். கான்ஸாஹிப்பின் ஸான்னியத்யம் வரிக்கு வரி பரிமளிக்கத் தொடங்கிவிட்டது. எவ்வளவோ வசதிகள், கௌரவங்கள் விரல் சொடுக்கில் காத்திருந்தும், மனுஷன் தன்னிச்சையில் வரித்துக்கொண்ட எளியவீடு, எளிய வாழ்க்கை, ஆரோக்யமும் சுத்தமும் நிறைந்த அவருடைய பழக்க வழக்க பாவனைகளில் அவர் காட்டிய ஆர்வம் மட்டுமல்ல, சிஷ்யர்களிடமும் கடைபிடித்த கண்டிப்பு—படிக்கப்படிக்க இன்பம், சுருக்க முடிந்துவிட்டதே! கட்டுரைதான் சின்னதா, அல்லது ருசி காட்டி என் பசிதான் பெரிதாகி விட்டதா ?

கட்டுரையினூடே எனக்கு ஒன்னு புலனானது. அவருடைய அப்பியாசம். அப்பியாச மூலமாக போதனை. ஒழுக்கம்; அக, புற சுத்தத்தின் தோற்றுவாயாக ஸங்கீதம்.

அடுத்துத் தோன்றுகிறது. பேச்சு மூச்சுமாய், நம் மூதறிஞர்கள், மஹான்கள் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட லக்ஷியம்—தெய்வமோ, நேசமோ கலையோ—எதுவாயிருப்பினும் அதற்கு முதற்படி, அல்லது அதில் அவர்களைக் கொண்டு போய்விட்ட முதல் வழி, உடல், உடை, மன சுத்திதான்.

குற்றாலத்தில் நீர்வீழ்ச்சியின் அடிவாரத்தில்; இந்தக் கல்லில்தான், வேட்டிக்கு ஜிப்பாக் கோட்டுக்கு ராஜாஜி சோப்புப்போட்டு முக்கி அலசினார், என்று பார்த்தவர் சுட்டிக்காட்ட கேட்கவே மகிழ்ச்சி— அந்தக்கல்லைத் தரி சிக்கவே ஒரு இன்ப அச்சத்தில் மனம் தோய்கிறது; தன் காரியத்தைத்தானே பார்த்துக் கொள்வதில் இருக்கும் ஒரு சுதந்திரம், சிரத்தை—அதுவே ஒரு உயர்ந்த பக்குவ நிலைதான்.

ராஜாஜி, காந்தி, ராமகிருஷ்ணர், அரவிந்தோ, நேரு —பெயர்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அனை வருமே, சுத்தமானவர்கள்.

''ஆமாம், இவர்களின் கீர்த்தி காரணமாக இவர்கள் சுத்தத்தைப் புகழ்கிறீர்கள்!''

புகழ் அடைந்தபின் அவர்கள் சொல்லெல்லாம் வேத வாக்கு தான். செயல் எல்லாம் வெண்கலம் தான் என்று என் பிள்ளைகள் தர்க்கம் புரிவார்கள்.

ஆனால், இவர்களின் சுத்தமான பழக்க வழக்கங் களான முதல் லக்ஷியத்தின் விளைவாக மற்ற பெருமைகள் தாமே வந்தடைந்தன என்று நான் சொல்வேன்.

உடல், உள்ளத்தின் கோயில்.

உடல் சுத்தம் வழி மனத்தூய்மை.

மனத்தூய்மை காட்டும் முறையில் அவரவர் லக்ஷியத்தை, அழகைப் பேணி,

ஆத்மதரிசனம்.

> "You are talking through your hat; we can't understand you!" ரொம்பசரி. உங்களுக்குப் புரியாது. உங்களுக்குப் புரிந்துகொள்ள இஷ்ட மில்லை. இந்தத் தலைமுறைக்குச் சரித்திரத்தின் பார்வை தன் மேல் படவேண்டும் என்கிற ஆசையே இல்லையே!)

இந்தத் தர்க்க ரீதியின் அடிப்படையில் அனைவருமே சௌந்தர்ய உபாஸகர்கள். தன் புற, அக, ஆத்ம, அந்தக் கரணத் தூய்மையின் வெளியீட்டாகக் கான்ஸாஹிப் சங்கீதத்தை அனுஷ்டித்—

"அப்பா! நரசிம்ம மாமா வந்திருக்கார்!" காயத்ரீ அறை கூவினாள்.

சிந்தனை வெடுக்கென கலைந்து, சூழ நோக்கினேன்.

ஜன்னலுக்கு வெளியே ஆடும் வாழையிலையின் பச்சை மேல் சூரியன் விழுந்து இலை அப்படியே தங்கத் தகடாய் மாறுகையில்—இதுதான் பசும் பொன்னோ?

என்னுள்ளும் பொன்னொளி புகுந்தது.

தரையில் இருகைகளையும் ஊன்றி மெதுவாய் எழுந்தேன். இத்தனைக்கும் நான் உடல் பருமனில்லை. ஆனால் ஏதோ அழுத்திற்று, அசதியுமில்லை; வயசு? அல்லது, என்னில் இடம் கண்டுகொண்டே ஒளிக்கதிரின் பசும் பொற்கனமோ?

திடீரெனச் சமையலறையில் இரைச்சலும் பேச்சும் அடங்கிப்போச்சு. என்ன ஆச்சு? என்னைச் சூழப்பார்க்கிறேன். எல்லோரும் என்னை ஒரு மாதிரியாகக் கவனிக்கிறார்கள். எல்லோர் முகத்திலும் ஆச்சரியம். என்னையுமறியாமல் ஏதோ அசம்பாவிதமாயிருக்கிறேனோ?

பிறகுதான் உணர்கிறேன். மண்டையில் ஏதோ குலுகுலுப்பு. என் தலைமேல் ஏதோ உட்கார்ந்து கொண்டிருந்தது. நான் வாசற்படி தாண்டும்வரை தலைமேலேயே இருந்து, இடது தோளுக்குத்தாவிற்று, அங்கிருந்து என் முகத்துள் உற்றுப்பார்த்து விட்டு.

"ட்வீக்! ட்வீக்!!"—பறந்தோடிவிட்டது.

என் தலைச்சடையைக் கூடு என்று கொண்டு விட்டது போலும்!

நான் முன்கட்டுக்குச் செல்கையில், கண்ணன் என் காது பட, "நமக்கு இனி பன்னிரண்டு மணிவரைக் கவலையில்லை. "டேய் சேகர், விவித் பாரதி, Full Volume திருப்புடா!"

நரசிம்மன் குரோம்பேட்டையிலிருந்து வருகிறார். செகரேட்டேரியட்டில் வேலை. மூன்று மாதங்களுக்குமுன் மார்க்கபந்து மூலம் பரிச்சயமானார். சினிமா— நான் அந்தக் காலத்தில் பார்த்த படங்கள், கேட்ட குரல்கள் (தேவதாஸ் பருவா, ஸெய்கல், கண்ணன் பாலா) பாட்டுகள் (மானமெல்லாம்போன பின்னர் வாழ்வதுதான் ஒருவாழ்வா') அதில் ஆரம்பித்து, ஸங்கீதம், இலக்கியம், வேதாந்தம் பேசிக் கொண்டேயிருப்போம். நேரம் போவதே தெரியாது. நான் பேசிக் கொண்டேயிருப்பேன். அவர் கேட்டுக் கொண்டேயிருப்பர் நேரமாச்சு என்று தானாகச் சொல்லமாட்டார். நேரமாகிவிட்டதே என்று வற்புறுத்தினாலும் தங்கமாட்டார்.

"—வாசலிலேயே காத்திண்டிருப்பா; சாப்பிட மாட்டா."

"ரெண்டுபேரும் வயசானவா. நான் ஒரே பிள்ளை, பெற்றதுக்குக் குறைவில்லை ஆனால் தக்கவில்லை. போயே ஆகணும்."

காப்பிகூட அருந்தமாட்டார்.

"இன்று ஏகாதசி. நான் மாத்வன் பாருங்கோ"

அல்லது,

"கொஞ்சம் ஹெவியாயிருக்கு, மன்னிச்சுடுங்கோ"

இதுபோல் ஏதோ.

அது மரியாதையா? கூச்சமா? கொள்கையா?

ஏதோ ஒரு சாக்கு.

எங்கள் முதல் சந்திப்பில், நான் கன்யாகுமரியை முதன்முதலாகத் தரிசித்தபோது என்னில் நேர்ந்த மன எழுச்சிகளை நான் விவரிக்கக் கேட்டு, அவர் அடுத்தடுத்து வரத் தலைப்பட்டு, எங்கள் பழக்கம் முதிர்ந்தது.

கண்ணன் : ("அறுவை !")

ஆனால் கண்ணனுக்காக நாங்கள் தளர்ந்துவிட முடியுமா என்ன ?

ஒரு சமயம் சேர்ந்தாப்போல் பத்து நாட்கள் ஆளைக் காணோம்.

எனக்குக் கொஞ்சம் கையொடிந்த மாதிரிதான் இருந்தது. என் சங்கடம் பையன்களுக்குக் குஷி. அவர்களுக்குள் தோளுக்குத்தோள் இடித்துக் கொள்வதும், ரகஸ்யமாய்க் கொக்கரித்துக் கொள்வதும்...

காயத்ரீ கீச்சுக்குரலில், "எப்போ வருவாரோ எந்தன் கலிதீர—".

ஆத்திரத்தில் அவளை ஒரு அறைகூட வைத்துவிட்டேன். பிறகுதான் தெரியவந்தது கேலியில்லை; பள்ளிக்கூடப் பாட்டாம். ஒப்பிக்கணுமாம். கேட்கணுமா ? அவளை மன்னிப்புக் கேட்காத குறை. சாக்லேட், அவித்த வேர்க்கடலை, சேப்பங் கிழங்கு ரோஸ்ட், மாட்டினி... மூன்று நாள் லஞ்சவிழா.

பிறகு திடீரென ஓரிரவு—

படுக்கை கூட விரித்தாகி விட்டது. வாசற்கதவு தட்டல். திறந்தால், நரசிம்மன் நின்று கொண்டிருந்தான், கையில் பலகைபோல் எதையோ தாங்கிக் கொண்டு.

"ஸார் ஒரு நிமிஷம். மாமியையும் வந்து நிற்கச் சொல்லுங்கோ. கன்யாகுமரியிலிருந்து நேரே இங்கேதான் வரேன்—"என்று, அவர் கையிலிருந்த படத்தை அவள் கையில் கொடுத்துவிட்டு, சாஷ்டாங்கமாக இருவரையும் நமஸ்கரித்து விட்டு உடனே போய்விட்டார்.

"நல்ல பையன்" என்றாள், படத்தை எட்டப் பிடித்துக் கொண்டு (வெள்ளெழுத்து ஆனால் ஒப்புக் கொள்ளமாட்டாள்), ஏற இறங்க அதைக் கணித்தபடி. படத்திலிருந்து கன்யாகுமரி சிரிக்கிறாள்.

—படத்துக்குப் போட்டே கொண்டுவந்துவிட்ட கண்ணாடியும் frame உம் அல்லவா வேலை செய்கிறது!

இல்லையேல் சுருட்டி எங்கேனும் பெட்டியடியில் காலண்டராகவே கிடக்கும்; என்றேனும் ஒரு நாள் பையன்கள் பெட்டியை ஒழிக்கும்போது, இதைத் தூக்கி யெறிந்துவிட்டு அந்த இடத்தில் ஒரு சினிமாஸ்டார் படத்தைப் பத்திரப்படுத்தும்வரை.

“பையர் என்று சொல்லு, அவருக்கு நடக்கிறது முப்பத்தி அஞ்சு”

“அட, நம்பவே முடியவில்லையே, இருபத்தி அஞ்சுக்கு மேல் மதிக்கத் தோணல்லே. கலியாணம் ஆயிடுத்தா? குழந்தை ஏதாவது...”

அவ்வளவுதான். எசமானியம்மா எங்கோ track மாறி யாச்சு. அவளை ஸிக்னலில் போட்டால், தினம் நாலு விபத்துக்குக் குறைவில்லை.

தினத்தைவிட நரசிம்மன் இன்று இன்னும் நேர்த்தி யாகத் தோன்றுகிறார். சோபாவினின்று எழுந்து அவர் என்னைப் புன்னகையோடு வரவேற்கையில், பேப்பர்லாந் தருள் விளக்கேற்றினாற்போல் முகம் வெளிச்சமாகிறது. அவரைக் கையமர்த்தி நானும் அருகில் அமருகிறேன். நாங்கள் ஒருவரையொருவர் பார்த்தபடி ஒருவரில் ஒருவர் திளைத்திருக்கிறோம். நெஞ்சோடு நெஞ்சு கிளத்தல் என்பது இதுதானா? இதயக் கலசத்தில் அமுதம் விளிம்பு வரை துளும்பி நிற்கிறது.

ஆனால் இன்று எல்லாமே நேர்த்தியாகத்தானிருக் கின்றன. அறையுள் அடிக்கும் சூரியன்கூட இன்று ஆகாச கங்கையில் குளித்துவிட்டுத்தான் வந்திருக்கிறான். வெளிச் சம் அவ்வளவு துல்லியம். அறைச்சுவர்கள், மெத்தை வைத்துத் தைத்தாற்போல, பட்டுபட்டாய், மிருதுவாய் 3-Dயில் பிதுங்குகின்றன. காலடியில் தரையில் மொஸெய்க் கோலம் கூச்சத்தில் அழகோடு பின்னி, உயிரோடு நெளி

கின்றது. கண்ணை இதுகாறும் மறைத்த சதையோ, செதிளோ தானே உரித்து உதிர்ந்தாற்போல, பார்வையில் தனித்துலக்கம் உணர்கிறேன்.

''ஏன் ஒரு மாதிரியாயிருக்கேள்?''...நரசிம்மனின் குரல் பரிவில் விளக்குத் திரிபோல் சொடசொடக்கியது.

''அப்படியா? எனக்குத் தெரியல்லியே'''- என் உடம்பைப் பார்த்துக் கொள்கிறேன். ''என்றைக்கும் போல் கிழவனாய்த்தான் இருக்கேன்.?''

''எனக்குச் சொல்லத் தெரியவில்லையோ என்னவோ?'' சட்டென மனதைத் திடம் பண்ணிக் கொண்டவறாய்: ''உங்களை இன்று ஒரு கேள்வி கேட்கப்போகிறேன்,''

மின்விசிறி ஆவேசம் கண்டமாதிரி விசை கூடுகிறது.

''என்ன, விடுகதையா?''

''உங்களுக்கு எப்படியோ? ஆனால் எனக்கு வேடிக்கையாக இல்லை''—அவர் குரல் தடிக்கவில்லை. அதில் ஏதோ சோகம்தான் துளித்தது.

''என்னை வருடங்களாக உறுத்திக்கொண்டிருக்கும் கேள்வி. நான் மதிக்கும் அறிஞர்கள், மூதோர்கள், பிரமுகர்கள் எல்லோரையும் கேட்டுவிட்டேன். ஆனால் எனக்குச் சமாதானம் இல்லை. பாதிப்பேர் ஏதோ சொல்லி மழுப்பிவிடுகிறார்கள். பலர், சம்பந்தமில்லாமல், தங்கள் பண்டிதத்தைக் காட்டிக் கொள்கிறார்கள். அல்லது. இதென்ன கேள்வி என்று கேலி. நானும் ஒப்புக் கொள்கிறேன். சில விஷயங்கள் அவசியமோ அல்லவோ, நம் முழுச்சிந்தனையையும் அடைத்துக்கொண்டு, ஒரு கேள்வி மறு கேள்விகளை ஒவ்வொன்றாய் விழுங்கி, ஒரே கேள்வியாகத் திரண்டு உருண்டு அதனின்று மீட்சியே இல்லாத அவஸ்தையில் உழல்கிறேன்.''

குருவி ஒன்று ஜன்னல் சட்டத்தின்மேல் குந்திட்டு, வாழ்வின் களிப்புக்குக் கட்டியம் கூறுகிறது.

'ட்வீக்'ட்வீக்'— மக்குமாந்தர்களா! கேள்விகளைக் கேட்டுப் போட்டி போட்டுக் கொண்டிருங்கள். கேள்வியில்லாமல் சந்தோஷமாயிருக்க வழி கேட்டவர்கள்!

என்னைச் சவளி செய்ததா? வேறா?

கேள்விகள் கேள்விகளைத்தான் விருத்தி செய்கின்றன. பாம்புக்குட்டிகள் மாதிரி. ஒன்றை அடித்த இடத்திலேயே ஒன்பது கிளைக்கும். விளைவு ஒன்பது பயம். இன்னும் எத்தனையோ?

பதிலும் பாம்புதான். ஆனால் தாய்ப்பாம்பு. எல்லாக் குட்டிகளையும் தன்னில் அடக்கிய தாய்ப்பாம்புக் கடிதான் விடுதலைக்கடி. சாவுக்கடி அல்ல. உள்ளத்தின் கதவைத் திறக்கும் சாவுக்கடி. ஆனால் அந்தக் கடிவேளை எப்போ வருமோ?

இதென்ன பேத்தல்? இன்று எனக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது?

உருவம், அருவம், உருவகம் எல்லாம் புதுமாதிரிக் கலவையில் கோலம் பின்னிக் குழைகின்றது!

—"ஸார் இந்த உலகம், புவனமே கடவுளின் சிருஷ்டி. கடவுள், ஜீவசக்தி, ப்ரம்மம், பெயர் எதுவானாலும் சரி— ப்ரும்மம் ஏன் சிருஷ்டி பண்ணிக்கொண்டேயிருக்கிறது? சிருஷ்டியின் அவசியம்தான் என்ன? அது சுய நினைப்பில்லாமல் பொறுப்பற்றுச் செயல்படுகிறது என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் சிருஷ்டியில்—நடப்பு, அழிவு உள்படத்தான்— ஒரு லக்ஷணம், நியதி, கோர்வை எல்லாமே தெரிகின்றன. முரண்பாடு என்று நமக்குத் தோன்றுவதுகூட ஏதோ ஒரு முறை, கோட்பாடுக்குக் கட்டுப்பட்டுத்தானிருக்கின்றன. சிருஷ்டியினின்று அதன் ரசங்களை மனிதன் எவ்வளவோ பிடுங்கப் பிடுங்க இன்னும் பெருகிக் கொண்டேதான் போகின்றன. ஆனால் ஓயாமல் நடந்துக் கொண்டிருக்கும் இந்தச் சிருஷ்டித் தொழிலுக்கு ஒரு நிப்பாட்டம், தடுத்தல் நிறுத்தல்

கிடையாதா? ப்ரும்மத்துக்குச் சும்மாவே இருக்க முடியாதா ?''

எனக்குக் கால்கட்டை விரலிலிருந்து ரத்தம், நரம்புகளில் பாய்போல் சுருட்டிக்கொண்டு மேல் ஏறி வருவது தெரிகிறது. செவிகளில் ஆவி பறக்கிறது. கண்ணை இருட்டுகிறது.

நரசிம்மனின் அவஸ்தை புதிதா ? புத்தன், ராமன், மார்க்கண்டேயன், ஏன் இவர்களுக்கும் தொன்றுதொட்ட காலத்திலிருந்து வெவ்வேறு விதங்களில் மனிதனை ஆட்டி வைத்துக்கொண்டிருக்கும் இந்தக் கேள்வி இந்த ரூபத்தில் நரசிம்மனுக்கு வந்திருக்கிறது. அது ஒருவனையும் விடுவதில்லை. சிருஷ்டி மனிதனுக்குத் தந்திருக்கும் புத்தி எனும் ஆயுதம். அவனையறுத்து அவன் பிறனை அறுத்து கூர், கூர், கூராகிக் கொண்டே போகும் தேய்வின் வதையிது.

நரசிம்மன் வியாதிக்கு மருந்து தேடவில்லை, உடலிருப்பதால்தானே வியாதிக்கு இடம், உடலேயில்லாமலிருக்க வழி கேட்கிறார். பிரளயநிலை.

''இந்த நிலையிலிருந்து விமோசனமே கிடையாதா ?''

விமோசனம், விடுதலை — ஹூம் உண்மையில் எவ்வளவு வியர்த்தமான வார்த்தைகள்! நெஞ்சில் நிரவலுக்கு என்ன பகட்டான போர்வை!

கண்டவர் விண்டிலர்

விண்டவர் கண்டிலர்

கண்டவர் விள்ள இயலாதவரை, காணாதவருக்குக் கண்டவரும் காணாதவரும் ஒன்றே.

''சொல்லுங்களேன்!'' நரசிம்மனின் முகம் சிவந்து விட்டது.

''ஏதேனும் சொல்லுங்களேன்! இல்லை, எனக்குப் பதிலே கிடைக்காதா?''

அவர் முகமும் குரலும் எங்கோ தூரத்தில் கேட்கிறது.

என் குரலே என்னுடையதாயில்லை. நானே எதிரொலியாகி விட்டேன். எதனுடைய எதிரொலி?

"ப்ரம்மசிருஷ்டி இந்தப் புவனம், ப்ரும்மத்துக்குக் கண்ணாடி. பிரும்மக் கண்ணாடியில் தன் பிம்பத்தைப் பார்த்து வியந்துகொண்டிருக்கிறது."

என்னிடமிருந்து இந்த வாக்குப் புறப்பட்டதுதான் தாமதம், வானத்தில் சிம்மம் உறுமிற்று. எங்கோ மழை பெய்கிறது.

அல்லது ப்ரும்மகோபம்.

குத்து விளக்கில் திரியை உள்ளுக்கிழுத்தாற்போல்

தெருவில் போய்க் கொண்டிருந்தவனை எதிர்பாராத சமயத்தில்

ஒரு வளைக்கரம் திடீரெனக் கைப்பற்றி உள்ளுக் கிழுத்துக் கொண்டு

வாசற் கதவைப் படீரெனச் சாத்திக் கொண்டாற் போல்

நான் உள்ளுக்கு வாங்கிப் போனேன்.

அறையின் சுவர்கள் என்னைச் சுற்று சுற்று சுற்றின. சுற்றிச் சுழன்று உருகிப் பூமியோடு பிழம்பாகி, பூமி வானுடன் இழைந்து எங்கும் கண்ணாடி தோற்றப் பளிச்சில் பளிங்கு வியாபித்தது.

பூமியின் கோள வளைவின்மேல் ஒரு உருவம் படிப் படியாக எழும்புகிறது. முகம் தெரியவில்லை. முதுகு என் பக்கம். நடன நடையில் அசைந்துகொண்டு—வானுக்கும் பூமிக்கும் மதிலாய் நின்ற பளிங்கில் இதோ முகம் தெரிந்து விடும்.

"அப்பா! அப்பா!!"

என்னை யாரோ தோளைக் குலுக்கிக் கத்தி, விழித்துக் கொண்டேன்.

எல்லோரும் என்னைச் சுற்றி நின்றுக்கொண்டிருந்தனர். நான் சோபாவில் கிடந்தேன். கண்ணன் என் தலையின்கீழ் தலையணையைச் சரி பண்ணிக்கொண்டிருந்தான்.

''என்ன ஆச்சு?— எனக்கு உடம்பெல்லாம் துணியைப் பிழிந்த மாதிரியிருந்தது.

''என்ன ஸார், ஒரேயடியாய் எல்லோரையும் காப்ரா' பண்ணிட்டேள்?''— நரசிம்மனிடமிருந்து பயம் நெடி வீசிற்று.

''என்ன ஆச்சு?''

''என்ன ஆச்சு? திடீர்னு என்ன சார், பேசிண்டேயிருந்தேள், வாயடைச்சுப் போச்சு? கட்டை போட்டமாதிரி, உடம்பில் ஆட்டம், அசைவு, துவளல் ஒண்ணுமேயில்லை, திறந்த கண் திறந்தபடி. இமைக்கவேயில்லை. கண்ணில் focus இல்லை. மாலைமாலையாய் பெருகறது. பார்வையில்லை. வெறிச்சினு ஒரே பாலைவனம். Empty. வேறு எனக்குச் சொல்லத் தெரியல்லே. கண்ணைப் பார்த்துதான் பயந்துட்டேன். கண்ணை இமைக்க முகத்தில் லேசாய் ஊதினேன். பூ உதிர்ந்த மாதிரி அப்படியே சாய்ந்து விழுந்துட்டேள். எப்படி அவ்வளவு லேசாய்ப் போனேள்? அப்புறம் தான் கண்ணனைக் கூப்பிட்டேன்—''

''அப்படியா ?''

ஆனால் எல்லாம் பழைய சுவர்கதான். தென்னன்டைச் சுவரில் அதே பழைய வெடிப்புத்தான். மின்னல் போல் கொடி பிரிந்து ஓடிற்று. கூரையில் ஒட்டடை அலைந்தது.

க் றீ ச்—

ஒன்றும் புரியாமல் எல்லோரும் திகிலில் எதிர் அலறினோம். மின் விசிறியில் அடிபட்டு ஒரு பெரும் சப்தம் "பொத்'தென்று என் மடியில் விழுந்தது.

நொடியில் குருவியின் விழிகளில் கண்ணாடி தேங்கி விட்டது. வாய்மொட்டு லேசாய்த் திறந்துகொண்டது.

"என்ன இது நரசிம்மன்?"—என் குரல் நடுங்கிற்று. எனக்கு அழுகை வந்துவிட்டது. புன்னகை புரிந்தார். என்னிடம் கிடந்த புஷ்பத்தை இருகைகளிலும் எடுத்துக் கொண்டார். அவர் கண்கள் நிறைந்தன.

"இதுதான் நீங்கள் சற்றுமுன் காட்டிய பரபஞ்சக் கண்ணாடி."

★

# 9. மன்னிப்பு

சாயங்காலம் அப்பா பூஜையில் இருக்கிறார். மேல் முண்டை இடுப்பில் கட்டிக்கொண்டு, மார்மேல் கைகட்டி, நான் எதிரில் உட்கார்ந்திருக்கிறேன்.

அம்மா ஒரு ஓரமாய் நின்று கொண்டிருக்கிறாள்.

வெளியே அந்தி கரைந்து இருளுடன் குழைகிறது.

தாழ்வாரத்தில் மெட்டி சப்தம் கேட்கிறது.

நீ சட்டென அறையுள் தோன்றுகிறாய். வந்து அம்மா பக்கத்தில் நிற்கிறாய்.

குத்துவிளக்குகளில் ஆடும் வெளிச்சத்தில், உன் பட்டுப் புடவையில் கருப்பும், நீலமும் விட்டு விட்டு மின்னுகின்றன. உன் முகத்தின் வெண்மை ஜ்வலிக்கிறது. உன் ப்ரஸன்னம் அறை முழுதும் கமழ்கிறது. என் நெஞ்சில் சுடர் ஆடுகின்றது. மன்னி, நீ அம்பாள் மாதிரி யிருக்கிறாய்.

உன் கண்கள் அப்பாவை நோக்குகின்றன. அவை களில் பயமில்லை. சஞ்சலமில்லை.

''என்னை மன்னித்துவிடுங்கள்,''

நீ அப்பாவை நமஸ்கரிக்கிறாய்; உன் தலை குனிகையில், அழுந்த வாரிப் பின்னிய உன் கூந்தல் பளபளக்கிறது. சொருகிய கத்தி போல், கொண்டை யிலிருந்து ஒரு தாழம்பூ மடல் சீறி எழுகிறது.

அப்பா உத்தரணியில் தீர்த்தத்தை ஏந்திக் காத்திருக் கிறார். ஆனால் நீ வாங்கவில்லை, கைகளைக் கோர்த்துக் கொண்டு நிற்கிறாய்.

நீ வாங்கமாட்டாய், நீ வந்தக் காரியத்தின் முடிவு தெரிந்துகொள்ளாது. நீ கேட்பது மன்னிப்பு. ஆயின் உணர்வது வேறு.

உங்களிருவரின் மனோபாவங்களும் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் அதிர்ச்சியில் என் நெஞ்சு 'கிண்'ணென்கிறது. மன்னி, எனக்குப் பயமாயிருக்கிறது. மன்னி, தீர்த்தம் வாங்கிக்கொள். உனக்கு அப்பாவைத் தெரியாது. அப்பா தயை புரியுங்கள்.........

அப்பா புன்னகை புரிகிறார். "நீ ஏன் மன்னிப்பு கேட்கிறாய்?

'எங்களை மன்னியுங்கள்!''

உத்தரணியில் தீர்த்தம் விளிம்பு கட்டி அசைவற்று நிற்கிறது. அப்பாவுக்கு வயதானாலும் கை நடுக்கம் இல்லை. எனக்குத்தான் உடலே உதறுகிறது. கைகளை மார்போடு இறுக அழுத்திக்கொள்கிறேன். மன்னி, நீ தீர்த்தம் வாங்கிக்கொள்ள வேண்டும். இது எனக்குக் கன முக்கியமாகிவிட்டது. மன்னி வாங்கிக்கொள். அப்பா. மன்னியை தீர்த்தம் வாங்கிக்கொள்ளும்படிப் பண்ணு, அம்மா உன்னைத் தியானம் பண்ணுகிறேன்—

—"நீ ஏன் இதில் சம்பந்தப்பட்டுக் கொள்கிறாய்? இதற்கு நீ பொறுப்பு இல்லை. உன்மேல் எனக்கு எந்த விதமான கிலேசமும் கிடையாது.

"அவரை மன்னியுங்கள். எனக்காக அவரை மன்னியுங்கள்.''

"மன்னீ, மன்னீ, உன்னையே நமஸ்கரிக்கிறேன், என் மேல் கிருபை கூர்ந்து எனக்காகவேனும் தீர்த்தம் வாங்கிக் கொள்ள மாட்டாயா?

நீ வாங்கமாட்டாய். ஆசியிலாத தீர்த்தத்தை வாங்கும் உத்தேசம் உனக்கு இல்லை.

அப்பா உங்களைத் தியானம் பண்ணுகிறேன். காலில் விழுந்து கேட்கிறேன். மன்னியுங்கள், உங்கள் மன்னிப்பில் குளிர்ந்து, உங்கள் ஆசியைப் பெற்ற தீர்த்தம் அளியுங்கள்.

ஆனால் அப்பா நீ சிரிக்கிறாய். உன் உடல் சிரிப்பில் குலுங்குகிறது.

உத்தரணியில் ஜலம் குலுங்குகிறது, ஆனால் ஒரு சொட்டுக்கூட சிந்தவில்லை,

உன் சிரிப்பு கொஞ்சம் கொஞ்சமாய் அடங்குகிறது. நீ தொண்டையை கனைத்துக்கொள்கிறாய்.

''அ-ஹெம்-உன் பேர் என்ன?

அப்பா உனக்கு முகம் மறக்காது; சொல் மறக்காது. ஆனால் பெயர் மறந்து போகும் அல்லவா?

''த்ரிபுர ஸுந்தரி.''

எனக்கு மயிர் கூச்செரிகிறது, என்னையுமறியாமல். என் பார்வை பூஜை பக்கம் திரும்புகிறது. அங்கு விக்ரஹம் இருக்கிறது.

ஆ! நீ ஒன்று தெரிந்துகொள்ள வேண்டும். யார் யாருக்கு வாரிசு வந்தாலும் உண்மையின் ரீதியில், அதில் பிரயோஜனம் இல்லை. அர்த்தமுமில்லை. ஏனெனில் அவரவர்காரியங்கள் அவரவருடையது. அவரவர் காரியங்களுக்கு அவரவர் பொறுப்பு. இல்லை காரியங்கூட முக்கியமில்லை. அவன் உன்னை அழைத்தது தவறில்லை. நீ போனதும் தவறில்லை. இரண்டும் முக்கியம்கூட இல்லை. ஆனால் அப்புறம் உள்ளிருந்து வந்த குப்பைக்கூளம் எச்சில் எல்லாம் வார்த்தை என்று கொட்டினதுதான் தவறு. நாக்கைச் சுத்தமாய் வைத்துக்கொள்ளவேண்டும். அது வாக்கின் பீடம்.''

''அவரை மன்னியுங்கள்.''

''ஸுந்தரி நீ என்னைப் புரிந்து கொள்ளவில்லை''— அப்பா நீ மன்னியைப் புரிந்துகொள். நீ அவளைக் கூட புரிந்துகொள்ள வேண்டாம். அவள் வந்திருக்கும் காரியத்தைப் புரிந்துகொள். அண்ணாவுக்காக மன்னி வந்திருக்கிறாள். நீ மன்னித்து விடு.

அம்மா எப்பவோ மன்னித்துவிட்டாள். எனக்குத் தெரியும்; அம்மா நீ மன்னித்துவிட்டையோன்னோ?

''மன்னிப்பு என்பதே கிடையாது. மன்னிப்பு என்பது ஒரு புளுகு. அவரவர் காரியம் அவரவருடையதே என்றான பிறகு, யார் யாரை எதற்கு மன்னிக்கிறது? வாக்குப் பேசுகிறது.

அப்பா !

அப்பா !!

அப்பா !!!

வாக்கு நடந்து கொண்டிருக்கிறது. நான் சொல்வது இப்போது இல்லாவிட்டாலும் உனக்கு ஒரு நாள் புரியாமல் போகாது. எப்பவும், உள்ளிருப்பதுதான் வெளியே வரும். பின்னால் காரியமாய் நேரப்போவது தான் முன்னால் வாக்காய் வரும். யார் தடுத்தாலும், நான் கண்ணையும் காதையும் பொத்திக்கொண்டதாலும் சொன்னது இல்லையென்று ஆகிவிடாது. சொன்னதுதான். வாக்கையோ, வாக்கின் பலிதத்தையோ தடுக்க நீ யார், நான் யார்? இதைப் புரிந்துகொண்டுவிட்டால் யாருக்கும் யார் மேலும் கோபம் வரக்காரணம் இல்லை. நியாயம் இல்லை. எனக்கு அவன்மேல் கோபம் இல்லை.

'லெக்சர்' அடிக்க இந்தச் 'சான்ஸீ'க்கு எத்தனை நாள் அப்பா காத்திருந்தாய்? மற்றவர்களுக்குப் புரிகிறதோ இல்லையோ என்று உனக்கு அக்கரையுண்டோ?

''அப்போது தப்பென்று நேர்ந்து விட்டால் அதற்கு மன்னிப்பு என்பதே கிடையாதா?''

''என்ன ஸௌந்தரி, நான் இவ்வளவு விளக்கியும் சொன்னதையே சொல்லிக்கொண்டிருக்கிறாயே! இதற்கு மன்னிப்பு கிடையாது. இது விதிக்கப்பட்டது.''

''எது விதிக்கப்பட்டது?''

நீ மன்னியை ஆழ்ந்து நோக்குகிறாய். உன் வார்த்தைகள் அளந்து வருகின்றன.

"நீ வந்து இந்தக் குடும்பம் இரண்டாக வேண்டும் என்று."

தீர்த்தத்தைத் தரைமேல் ஊற்றுகிறாய் எனக்கு முதுகு சில்லென்கிறது. மன்னி பேசவில்லை. சட்டெனத் திரும்பி வெளியே சென்றாள். எனக்குப் பொறுக்கவில்லை. நானும் எழுந்து வெளியே வந்தேன்.

ஆனால் உன்னைத் தொடர எனக்குத் தைரியமில்லை. நீ போவதைப் பார்த்துக்கொண்டு நிற்கிறேன். இந்தத் தாழ்வாரம் இவ்வளவு நீளமா? இதுவரை எனக்குத் தெரியவில்லையே! பாதியில் உன் நடை தளர்ந்து சோர்கிறது. சுவரின்மேல் சாய்ந்து முகத்தைக் கைகளில் புதைத்துக் கொள்கிறாய். உன் தோள்கள் குலுங்குகின்றன.

நான் மெதுவாய் வந்து உன் எதிரில் நிற்கிறேன்.
இருளில் உன் முகம் சரியாய்த் தெரியவில்லை.

நீ வீட்டுக்கு வந்ததிலிருந்து இதுவரை உன்னுடன் நான் ஒரு வார்த்தை பேசியதில்லை. ஆனால், இப்படி ஊமையாய் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு நிற்கையில், உன்னோடு பங்கிட்டுக்கொள்ள ஆயிரம் இதய முகடுகள் எழுகின்றன. ஆனால் அவைகளுக்கு வேகம் தவிர உரு இல்லை. ஏது செய்வேன்? என்னென்று பங்கிட்டுக் கொள்வேன்?

திடீரென எனக்கு அடி வயிற்றிலிருந்து குமட்டல் எழுந்தது. வாயைப் பொத்திக்கொண்டு கொல்லைப்புறம் ஓடினேன். "குபுக்......குபுக்......குபுக்......" வயிற்றின் சுருட்டலில் அடி வயிற்றை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டு, குதிரை லாடமாய் வளைந்து மடிந்தேன்.

அப்பா உன்னைக் கரிக்கிறேன்.

அண்ணா உன்னைக் கரிக்கிறேன்.

அம்மா, உன்னைக் கரிக்கிறேன்.
என்னையே கரிக்கிறேன்.
உலகமே கரிக்கிறது.
குபுக் குபுக் குபுக்..................

கண்கள் இருள்கின்றன. நான் உருகரைந்து இரவோடு கலக்கிறேன்.

கப்பு, கிளை, இலை எல்லாம் கழித்த நடுத்தண்டு போல், நடு முதுகின் எலும்புத் தண்டுகள். பிரக்ஞையின் ஓட்டம் மாத்திரம் தெரிகிறது.

அப்பா; நீ கடாத் தலையன்.

உன் சிப்பந்திகள் உனக்குச்சூட்டியிருக்கும் இந்தப் பெயர் காதில் அடிபட்ட பிறகுதான் நானும் கவனித்தேன். அப்பா உனக்கு எவ்வளவு பெரிய தலை! Zoo-வில் சிங்கம் கரடி விளையாட, கூண்டில் கிடக்கும் இரும்புக் குண்டு போலல்லவா இருக்கிறது!

அப்பா நீ இரும்புத் தலைவன்.
நாயனக்காரனுக்குப் புடைப்பதுபோல்
ஆலையின் புகை போக்குக் குழாய்போல்
உன் நெஞ்சுக் கனத்தைத் தாங்குவதற்

கென்றே உனக்கு இவ்வளவு பெரிய கழுத்தா? அப்பா உன் நெஞ்சுக்குள் நீ என்னென்னவெல்லாம் புதைத்து வைத்திருக்கிறாய்? கொஞ்ச நாழியாவே, உன்னை நினைக்கையில் "நீ" என்றுதான் வருகிறது.

மன்னிப்பு புளுகு ஆயின், மரியாதையும் புளுகுதானே! வெளிவேஷம் தானே! மருந்துக் கலப்பில் பாதிக்குமேல் ஜலம். மரியாதையின் கலவையில் பாதிக்குமேல் பயம்.

உன்னெதிரில் உனக்காக வேஷம் போடவேண்டும். உன்னை நிறுத்தி வைத்து அம்பலப் படுத்தும் நெஞ்சரங்கில்கூட எதற்கு இந்த வேஷம்? இங்கே, எனக்கே உன்னை நிறுக்கையில், மரியாதையின் சின்னமான அடைமொழியில்கூட தராசு முள் ஏன் தடுமாறனும்?

அப்பா, உன்னை, உன் 'நீ' வரையில் உரித்து, நீ துவளுவதைப் பார்க்கவேணும்.

அப்பா, நீ ஒரு பெரிய 'ஹம்பக்' வேஷதாரி. நீயே ஒரு புளுகு. எங்கும் வாக்குத்தான் பேசுகிறது; வாக்குத்தான் நடக்கிறது. தடுக்க நீ யார்? நான் யார்? என்று ஒட்டாமல் பேசிவிடலாம். ஆனால், உனக்கு உன் பதவி உன் ஆட்டம் தான் முக்கியம். நீ சொன்னால் சொன்னதுதான், சொன்னபடி நடந்தாக வேண்டும். உன் வாக்கு பலிதமாக வேண்டும். அதானே? உன் வாக்குக்கு யார் பலியானாலும் அக்கறையில்லை. அதானே?

எட்டு கண்ணின்
விட்டெறியல்
உன்
ஸ்வயாகாரத்தின்
ஸதாகார ஸர்வாதிகாரம்
நீ
நெருப்பென்றால் வேகணும். அதானே?
நீயே வாக்காகிவிடப் பார்க்கிறாய்.
வாக்கைச் செலுத்தியும் உனக்குப் பழக்கம்.
"உனக்கு ஆறுமாதம் சிறை".
"உனக்கு மூணு மாதம் காவல்".
"உனக்கு நூறு ரூபாய் அபராதம்"

உனக்குத் தீர்ப்புகள் விதிக்கத்தான் தெரியும். மன்னிப்பைப் பற்றி என்ன தெரியும்?

அப்பா, முழுக்க முடியாவிட்டாலும், உன்னைக் கொஞ்சமாவது என்னால் புரிந்து கொள்ள முடியும். நான் அசடு இல்லை. எப்படியும் உன் வித்துதானே! புரிந்த வரையில் புரிந்துகொண்டதுதானே!

"பென்ஷன் வாங்கியும் உன் உத்யோக முறை உன்னை விட்டுப் போகவில்லை. நீ விடவும் மாட்டாய். அதனால்தான் வீட்டிலும் 'கோர்ட்டு' நடத்துகிறாய்.

அங்கு உன் பதவியின் சின்னம் கறுப்பு அங்கி. இங்கு பூஜை எனும் வேஷம் பூண்கிறாய்.

அடேயப்பா, என்ன ஆடம்பரம், என்ன படா டோபம்! அம்பாள் தன்னை வளர்க்க உன்னை வெள்ளி விமானம் கேட்டாளா? உட்கார்ந்தால் தலை உயரத்துக்கு இரு பக்கங்களிலும் வெள்ளிக் குத்து விளக்குகள் கேட்டாளா? வெள்ளியில் அபிஷேகப் பாத்திரங்கள், ஆராதனை சாமான்கள், யானைத் தலை பெரிது வெள்ளிக் கிண்டி, தேங்கிய அகிற் புகை, பழனி விபூதி மணம், சாமரம், அமர்க்களம் தமுக்கடி.

உனக்கு செளகரியங்கள் இருக்கின்றன. காக்ஷி நடத்து கிறாய். இல்லாதவன் என்ன செய்வான்? அவனுக்குத்தான் உன்னைவிடக் கடவுள் வேண்டியதிருக்கிறது.

ஆனால் நீ அம்பாளை வணங்கவில்லை.

நீ வழிபடும் தெய்வம் அதிகாரம்.

சூரபத்மம்.

ராவேணசுவரம்.

ஆண்டவன் தலையில் கை வைக்கணும்.

உன் பூஜையில் இநதத் தோரணைதான் எனக்குத் தெரிகிறது. நீ பூஜை மணியை ஆட்டுகையில், சேவகனை வரவழைக்க மேஜையின் மேல் Bell அடிப்பது போல் இருக்கிறது.

நீ பூஜை செய்கையில் அம்பாள் உன்னெதிரில் சாக்ஷிக் கூண்டில் நிற்கிறாள். அவள் மேல் நீ சுண்டும் குங்குமமும் மலர்களும் சாக்ஷியத்தைப் பிய்த்தெறியும் கேள்விகள் போல் விழுகின்றன. நீ அவளைப் பயமுறுத்துகிறாய்.

என்னை யாரென்று எண்ணிக் கொண்டிருக்கிறாய்? யாருடைய சிபாரிசுமில்லாமல், என் சொந்த முயற்சி யிலேயே உழைத்து முன்னுக்கு வந்தவன். வாகீசுவர சர்மா! ஞாபகமிருக்கட்டும். இன்னுமா வரவில்லை? என்ன தைரியம்? என்கிற மாதிரி இருக்கிறது.

உனக்கு இரங்கியோ! பயந்தோ அவள் தோன்றினாலும் உன் கோபத்தில், அவளையே நீ கையைப் பிடித்து இழுப்பாய்.

உனக்கு ஸித்திகள் கிட்டினால், அவைகளை உபயோகப்படுத்தாமல் உன்னால் இருக்க முடியாது. சோறு, தண்ணீர் இல்லாமல், உயிர்கூட பிரிந்து இருப்பாய். ஆனால் உன் அதிகாரம் பிரிந்து உன்னால் ஒரு க்ஷணம்கூட இருக்க முடியாது. இதோ ஒரு நிமிஷத்துக்குள் உன் கோர்ட்டை நடத்தி விட்டாயே!

அப்பா உன்னைக் கரிக்கிறேன். நீ செத்துப் போனால்-நல்லவேளை எப்பவுமே நீ இருந்து கொண்டேயிருக்க முடியாதே— எல்லோருடனும் சேர்ந்து நானும் வேஷம் போடுவேன், விக்கி விக்கி விக்கி அழுவேன். ஏன் நிஜமாய்க் கூட அழலாம்; ஆனால் "உஹூ—புஹூ"—என் தேம்பல்களுக்கிடையில் "உஸ்"—நீண்ட பெருமூச்சு இப்பவே எனக்குக் கேட்கிறது, உன் நினைவு—உன்னைக் கண்டு பயத்தின் சுமையிறங்கிய அசதி—ஸுகம் தலையே காற்றில் பறப்பது போல், லேசாய், குளு குளுக்கிறது.

அப்பாடா !

என்மேல் கவிந்த இருள்கள் விலக ஆரம்பிக்கின்றன. வயிற்றின் சங்கடம் அடங்குகிறது. மயக்கத்திலிருந்து நினைவின் விடிவிற்கு மீள்கிறேன்.

"பாப்பா! பாப்பா!! எங்கேடா போயிட்டே, சாப்பிட வாயேண்டா?' எங்கிருந்தோ அம்மா கத்துகிறாள்.

நான் வாயை மூடிக்கொண்டிருக்கிறேன். பதில் சொல்ல வேண்டுமென்றுகூடத் தோன்றவில்லை.

தோட்டத்தில் போட்டிருக்கும் கல் பெஞ்சில் படுத்திருக்கிறேன். ஜலத்தில் நனைந்தாற்போல் காற்று குளுமையாய் மூச்சு விடுகிறது. தென்னங்கன்றின் மட்டை தலைமேல் இடிக்கிறது. அம்மா தன் கையாலேயே

அமைத்த பந்தலில் அவரையோடு படர்ந்த புடலையின் காய்கள் பாம்புகள்போல் இருளில் தொங்குகின்றன. முழுக்க முழுக்க ஜலம். சத்தா மண்ணா ஒண்ணு கிடையாது. ஏன்தான் இதையும் ஒரு குறி என்று அம்மா பயிராக்குகிறாளோ, பண்ணிப் போடுகிறாளோ?

அப்பா!

என் மனமாற உங்களைத் திட்டி, நான் அறிந்தும் அறியாமலும் சேர்ந்து என்னுள் அடக்கி வைத்திருந்த ஆத்திரங்கள் ஓய்ந்தபின், குளத்தில் குளிக்கையில் குத்தும் மீன்கள் போல், நெஞ்சடியில் ஏதோ நமு நமுவென்று பிடுங்குகிறது.

உங்களைப் புதுமுறையில் பார்க்கிறேன்.

என் வசைமாரியில், என் கண்ணழுக்குத்தான் கரைந்ததோ!

அல்லது உங்களைக் குளிப்பாட்டித்தான் காண்கிறோனோ, அறியேன்.

நீங்கள்—
வேஷங்களுக்கு எப்போது திரும்பினேள்?
"நீயும் வேஷம்."
"நீங்களும் வேஷம் என்றாலும்"
வேஷங்கள் இலாது முடியாது.
எல்லாமே வேஷங்கள்தாம் என்று இப்போதுதான் அறிகிறேன்.
அப்பா, நீங்கள் ராஜா.
"நீ"யில் மாறுவேடத்தில் ராஜா.
"நீங்களி"ல் சபையில் ராஜா.
எப்படியும் நீங்கள் ராஜாத்தான்.
நான் திட்டினதால் நீங்கள் குறைந்துவிட வில்லை.
உங்களை நான் குறைக்க முடியாது.

கம்பீரம் வளர்ந்துதான் இருக்கிறீர்கள்.

அதிகாரம் உங்கள் லக்ஷணம்.

நீங்கள் நெருப்பாயிருக்கையில் எரிக்கத்தான் எரிப்பீர்கள்.

தொட்டவன் சுட்டுக்கொண்டால், தொட்டவன் முட்டாள். நெருப்பின் தப்பா ?

உங்கள் நெருப்புத் தன்மையைத் தவறாய் நான் அதிகார மோகமெனக் கொண்டேன்.

என் ஆத்திரத்தில், உங்கள் பூஜையை ஆடம்பரம் எனப் படித்தேன்.

பிறர் மெச்சச் செய்வதுதானே ஆடம்பரம், படாடோபம் !

பிறர் பற்றி எதிலும் உங்களுக்கு அக்கறையில்லை என்று எனக்குத் தெரியும் :

சில விஷயங்களில் நாங்களோ உங்களுக்குப் பிறர்தாம்.

யார் முதுகைச் சொரிந்தும் நீங்கள் முன்னுக்கு வரவில்லை.

நெருப்பாய் எரிந்தே அகலிலிருந்து அகண்டமாகி யிருக்கிறீகள்.

உங்களுக்குத் தூண்டுகோல் நீங்களே. அதற்குக்கூட நீங்கள் பிறரை நம்பியில்லை.

எல்லாமே உங்களுடையதே.

என் இடுப்பைச் சுற்றிய வேட்டி, அதன் கிழிசலை ஒட்டித் தைக்கும் ஊசியும் நூலும் கூட.

இப்போது மாத்திரம் அல்ல.

என் பாதங்களை நானே பூமியில் ஊன்றி எனக்கு இறக்கை முளைக்கும் வேளை வந்த பிறகும் அப்பவும் என் முயற்சியும் அதன் பலன்களும், உங்களால்தான்.

முதலில் நீங்கள் இலாது நானே ஏது?

நீங்கள்,

அம்பாளை வழிபடுகிறீர்களோ
அதிகாரத்தை வழிபடுகிறீர்களோ
யாரை வழிபட்டால் எனக்கென்ன? யாரும்
யாரையோ? எதையோ
குறித்து வழிபட்டு
அவரவர்க்கு
அவரவர் வழி.

மற்றவை அனைத்தும் நல்லதோ பொல்லாததோ எனதல்லாதன எல்லாமே அயல் வீட்டு வம்புதான்.

அண்ணா எங்கேயாவது போய் வந்து அங்கே இப்படி இருந்தது இங்கே அப்படியிருந்தது என்று அளந்தால் நீங்கள் கடிவீர்கள்; "நீ சாப்பிடப் போனாயா? எச்சிற் கலையை எண்ணப்போனாயா?"

எனக்கு இப்போது புரிகிறது. மௌனமே ஒரு வழி நீங்கள் அதிகம் பேசுவதில்லை.

விளக்கம் கூட ஒரு வம்புதான்.

வழிக்கும் ஒரு வழியென உங்கள் வழிபாட்டில், குங்குமம், மலர்கள். உட்கார்ந்தால் தலை உயரத்துக்கு இருபக்கங்களிலும் வெள்ளி விளக்குகள், அபிஷேகப் பாத்திரங்கள் ஆராதனைச் சாமான்கள், யானை தலை பெரிது வெள்ளி கிண்டி, அகிற்புகை, சாமரம். குற்றமென நான் ஏன் கொள்ள வேண்டும்?

இல்லாதவனுக்கு முடியாதது இருப்பவனுக்கு முடிந்தால் தவறா?

எல்லோராலும் எல்லாமே முடியுமா!

முடிந்தவரை முடித்தது முடிந்தது.

உன் தன்மையில் மௌனத்தைத் தேடி, வெளித் தோற்றத்தில் அழகை வழிபடல் ஆகாதா ?

இப்படி எனக்கு இதற்குமுன் தோன்றாதன எல்லாம் எனக்குப் பழக்கமில்லாத அவைகளின் பாஷையிலேயே தோன்றுகின்றன. ஏன் ?

நான் உங்கள் வித்து என்றா ?

அப்பா சில சமயங்களில் விளக்கெதிரியில் மணிக் கணக்கில் அமர்ந்திருககிறீர்கள்.

உங்கள் நோக்கின் வசப்பட்டு சுடர் அசைவற்று நிற்கிறது.

உங்கள் நோக்கின் உக்கிரமம் படிப்படியாகத் தணித்து பஞ்சு மேகம்போல் பரவி, பிசுபிசுத்து மிருதுவாகிறது.

அப்போது உங்கள் உள்நோக்கில் எதைக் காண்கிறீர்கள்? அப்பா, சுடரில் நீங்கள் எதைத் தேடுகிறீர்கள்?

நீங்கள் அம்பாளைத் தேடவில்லை?

ஒரு முறையேனும் நீங்கள் நமஸ்கரித்து நான் பார்த்ததில்லை.

அவளையும் நீங்கள் ஒரு சாஷியாய்த்தான் தேடுகிறீர்கள்.

எதற்குச் சாக்ஷியாய்த் தேடுகிறீர்கள்?

அது எது?

தினம் காலையில் கண் விழித்ததும், நேரே பூஜையறைக்குச் சென்று கதவை மூடிக்கொள்கிறீர்கள். அரைமணி நேரம் கழித்துத்தான் வெளியே வருகிறீர்கள்.

அப்புறம்தான் காலைக் கடன்களே,

ஏன் ?

உங்களைக் கேட்கப் பயமாயிருக்கிறது.

அப்புறம் பூஜையறை திறந்தே தானிருக்கிறது.

அந்த வேளை மாத்திரம் ஏன்?

நாங்கள் கூட எங்களுக்குள் கேலி பண்ணுவோம். ‘‘கண் புளிச்சை எடுக்கவில்லை. பல் ஊத்தைப் போக வில்லை நேற்று மலத்தைப் பத்திரமாக வயிற்றில்கட்டிக் கொண்டு மூக்கைப் பிடித்துக் கொள்ள வேண்டிக் கிடக்கு? இந்த அழகை ஒருத்தரும் பார்க்கக் கூடாதாம். இதற்குக் கதவை வேறே சாத்திண்டும். உத்யோகமோ ஊர்க்கெல் லாம் நியாயம் தீர்க்கற உத்யோகம். ஆனால் இவாளுக்கு அகச்சுவடி நியாயத்தைத் தீர்த்து வைக்கறவா யாரு?’’

அம்மா எரிச்சலுடன் மொண மொணப்பாள்.

ஆனால் உங்களுக்குத்தான் யார் அபிப்பிராயமும் எந்த விஷயத்திலும்தான் அக்கறை கிடையாதே!

அப்பா, நீங்கள் கடாத் தலையர்.
அப்பா, நீங்கள் இரும்புத் தலையர்
அப்பா, உங்களை என்னென்னவோ ஏசி விட்டேன் மன்னித்துக் கொள்ளுங்கள்.

ஆனால் மன்னிப்பு என்பதே இல்லை என்று விட்டீர்களே. பின் என்னதான் உண்டு?

அவரவர் சக்திக்கேற்றபடி அறிந்து கொள்ள முடிந் ததை அறிவதுதான் உண்டா?

அப்படியானால் அப்பா, முன்னைவிட இப்போது உங்களை இன்னும் கொஞ்சம்புரிந்து கொண்டதாய் நினைத்துக்கொண்டிருக்கிறேன்.

அப்பா, நான் அப்படி நினைத்துக் கொள்ளலாமோ? அது தான் உண்டோ?

அப்பா, உங்களைச் சிந்தித்ததால், உங்களை இன்னும் கொஞ்சம் அதிகமாய்ப் புரிந்து கொண்டேன்.

நிந்தனையும் ஒரு வழிபாடுதானா, அப்பா?

அதுவும் ஒரு வேஷம் தானா?

அடி வயிற்றின் கொதிப்பிலிருந்து என் நிபந்தனை வந்ததென்று நினைத்தால் அதற்குமேல் மடியில், இன்னொன்று, இன்னும் புரியாதது...

நீங்கள் நீயாயிருந்தாலும் சரி. நீங்களாயிருந்தாலும் சரி- உங்களுடைய உண்மையான தன்மைதான் என்ன?

யோசனை செய்து செய்து தலை கிறு கிறுக்கிறது.

மறுபடியும் கண் இருட்டுகிறது.

இருட்டுக்குள் இருட்டு.

வாசலில் கார் வந்து நிற்கும் சப்தம் கேட்கிறது. குரல்களும் சப்தங்களும் குழம்புகின்றன. வண்டி புறப்படுகிறது. சப்தம் வேகமெடுத்து வளைந்து ஓய்ந்து தூரத்தில் மறைகின்றது.

அண்ணாவும் மன்னியும் போயாச்சு.

எழுந்திருக்க வேண்டுமென்றாலும் முடியவில்லை

ஏதோ கனம் அழுத்துகிறது.

# 10. ராஜகுமாரி

நிழல்கள் நீளத்தொடங்கி விட்டன. பொழுதின் உருவச் சோதனைகளாய், வானத்தில் வண்ணங்கள் குழை கின்றன. கோணக்கிழக்கில், அடிவானத் திருப்பத்தில் தோன்றியிருக்கும் நீலச் சிரிப்பின் குறுக்கே பக்ஷிகள் மூன்று. கோலப் புள்ளிகள் போலும் ஒரே அச்சில் பறக்கின்றன. அந்தரத்தில் கூடு கட்ட இடந்தேடுகின் றனவா? தொடுவானிற்கும் பூமிக்கும் பாலம் விழுந்த ஒளி தூலத்தின் குழல் வழி வர்ணங்கள் விதவிதமாய்ப் பெய்கின்றன, எதிலிருந்து எதில்? வானத்திலிருந்து பூமிக்கா, பூமியிலிருந்து வானிற்கா என்றுதான் புரிய வில்லை. ஆனால் ஒன்று புரிகிறது. சாயும் பொழுதில் தோயும் வண்ணக் குழைவில். முகில்களின் செழிப்புடன் பூமியின் பசுமையும் சேர்ந்து தீட்டியதாய், பிரம்மாண்ட மானதோர் ஓவியம் உருவாகிக் கொண்டிருக்கின்றது.

ஆனால்

தென்றலின் அசைவில் திரைச்சீலை ஆடுகையிலேயே தீட்டிய வர்ணங்கள் காயுமுன்னரே.

இயற்கையின் ஆக்கல் சீற்றத்தில்

புதுப்புது நிறங்கள் கக்கிக் கொண்டிருக்கையிலேயே
இதோ, அப்பவே—இல்லை—இப்பவே—

இல்லை-சமயத்திற்கு அதன் அமைதலின்றி நேரம் கணக்கேது?

—அடுத்த மாத்திரையின் மந்திரக்கோல் வீச்சில்
ஓவியம் தேய்ந்து கொண்டே வருகிறது.
எந்தச் சூழ்ச்சியால் இந்த வீழ்ச்சி?

மாலைக்கும் இரவுக்கும் ஏன் இந்த வீண் வியாஜ்ஜியம்? எனும் திகைப்பில் நெஞ்சில் சோகம் நூல் சிக்குகிறது.

ஏதோ பீதிகூட
பக்கத்தூரில் குதிரை வாகனம் பார்க்க
ஆசையா உடுத்திக்கொண்ட பட்டுப் புடவை.
உற்சவத்தின் உச்சிக்கட்டத்தில்
அத்தனை க்யாஸ் லைட் பட்பட்
படபடா டப்டப் வாணவேடிக்கை
கடைவீதித் திருவிழாக் கூட்டம்
நடு அம்பலத்தில்
நெகிழ்ந்து, அடியோடு அவிழ்ந்து விட்டமாதிரி,
மானம் தோற்பதற்கென்றே அலங்காரமா?
ரூபமாய்க் கேள்வி வடியவில்லை
ஆனால் அதன் கொக்கி

நெஞ்சில் மாட்டியிழுக்கின்றது. சதையடியில் முதுகெலும் பின் வெண்மையின் உள்மையத்தில் ஒரு "சில்" "சிறீல்". அடிவயிற்றில் ஏதோ உறுத்தல், தவிப்பு; கிணற்றைச் சுற்றிச் சுற்றி வளைய வருகிறாள். குழந்தைகள் இன்னும் விளையாட்டிலிருந்து திரும்ப வில்லை. கிழவர் உலாவப் போய்விட்டார், மத்தியானத் திலிருந்தே அவரைக் காணோம். வீட்டில் அவள் தனி.

கிணற்றுள் எட்டிப் பார்க்கிறாள்.

யார் இந்த இளவரசி? இவளுக்கு ஏன் இந்தப் பாதாளச்சிறை? ஊமைக் கிலேசம் பல்படாது மார்பைக் கவ்வுகிறது? இருகைகளாலும் மார்பை அழுத்திக் கொள்கிறாள்.

உள்ளே கிணற்றடியில் கண்ணாடி,

எனக்கென்ன குறைச்சல்? வெட்கம், இன்பம், பரபரப்பு அங்கங்களைப் பறிக்கின்றன. கண்ணாடியின் வட்டவிளிம்பிலிருந்து ஜலதாரைகள் சுரந்தவண்ணமா யிருக்கின்றன.

ராஜகுமாரி ஏன் ஸதாஸ்னானம்?

வெட்கம், இன்பம், பரபரப்பு அங்கங்களைப் பறிக் கின்றன.

(தண்ணியா அது? அமிழ்தமல்ல!")

(காத்தான்.)

இங்கிருந்து பார்க்கையில் ஜலத்தில் இளநீர்போல இளவெண்மை.

("கத்திரி வெய்யிலில்கூட ஆழம் தென்னை மரத்துக்குக் குறைவில்லை. கவுறு விட்டுப்பார்த்துக் கண் கண்ட உண்மை")

(காத்தான்.)

இதுக்கும் ஒரு கதை இருக்குதம்மா என்வூட்டிலே வழங்கற கதை, என் முப்பாட்டன் சொன்ன கதை, உனக்கு நான் சொல்லப்போற கதை.

இந்த ஊருக்கும் வந்ததாம் அந்த நாள் ஒரு பஞ்சம். வாய்க்கால், குளம்,கிணறு நாக்கிலே எச்சில் கூட வறண்டு போய் அப்படி ஒரு காய்ச்சல். பயிரும் ஊரும் மானம் பார்த்துப் பார்த்து, கொடும்பாவி கட்டியிழுத்தும் நட்சத்திரம் உதிருது. மானம் இறங்கி ஒரு கண்ணீர் கூட சொட்டல்லே. ஊரைவிட்டு ஓடலாமா, ஒருத்தரை யொருத்தர் அடிச்சுத்தின்னலாமான்னு மக்களுக்கு ஆத்திரம். யார்மேலே எப்படி ஆத்திக்கலாம்னு வயுறு வெந்துகிட்டிருந்த சமயம் ஒரு நாள் போது சாஞ்சு போச்சு. இந்தவூட்டு யசமானி வாசல்லே வந்து நிக்கறாங்க. யாரோ ஒரு பொம்புளையெ பத்து ஆம்புளேங்க துரத்தி வராங்க. அவிழ்ந்துபோன சேலையைக் கையாலே வவுத்துலே அள்ளிப் புடிச்சுட்டு அலங்கோலமா ஓடிவரா. பின்னாலே சின்னதும் பெரிசுமா கல்மாரி வீசி வருது; "ஐயோ இடம் கொடுங்கோ! என்னைக் காப்பாத்துங்கோளேன்!" அந்தப் பொம் மனாட்டி அலறிட்டேவரா; அந்தந்த வீட்டுத் தாய்மார், தங்கைமார், மாமியாரா, மருமவளா எல்லோரும் பெண் பிள்ளைங்கே வேடிக்கை பாக்றாங்க; பெண் பாவம் பாக்கறவங்க யாருமில்லே.

இந்தப் பக்கமா அவள் வந்ததும், இந்த வீட்டு எசமானி இந்த வீட்டுக்கே ஒரு அம்சம் எசமானி எப்பவும் அமைப்பு விளக்கேத்தறவங்க வகையா வாய்ச்சுட்டா வூட்டுக்கு இருளே இல்லை-வழி வழியா முருவன் அருள் அப்படியே இருக்கணும் ஓடி வந்தவளை ரெண்டு கையாலும் வாரியணைச்சு உள்ளே வலிச்சுகிட்டு கதவை யடைச்சு ரெண்டு தாளையும் இழுத்துப்போட்டுட்டாங்க, தட தன்னு வெளியே தட்டறாங்க. ஆனால் அதன் கிட்ட யாரும் ஒண்ணும் ஆட்டிக்க முடியாது. கதவான கதவு அந்த நாள் கதவு; கோட்டைக் கதவு கோவில் கதவு; தேக்கு மரத்திலும் அடிமரம் தாள் போட்டால் "சீல்" போட்டதுதான்.

அப்புறம் நடந்தப் பேச்சை என் பாட்டன், அவர் பாட்டன் சொன்ன கதையை அப்பட்டமா சொல்லுவாரு அதிலேதாண்டா கதைப் பேச்சுக்குள்ளே புகுந்து பார்க்கணும் பார்த்தா புல்லரிச்சுப் போவுதே; அதிலே தான் கதை என்பாரு.

"யாருடி அம்மா நீ ? என்னடிம்மா பண்ணினே?"

"நான் அசலூர். ராத்தங்க இடந்தேடி இந்த ஊர் நாலு கால் மண்டபத்தில் தங்கினேன்".

"புடவையைச் சரி பண்ணிக்கோ. இங்கே உனக்கு ஒண்ணும் நேர்ந்துடாது".

ஆனால் அந்தப் பெண் லேசா சிரிச்சிட்டு நிக்கிது. அம்மா சொன்னபடி மானத்தை மூட முயற்சி செய்யல்லே. மூக்கும் முழியுமா இருக்கு. ஆனால் புத்தி சத்தே பேதலிச்சிருக்கும் போலிருக்கே. பயமா, பாவமா தெரியல்லியேன்னு அம்மாவுக்கு எண்ணம். ஏன்னா அந்தப் பொண்ணுக்கு முழி சரியாயில்லே. இங்குமங்கும் என்னத்தையோ கண் தேடி அலையுது.

"புதுசா வந்த இடத்திலே ஊர்க்கோவத்தை சம்பாதிக்க என்ன பண்ணினே?"

வந்தவளுக்குக் கண் அலைச்சல் நிக்கல்லே. அம்மா சொன்னதைக் காதில் வாங்கிட்டு. ஆனால் ஏதோ நினைப்பா;

"எல்லோரும் செய்யறதைச் செஞ்சுண்டே இருக்கிறதைவிட புதுசாவோ ஈனமாவோ ஒண்ணும் நான் பண்ணிடல்லே." அம்மாவுக்குப் புரிஞ்சு போச்சு. கண்ணுலே தண்ணி தளும்பிட்டுது.

"அடப்பாவமே! ஏண்டி குழந்தை வயத்துக்கில்லாத கொடுமையா?"

"ஏன் பாட்டி, நானே வழங்கறவளாயுமிருக்கக் கூடாதா?"

"நீ சொல்றது புரியல்லியே! காரியம் ஒண்ணொண்ணுக்கும் வேளைப் பொழுதுன்னு ஒண்ணு இருக்கே?"

நீங்கள் சொல்றது என்னிடம் வருவோருக்குத்தான் இருக்கணும் எனக்குக் கிடையாது. ஓடற தண்ணீர் ஓடிண்டே இருக்கு. என்னிடம் இருப்பது என் ஆழம் ஒண்ணுதான். அதுவும் எவ்வளவுன்னு எனக்கே தெரியாது. அதுவும் எனக்கு ஒளிவு மறைவில்லை."

"என்னடிம்மா சொல்றே, புரியல்லியே!"

"இதோ பாருங்க பாட்டி. நானே வலியப்போய் யாரையும் கையைப் பிடிச்சு இழுக்கல்லே. ஆனால் தேடிண்டு வந்தவாளை "மாட்டேன்னு" மறுக்கல்லே. "ஆமா"ன்னு தலையையும் ஆட்டல்லே. நீங்கள் எனக்கு இப்போ அடைக்கலம் தந்து அணைச்சுக்கலியா; அது மாதிரி ஆதரவா அணைச்சுண்டேனோ என்னவோ! ஏன் பாட்டி, நெஞ்சடியில் நாம் அத்தனை பேரும் தாய்மார் தானே! நம் உடலமைப்பும் அப்படித்தானே! மேடும் பள்ளமுமா ஓடினாலும் மாரெல்லாம் பால்தானே." பாட்டிக்குத்தலை "கிர்ர்ர்—"

அடிச்சுட்டு வர வெள்ளத்திலே வீட்டுக்கூரை குமுங்கினாப்போலே தூண்மேலே சாஞ்சு, சரிஞ்சு அப்படியே

குந்திட்டாங்க. தண்ணியிலே கரைஞ்சு போறாப் போல-கூடம், தூண், சுவர் எதிரே அந்தப் பொம்புள்ளே, தான் எல்லாமே வரப்புக் கலைஞ்சு மிதப்பலாடுது. எங்கிருந்தோ ஒரு குரல் காதண்டை ஒலிக்கிறது.

''எதையுமே அக்கலக்கா பிரிச்சுக் கேட்டால், சொல்றதுக்கு ஒண்ணுமே இல்லை. இல்லை எனக்குச் சொல்லத் தெரியல்லே. எதையுமே அக்கலக்கா பிரிச்சுப் பார்த்தால் செய்யாத பாபமில்லை. நேராத புண்ணியமில்லை. ஆழத்துக்கு ஆழம் பார்த்து ஆகற காரியமில்லை. இடுப்பளவு ஆழக்காரனை குளிப்பாட்டறேன். கழுத்தளவு வந்தவன் என்னில் முழுகி எழுந்திருக்கிறான். ஆழந்தெரிஞ்சோ தெரியாமலோ உள்ளேயே வந்து விட்டவன் என் வயிற்றில் தூங்கறான். காலை நனைக்கவே பயப்படறவன். அழுக்கு அவனிடமே பத்ரமா இருக்கு சமுத்திரத்தையே முழங்காலுக்குக் கண்டவன். பாதம் கழுவுவது தவிர நான் ஒண்ணும் செய்ய முடியாது. துணிஞ்சவாள்தான் துறந்தவாள். துறந்தவாளுக்குத்தான் தரிசனம். கொஞ்சநேரம் தப்பியோ, வழு தடைபட்டோ வந்தாலோ குழந்தைகளுக்குத் தாங்கல்லே நானும் ஓடோடித்தான் வரேன். ஆனால் என் குழந்தைகளே என்மேல கல்லைவிட்டு எறியறதுகள். தாயை அடையாளம் தெரிஞ்சுக்கல்லே. இதைவிட துக்கம் எனக்கு வேணுமா ? ஆனால் இதைவிட வேடிக்கை உலகத்தில் உண்டா ? எதுவுமே என்னைப் புரிஞ்சுக்கல்லே. புரிஞ்சுக்கறதுன்னா என்ன ? வந்ததை வந்தபடி வாங்கிக்கறது தான் எனக்குத்தெரிஞ்சுண்ட வரை புரிஞ்சுண்டதற்கு அர்த்தம். ஆனால் இதைப் புரிஞ்சுக்க அனுபவத்துக்கு ஒண்ணு உன்மாதிரி வயதாகியிருக்கணும்; இல்லை என்மாதிரி வயதை மீறியிருக்கணும். ஆனால் ஒண்ணு உலகத்திலே (குழந்தைகளில்லாமல்) எல்லோருமே கிழமாயிருந்துட்டா எல்லாத்தையும் புரிஞ்சுண்டுதான் என்ன பண்றது ? அனுபவிக்க முடியாத

அறிவு அத்தனையும் வறட்சை. வறட்சைக்கா வந்திருக்கேன்? குடம் தளும்புற மாதிரி அதென்னகிளு கிளுப்பு? சிரிப்பா அழுகையா? சிரிப்பாயிருந்தாலும் அதைக் கேட்டதும் எனக்கேன் இப்படி தொண்டையை அடைக்கிறது?

"என் குழந்தைகள் செழிக்கத்தானா வந்திருக்கேன்! இல்லை எனக்காகவா வந்திருக்கேன்? குழந்தைகள் வயிறு குளுமை கண்டு என் ஈரம் நெஞ்சுவரை பாஞ்சு எங்கும் க்ஷேமம் தழைக்கணும்னு எப்படி ஓடோடி வரேன் தெரியுமா? எங்கிருந்தோ எங்கிருந்தோ வர்ரேன். எங்கிருந்து நான் எப்படி வந்தாலும் அடங்கற இடம்னு ஒண்ணு எனக்கும் உண்டே, அது இங்கே எங்கே? இங்கே எங்கே?"

அந்தப் பொம்புள்ளை திடீர்னு புடவையைக் கழஞ்சு கீழே போட்டுட்டு, முண்டக்கட்டியா ஓடிப்போய் கிணற்றுலே தொப்புனு குதிச்சிட்டா.

"ஐயோ"ன்னு அலறிக்கிட்டே பாட்டியம்மா பின்னாலேயே லொங்கு லொங்குன்னு ஓடிப்போய்க் கிணற்றிலே எட்டிப் பார்த்தா. உள்ளேயிருந்து தண்ணி மேலே பொங்கிவருது. நிமிசத்துலே கிணறு வழியுது. பாட்டி தட்டித்தள்ளாடி வந்து, கதவைத் திறந்து விட்டுட்டாங்க. உள்ளே பாய்ஞ்சோடி வந்தவங்க வந்தால், தோட்டம், கூடம், வீடு எல்லாம் தண்ணி ஓடுது. பாட்டியம்மா கிணத்தைச் சுட்டிச் சுட்டிக் காட்றாங்க. ஆனால் அவங்களுக்கு வாயடைச்சுப் போச்சு. பாட்டியம்மாவுக்கு அப்புறமே பேச்சு ஒரு மாதிரி தட்டல்தான். அது பத்தி பேச்செடுத்தாலே அம்மாவுக்கு மருள் வந்த மாதிரி ஆயிடும். அப்புறமே அந்த அம்மா ரொம்ப நாள் இல்லே. வாய்க்காலிலே குளிக்கப் போனவங்க உச்சி வேளைக்கும் திரும்பல்லே. கரையோரமா தேடிக்கிட்டே போனவங்க ஒரு கல்லுக்கப் பால் யாருமே நடமாடாத வளைவிலே கண்டெடுத்தாங்க.

மாறாத தூக்கத்தில் பாட்டியம்மா காணாததைக் கண்ட மாதிரிச் சிரிச்ச முவத்தோடு பாட்டியம்மா தண்ணியிலே கிடந்தாங்க, இத்தனைக்கும் வாய்க்கால்வழி பூரா தண்ணி கணுக்காலுக்கு ஏறல்லே. அதுதான் ஆச்சர்யம். பாட்டியம்மா இடுப்பிலே, வந்த பொம்புள்ளே ;அவிழ்த்துப் போட்ட புடவையை உடுத்திட்டுருந்தாங்க. ரெம்ப நாளைக்கு அந்தப்புடவையைப் பூவாடையைக்கும்பிட்டிருந்தாங்களாம். அப்புறம் ஒரு நாள் நனைச்சுக்கோடிக்குக் கோடி தோட்டத்திலே கிளைக்குக் கிளை கட்டியிருந்த சேலை எப்படியோ அவிழ்ந்து காற்றாடியாப்பறந்து போயிட்டுதாம். நீலப்பட்டுப் புடவை இயக்கை யடிச்சு ஊர்மேலே பறந்து போறப்போ தெருவிலே ஓடிவந்து வேடிக்கை பார்த்தவர் எத்தனை பேர். நடுவாசலில் குத்து விளக்கை ஏற்றி வெச்சு கற்பூரம் கொளுத்தி விழுந்து கும்பிட்டவங்க எத்தனை பேர். "காவேரியாத்தா எங்கள் பாவம் பாராமல் எங்களை கண்திறந்து பார்த்தவளே! நீ வந்த காரியம் முடிஞ்சுது நீ திரும்பிப்போற விடமெல்லாம் உன் புண்ணியம் எங்களுக்கு இடிக்கட்டும்!!

அதனாலே காவேரியம்மன் வலிய வந்து தன்னைக் காட்டிக் கொடுத்துக்கிட்ட வீடு அப்பா இது"ன்னு முடிச்சுட்டு என் முப்பாட்டன் கூடவே என் பாட்டனிடம் சொல்லுமாம். "இது என் பாட்டனிடம் நான் கேட்ட கதை. இதன் நிசமும் பொய்யும் நோண்ட உனக்கு நான் கதை சொல்லல்லே. நிசமும் பொய்யும் நமக்கேன்? நம்பினால் காவேரியாத்தா. நம்பாட்டி நல்ல கதை. இந்த வீட்டில் தண்ணி மொண்ட நம்வீடு நிறைஞ்ச வீடு இது நிசம். இதுக்குப் பஞ்சாயத்து வேணாமில்லையா?"

தலைமீது மிருதுவாய் ஏதோ உதிர்ந்ததை கையிலெடுத்துப் பார்த்தால் பூ. அவளுக்கு மயிர்கூடச் செறிகிறது. காற்றுவாக்கில் இயங்கும் எந்த ஆத்மாவின் ஆசிர்வாதமோ? ஒரு வேளை காவேரியம்மனே தான் பூவை அட்சதையாப் போட்டாளோ?

' நிறையப் பெருகி நன்னாயிரு."

இந்த அர்த்தம் தந்த இன்பம் நெஞ்சிலே தேன் விடுகையிலேயே.

''ஆவிர்ப்பவி''

—முன்பின் சுவடுகூட அவள் கண்டிரா ஒரு நாமம் அதன் மோன ஓசையிலேயேபுரியாத அர்த்த தாரைகளைப் பெருக்கிக்கொண்டு மனத்தில் தோன்றியதும், அமுதம் அவளை ஆட்கொண்டது.

''ஹ விஸ்
ஹவிர்ப்பாகம்
ஹவிர்ப் பா ஹீ
''ஆவிர்ப்பவி"

ஒரு தினுசான மூர்ச்சையில் ஆழ்ந்தாள்.

இருள் பந்துகள் செடிகளில், கிளைகளில், இலைக் கொத்துகளில் தொங்குகின்றன. எத்தனை நேரமாவோ அறியேன். இங்கேயே இருக்கேன். இருட்டு எப்போ இறங்கித்து? இன்னும் சுருள் சுருளாய் கடைசல்கள் மிதந்து வந்து கிணற்றின் மேல், ராட்டினக்கட்டைமேல், பிடிச்சுவரில் கொல்லைக் காம்பவுண்டின் பொக்கை, போறைகளில் கரை தோய்கின்றன. ஒளிப்பொறிகள் சுவரோரம் வாடாமல்லிப் புதரில் தோய்கிற 'கல்லின் பக்கமாய் சாய்ந்த வாழைக் குலையைச் சுற்றிச் சுடர் விடுகின்றன. தன் பக்கமாய் பறந்து வந்த மின்மினி ஒன்றைப் பிடித்தும், லேசாய் மூடிய கையுள் விரல் சந்துகளின் வழி, உள்ளங்கைக்குழிவு தகதகக்கின்றது. கை விரித்ததும் கழன்றது என் ஜீவனின் பொறியா? என்னைச் சுற்றிச் சுழிக்கும் இருளில் பொரியும் இத்தனை பொறிகளும் அத்தனை உயிர்களா? இதுகளுக்கு ஏன் இவ்வளவு பெரிய தவிப்பு? விடுபடுவானேன்? திரும்பவும் இருப்புத் தேடித்திக்குத் தவிப்பானேன்? இது ஒரு வேடிக்கையா என்ன?

விவரம் தெரியா விசனம் அவள் மேல் படர்கிறது.

அதன் பாகு விழியோரங்களில், உதட்டின் வளைவில், மோவாய் குழிவில், முதுகுத் தண்டில், மார்பின் பூண்களில், தொப்புள் சுழியில், இடுப்பின் நெகிழ்வில், அடிவயிற்றின் மேடில், மேடின் இறக்கத்தில் சுற்றிக் கொள்கிறது. அதனால் உடலில் ஒரு மதப்பு. பூமியைத் தன் மதுவை ஏந்தும் ஒரு மலர்க் கிண்ணமாக இரவு மாற்றிக்கொண்டிருக்கிறது. விசன நரம்புகள், ஓடிய இதழ்கள் பகல் விரிந்து, இரவு குவிந்த பூவுள் மாட்டிக் கொண்டு மதுவில் நீந்தித்தவிக்கும் உயிரெனும் பரம சோகத்தின் மின்மினிகள்.

இங்கிருந்து தெரியும் வீட்டின் உட்புறம், கூடத்தில் ஏற்றி வைத்த குத்துவிளக்கின் இளவெளிச்சத்தில் குளித்து, மணவறையில், கன்னத்தில் படரும் நாணத்திட்டுபோல் தோன்றுகிறது. ஆயுசில் பாதியாச்சு. அடராமா, அசட்டு பிசட்டுன்னு என்னென்னவோ மனசில் தோணிண்டிருக்கே.

"இதென்ன வீடா இல்லை...... என்வாயில் வரக் கூடாததெல்லாம் வறது; அதுவா இது?"

நெருப்பில் பழுக்கக் காய்ச்சிய கோணி ஊசியின் கூரில் குரல் இருளைத் துருவி வந்து அவளை எட்டிச் சுடுகிறது. மனமிலாது நினைவைக் கலைத்து உள்ளே செல்கிறாள். அவளைக் கண்டதும் வெடித்த விதைபோல் கிழவர் குதிக்கிறார். அவர் கோபம் பார்க்க ஒருபக்கம் பயம். ஒரு பக்கம் சிரிப்பு வந்தது; இந்த வீட்டுப் பெண் களுக்கு ஆணவம் முத்திப் போறதுக்கும் ஒரு எல்லை யில்லையா என்ன? நாள்தான் அஸ்தமனமாச்சு. வீடே அஸ்தமனமாயிடுத்தா?"

"என்ன தாத்தா அம்மாவைக் கோவிச்சுக்கறே?"

"ஓ அந்த அளவுக்குக் கட்டை உரம் ஏறிடுத்தா?"

கிழவர் "சரே' லென்று திரும்பி பேத்தியைக் கன்னத்தில் ஒன்று விட்டார். குழந்தை ஒருகணம் திக்கு முக்காடிப் போய் அழ மறந்து அப்படியே நின்று விட்டாள். தாத்தா அடிப்பார் என்று அவள் நினைக்க வில்லை கிழவருக்கே என்னவோ மாதிரி ஆகிவிட்டது. இதுமாதிரி இதுவரை நேர்ந்ததில்லை. அப்பவே, அவள் பின்னால் அவரையே பார்த்துக் கொண்டு நின்ற பேரனையும் கண்டதும் அவர் மனநிலை ஏதோ கையும் பிடியுமாக அகப்பட்டுக்கொண்ட திருடன் மாதிரி உள் சுருங்கிற்று. அவன் கண்களில்தான் எத்தனை அலட்சியம் சிந்துகிறது! கோபாவேசத்தில் கிழவர் உடல் காற்றில் சருகுபோல் ஆடிற்று.

என்னடா முறைக்கறே? எள்ளுக் கண்ணை வெச்சுண்டு? சுட்டு எரிச்சுடுவையோ?" பையன் பார்வை மாறவில்லை. அவர் போகும் வழியெல்லாம் அதுவும் தொடர்ந்தது. கிழவர் பின்னடைந்து திண்ணையில் போய் உட்கார்ந்துவிட்டார். அங்கிருந்து பொரிகிறார்.

என்ன அக்ரமம்; வரவர இந்த வீட்டில் ஒரு நல்லது பொல்லாதுக்கு வாய் திறக்க, புத்தி சொல்ல வழியில் லாமல் போச்சு பார்த்தையா! நேற்றுப் பிறந்ததெல்லாம் நம்மை தலை நிமிர்ந்து பார்க்கற காலம் வந்துடுத்து! என் நாளில் நான் இப்படித்தான் இருந்தேனோ? இருக்கத் தான் முடியுமா? முழிச்ச கண்ணை நோண்டிக் கையில் கொடுத்துட மாட்டாளா? அது என்னடான்னா வாண்டு வாரிசுக்கு வரது! சிறிசுகளைச் சொல்லி என்ன பண்றது? மாவுலேயே கிள்ளி எறிய வேண்டியதை மூக்காகவே வெச்சாறது" வந்தவழி அப்படி! அப்போ குடிச்ச பால் இப்போத்தான் ரத்தத்தில் ஊற ஆரம்பிச்சுருக்கு. வாயில் ஊட்டற பாலை அப்பவே மூக்கில் பீச்சியிருக்கணும்......"

இன்னும் என்னென்னவோ.

ஆனால் இத்தனை கேட்டுக்கொண்டும் இன்னிக் கென்னவோ அவளுக்குக் கோபம் வர மறுக்கிறது. அவளுக்கே வியப்பாயிருக்கிறது.

யார் அவள் காலைக்கட்டறது? கீழே நோக்குகிறாள்.

''தாத்தா என்னை அடிச் சுட்டட்-டாம்-மா!

''ஊ-ஊ-ஊ!''

நான் பெற்றதுதான் நீ. ஆனால் இன்னிக்கு எனக்கு அதைப்பற்றி அக்கறையில்லை. காரணம் கேட்டால் எனக்குச் சொல்லத் தெரியாது. யார் என்னை என்ன திட்டினாலும் இன்னிக்கு எனக்கு ஒட்டிக்கல்லே. காரணம் கேட்டால் எனக்கு சொல்லத் தெரியாது.

இன்னிக்கு உனக்கு எதில்தான் அக்கரை! இன்னிக்கு எதுதான் உன்மேல் ஒட்டிக்கொள்ளும்?

அவளிடமிருந்தே எழுந்த கேள்விக்கு மோனப் பதிலில் கண்முன் செவேலென மார்பின் தோற்றம் எழுந்தது மார்க்குலையில் ஸன்னமான ஸ்படிக ஜபமணி மாலையின் இறக்கம்.

தன் கணவன் முகத்தை உடனே, அந்த நிமிடமே பார்க்க வேணும், பார்த்தேயாகணும் எனும் அவா. விலங்குத் தன் இரையைக் கவ்வுவதுபோல் அவளைக் கவ்விற்று.

''இதென்னடியம்மா திடீர்னு உலாவப் போயிருப் பவர் திரும்பி வருவதற்குள் வருடக் கணக்கில் பிரிந்தாற் போல் ஏக்கம்?

அவள் ராஜகுமாரி. அவளுள் அவளே தோழி. ராஜ குமாரியை பரிஹாசம் செய்கிறாள். ஆனால் கரை புரண்ட இந்தப் பிரிவாற்றாமைப் பெருக்கில் பரிஹாசம் ஏற்க வில்லை. இன்று மாலை மயக்கத்தில் நிமிடங்கள் வருடங்களாய் நீண்டு விட்ட அற்புதம். இது என்ன?

அந்த அற்புதமும் ஏக்கமும் கலையாமலே, லாந்தர் களை ஏற்ற ஆரம்பித்தாள். ஆயிரம் லாந்தர்கள் ஏற்றி வைத்தாலும் இன்றைய இருள் என்னிருள் தனி இருளில் இவரே செந்தழல்! கொஞ்ச காலமாகவே உடம்பு

வாங்கள். ஆனால் தேகத்தில் ஜவாலை முறுக்கு; இன்னென்று புரியா ஸ்புடத்தில்; மேனி மின்னிடம் பொன்னுக்கு; இத்தனை நாள் என் கண் எப்படி

அவிஞ்சு போச்சு ?

விளக்கைச் சுற்றி வட்டமாய் பந்தி நடக்கிறது பாரேன் சாதத்தை குருவி மாதிரி கொறிக்கறதை !

சுப்பு ஒருபிடி கூட இழுக்கிறாள்.

சுப்பு, கிழவருக்கு இடதுபுறம் உட்கார்ந்திருக்கிறாள். பிடிக்குப் பிடி கிழவரின் முகக்கடுப்பு இளகுகிறது. பாவம் ! பசி பொல்லாதது. கீரை மசியல் சட்டியை சுரண்டினால் அகப்பையில் வரவில்லை. அதிலிருந்தே தெரியறதே ! அவருக்குப் பிடித்தமாய் அமைஞ்சு போச்சு போலஇருக்கு. எனக்கு இல்லாட்டா என்ன ? அதுவே என் சந்தோஷம்.

பச்சை வாழையிலையில் மோருஞ்சாதத்தின் தூய வெண்மையின் நடுவே கீரையும் குழம்பும் கலந்து சுத்தமாய்க் குளம் கட்டி இருப்பது எடுப்பாயிருக்கு.

"ஏலே சுப்பு ! உன் மூக்கில் ஒரு புறா உட்காந்தி ருக்கு"! சுப்பு பயந்து மூக்கைத் தடவி பார்த்துக் கொள்கிறாள். வாய் நிறைய கவளம். கண்கள் கரு வண்டாய் பளபளக்கின்றன.

ஒண்ணுமில்லை-நீ என்னோடு பேசவேண்டாம் போ ! நீ தான் என்னை அடிச்சயே !" உதட்டைப் பிதுக்குகிறாள் "அதோ மூக்கிலிருந்து உச்சி மண்டைக்கு வந்துடுது ! அவளை அறியாமலே சுப்புவின் கை மண்டைக்கு தூக்குகின்றது.

"எனக்கென்ன அதோ தோள்மேல் நிக்கறது ! "அதோ எனக்கென்ன தோள்மேல் நிக்கறது !" தோளைத் தொட்டுப் பார்த்துக்கொள்கிறாள்.

"நான் எப்படிப் பொய் சொல்வேன். நானே விட்ட வெள்ளைப் புறான்னா !" சுப்புவுக்கு சிரிப்பு பீரிடுகிறது

"நானே விட்ட வெள்ளைப் புறா!"

திரும்பத் திரும்ப நொக்கரிக்கிறாள், அவளுக்கு அது ஒரு பெரிய வேடிக்கையாயிருக்கிறது. அதோ பார் உன் முதுகில்!''

"நானே விட்ட வெள்ளைப் புறா."

"நானே விட்ட வெள்ளப் புறா!"

தாத்தா இடது கையால் அவள் முதுகில் "பளார்" என்று அறைகிறார். சப்தம் பட்டாசு வெடிக்கிறது.

சுப்புவுக்கு சிரிப்பு தாங்கவே முடியவில்லை. உடலே குமுங்கி மடிகிறது.

"ஏடி சுரனை கெட்ட வெள்ளாட்டி" இப்போ வலிக்கல்லியோ? அப்போ வாயை கப்பறையாப்பிளந்து ஊரை கூட்டினையே!'' "போ தாத்தா! இது ஆசையடி வலிக்குமோ?''

கிழவர் இடது கையால் பேத்தியை அணைத்துக் கொள்கிறார். "கள்ளி! கள்ளி! இப்பவே பேச்சிலே மயக்கபார்!" அவர் கண்கள் துளும்புகின்றன.

திடுக்கென விழிப்பு வந்தது. அவளை அப்படி எழுப்பியது எது? பொத்தென்று அவள்மேல் விழுந்தடித்து பல்லி ஓடித்தா? சமயலறையில் சாமான் உருண்டதா? ஊஞ்சல் சங்கிலியின் கிறீச்சா?

அத்தைக்குப்பின் ஊஞ்சலுக்கு அவள்தான் வாரிசு, நாளெல்லாம் பாடில் சலித்த உடம்புக்கு அதன் லேசான அசைவின் இதவு இருக்கட்டும் ஒரு பக்கம். அதிலும் பெரிசு அத்தை படுத்த இடம் என்கிற மவுசு, அத்தை புரண்ட இடத்தில் தானும் புரண்டு அத்தையின் தைரியத்தை, பலத்தை அத்தை புழங்கிய பொருளிலிருந்து அத்தையின் பிரசாதமாய்த் தானும் பெறுவதாய் ஒரு த்யானம்; த்யானமேதான் தைரியம்; த்யானமேதான் பலம்.

ஆனால் அவளை எழுப்பியது அவள் நினைத்ததல்ல. எங்கிருந்தோ அதென்ன "சொட்டு" "சொட்டு"...? முக்காலி மேல் நிறுத்தி இருக்கும் தீர்த்த சால் ஒழுக்கலா ? அடியில் கவிழ்த்த பால் உருளிமேல் ஜலம் "சொட்டு" "சொட்டு" "சொட்டு"—

—இல்லை ஜலத்தைவிட இந்த ஓசை கல்கண்டு மாடியி லிருந்து துளிக்கின்றது. துளிக்குத் துளி தனித்தனி தெறித்து ஒன்றுடன் ஒன்று இழைந்த பாகு உள் ஊறி அவளையும் தன்னோடு கட்டியிழுக்கையில் அதுவே வேதனை விடு தூதாகி "சொட்டு" "சொட்டு" "சொட்டு"—

—திடீரெனப் புரியவில்லை உடல் பூரா ஒரே தவிப்பு, விழியோரங்களில், உதட்டு வளைவில், மோவாய்க்குழிவில், முதுகுத் தண்டில், மார்பின் பூண்களில், தொப்புள் சுழியில், இடுப்பின் நெகிழ்வில், அடிவயிற்றின் மேடில், மேட்டின் இறக்கத்தில், அனல் சரடு சுற்றிக்கொண்டது. பிய்த்தெறிய முயன்றதும் சரடு சிக்காகி அங்கங்கள் திகு திகுவென பற்றிக் கொண்டன. மானம் போக காலை வாரிவிடும் மோசடி மூட்டம். ஈதென்ன ?

ஊஞ்சலிலிருந்து எழுந்து புலி புறப்பட்டது. தன் ஓசையே தனக்கு ஊமையாகி, தன் பசிக்கு இரைதேடும் சூதில் மெத்திட்டுவிட்ட பாதங்கள் அவளைக் கூடத்தி லிருந்து அடியடியாய் ஏந்திச் சென்றன.

மாடியடியில் ஒரு கணம் தயங்கி நின்றாள். இரவின் அமைதியில் புவனம் ஒரு பிரம்மாண்டமான குமிழியாய் அந்தரத்தில் தொங்கிற்று.

எப்பவோ சுப்பு தாத்தாவோடு திண்ணைக்குப் போயாயிற்று. பையன் குஞ்சுத் திண்ணையில் தூங்கு கிறான் இப்போதெல்லாம். அவனுக்கு தன்மேல் பிறர் உடம்போ கையோ தற்செயலாய் பட்டாலே பிடிக்க வில்லை. கொஞ்ச நாளாவே தனிக் கூடாகி விட்டான்.

தேனென ஒலித் துளிப்பு

பளிங்கெனத்துலங்கி
சிங்லிகிணிங்
பளிங் கிளிங்
தரங் கிணிங்
தரங்.........

கறவைக்கு ஏமாற்றிக் கன்றுக்கு மீத்து மடியில் மறைத்த கள்ள மணி, கன்றுக்குக் காத்திருந்து கன்றைக் காணாது தன்னை மறந்த பரிவின் துரிய மணி மடிமீறி காம்பினின்று சொட்டுச் சொட்டுச் சொட்டென தேம்பும் பாலின் துயரமணி.

ஓசை மணிகள் கிண்கிணிக்கும் வழியே சென்றாள்.

மொட்டை மாடிமீது வான் குடலை கவிழ்ந்து உருண்டது. ஆனால் அதனின்று கொட்டியவை நட்சத்திரங்கள், பூக்களல்ல. அனைத்தும் முள் கொண்டைகள் வானத்தில்—அல்ல புடவையில்-அல்ல-உடலில் தை தை தைத்து அடிவரை பாய்ந்து ஆங்காங்கே திருகிப் பதிந்து சுடர் விடும் குரூர எக்களிப்புக்கு அஞ்சி உடல் குலுங்கி ரோமம் சிலிர்த்தது.

ஆனால் அந்த வலி முழு உணர்வையடைந்து உள் அழுந்துமுன், மாடியறையின், ஒருக்களித்த கதவின் பின்னாலிருந்து திடீரென நாத ஜாதிகள் புறப்பட்டுவந்து அவளை மொய்த்துக் கொண்டன.

மூக்குக் குத்தியில், நெற்றிக் குங்குமத்தில், காதுக் கம்மல் கற்களில், நெற்றி நடு வகிடில், மேல் உதட்டில் துளித்த வேர்வை முத்தில், மோவாயடியில் ஒளிந்த பிறவி மறுவில், உள்ளங்கை ரேகைகளில், கண்ரப்பை மயிரில், பிடர் மயிர்ச் சுருளில்,நகச் சதையிடுக்கில்,புருவக வானில், கூட்டங் கூட்டமாய் குழுவான்கள் சிட்டஞ் சிறகுகளில் பறந்து வந்து தொத்திக் கொண்டன. அவைகளின் எள்ளளவுக்கெதிர்மாவின் அரும்பும், புளியத் தளிரும்

நக்ஷத்திரங்கள், நாததாதுக்கள், மின்மினிகள், அந்துகள், சிந்துகள், கோர்வைகள், கார்வைகள், பார்வைகள், பாதங்கள், பேதங்கள், தாபங்கள், தவிப்புகள், தத்தளிப்புகள், தளிர்கள், மிளிர்கள், ஒளிர்கள், அங்கங்கள், அலரிகள், பங்கங்கள், சின்னங்கள், ஸன்னங்கள், பின்னல்கள், இன்னல்கள், சுளுக்குகள், கொடுக்குகள், தளுக்குகள், வெடுக்குகள், மிலுக்குகள், துடுக்குகள், மிலுக்குகள், துடிப்புகள், தூவல்கள் நொடிப்புகள், தாவல்கள், திகில்கள், பிடிப்புகள், ஆவல்கள், சரங்கள், அவசரங்கள், அவகாசங்கள், விள்ளல்களின் துள்ளல்கள், பதைப்புகள், பதை பதைப்புகள், கட்டுகள், பெட்டிகள், சிட்டிகள், அணுக்கள், ரகஸ்யங்கள், சிசுசிசு, தஸ தஸ, நிதபம பம கஸ கரி நித நிரி நிக தரி நிதாரிநி ரிநிதி நிநிநி-இங்கு-அங்கு வரை கரைந்து எங்கும் நிறைந்து எதுவும் தமக்குச் சொந்தம் என்ற கதியில் வநத எதையும் அரித்து மென்று உமிழும். அவைகளில் ஊறல் வதைப்புத் தாங்க முடியவில்லை.

கதவை படீரெனத் திறந்துகொண்டு உள்ளே ஓடினாள். இருளன்றி வேறேதும் கண்ணுக்குப் புலனாக வில்லை. கருவின் இருளிலிருந்து ஒரு அள்ளு இங்கு வந்து இறங்கினாற் போன்ற கும்மினின்று ஒலிக் கதிர்கள் முளைத் தெழுந்து அவள்மேல் கூடாய்க் கவிழ்ந்தன. அவைகளை விலக்க வீசிய கைக்கும் தட்டைபோல் ஏதோ தட்டிற்று. அதையும் தள்ளி அதற்கு அப்பால் பிடிப்புக்குக் கிடைத்த மெத்தில் அழுந்தி

ஆ!
ஆ!
ஆ!

அத்துடன் காலமும் தன் இனம் குலைந்து சரண் புகுந்த பிலத்தின் அடிதட்டா ஆழத்தில் தனக்குத் தானும் இலாது மூழ்கிப் போனாள்.

★